


ராஜேஷ்குமாரின்

# தப்புத் தப்பாய் ஒரு தப்பு


தொடர்கதை - 1 .... 2
தொடர்கதை - 2 .... 9
தொடர்கதை - 3 .... 15
தொடர்கதை - 4 .... 23
தொடர்கதை - 5 .... 30
தொடர்கதை - 6 .... 37
தொடர்கதை - 7 .... 45
தொடர்கதை - 8 .... 55
தொடர்கதை - 9 .... 62
தொடர்கதை - 10 .... 71
தொடர்கதை - 11 .... 81
தொடர்கதை - 12 .... 89
தொடர்கதை - 13 .... 97
தொடர்கதை - 14 .... 106
தொடர்கதை - 15 .... 113
தொடர்கதை - 16 .... 120
தொடர்கதை - 17 .... 130
தொடர்கதை - 18 .... 138
தொடர்கதை - 19 .... 148
தொடர்கதை - 20 .... 157
தொடர்கதை - 21 .... 166
தொடர்கதை - 22 .... 174
தொடர்கதை - 23 .... 183
தொடர்கதை - 24 .... 191
தொடர்கதை - 25 .... 198
தொடர்கதை - 26 .... 205

தொகுப்பு - 1: இன்ஸ்பெக்டர் வேலைக்கான இன்டர்வியூவில் செலக்ட் ஆகிவிட்டுல போஸ்ட்டிங்கை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார் சத்தியநாராயணன். திடீரென்று ஒரு நாள் தன் பள்ளித் தோழி காயத்ரியைச் சந்திக்கிறார். ஊதுபத்தி வியாபாரம் செய்து பிழைப்பதாகச் சொல்கிறாள் அவள். அவள் நிலை கண்டு வருத்தப்படும் சத்தி, அவள் விலாசத்தை வாங்கிவைத்துக்கொள்கிறார். இந்தக் காட்சி நடைபெறுவது ராஜா அண்ணாமலை புரத்தில். அத்து அடையாறுக்குச் செல்லும் சத்தியநாராயணன் அங்கேயும் காயத்ரியைப் பார்த்துவிடுகிறார். படபடப்போடு அவள்.

இந்நிலையில் சத்தியின் இன்ஸ்பெக்டர் நண்பன் கதிரேஷ், ராஜா அண்ணாமலை புரத்தில் ஒரு கொலை நடந்திருப்பதாகவும் அந்த வீட்டில் இருந்த ஊதுபத்தி பாக்கெட்டை வைத்து அக் கொலையை ஊதுபத்தி விற்கும் பெண் செய்திருக்கலாம் என்று சந்தேகப்படுவதாகவும் கூறுகிறார். இதனால் காயத்ரியின் மீது திடீர் சந்தேகம் எழுகிறது சத்திக்கு. அவள் விலாசத்துக்கு சென்று பார்த்தால் அங்கு காயத்ரி என்ற பேரில் உள்ள வேறொரு பெண்ணின் முகவரி என்று தெரிகிறது. இனி நாவல் பேசும்....

---

*தொடர்கதை - 1*

காயத்ரி..!

' கோயிலின்றும் வெளிப்பட்டு பஸ் கிடைக்குமோ... கிடைக்காதோ என்கிற கவலையோடு மயிலாப்பூர் தெப்பக் குளத்து ஓர பிளாட்பார்மில் இரண்டு பைகளைத் தூக்கிக் கொண்டு வேர்க்க வேர்க்க நடந்து கொண்டிருந்த அந்த அழகான இருபத்து மூன்று வயதும் ஐம்பது கிலோ எடையும் கொண்ட காயத்ரி தன் பெயரைச் சொல்லி யாரோ கூப்பிடுவதை உணர்ந்து திரும்பிப் பார்த்தாள். பைக்கில் அந்த இளைஞன் தெரிந்தான்.




கண்களில் குளிர் கண்ணாடியும் காற்றில் சிலும்பிக் கொண்டிருந்த தலைக் கேசமும் அவனுடைய முகத்துக்கு அழகாக இருந்தது. மேலுதட்டில் கெட்டியான மீசை. காயத்ரி நின்று பார்த்ததும் அவன் பைக்கை ஸ்டாண்ட் போட்டு நிறுத்திவிட்டுக் குளிர் கண்ணாடியைக் கழற்றி பாக்கெட்டில் போட்டுக்கொண்டு அவளை நெருங்கினான்.

உதட்டில் ஒரு 70 எம்.எம். புன்னகை. “நீங்க காயத்ரிதானே..?”
“ஆமா...”
“நான் யார்னு உங்களுக்குத் தெரியுதா?”
“சாரி.. தெரியலை..!”
“கொஞ்சம் உன்னிப்பா என்னோட முகத்தைப் பார்த்து கெஸ் பண்ணிச் சொல்லக்கூடாதா?”
காயத்ரி அவனுடைய முகத்தைத் தீர்க்கமாய்ச் சில விநாடிகள் பார்த்துவிட்டுத் தலையாட்டினாள். “வெரி ஸப்ரி... தெரியலை..!”
“நீங்க ரத்னசபாபதி ஹையர் செக்கண்டரி ஸ்கூல்ல ப்ளஸ்டூ வரைக்கும் படிச்சீங்கதானே..?”
“ஆமா...”
“நானும் அதே ஸ்கூல்லதான் படிச்சேன்... என் பெயர் சத்யநாராயணன். எல்லாரும் என்னைச் "சத்யம்... சத்யம்' ன்னு கூப்பிடுவாங்க. ஆனா நீங்க மட்டும் என்னைச் "சத்தி... சத்தி' ன்னு கூப்பிடுவீங்க.

இப்ப உங்களுக்கு ஞாபகம் வந்திருக்குமே...”
காயத்ரியின் கண்களில் இப்போது கூடுதல் பளபளப்பு. முகத்தில் பெற்டர் பூசியது போன்ற மலர்ச்சி. உதடுகள் ஆர்வத்தில் துடித்தன. “நீங்க... அந்த "சத்தி' யா? “
அதே... அதே..!” என்று சொல்லி அவன் வாய்விட்டுச் சிரித்தபோது கடைவாயின் மேல் வரிசையில் அதே தெற்றுப்பல் அவனைச் சத்தியநாராயணன் என்று காட்டிக் கொடுத்தது. காயத்ரிக்கு அவனைப் பார்க்கப் பார்க்க வியப்பில் மூச்சடைத்தது.




"தலைக்கு நிறைய எண்ணெய் தடவிக் கொண்டு ஈர்க்குச்சி உடம்பில் காக்கி அரை டிராயரும் வெள்ளை அரைக்கைச் சட்டையும் தொளதொளவென்று தொங்கிக் கொண்டிருந்த அந்தச் சத்யநாராயணனா இவன்..!' காலம் நிச்சயம் ஒரு மந்திரக் கோல்தான். இல்லாவிட்டால் இப்படியொரு உருமாற்றம் நிகழுமா என்ன?

சத்யநாராயணன் கேட்டான். “என்ன காயத்ரி... அப்படியே ஸ்டன் ஆயிட்டீங்க?”

“உங்களைப் பார்க்கப் பார்க்க எனக்குப் பிரமிப்பா இருக்கு சத்தி”

“உங்களைப் பார்க்கும்போதும் எனக்கும் அப்படித்தான் இருக்குது. ரெட்டை ஜடை போட்டு சின்னப் பொண்ணுமாதிரி நாலடி உயரத்தில இருந்தீங்க... இப்போ சேலை கட்டி ஒரு குழந்தைக்கு அம்மா மாதிரி இருக்கீங்க... என்னால நம்பவே முடியலை...” காயத்ரி சிரித்தாள்.

“சத்தி... எனக்கு இன்னும் கல்யாணமாகலை.”

'"ஸ்ரி... சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன். பை... த... பை ஸ்கூல் ஃபைனலுக்கப்புறம் என்ன படிச்சீங்க?”

“படிப்புக்கு ஒரு முழுக்கு. மேற்கொண்டு நான் படிக்கலை. அப்பாவும் அம்மாவும் அடுத்தடுத்து வந்த வருஷங்களில் திடீர்னு இறந்துட்டாங்க.”

சத்யநாராயணன், “ஸ்ரி...” சொல்லிவிட்டு மெல்லிய குரலில் கேட்டான். “இப்ப என்ன பண்ணிட்டிருக்கீங்க?” காயத்ரி புன்னகைத்தாள்.

தன் கையில் வைத்திருந்த இரண்டு பெரிய பைகளையும் உயர்த்திக் காட்டினாள். சத்தி புருவங்களை உயர்த்தினான். “என்ன இது..?”

“உள்ள என்ன இருக்குன்னு பாருங்க.”

சத்தி எட்டிப் பார்த்தான். இரண்டு பைகளிலும் கட்டுக் கட்டாய் ஊதுவத்திப் பாக்கெட்டுகள். காற்றில் தாழம்பூ மணம். “காயத்ரி இது..?”




"இதுதான் என்னோட பிஸினஸ் ப்ராடக்ட். வீட்ல வெச்சு நானே தயார் பண்றேன். கோயில்களுக்கும் வீடுகளுக்கும் நேரடியாகப் போய் சப்ளை பண்றேன். இந்த பிஸினெஸ் இருக்கப் போய்தான் வயத்துப் பிரச்சினை இல்லாமே நாள் சுலபமாய் ஓடுது..."

சத்யநாராயணனின் முகம் மாறியிருந்தது. "காயத்ரி..! நான் இதை எதிர்பார்க்கலை. பிளஸ் டூவில் நீ நல்லா மார்க் எடுத்திருந்தே... ஏதாவது ஒரு கம்ப்யூட்டர் கோர்ஸ் படிச்சு நல்ல வேலைக்குப் போயிருக்கலாம்..."

"விதி சிரிக்கும்போது நாம் அழ வேண்டியிருக்கே!" சொல்லிவிட்டு வெறுமையாய்ப் புன்னகை பூத்த காயத்ரி அவனை ஏறிட்டாள்.

"என்னை விடுங்க சத்தி... நீங்க எப்படி இருக்கீங்க? ஏதாவது வேலைக்குப் போயிட்டிருக்கீங்களா... இல்லை பிஸினஸ்?"

"ரெண்டும் இல்லை..."

"பின்னே..?"

"போஸ்டிங்கை எதிர்பார்த்துக்கிட்டிருக்கேன்..."

"என்ன போஸ்டிங்?"

"இன்ஸ்பெக்டர் போஸ்டிங். இண்டர்வியூவில் செலக்டாகி ஒரு மாசமாச்சு..."

"நான் இதை எதிர்பார்க்கலை சத்தி... நீங்க ஸ்கூல்ல படிக்கும்போதே ஸப்ப்ட் நேச்சர். உங்களுக்கு போலீஸ் உத்யோகம் பொருந்தாதே... ஏன் புரொபஷனல் கோர்ஸ் படிக்கலையா?"

"பிடிக்கலை... போலீஸ் டிபார்ட்மெண்டில் இப்போ ஒரு இன்ஸ்பெக்டரா நுழைஞ்சிருக்கேன். ரிடையராகும்போது ஐ.ஜி.யா இருப்பேன்."

காயத்ரி சேலைத் தலைப்பால் தன் நெற்றி வியர்வையை ஒற்றிக் கொண்டே கேட்டாள். "வீட்ல அப்பா, அம்மா எல்லாரும் செற்க்கியம்தானே..?"

"செற்க்கயம்தான்... இப்ப அவங்க கோயமுத்தூர்ல என் பெரிய அண்ணனோடு இருக்காங்க." "உங்களுக்கு ஒரு தங்கச்சி இருந்தாளே... பேருகூட ஹம்ஸவேணி..."

"கரெக்ட். ஹம்ஸவேணிக்குப் போனவருஷம்தான் கல்யாணம் நடந்தது. இப்ப கன்சீவ்ட். எட்டு மாசம். போன வாரம்தான் கோயமுத்தூர்ல சீமந்தம் நடந்தது."

“கேட்கவே சந்தோஷமாயிருக்கு...”

“உங்களுக்கு எப்போ கல்யாணம் காயத்ரி... ஏதாவது ப்ரபோஸல் இருக்கா?”

“மிஸ்டர் பிரம்மாவைத்தான் கேட்கணும்...”

“ரொம்ப வெக்ஸப் பேசறீங்க. இப் யூ டோண்ட் மைண்ட்... நாம ரெண்டு பேரும் அந்த ரெஸ்டாரண்டுக்குப் போய் கூல்டிரிங்ஸ் ஏதாவது சாப்பிடலாமா..?”

“ஸ்ரி சத்தி... இன்னிக்கு ஸோமவாரம். நான் விரதம். ராத்திரி வீட்டுக்குப் போய்தான் தண்ணியே சாப்பிடுவேன்...”

“வெய்யில்ல அலயற வேலை. இதுல விரதம் வேற இருக்கணுமா?”

“அம்மாகிட்டயிருந்து கத்துக்கிட்டது. விட முடியலை. ஸோமவாரம் மட்டும் இல்லை. பெற்ணமி, அமாவாசை, பிரதோஷம் இது மாதிரியான நாட்களிலும் விரதம்தான்.”

“வீடு எங்கே..?”

“கோகுலம் காலனியில்.”

“ராயப்பேட்டையில் இருக்கே... அந்தக் கோகுலம் காலனியா?”

“ஆமா.”

“உங்களுக்கு ஆட்சேபணை இல்லைன்னா சரியான அட்ரஸ்ச் சொல்லலாமே... ஒரு நாளைக்கு வீட்டுக்கு வந்து பார்க்க வசதியாய் இருக்கும்.

“காயத்ரி பதில் பேசாமல் மெற்னிக்க... சத்யநாராயணன் படபடத்தான்.

“உங்களுக்குப் பிராப்ளம் இருந்தா வேண்டாம். நான் கொஞ்சம் அதிகப்படியா உரிமை எடுத்துக்கிறேனோ..?”

“நோ... நோ..! அப்படியில்லை. கோகுலம் காலனியில் வாட்டர் டேங்க்குக்குப் பக்கத்திலதான் வீடு. ஊதுவத்தி காயத்ரியோட வீடு எதுன்னு கேட்டா காலனியில் இருக்கிற எல்லார்க்கும் தெரியும்.” “ஏதாவது ஒரு நாள் உங்க வீட்டுக்கு வரலாமில்லையா?”

“வரலாம்.”

“இந்தாங்க... என்னோட விசிட்டிங் கார்டு.

“இது எதுக்கு..?”

“நீங்களும் ஒருநாளைக்கு என்னோட வீட்டுக்கு வரலாம் இல்லையா? அடையார் இந்திரா நகர்ல ஏழாவது தெரு. முதல் வீடு.”

“அந்த ஏரியாவில் ஊதுவத்தி விக்க வந்தால் சேல்ஸ் எப்படியிருக்கும்?”

“நான் கான்வாஸ் பண்ணிக் கொடுக்கிறேன். நீங்க வாங்க...” காயத்ரி சிரித்தாள்.

“ஓகே சத்தி... உங்களைப் பல வருஷம் கழிச்சு எதிர்பாராத விதமா சந்திச்சதுல எனக்குப் பெரிய சந்தோஷம். உங்களுக்குச் சீக்கிரமே இன்ஸ்பெக்டர் உத்யோகத்துக்குப் போஸ்டிங் வர என்னுடைய வாழ்த்துக்கள். நான் வரட்டுமா? இன்னிக்கு மந்தவெளி ஏரியாவில் வீடுவீடாய் என் வியாபாரம்.” சொல்லிவிட்டு இரண்டு பைகளையும் கைக்கு ஒன்றாய்த் தூக்கிக் கொண்டு தளர்வாய் நடந்து போகும் காயத்ரியை இமைக்காமல் பார்த்தான் சத்யநாராயணன். அவனுடைய இருதயம் ஈயக் குண்டாய்க் கனத்தது.

உச்சந்தலையில் வெய்யில் பட்டு அமிலமாய்த் தகிக்க, காயத்ரி அதைப் பொருட்படுத்தாமல் ராஜா அண்ணாமலை புரத்தில் ஆள் நடமாட்டம் இல்லாத அந்தச் சாலையில் மெதுவாய் நடை போட்டு மரங்கள் சூழந்த பங்களாவுக்கு முன்பாய் வந்து நின்றாள். காம்பெற்ண்ட் கேட் வெறுமனே சாத்தியிருந்தது. கேட்டை எட்டிப் பார்த்து “சார்... சார்...” என்று குரல் கொடுத்தவள் பதிலுக்கு யாரும் வராமல் போகவே கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே போனாள். சுற்றும் முற்றும் பார்த்தாள். "நாய் ஏதாவது இருக்கிறதா..?' இல்லை. போர்டிகோவை நோக்கி நடந்தாள். ஒரே பிரசவத்தில் பிறந்த மாதிரி இரண்டு மாருதி கார்கள் போர்டிகோவில் நின்றிருந்தன.

கார்களைச் சுற்றிக் கொண்டு நிலைப்படிகளில் ஏறியவள் தேக்கு மரக் கதவுக்கு இடப்பக்கமாய் இருந்த காலிங்பெல் ஸ்விட்ச் மேல் கையை வைத்தாள். அது உள்ளே ஒரு மியூசிக் நோட் பாடியது. தொடர்ந்து கதவு திறக்கப்படும் சத்தம். நடுத்தர வயதுள்ள ஒரு நபர் லுங்கி பனியனில் நின்றிருந்தார். மீசையும் கிருதாக்களும் டையில் குளித்து அதிகப்படியான கறுப்பைக் காட்டின. கேட்டார்.

“என்ன..?” “ஊதுவத்தி சார்... வீட்லயே தயார் பண்றோம்.”
“வேண்டாம்... போம்மா...” என்று சொன்னவர் சட்டென்று பேச்சை நிறுத்திக் கொண்டவர் - மெல்லிய குரலில் கேட்டார். “வெளியே கடைகளில் விக்கிற ஊதுவத்திக்கும் நீ விக்கிற ஊதுவத்திக்கும் என்ன வித்தியாசம்..?”
“கடைகளில் விக்கிற ஊதுவத்திகளில் கெமிக்கல் கலந்து இருக்கும் சார். நாங்க தயார் பண்ற ஊதுவத்திகளில் கெமிக்கல் இருக்காது. ரெண்டு பத்தி கொளுத்தி வெச்சாலே போதும் பனிரெண்டு மணி நேரத்துக்கு வாசனை இருக்கும்.”

“அப்படியா... உள்ளே வந்து ரெண்டு பத்தி கொளுத்தி வை பார்க்கலாம். வாசனை நல்லா இருந்தா வாக்கிக்கறேன்.”
'"வீட்ல லேடீஸ் இல்லையா சார்..?”
“உள்ளே சமையல்கட்டில் வேலையாய் இருக்காங்க.”
காயத்ரி ஊதுவத்திப் பைகளோடு உள்ளே போனாள்.

பெரிய ஹால். இரண்டு ஊதுவத்திகளைக் கொளுத்தி ஃப்ளவர் வாஸுக்குக் கீழே வைத்தாள். புகை காற்று மண்டலத்தில் கலந்து வாசனையைப் பரப்பியது. அந்த நபர் மூச்சை இழுத்தார். “வாசனை நல்லாத்தான் இருக்கு... பாக்கெட் என்ன விலை?”
“ஒரு பாக்கெட் பத்து ரூபா சார்.”
ள் “சரி... பாக்கெட்டுக்கு ரேட் சொல்லிட்டே... உனக்கும் ஒரு ரேட் இருக்குமே... அதைச் சொல்லு... ரெண்டு பிசினஸையும் முடிச்சுக்கலாம்...”
“ஸ...சார்..!”

“பயப்படாதே... வீட்ல யாரும் கிடையாது.” காயத்ரி புன்னகைத்தாள்.
“வீட்ல யாரும் இல்லைன்னு எனக்கும் தெரியும் சார். அதனால்தான் வந்தேன்...” சொன்ன காயத்ரி ஊதுவத்திப் பாக்கெட்டுகள் நிரம்பிய பைக்குள் கையை நுழைத்து - உள்ளேயிருந்து - இறுகிப்போன முகத்தோடு - ஸ்லோ மோஷனில் - கனமான அந்த ரிவால்வரை எடுத்தாள்.




*தொடர்கதை - 2*

காயத்ரியின் கையில் முளைத்த துப்பாக்கியைப் பார்த்ததும் அந்த நபரின் கண்கள் திகிலில் திகைத்து விரிந்தன. பதற்றமாய்ப் பின்வாங்கி நடந்து சுவர்க்குப் போய் முட்டிக்கொண்டு நின்றார். "ஏ.. ஏய்... என்ன இது..?"
புன்னகையைப் பெரிதாக்கிய காயத்ரி தன் கையில் இருந்த துப்பாக்கியைச் சுவர்க்கு உயர்த்திக் காட்டினாள்.

"இது ஜி - மேக் ரிவால்வர். ஜெர்மனி இதோட பிறந்த வீடு. இந்தியா புகுந்த வீடு. உள்ளே மொத்தம் ஆறு தோட்டா கர்ப்பம். ஸ்பெஷல் தோட்டா. இன்னும் விவரம் வேணுமா... புண்ணியகோடி...?" அந்தப் புண்ணியகோடி இப்போது சுவர்க்குப் போய் அப்பிக்கொண்டார். வியர்த்து வழிந்தார்.

காயத்ரி சோபாவுக்குப் போய்ச் சாய்ந்து கொண்டு கால் மேல் கால் போட்டுக் கொண்டாள். "மிஸ்டர் புண்ணியகோடி. உங்களைப் பெத்தவங்க ஒரு பெரிய தப்பு பண்ணிட்டாங்க. உங்களுக்குப் பேர் வைக்கும்போது உங்க ஜாதகத்தை ஒரு நல்ல ஜோஸியர்கிட்டே காட்டியிருக்கணும். அப்படிக் காட்டியிருந்தா அந்த ஜோஸியர் பார்த்துட்டு, உங்க குழந்தைக்குப் புண்ணியகோடின்னு பேர் வெக்காதீங்க... "பாவம் கோடி'ன்னு பேர் வையுங்க. ஏன்னா அந்தக் குழந்தை வளர்ந்து ஏகப்பட்ட பாவம் பண்ணப் போகுதுன்னு சொல்லியிருப்பார்."
புண்ணியகோடி அவஸ்தையாய் எச்சில் விழுங்கிக் கொண்டு காயத்ரியைப் பார்க்க, அவள் தன் மார்புப் பகுதிக்குக் கையைக் கொண்டு பாலிதீன் கவரில் வைத்திருந்த ஒரு பாஸ்போர்ட் சைஸ் போட்டோவை எடுத்துப் புண்ணியகோடிக்குக் காட்டினாள்.

"இந்த போட்டோவில் இருக்கிறது யார்ன்னு தெரியுதா?"
அவர் பார்த்துவிட்டு, "தெ... தெரியவில்லை" என்றார்.
"இப்படி காக்கா பார்வை பார்க்கக்கூடாது புண்ணியகோடி... நல்லாப் பாருங்க. கையில் வாங்கிப் பாருங்க."

புண்ணியகோடி கைகள் நடுங்க போட்டோவை வாங்கினார். போட்டோவின் மேல் கண்களைப் பார்த்தார். காயத்ரி கேட்டாள். "இப்பத் தெரியுதா?"

"தெ... தெரியலை..!"

"நிஜமா அந்த போட்டோவில் இருக்கிற பெண் யார்னு உங்களுக்குத் தெரியலையா..?" "தெ...ரியலை..."

"மிஸ்டர் புண்ணியகோடி..! பொய் சொன்னா எனக்குப் பிடிக்காது. என் கையில் இருக்கிற இந்த ரிவால்வர்க்கும் பிடிக்காது. உங்களுக்கு முழுசா ஒரு நிமிஷம் அவகாசம் தர்றேன். அந்த ஒரு நிமிஷம் முடியறதுக்குள்ளே நீங்க உண்மையைப் பேசியாகணும். அதாவது போட்டோவில் இருக்கிற பெண் யார்ங்கிறதைச் சொல்லணும். இல்லேன்னா இந்த ஜி- மேக் ரிவால்வர் தன்னோட கர்ப்பத்தில் இருக்கிற ஆறு தோட்டாக்களில் ஒரு தோட்டாவை உங்க இதயத்துக்கு அனுப்பிவைக்கும்... இப்போ கவுண்ட் டவுன் ஆரம்பம். 59, 58, 57, 56, 55, 54..."

புண்ணியகோடி மெளனமாய் வியர்த்துக் கொண்டிருக்க காயத்ரியின் கையில் இருந்த ரிவால்வர் உயிருள்ள ஒரு ஜந்து மாதிரி உயர்ந்து அவருடைய மார்பையே முறைத்தது.

"42, 41, 40, 39, 38, 37, 36..."

"எ.. எ.. எனக்கு நிஜமா இந்த போ... போட்டோவில் இருக்கிற பெண் யார்ன்னு தெரியாது..."

"29, 28, 27, 26, 25..." "எ.. எ.. எனக்குத் தெரியாது..."

"21, 20, 19, 18, 17..." "வே... வேண்டாம்... என்னை ஒண்ணும் பண்ணிடாதே!"

"14, 13, 12, 11, 10, 9..." காயத்ரியின் கையிலிருந்த துப்பாக்கி புண்ணியகோடியின் மார்பை இப்போது தீர்க்கமாய் அளவெடுத்தது. "6, 5, 4, 3, 2..."

"சொ... சொல்லிடறேன்..! போட்டோவில் இருக்கிற பொண்ணோட பேர் பவானி..."

"அந்த பவானி இப்போ உயிரோடு இருக்காளா?"

"இ.. இல்லை..!"




“ஏன்..?” ...

புண்ணியகோடி மெற்னிக்க காயத்ரி குரலை உயர்த்தினாள்.

“ஏன்னு கேட்டேன்... காதுல விழலியா?

“ புண்ணியகோடி பிரமமாய் எச்சில் விழுங்கினார். பின் விக்கித் திணறும் குரலில் சொன்னார். “அந்தப் பொண்ணு பவானி தற்கொலை பண்ணிக்கிட்டா.”

“தற்கொலைக்குக் காரணம்...?”

“தெரியலை...”

“காரணத்தை நான் சொல்லட்டுமா..! போன மாசம் இருபத்திரெண்டாம் தேதி பவானி சோப்பு பெற்டர் விக்கறதுக்காக இந்த ஏரியாவுக்கு வந்தா. முதல் போணி பண்றதுக்காக உங்க பங்களாவுக்குள்ளே நுழைஞ்சா. அன்னிக்கும் வீட்ல நீங்க மட்டும்தான் இருந்தீங்க. உங்க மனைவி ஊருக்குப் போயிருந்தாங்க. பவானி கிட்டே ஒரு அழுக்கான கர்ச்சீபைக் கொடுத்து சோப் பெற்டரால வாஷ் பண்ணிக் காட்டச் சொன்னீங்க. அந்த அப்பாவிப் பொண்ணு உங்க பேச்சை நம்பி கர்ச்சீப்போடு குளியறைக்குப் போனா. நீங்களும் பின்னாடியே போனீங்க.

அதுக்கப்புறம்...” காயத்ரி சில விநாடிகள் பேச்சை நிறுத்திவிட்டுப் பின் தொடர்ந்தாள். “22 -ம் தேதி உங்களால் சீரழிக்கப்பட்ட அந்த பவானி ஒரு வாரம் கழிச்சு வீட்ல தூக்குப் போட்டுக்கிட்டுச் செத்துப் போனா. காரணம் தீராத வயிற்றுவலின்னு அந்தப் பொண்ணு லெட்டர்ல எழுதியிருந்ததாலே நீங்க தப்பிச்சுட்டீங்க. ஆனா... இந்த ஜி-.மேக் ரிவால்வர்கிட்டயிருந்து நீங்க தப்பிக்க முடியாது.

“ ரிவால்வர் குபீர்ன்னு உயர்ந்தது. புண்ணியகோடி மிரண்ட விழிகளோடு சுற்றும் முற்றும் பார்த்தார். மெல்ல காயத்ரி சிரித்தாள். “பவானியைப் பாழ்படுத்தியதற்காக மட்டும் நான் துப்பாக்கியோட வரலை. நீங்க சில சட்ட விரோதமான காரியங்களைக்கூடப் போலீஸ் டிபார்ட்மெண்டின் ஆசீர்வாதத்தோடு பண்றதா ஒரு தகவல்... அதுக்காகவும் வந்திருக்கேன்.

புத்திசாலியான வக்கீல்களை வெச்சுக்கிட்டு எல்லா கேஸ்களையும் பாப்கார்ன் மாதிரி ஊதிட்டாலும் இன்னிக்கு நான் கொடுக்கப்போகிற ஜட்ஜ்மெண்டுக்கு நீங்க

தலைவணங்கியே ஆகணும்...” காயத்ரி சொல்லிக் கொண்டிருந்தபோதே ஹாலின் மூலையில் இருந்த டெலிபோன் குரல் கொடுத்தது. காயத்ரி டெலிபோனை ஒரு அரைப் பார்வை பார்த்துவிட்டு புண்ணியகோடியிடம் கேட்டாள்.

“யார் இப்ப டெலிபோன்ல?”

“தெ... தெரியலை...”

“ஊருக்குப் போயிருக்கிற உங்க மனைவியா? அல்லது ஊர் பேர் தெரியாத மனைவிகளில் ஒருத்தியா?” புண்ணியகோடி மௌனமாய் இருக்க காயத்ரி தன் தோள்களைக் குலுக்கினாள்.

“ஓகே..! போன் யார் பண்ணினா என்ன? அது உங்களுக்கு கடைசி போன்கால். போய்ப் பேசுங்க. என்னைப் பத்தியோ இங்கே இருக்கிற சூழ்நிலையைப் பத்தியோ எதுவும் பேசக்கூடாது. பொதுவா பேசிட்டு ஒரு நிமிஷத்துக்குள்ளே ரிஸீவரை வெச்சுடணும்.

“ புண்ணியகோடி தயக்கமாய் சில விநாடிகள் நின்றுவிட்டுப் பின் மெதுவாய்ப் போய் ரிஸீவரை எடுத்தார். ஈனஸ்வரத்தில் குரல் கொடுத்தார்.

“ஹலோ...” “யாரு புண்ணியகோடியா? நான் ஆடிட்டர் சீதாராமன் பேசறேன்...”

“சொ... சொல்லுங்க சார்...”

“ஐ டி. ஆபீஸிலிருந்து எனக்கு ஒரு தகவல் வந்தது. உங்க வீட்டை ரெய்ட் பணண ஒரு ஸ்க்வாட் இப்போ வந்திட்டிருக்காங்களாம். ஃப்ளையிங் ஸ்க்வாட். நீங்க பேங்க் லாக்கர்ஸ் சாவிகளையெல்லாம் எதாவது ஒரு இடத்துல மறைச்சு வெச்சுடறது நல்லது. லாக்கர்ஸ் சாவிகள் அவங்க கைக்குக் கிடைக்கக் கூடாது.”

“ச... சரி... சார்...”

“டென்ஷன் வேண்டாம். அவங்க என்ன கேள்வி கேட்டாலும் ஆடிட்டர்கிட்ட கேட்டுக்குங்கன்னு சொல்லிடுங்க.” “ச... சரி... சார்...”

“பேசிட்டிருக்க நேரமில்லை. எந்த விநாடியும் ஃப்ளையிங் ஸ்க்வாட் உங்க வீட்டு காலிங் பெல்லை அலற வைக்கலாம். போய் லாக்கர்ஸ் சாவிகளைப் பதுக்குங்க.”

ரிஸீவரை மறுமுனையில் ஆடிட்டர் வைத்துவிட புண்ணியகோடியின் மனசுக்குள் சின்னதாய் ஒரு நம்பிக்கை துளிர்விட்டது.

"இன்னும் சில நிமிஷங்களைக் கழித்துவிட்டால் போதும். உயிர் பிழைத்து விடலாம்..!'

காயத்ரி துப்பாக்கியும் கையுமாய் நேர்பார்வை பார்த்தாள். “போன்ல யாரு..?”

“ஆடிட்டர்...”

“என்ன சொன்னார்?”

“கம்பெனி பாலன்ஸ் ஷீட் ரெடியாயிடுச்சான்னு கேட்டார்...”

“அடுத்த ஜென்மத்துல ரெடியாயிடும்னு சொல்ல வேண்டியதுதானே..?”

புண்ணியகோடி அப்படியே மண்டியிட்டு உட்கார்ந்து காயத்ரியைப் பார்த்துக் கும்பிட்டார்.

“என்னை ஒண்ணும் பண்ணிடாதேம்மா..! நான் பண்ணின தப்புக்கெல்லாம் மன்னிப்பு கேட்டுக்கறேன்...”

“தவறு பண்ணினவனை மன்னிக்கலாம். தப்பு பண்ணினவனை மன்னிக்க முடியாது. மன்னிக்கவும் கூடாது. இது என் பாலிஸி.

“ புண்ணியகோடி அவளிடம் பேசிக்கொண்டிருந்தாலும் வெளியே ஏதாவது வாகனச் சத்தம் கேட்கிறதா என்பதில் தீவிரமாய் இருந்தார். காயத்ரி இரண்டி முன்னால் வந்தாள்.

“ம்ஹும்.. இதுதான் என்னோட ஜட்ஜ்மெண்ட். ஒரு அப்பாவிப் பெண்ணின் வாழ்க்கைக்கு அவசர அவசரமாய் முற்றுப்புள்ளி வைத்த உனக்கு இந்தத் தோட்டாக்கள் பரிசாகக் கொடுக்கப்படுகிறது. “ காயத்ரியின் கை விரல் ட்ரிகரில் பதிந்தது. வளைத்தது.

“வே... வேண்டாம்..!”

“ஸாரி மிஸ்டர் புண்ணியகோடி அடுத்த ஜென்மத்திலாவது புண்ணியம் செய்யக் கற்றுக்கொள்ளுங்கள்.

“ ட்ரிகரைச் சுண்டினாள் காயத்ரி. சைலன்ஸர் பொருத்தப்பட்ட ரிவால்வர் நிசப்தமாய் ஒரு தோட்டாவை அனுப்ப அது புண்ணிகோடியின் இடது மார்புக்கு போயிற்று. இடது மார்பில் தோட்டா பாய்ந்து புண்ணியகோடி ரத்தமாய் ஸ்தம்பித்துக்கொண்டிருக்கும்போதே வலது மார்பில் ஒரு தோட்டா நுழைந்தது. உடம்பு பிடிப்பு இல்லாமல் மடங்கிக்கொண்டுருக்கும்போதே வயிற்றிலும் ஒரு தோட்டா இடம் பிடித்தது.

கைகளையும் கால்களையும் அகல விரித்துக் கொண்டு ரத்தம் கொட்டிக்கொண்டே மல்லாந்தார் புண்ணிகோடி. காயத்ரி பரபரவென்று செயல்பட்டாள். துப்பாக்கி ஊதுவத்தி பாக்கெட்டுகள் நிரம்பிய பைக்குள் போட்டாள். "இனி கிளம்ப வேண்டியதுதான்! ' "வந்த காரியம் முடிந்தது..! ' காயத்ரி நினைத்த வினாடி - வாசலில் காலிங் பெல் கதறியது.




*தொடர்கதை - 3*

வாசலில் எழுந்த அழைப்பு மணிச் சத்தம் கேட்டு ஸ்தம்பித்த காயத்ரி சில விநாடிகளுக்குப் பின் உணர்வு வந்தவளாய் இரண்டு ஊதுவத்திப் பைகளையும் தூக்கிக்கொண்டு வீட்டின் பின்பக்கத்தை நோக்கி ஓடினாள். மூளைக்குள் சிவப்பு விளக்கு எரிந்தது.

"பின்பக்கக் கதவு பூட்டியிருக்குமோ..? இல்லை... வெறுமனே திறந்து இருக்குமோ..? பூட்டியிருந்தால் தப்பிக்க முடியாது. மாட்டிக்கொள்ள வேண்டியதுதான்!'

மூச்சிரைப்போடு காயத்ரி அரை நிமிஷ நேரம் ஓடி வீட்டின் பின்பக்கம் வந்தாள். குட்டை ரகத் தென்னை மரங்களும் வாழை மரங்களும் நெருக்கமாய் மண்டிக் கிடக்க கிடைத்த இடைவெளிகளில் புகுந்து ஓடிப் பின் கதவுக்கு வந்தாள். பழங்காலத்துக் கதவு. பூட்டப்படாமல் பெரிய நாதங்கியால் தாழிடப்பட்டிருந்தது.

காயத்ரி இரண்டு ஊதுவத்திப் பைகளையும் வைத்துவிட்டுக் கதவின் நாதங்கியைப் பிடித்துப் பார்த்தாள். வெயிலுக்கும் மழைக்கும் இறுகித் துருப்பிடித்துப் போயிருந்த நாதங்கி சுலபமாய் விலக மறுத்தது. மூக்கைப் பிடித்து இழுத்துப் பார்த்தாள். மூச்சு முட்டியது. இரண்டு தடவை முயன்றும் முடியாமல் போகவே சுற்றும் முற்றும் பார்த்து, பார்வைக்குக் கிடைத்த பெரிய கல் ஒன்றை எடுத்து வந்து நாதங்கியை ஒரு தட்டுத் தட்டினாள்.

உடனே - அது கழன்று கொண்டது.

கதவை இரண்டு கைகளாலும் பிடித்து இழுக்க "றீச்ச்ச்' சென்ற பெரிய சத்தத்துடன் திறந்துகொண்டது.

பின்பக்கம் ஆள் நடமாட்டம் இல்லாத சந்து ஒன்று தெரிய, காயத்ரி இரண்டு ஊதுவத்திப் பைகளையும் தூக்கிக் கொண்டு வியர்த்து வழிய ஓடிப் பிரதான சாலைக்கு வந்து மக்கள் நடமாட்டத்தோடு கலந்து இயல்பாய் நடந்தாள். இரண்டு நிமிஷ நடையில் பஸ் ஸ்டாப் ஒன்று வர - காலியாய் நின்றிருந்த பஸ்ஸுக்குள் ஏறிக்கொண்டாள். இதயத் துடிப்பு இப்போது நார்மலுக்கு வந்திருக்க வியர்வைச் சுரப்பிகள் தன் வேலையை நிறுத்தியிருந்தன.

பக்கத்தில் உட்கார்ந்திருந்த பெண்ணிடம் கேட்டாள்.

“இந்த பஸ் எங்கே போகுது..?”

“அடையார்...” ஆயாசமாய்ச் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள்.

'இந்நேரம் புண்ணியகோடியின் கதை முடிந்து போயிருக்கும்..!'

* வருமானவரித் துறை அதிகாரி வருணாபரணன் தனக்குப் பக்கத்தில் நின்றிருந்த அதிகாரிகளைப் பார்த்தார்.

“என்ன நாலைந்து தடவை காலிங் பெல் கொடுத்தும் எந்த ரெஸ்பான்ஸும் இல்லையே..?”

“நாம 'ரெய்ட்' வர்ற விஷயம் எப்படியும் புண்ணியகோடிக்குத் தெரிந்திருக்கும் சார். தஸ்தாவேஜ்களை மறைச்சு வைக்கிற முயற்சியில் அவர் ஈடுபட்டிருக்கலாம்...”

“ராகவன்..!”

“சார்...”

“அந்த வெண்டிலேட்டர் வழியா உள்ளே பாருங்க...”




வருமானவரித் துறையைச் சேர்ந்த ராகவன் வீட்டின் பக்கவாட்டுப் பகுதிக்குப் போய் ஜன்னலுக்கு மேற்புறத்தில் இருந்த சன்ஷேடில் ஏறி வெண்டிலேட்டர் வழியாக உள்ளே குனிந்து பார்த்தார். உள்ளே அரையிருட்டுப் பரவிக் கிடக்க பார்வைக்கு எதுவும் தட்டுப்பட மறுத்தது.

“என்ன ராகவன்..?”

“வீட்டுக்குள்ளே யாரும் இல்லை போலிருக்கு சார்.”

“அது எப்படி இல்லாமே போவாங்க. உள்ளே லாக் பண்ணியிருக்காங்களே...”

“வீட்டுக்குப் பின்பக்கமாப் போய்ப் பார்க்கட்டுமா சார்..?”

“ம்... போய்ப் பாருங்க...”

ராகவன் கீழே குதித்து வீட்டின் பின்பக்கம் நோக்கிப் போனார். குட்டைத் தென்னை மரங்களும் வாழை மரங்களும் வழி மறிக்க உள்ளே நுழைந்தார். திறந்த வீடு பார்வைக்குக் கிடைத்தது. தயக்கமாய்ப் பிரவேசித்தார். சமையல்கட்டு வந்தது. தொடர்ந்து இரண்டு அறைகள். பின் ஹால். ஹாலின் ஓரத்தில் புண்ணியகோடி. ரத்தமாய்... நிலைத்த விழிகளோடு.

* அடையார் டெர்மினலில் இறங்கிக் கொண்டாள் காயத்ரி. மத்தியான வெயிலில் மண்டை, அடுப்பில் வைத்த வாணலியைப் போல் தகித்தது. ஒரு குளிர்பானக் கடையில் ஐந்து ரூபாய் பெப்ஸி வாங்கித் தொண்டைக்கு வார்த்துக் கொண்டபின் டெர்மினலுக்கு வெளியே இருந்த எஸ்.டி.டி. பூத்தை நோக்கிப் போனாள்.

சரியாய் சாத்தப்படாத கண்ணாடிப் பூத்துக்குள்ளிருந்து டெலிபோனே தெறித்துப் போகும் தினுசில் கத்திக்கொண்டிருந்தான் அந்த நபர். “பின்லேடனைக்கூடப் பிடிச்சிடலாம் போலிருக்கு. ஐநூறு ரூபாய் கடன் வாங்கிட்டுப் போன மாணிக்கத்தைப் பிடிக்க முடியாது போலிருக்கு. பத்து நாளா தேடறேன்.

கண்ணுக்குச் சிக்கவேயில்லை. கோயம்பேடு மார்க்கெட்டுக்கு ரெண்டு தடவை போய்ட்டு வந்துட்டேன். கையில் மாட்டினான்னா அவன் முதுகில ஒரு வில்லுப்பாட்டுக் கச்சேரி நடத்திடலாம்னு இருக்கேன்..!"

காயத்ரி பொறுமையாய்க் காத்திருந்து அந்த நபர் பேசிவிட்டு வெளியே வந்ததும் பூத்துக்குள் போனாள். கதவை நன்றாய்ச் சாத்திக்கொண்டு ரிஸீவரை எடுத்துக் கொண்டு டயலில் எண்களைத் தட்டினாள். மறுமுனையில் ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டதும் குரல் கொடுத்தாள்.

ஹஸ்கி வாய்ஸ். "நான் காயத்ரி..."

"சொல்லு..!" ஒரு ஆண் குரல்.

"புண்ணியகோடி காலமானார்."

"சந்தோஷம்..!"

"எனக்கு முழுமையான சந்தோஷம் இல்லை..."

"ஏன்..?"

"ஒரு பிரச்னை..!"

"சொல்லு..."

"புண்ணியகோடியின் கதை முடியும்போது வாசலிலிருந்து காலிங்பெல் சத்தம் கேட்டது."

"வந்தது யாரு..?"

“தெரியலை. நான் வீட்டோட பின்பக்கக் கதவைத் திறந்துட்டு ஓடி வந்துட்டேன்...”

“உன்னை யாரும் பார்க்கலையே..?”

“பார்க்கலை...”

“பின்னே அதுல என்ன பிரச்னை..?”

“யாராவது பார்த்து இருப்பாங்களோ என்கிற பயம்தான்...”

“தேவையில்லாத பயம்..!

“இப்ப நீ எங்கேயிருந்து பேசிட்டிருக்கே...?”

“அடையார் பஸ் டெர்மினல்.”

“சரி... மேற்கொண்டு டெலிபோன்ல எந்த கான்வர்சேஷனும் வேண்டாம். அப்புறமா மீட் பண்ணிப் பேசலாம். போய் தலைக்குக் குளிச்சிட்டுப் பிரியாணியும் சிக்கனும் சாப்பிட்டுட்டு ரெஸ்ட் எடு...” மறுமுனையில் ரிஸீவர் வைக்கப்பட்டுவிட காயத்ரியும் ரிஸீவரை வைத்துவிட்டு பூத்தைவிட்டு வெளியே வந்து - டேபிள் போட்டு உட்கார்ந்திருந்த பெண்ணிடம் இரண்டு ரூபாய் நாணயத்தைக் கொடுத்துவிட்டு நடந்தாள்.

ரோட்டைக் கிராஸ் செய்து ஜீப்ரா கோடுகளில் நடக்க முயன்றபோது - அந்த பைக் படபடத்தபடி அவளுக்குப் பக்கமாய் வந்து நின்றது. கூடவே குரல் கேட்டது.

“சென்னை பெரிய சிட்டின்னு சொன்னது யாரு? ரொம்ப சின்ன சிட்டி. இல்லேன்னா ரெண்டாவது தடவையா நாம சந்திப்போமா..?”

காயத்ரி திரும்பினாள்.

பைக்கில் சத்தியநாராயணன். உதட்டில் பெரிய புன்னகை.

“ரெண்டு மணி நேரத்துக்கு முன்னாடி மைலாப்பூர்ல பார்த்தோம். இப்போ அடையார். . . ”
காயத்ரி இயல்பாய்ச் சிரிக்க முயன்றாள். நெற்றி வியர்த்தாள்.

“சத்தி. . ! ”

* புண்ணியகோடியின் பங்களா முன்புறம் இப்போது போலீஸ் யூனிஃபார்ம்கள் பூத்திருக்க - உள்ளே இன்ஸ்பெக்டர் ஸ்டீபன் புண்ணியகோடியின் உடலைப் புரட்டிப் பார்த்துவிட்டு. வருமானவரித் துறை அதிகாரி வருணாபரணனிடம் திரும்பினார்.

“புண்ணியகோடியின் உடம்பில் மூணு தோட்டாக்கள் பாய்ந்ததுக்கான அடையாளம் இருக்கு. . . நீங்க வீட்டுக்கு வந்த நேரமும் புண்ணியகோடி கொலை செய்யப்பட்ட நேரமும் கிட்டத்தட்ட ஒரே நேரம். கொலையாளி அந்தச் சமயத்துல இந்த வீட்டுக்குள்ளேதான் இருந்து இருக்கணும்.

துப்பாக்கியால சுட்ட சத்தம் உங்களுக்குக் கேட்டதா. . ?”

“இல்லையே. . ! நாங்க இந்த ஸ்பாட்டுக்கு வர்றதுக்கு ஒரு அஞ்சு நிமிஷத்துக்கு முந்தி சம்பவம் நடந்து இருக்கலாம். நாலைந்து தடவை காலிங்பெல் அடிச்சும் உள்ளேயிருந்து எந்த ரெஸ்பான்ஸும் கிடைக்காமல் போகவே என்னோட டிபார்ட்மெண்டைச் சேர்ந்த அதிகாரி ராகவனை வெண்டிலேட்டர் வழியா உள்ளே பார்க்கச் சொன்னேன். அப்படிப் பார்த்தும் உள்ளே யாரும் இருக்கிற மாதிரி தெரியாமல் போகவே ராகவன் வீட்டுப் பின்பக்கம் போனார். பின்பக்கக் கதவு திறந்து இருந்தது. ”

ஸ்டீபன் அடுத்த கேள்வியைக் கேட்பதற்காக வாயைத் திறந்த விநாடி - சப் - இன்ஸ்பெக்டர் ஹரிஹரன் வழுக்கைத் தலை மனிதர் ஒருவரைக் கூட்டிக்கொண்டு வந்தார்.

“சார். இவர் மாசிலாமணி. ரிடையர்ட் பேங்க் மானேஜர். பக்கத்துப் பங்களாவில் குடியிருக்கார். ”

ஸ்டீபன் மாசிலாமணியை ஏறிட்டார்.

“புண்ணியகோடி மூணு தோட்டா வாங்கிச் செத்திருக்கார். துப்பாக்கி வெடிக்கிற சத்தம் உங்களுக்குக் கேட்கலையா?”

“கேட்கலை... சார்... ”

“ஏதாவது அலறல் சத்தம்..?” "

"'ஒரு சத்தமும் கேட்கலை சார். நானும் என்னுடைய மனைவியும் டி.வி. பார்த்துட்டிருந்தோம்..! புண்ணியகோடி மட்டும் வீட்ல தனியா இருந்திருக்கார். ”

“மத்த ஃபேமிலி நம்பர்ஸ் எங்கே..?”

“தெரியலை... புண்ணியகோடி கொஞ்சம் ரிசர்வ்ட் டைப். பக்கத்து வீடுன்னுதான் பேர். என்கிட்டேயும்கூட அதிகம் பேசமாட்டார். ”

“வேலைக்காரங்ககூட வீட்ல இல்லையே..?”

இந்த வீட்டுக்கு வேலைக்கு வர்றவங்க யாரும் ரெண்டு மாசத்துக்கு மேல் நிலைக்கமாட்டாங்க... கார் டிரைவரும் அப்படித்தான். ”

சப் - இன்ஸ்பெக்ட்ர ஹரிஹரன் குறுக்கிட்டார்.

"சார்... டாக் ட்ரெய்னர் விக்டர் வந்திட்டார். டாக்கை ஸ்மெல் பண்ண விட்டா கொலையாளி போன ரூட் தெரிஞ்சுடும்."

"ப்ரொஸீட்."

விக்டர் வால் வெட்டப்பட்ட அந்த சாக்லேட் நிற டாபர்மேன் நாயோடு வந்தார். மண்டியிட்டு உட்கார்ந்த விக்டர் நாயின் காதில் ஏதோ ரகசியம் சொல்வதுபோல்

"சார்லி! ஸ்மெல் இட்..." என்றார்.

சார்லி உடனே புண்ணியகோடியின் உடலை முகர்ந்தது. அரை நிமிஷ நேர முகர்வுக்குப் பின் சார்லி ஹாலை ஒரு சுற்று சுற்றிக்கொண்டு வீட்டின் பின்பக்கத்தை நோக்கி ஓடிற்று. டாக் ட்ரெய்னர் விக்டர் பின்தொடர்ந்தார்.

பின்பக்கம் சார்லி தென்னை, வாழை மரங்களின் அடர்த்திக்குள் ஓடியது. எதையோ போய்க் கவ்வி எடுத்தது. விக்டரிடம் கொண்டு வந்து கொடுத்தது. விக்டர் வாங்கிப் பார்த்தார்.

ஊதுவத்தி பாக்கெட்.




*தொடர்கதை - 4*

போலீஸ் இன்ஸ்பெக்டர் ஸ்டீபனிடம் டாக் ட்ரெயினர் அந்த ஊதுவத்திப் பாக்கெட்டைக் கொண்டு வந்து கொடுக்க, வாங்கிப் பார்த்தார்.

"இது எங்கே கிடந்தது?"
"வீட்டுக்குப் பின்பக்கம் சார்..."
"பாக்கெட் புதுசா இருக்கு... பாக்கெட் மேல் சுற்றப்பட்டு இருக்கிற கண்ணாடிப் பேப்பரைக்கூட இன்னும் கிழிக்கலை. நாய் இப்போ எங்கேயிருக்கு?"

"வீட்டுக்குப் பின்பக்கம் தோட்டத்து ஈர மணலில் ஸ்லிப்பர் பதிவுகள் சில தெரியுது. அந்த இடத்துல இப்ப நாய் உட்கார்ந்துட்டிருக்கு சார். நாயை ஃபர்தரா ஓடவிட்டா கொலையாளி போன திசையை ஓரளவு யூகம் பண்ணிடலாம். ஸ்லிப்பர் பதிவுகளைப் பார்க்கும்போது கொலையாளி ஒரு பெண்ணாக இருக்கலாம்ன்னு என் மனசுக்குப் படுது சார். காரணம் ஈர மணலில் காணப்பட்ட ஸ்லிப்பர் பதிவுகள் குதிகால் ஸ்லிப்பர்களுக்கு உரியவை."

"நீங்க சொல்றதைப் பார்த்தா ஊதுவத்தி விக்கிற ஒரு பெண் புண்ணியகோடியைக் கொலை செய்து இருக்கலாம்... இல்லையா?"

"மே... பி... சார்..." "கொலையாளி அவ்வளவு சீக்கிரம் இந்த ஏரியாவை விட்டுப் போயிருக்க முடியாது.. நாயை பாலோ பண்ணிப் பார்க்கலாமா... சார்..."
"வாங்க..."
இன்ஸ்பெக்டர் ஸ்டீபனும் டாக் ட்ரெயினரும் நாயிடம் வந்தார்கள்.

ட்ரெயினர் நாயிடம் குனிந்து கட்டளையிடும் குரலில், "சேஸ் அண்ட் ஸ்பாட் இட்..." என்று சொல்ல அது எழுந்து ஸ்லிப்பர் பதிவு வழியாக வெளியேறி ரோட்டில் பாய்ந்தது. ஸ்டீபனும் ட்ரெயினரும் பின் தொடர்ந்தார்கள். நாய்




நாலுகால் பாய்ச்சலில் ஓட, பிளாட்பாரத்தில் நடைபோட்டுக் கொண்டிருந்த ஆண்களும், பெண்களும் திசைக்கு ஒருவராய்ச் சிதறினார்கள். பஸ் ஸ்டாப் வரைக்கும் ஓடிய நாய் அதற்குப் பிறகு திகைத்த மாதிரி நின்று சுற்றும் முற்றும் பார்த்தது. நிமிஷ நேரம் மண்டியிட்டு உட்கார்ந்து கொண்டது.

டாக் ட்ரெயினர் இன்ஸ்பெக்டர் ஸ்டீபனை ஏறிட்டார். “சார்... கொலையாளி இந்த பஸ் ஸ்டாப் வரைக்கும் வந்து ஏதாவது ஒரு பஸ்ஸில் ஏறிப் போயிருக்கலாம்...”

ஸ்டீபன் பஸ் ஸ்டாப்புக்குப் பக்கத்தில் இருந்த கடைகளைப் பார்த்தார். ராகவேந்திரா டிஃபன் ஸ்டால், அருணா பார்மஸி, கதிர்வேல் மளிகை ஸ்டோர். பஸ் ஸ்டாப் ஷெல்டருக்குள் பெரிதாய்க் குங்குமப் பொட்டு வைத்துக் கொண்டு ஒரு பூக்காரி தெரிந்தாள். ஸ்டீபன் அவளை நோக்கிப் போனார். துளசியை மாலையாய்க் கட்டிக்கொண்டிருந்த அவள் கொஞ்சம் கலக்கமாய் எழுந்து நின்றாள்.

“எவ்வளவு நேரமா இங்கே உட்கார்ந்திருக்கே?”
“காத்தால எட்டு மணியிலிருந்து இங்கேதான் வுயுந்து கெடக்கிறேன்...”
“ஒரு மணி நேரத்துக்கு முந்தி இந்த பஸ் ஸ்டாப்புக்கு ஊதுவத்தி விக்கிற பெண்ணொருத்தி வந்திருக்கா. நீ பார்த்தியா?”
“ஊதுவத்தி விக்கிற பொண்ணா..?” குங்குமப் பொட்டு அண்ணாந்து யோசித்தது.
“ம்....”
“வயசு..?”
“அதெல்லாம் தெரியாது. இங்கே பஸ் ஏறியிருக்கா.”
“அப்படி யாரையும் பார்க்கல்ல சார்.”

டாக் ட்ரெயினர் குறுக்கிட்டார். “சார்..! மர்டர் நடந்த நேரத்தைத் துல்லியமாய்க் கணக்கிட்டால் கொலையாளி எந்தப் பஸ்ஸில் ஏறியிருக்கலாங்கறதை ஓரளவுக்கு கெஸ் பண்ண முடியும்.”
“எப்படி..?”

"இந்த பஸ் ஸ்டாப்பில் எந்தெந்த பஸ் எத்தனை மணி நேரத்துக்கு வரும்ங்கிற விவரங்களை ஒரு அட்டவணையாய் எழுதிப் போட்டு இருக்காங்க சார். வருமானத்துறை அதிகாரிகள் புண்ணியகோடியின் வீட்டுக்கு வந்து காலிங்பெல் கொடுத்திட்டுருக்கும்போதுதான் வீட்டுக்குள்ளே மர்டர் நடந்திருக்கு. கொலையாளி வீட்டை விட்டு வெளியே வந்து இந்த பஸ் ஸ்டாப்புக்கு வர ஒரு பத்து நிமிஷ நேரம் ஆகியிருக்கலாம். அந்த நேரத்தையும் கணக்கிட்டு இங்கே இருக்கிற பஸ் அட்டவணையோடு ஒப்பிட்டுப் பார்த்தா கொலையாளி எந்த பஸ்ஸில் ஏறியிருக்கலாம்ங்கிறதை எழுபது சதவீதம் கெஸ் பண்ண முடியும்." இன்ஸ்பெக்டர் ஸ்டீபன் மையமாய்த் தலையாட்டினார்.

"யு... ஆர் கரெக்ட்."

சத்யநாராயணன் காயத்ரியை வியப்பாய்ப் பார்த்தான்.

"என்ன காயத்ரி? ராஜா அண்ணாமலைபுரத்தில் சேல்ஸ் சரியாக இல்லையா? அடையார் பக்கம் வந்துட்டீங்க?"

"ஆமா..."

"கொஞ்சம் டென்ஷனா தெரியறீங்க..!"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. வெயில்ல அலைஞ்சதுல லேசா தலைவலி..."

"தலைவலியா..! இஃப் யூ டோண்ட் மைண்ட் வாங்க காயத்ரி... அந்த ரெஸ்டாரெண்டுக்குப் போய் ஒரு காப்பி சாப்பிடலாம்."

"காப்பியா? வேண்டாம்..."

"ஏன்..?"

"எனக்குப் பழக்கம் இல்லை."

"சரி... ஒரு கூல்ட்ரிங்ஸஹ்வது சாப்பிட்டுப் போலாம். ப்ளீஸ்...ரெண்டாவது தடவையா பார்த்து இருக்கோம்."

"அது வந்து..."

"உங்களுக்குப் பிரியம் இல்லைன்னா வேண்டாம். நான் உங்களை கம்பல் பண்ணலை..."

"சரி வாங்க..." காயத்ரி தயங்கிவிட்டு ரோட்டை கிராஸ் செய்து நடந்தாள்.

சத்யநாராயணன் பைக்கை ரோட்டோரமாய் ஸ்டாண்டிட்டு நிறுத்திவிட்டுப் பின் தொடர்ந்தான். ரெஸ்டாரெண்டுக்குள் போய் மூலையோர மேசையைத் தேர்ந்தெடுத்து காயத்ரி உட்கார, ஐந்து நிமிஷம் கழித்தே சத்யநாராயணன் உள்ளே வந்தான். கூட்டம் அதிகம் இல்லாத ரெஸ்டாரெண்ட் அது. பேரர் வந்து நின்றார்.

“உங்களுக்கு என்ன கூல்ட்ரிங்க் பிடிக்கும் காயத்ரி?”
“பைனாப்பிள்...”
சத்யநாராயணன் பேரரை ஏறிட்டான்.. “ரெண்டு பைனாப்பிள்.”

பேரர் நகர்ந்ததும் தன் வலது உள்ளங்கையைக் காயத்ரிக்கு முன்பாய் நீட்டினான் சத்யநாராயணன். உள்ளங்கையில் ஒரு மாத்திரை. காயத்ரியின் அழகான நெற்றி ஒரு சுருக்கத்துக்கு உட்பட்டது.

“என்ன இது..?”
“மாத்திரை.”
“தெரியுது... யார்க்கு..?”
“உங்களுக்குத்தான். நீங்கதான் தலைவலின்னு சொன்னீங்களே! அதுதான் பக்கத்து மருந்துக் கடைக்குப் போய் ஒரு "ஃப்ளக்ஸட்ன்' மாத்திரை வாங்கிட்டு வந்தேன். தலைவலிக்கு இது நல்ல மெடிஸன்... சாப்பிட்ட ரெண்டாவது நிமிஷம் நமக்குப் பிடிச்ச பாட்டு வாயிலிருந்து வெளியே வரும்...”

“மாத்திரையெல்லாம் எனக்கு வேண்டாம் சத்தி. அது எனக்கு வர்ற வழக்கமான தலைவலிதான்... வீட்டுக்குப் போய் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்தா போதும்...”
“நோ... நோ... தலைவலியையெல்லாம் அலட்சியம் பண்ணவே கூடாது. அந்த மாத்திரையை எடுத்துக்கங்க காயத்ரி...” சொன்னவன் டம்ளர் தண்ணீரையும் மாத்திரையையும் அவள் பக்கமாய் நகர்த்தி வைத்தான்.
“ம்... எடுத்துக்கங்க. ரெண்டே நிமிஷம்! சரியாயிடும்.”




காயத்ரி வேண்டா வெறுப்பாய் அந்த மாத்திரையை எடுத்து வாய்க்குள் போட்டு டம்ளர் தண்ணீரை வயிற்றுக்குக் கொடுத்தாள்.

“தாங்க்ஸ் சத்தி..!”

“எதுக்கு தாங்ஸ்..?”

“என்னோட தலைவலியைக்கூட தங்கிக்க முடியாத உங்களோட மென்மையான மனசுக்கு...”

சத்தி சிரித்தான்.

“பள்ளிக்கூட நாள்களில் நீங்க நல்லா கவிதை எழுதுவீங்க. இப்பவும் எழுதற பழக்கம் உண்டா..?”

“உண்டு. 'தூரிகை' பத்திரிகையில் போன மாதம் ஒரு கவிதைப் போட்டி வெச்சிருந்தாங்க... அந்தப் போட்டியில் எனக்குத்தான் பரிசு கிடைத்தது.”

“அப்படியா... என்ன கவிதை அது..?”

“கவிதையோட தலைப்பே 'புத்தாண்டு வாழ்த்து' தான்...”

“நீங்க என்ன கவிதை எழுதினீங்க..?”

காயத்ரி அரைநிமிட நேரம் யோசித்துவிட்டு மெல்லிய குரலில் கவிதையைச் சொல்ல ஆரம்பித்தாள்.

“தர்மத்துக்கு வாழ்த்துச் சொல்லுவோம். ஏன்?
இன்னும் கொஞ்சமாவது தர்மம் இருக்கிறது.

சத்தியத்துக்கு வாழ்த்து சொல்லுவோம். ஏன்?
இன்னும் சிறிதளவாவது சத்தியம் இருக்கிறது.

நியாயத்துக்கும் வாழ்த்துச் சொல்லலாம். காரணம்
நியாயம் அடியோடு காயப்பட்டுவிடவில்லை.

மனிதா! நீ என்றாவது மனிதத்துடன் இருந்திருக்கிறாயா?
உனக்கு எதுக்காக வாழ்த்துச் சொல்ல..!”

சத்யநாராயணன் சத்தம் வராமல் கையைத் தட்டி “க்ளாஸிக்” என்றான்.

பைனாப்பிள் ஜூஸ் பெரிய கண்ணாடி டம்ளர்களில் மிதக்கும் பனிக்கட்டித் துண்டங்களோடு வந்தது. இரண்டு பேரும் டம்ளர்களை எடுத்துக் கொண்டார்கள்.

“காயத்ரி..!”

“ம்...”

“உங்களுக்கு இருக்கிற புத்திசாலித்தனத்துக்கு நீங்க ஏன் ஒரு நல்ல வேலையைத் தேடிக்க முடியாது?”

“எனக்கு வேலை தர யார் இருக்காங்க..?”

“நான் உங்களுக்கு ஒரு நல்ல வேலை பார்த்துத் தரட்டுமா?”

“ம்... பார்த்துக் கொடுங்களேன்..!”

“ஒரு வாரம் டயம் கொடுங்க. இந்த ஊதுவத்தி பாக்கெட்டுக்களைத் தூக்கிக்கிட்டு வீடு வீடா அலையற வேலைக்கு நிரந்தரமா குட்பை சொல்லிடலாம்...”

காயத்ரி கசப்பாய்ப் புன்னகைத்தாள். “என்னோட தலையெழுத்து ரொம்ப ஸ்ட்ராங்க். அதை ஆண்டவனாலேயே அழிக்க முடியலை. நீங்க ட்ரை பண்றீங்க... பார்க்கலாம்.”

பத்து நிமிஷ நேரம் செலவழித்து மிக மெதுவாய் ஜூஸ்ஸைக் குடித்துவிட்டு இருவரும் எழுந்தார்கள்.

“காயத்ரி! உங்களை எங்கேயாவது ட்ராப் பண்ணட்டுமா..?”

“வேண்டியதில்லை சத்தி. பக்கத்தில் இருக்கிற ஒரு காலனிக்குத்தான் போறேன்.”

“உங்க அட்ரஸ் என்கிட்ட இருக்கு... ராயப்பேட்டை கோகுலம் காலனிதானே..?”

“ஆமா...”

“ஒரு நல்ல வேலையோடு இந்த ஒரு வாரத்துக்குள்ளே உங்க வீட்டுக்கு வர்றேன்.”

“வாங்க..!”

இருவரும் ரெஸ்டாரெண்டை விட்டு வெளியே வந்தார்கள். “ஓகே... ஸீ யூ... சத்தி...” காயத்ரி விடைபெற்றுக்கொண்டு பிளாட்பார ஜனத்திரளில் கலந்து போய்விட சத்யநாராயணன் தன் பைக் அருகே வந்தான்.

ஸ்டேண்டை விடுவித்து பைக்கின் மேல் ஆரோகணித்த விநாடி பக்கத்தில் இன்னொரு பைக் வந்து நின்றது.
“டேய் சத்தி... இங்கே என்னடா பண்ணிட்டிருக்கே?”
சத்யநாராயணன் திரும்பினான். போலீஸ் யூனிஃபார்மில் அந்த இளைஞன் பைக்கில் நெளிந்தான். சப்-இன்ஸ்பெக்டர் கதிரேஷ் என்று நேம் பேட்ஜ் சொன்னது.

“ஓ.. கதிரேஷ்... வாடா... ஊர்லயிருந்து எப்ப வந்தே? மறுபடியும் ட்யூட்டியில் என்னிக்கு ஜாயின் பண்ணினே?”
“காலையில்தான் வந்தேன். உடனே ட்யூட்டியில் ஜாயின் பண்ணிட்டேன். வந்தும் வராததுமா ஒரு மர்டர் கேஸ். ரெண்டு மணி நேரத்துக்கு முந்தி ராஜா அண்ணாமலைபுரத்தில் புண்ணியகோடிங்கிறவர் மர்டர். ஊதுவத்தி விக்கிற ஒரு பெண் கொலையாளின்னு கன்ஃபர்ம் ஆயிருக்கு. இன்ஸ்பெக்டர் ஸ்டீபன் ஸ்பாட்டிலிருந்து எனக்குத் தகவல் கொடுத்தார். அதான் போய்ட்டிருக்கேன்.”

சத்யநாராயணன் திடுக்கிட்டான். “என்ன சொன்னே..! ஊதுவத்தி விக்கிற பெண்ணா?”

*தொடர்கதை - 5*

சத்யநாராயணன் தன் வீட்டை நோக்கிக் குழப்பமாய் பைக்கை விரட்டிக் கொண்டிருந்தான். சப்-இன்ஸ்பெக்டர் நண்பன் சொல்லிவிட்டுப் போன வார்த்தைகள் ஒரு பெரிய போஸ்டர் மாதிரி மனத்தில் ஒட்டியிருந்தது.

"ராஜா அண்ணாமலைபுரத்தில் நடந்த கொலைக்கு ஊதுவத்தி விற்ற ஒரு பெண்தான் காரணம்!'

"அந்தப் பெண் ஒரு வேளை காயத்ரியாய் இருப்பாளோ..?'

சத்யநாராயணனுக்கு யோசிக்கவே பயமாகயிருந்தது. இன்றைக்கு இரண்டாவது தடவை காயத்ரியைப் பார்த்தபோது அவளுடைய பேச்சும் சரி, நடவடிக்கைகளும் சரி பதட்டமாகவே இருந்தன.

"அவள் இயல்பாக இல்லை..!' தேவைக்கு அதிகமாக வியர்த்து வழிந்தாள் .

சத்தியநாராயணன் பைக்கை ரோட்டோரமாய் நிறுத்தினான்.

"காயத்ரியைப் பார்த்தால் என்ன?'

அவன் சொன்ன வீட்டு விலாசம் சத்யநாராயணன் மூளையில் வரிவரியாய் ஓடியது.

ராயப்பேட்டை கோகுலம் காலனியில் வாட்டர் டேங்குக்குப் பக்கத்தில் வீடு!

"போய் பார்க்கலாமா..?'

"அதுதான் சரி... இல்லாவிட்டால் இந்தச் சந்தேகத்தை மனத்தில் வைத்துக் கொண்டு இயல்பாய் சுவாசிக்க முடியாது...'

பைக்கை மறுபடியும் உசுப்பிய சத்தியநாராயணன் ராயப்பேட்டையை நோக்கி ஆக்ஸிலேட்டரை முறுக்கினான். போக்குவரத்து நெரிசலில் ஒரு அரைமணி நேரப் பயணம். கெற்டியா மடம் இருந்த தெருவுக்குப் பின்புறம் மேஃப்ளவர் மரங்களுக்கு நடுவில் அடுத்த கோகுலம் காலனிக்குள் நுழைந்தான். அமைதியான காலனி. ஜெராக்ஸ் எடுத்த மாதிரி ஒரே டைப்பில் வீடுகள்.

சத்யநாராயணன் பைக்கை மெதுவாய் விரட்டி அந்த மொபைல் இஸ்திரிப் பெட்டி வண்டிக்குப் பக்கத்தில் வந்து பிரேக்கைப் போட்டான். சட்டையைச் சிரத்தையாய் அயர்ன் பண்ணிக் கொண்டிருந்த அந்தப் பெண்ணிடம் கேட்டான்.

“வாட்டர் டேங்க் எங்கேயிருக்கு?'

'வலது பக்க ரோட்டை அவள் கை காட்டினாள். “இதே ரோட்ல நேரா போங்க. கடைசியில் வாட்டர் டேங்க்.'

பைக்கை விரட்டினான். ரோட்டின் இரண்டு பக்கமும் வீடுகள் வந்தன. மெகா சீரியல்களில் கதாநாயகிகள் அழுது கொண்டே பேசும் வசனங்கள் வீடுதோறும் கேட்டன ரோட்டோர மைதானத்தில் எதிர்கால டெண்டூல்கர்கள் உருவாகிக் கொண்டிருந்தார்கள்.

வேப்ப மரத்துக்குப் பின்னால் வாட்டர் டேங்க் வந்தது. சத்யநாராயணன் பைக்கை ஒதுக்குப்புறமாய் நிறுத்திவிட்டு டேங்குக்கு இடது பக்கத்திலும், வலது பக்கத்திலும் இருந்த வீடுகளைப் பார்த்தான். இரண்டு வீடுகளுமே பூட்டிக் கிடந்தன. இதில் எது காயத்ரி வீடு?

சுற்றும் முற்றும் பார்த்தான். ஆட்கள் யாரும் பார்வைக்குக் கிடைக்காமல் போகவே மெல்ல நடந்தான். டேங்குக்குப் பக்கத்தில் வந்தபோது மளிகைச்

சாமான்கள் நிரம்பிய ஒரு பையோடு அந்தப் பெண் எதிர்பட்டாள். சத்யநாராயணன் கேட்டான்.

“இங்கே காயத்ரி வீடு?”

“அதுதான்” டேங்குக்கு வலது பக்கம் இருந்த வீட்டைக் காட்டினாள் அவள்.

“வீடு பூட்டியிருக்கே?”

“வெளியே போயிருப்பா. மணி எவ்வளவு?”

“பதினொன்று நாப்பது.”

“இப்ப வந்துடுவா. நீங்க யாரு? காயத்ரிக்கு ரிலேட்டிவா?”

“ஆமா...”

“வெயிட் பண்ணுங்க. பனிரெண்டு மணிக்குள்ளே வந்துடுவா.”

“தேங்க்ஸ்...”

சத்யநாராயணன் வேப்பமரத்து நிழலில் நடந்து வலது பக்க வீட்டுக்கு முன்புறமாய் இருந்த திண்ணைக்கு வந்து உட்கார்ந்தான்.

“காயத்ரியைப் பார்த்ததும் பேச்சை எப்படி ஆரம்பிக்கலாம்?”

“நேரிடையாய் கேட்டு விடலாமா?”

“அதுதான் சரி. ராஜா அண்ணாமலைபுரத்தில் என்ன நடந்தது? அந்த ஏரியாவில் சேல்ஸ் ட்ராப் செய்து விட்டு அடையார்க்கு ஏன் வந்தாய்?”

சத்யநாராயணன் யோசித்துக் கொண்டே பார்வையை எதேச்சையாய் காயத்ரியின் வீட்டுக்கதவுக்குக் கொண்டுபோக விழிகளுக்குள் திகைப்பு நிரம்பியது.

பூட்டு சரியாய் பூட்டப்படாமல் ஒரு பக்கம் நெகிழ்ந்து தொங்கியது. காயத்ரி சரியாய் பூட்டாமல் போயிருக்கிறாள்.

சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு கதவை நெருங்கிப் பூட்டை இழுத்துப் பார்த்தான்.

பூட்டு கையோடு வந்தது.

"வீட்டுக்கு உள்ளே போய் பார்க்கலாமா?'

"அது சரியில்லை' என்று மனசு ஒரு பக்கம் குறுகுறுத்தாலும் காயத்ரி வீட்டில் இல்லாத நேரத்தில் சோதனை செய்து பார்த்தால் அவளுடைய மறுபக்கம் என்ன என்று தெரிந்து கொள்ளலாம்.

சத்யநாராயணன் ஒரு முடிவுக்கு வந்து தெருவின் இரண்டு பக்கங்களையும் மாறி மாறிப் பார்த்தான்.

தெரு ஆட்கள் நடமாட்டம் இல்லாமல் நிசப்தத்தில் உறைந்து போயிருந்தது. யாரும் பார்க்க வாய்ப்பில்லை. வீட்டுக்குள் நுழைந்து விட வேண்டியதுதான்.

கதவை மெல்லத் தள்ளி உள்ளே போய் உடனே கதவைச் சாத்திக் கொண்டான். சிறிய வீடு. இரண்டே அறைகள். இரண்டில் ஒன்று சமையலறை. பாத்திரங்கள் ஒழுங்காய் அடுக்கப்பட்டு சுத்தமாய்த் தெரிந்தது. ஜன்னல்கள் திரைச்சீலை போட்டுக்கொண்டு வெய்யிலை வடிகட்டி உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தன .




டி. வி. ஸ்டாண்டின் மேல் சில புத்தகங்கள் தெரிய எடுத்துப் பார்த்தான். எல்லாமே சுயதொழில் சம்பந்தப்பட்ட புத்தகங்கள்.

"பணத்தைக் கொட்டும் குடிசைத் தொழில்கள்.' "சிறந்த நண்பர்கள் உங்கள் பத்துவிரல்களே!' "பணம் சம்பாதிக்கப் படிப்புத் தேவையில்லை!' "கையில் தொழில் இருக்கக் கவலை ஏன்?'

சத்யநாராயணன் புத்தகங்களை அப்படியே வைத்துவிட்டு அறையின் மூலையில் இருந்த சுவர் பீரோவுக்கு வந்தான். இழுத்துப் பார்த்தான். பீரோவின் கதவு சாத்தியிருந்தது. பக்கத்திலேயே ஒரு செல்ஃஃப். நாஃஃப்தலின் மணத்தது. செல்ஃஃப்பின் இரண்டாவது அறை பூஜையறையாக மாற்றப்பட்டிருக்க ஊதுவத்தி வாசனையோடு துர்க்கையின் படம். படத்துக்குப் பின்னால் ஒரு தபால் கவர் துளியூண்டு எட்டிப் பார்த்தது. சத்யநாராயணன் அதை எடுத்தான். காயத்ரிக்கு வந்த கடிதம். ஃஃப்ரம் அட்ரஸ் பகுதியைப் பார்த்தான். பெயர் ஊர் எதுவும் எழுதப்படாமல் "எமஉநூஏஜ அங என்று பால்பாயிண்ட் பேனாவால் கிறுக்கலாய் எழுதப்பட்டிருந்தது.

கவரின் வாய் ஏற்கெனவே உடைக்கப்பட்டிருக்க அதற்குள் இரண்டு விரல்களை நுழைத்து கடிதத்தை வெளியே எடுத்தான். நான்காய் மடித்து இருந்ததைப் பார்த்தான். கடித வரிகள் பார்வைக்குக் கிடைத்தன.

என் தங்கை காயத்ரிக்கு,

உன் ஜவஹர் எழுதிக்கொண்டது. நீ நலம் என்றால் நானும் இங்கு நலமே. நீ கோபமாய் எழுதிய கடிதம் கிடைத்து இதுவரை 69 தடவை படித்து விட்டேன். நீ எடுத்த முடிவு எனக்குச் சரியாய்ப்படவில்லை. கொஞ்சம் நிதானம் காட்டலாம் என்பதே என் எண்ணம். பெண்கள் சினம் காக்க வேண்டும். பொறுமையைக் கடைப்பிடித்தால் தண்ணீரையும் சல்லடையில் கொண்டு போகலாம். தண்ணீர் பனிக்கட்டியாக மாறும்வரை காத்திருக்க வேண்டும் அவ்வளவுதான்.

நான் ஏதோ கதாகாலட்சேபம் செய்வதாக நினைக்க வேண்டாம். என் மனத்தில் பட்டதை எழுதியிருக்கிறேன். என்னை டெலிபோனில் எப்போது வேண்டுமானாலும் கூப்பிடலாம். போன் நெம்பர் நாளையிலிருந்து மாறுகிறது. புதிய நெம்பரை உன் டயரியில் குறித்து வைத்துக் கொள்ளவும் 8544294.

இப்படிக்கு

உன் ஜவஹர் சத்யநாராயணன்

கடிதத்தில் இருந்த டெலிபோன் நெம்பரை மட்டும் மனசுக்குள் பதிந்து கொண்டு அந்தக் கடிதத்தைக் கவரில் போட்டுப் பழையபடியே துர்க்கையின் போட்டோவுக்குப் பின்பக்கமாய் வைத்தான். மேலும் ஒரு ஐந்து நிமிடம் அறையைச் சுற்றி வந்ததில் எதுவும் உபயோகமாய் பார்வைக்குக் கிடைக்காமல் போகவே வீட்டை விட்டு வெளியே வந்து பூட்டைப் பழையபடி மாட்டி அழுத்தினான். அது "பிளக்' என்று மாட்டிக் கொண்டது. தெரு இன்னமும் அதே நிசப்தத்தில் இருக்க முன்பக்கத் திண்ணைக்கு வந்து காத்து இருந்தான். எந்த நிமிஷமும் காயத்ரி வரலாம்.

நேரம் கரைந்தது. கடித வரிகள் நினைவுக்கு வந்தது. யார் இந்த ஜவஹர்..? "காயத்ரியின் காதலனா?' "இருக்கலாம்' "காயத்ரிக்கு ஏதோ கோபம் இருந்திருக்கிறது. அது என்ன கோபம்? யார் மேல் கோபம்?'

நேரம் பனிரெண்டு மணியைத் தொட்டபோது வீட்டுக்கு முன்பாய் இரைச்சலோடு அந்த மொபெட் வந்து நின்றது. இளைஞன் ஒருவன் கையில் பாக்கெட்டோடு காயத்ரியின் வீட்டை நோக்கி வந்தான்.

“சார். இங்கே காயத்ரி..?”

“இந்தவீடுதான்.”

“நாங்க ஃபர்ஸ்ட் ஃப்ளைட் கூரியர் சர்வீஸ் சார். அவங்களுக்கு இந்தப் பார்சல் வந்திருக்கு. காலையில் பத்து மணிக்கு வந்தேன். வீடு பூட்டியிருந்தது. இப்பவும் வீடு பூட்டியிருக்கு. அவங்க எப்ப சார் வருவாங்க?”

“இப்ப வர்ற நேரம்தான்.”

“நாங்க வெயிட் பண்ணிட்டிருக்க முடியாது சார்.”

“சரி பார்சலை கொடுத்திட்டுப் போங்க. நான் வேணும்ன்னா காயத்ரி வந்ததும் குடுத்திடறேன்.”

“ஸாரி சார். பார்சல் மேலே என்ன எழுதியிருக்க பார்த்தீங்களா?”

சத்யநாராயணன் பார்த்தான்.

"உரிய நபரிடம் மட்டுமே இந்தப் பார்சலைக் கொடுக்கவும்'.
பார்வையை நகர்த்தி கீழே ஃப்ரம் அட்ரஸ் பார்த்தாள். ஜான்ஸி. 6, செம்பண்ணா அவென்யூ, பெங்களூர் 59.

கூரியர் சர்விஸ் இளைஞன் மறுபடியும் கேட்டான். “மத்தியானம் மூணு மணிக்கு வந்தா காயத்ரி இருப்பாங்களா சார்?”

“அப்ப வந்துடுவாங்க...”

“வெயிட் பண்ண முடியாது சார்”

கூரியர் இளைஞன் மொபட்டைக் கிளப்பினான். “நான் மத்தியானமே வந்து பார்த்து டெலிவரி பண்ணிடறேன் சார்.”

மொபட் புகை கக்கிப் போய்விட சத்யநாராயணன் தன் கையில் இருந்த வாட்சையும் தெருமுனையையும் பார்த்தபடி நிமிஷங்களைக் கரைத்துக் கொண்டிருந்தான்.

நேரம் 1-30 தொட்டிருந்தபோது சத்தியநாராயணனுக்குப் பக்கவாட்டில் அந்த வளையல் சத்தம் கேட்டது.

*தொடர்கதை - 6*

வளையல் சத்தம் கேட்டு சத்யநாராயணன் திரும்பிப் பார்த்தான். அந்த அழகான இளம்பெண் பார்வைக்குக் கிடைத்தாள். வயது இருபத்தைந்திலிருந்து முப்பதுக்குள் இருக்கலாம். குடும்பப் பாங்கான தோற்றம். காலையில் பூசிக் குளித்த மஞ்சள் இன்னமும் மினுமினுப்பாய் முகத்தில் ஒட்டியிருக்க, நெற்றியின் மையத்தில் இடம் பிடித்திருந்த குங்குமப் பொட்டு வியர்வையின் காரணமாய்க் கருகிப் போயிருந்தது. கால்களில் மெட்டியும் கழுத்தில் கனமான தாலிக்கொடியும் தெரிந்தது. கையில் சின்னதாய் ஒரு டிஃபன் காரியர். சத்யநாராயணன் அந்தப் பெண்ணை வியப்பாய்ப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவள் கேட்டாள்.

"உங்களுக்கு யார் வேணும்..?"
"அது... வந்து..." என்று ஒரு விநாடி குரலை இழுத்தவன் பின் சொன்னான்.

"இந்த வீட்ல இருக்கிற காயத்ரியைப் பார்க்க வந்தேன்..."

"காயத்ரியையா..?"

"ஆமா..."

"நீங்க யாரு... காயத்ரிக்கு ரிலேட்டிவா..?"

“இல்லை. . . ” “பின்னே. . ?”

“ஃப்ரண்ட். . . ” “பேரு?”

“சத்யநாராயணன். . . ”

“காயத்ரி எப்பவுமே பனிரெண்டு மணிக்குள்ளே வந்துருவா. . . இன்னிக்கு என்னமோ தெரியலை. . . காணோம். . ! ”

சத்யநாராயணன் கேட்டான். “நீங்க. . ?”
“என் பேரு மைதிலி ராகவன். நாலு வீடு தள்ளித்தான் என்னோட வீடு. காயத்ரி எனக்கு க்ளோஸ் ஃப்ரண்ட். . . நீங்க அவ வீட்டு வாசல்ல ரொம்ப நேரமா வெயிட் பண்றதைப் பார்த்துட்டுதான் யாரு என்னன்னு கேட்டுட்டுப் போக வந்தேன்.

“ காயத்ரியைப் பார்த்து அவளோடு ஏதாவது சொல்ல வேண்டியிருக்கா. . ?”

“எஸ். . ! ”

“உங்க ஃபோன் நெம்பரைக் கொடுத்துட்டுப் போங்க. நான் வேணும்னா அவ வந்ததும் விஷயத்தைச் சொல்லி ஃபோன் பண்ணச் சொல்றேன். ”

“இன்னும் ஒரு அரை மணி நேரம் வெயிட் பண்ணிப் பார்க்கிறேன். கொஞ்சம் பர்சனலா பேச வேண்டியிருக்கு. . . ”

“ஓகே. . ! வெயிட் பண்ணிப் பாருங்க. ” அந்தப் பெண் மைதிலி ராகவன் சொல்லிவிட்டுப் போய்விட, சத்யநாராயணன் வயிற்றைக் கிள்ளும் பசியோடு காத்திருக்க ஆரம்பித்தான்.




விநாடிகள் நிமிஷங்களாக உருவாகி மணி இரண்டைத் தொட்டது. சத்யநாராயணன் மனதில் இப்போது ஒரு சந்தேக விதை விழுந்து ஒரு செடி வளர்ந்தது. "ஒருவேளை நான் இங்கே வந்து காத்திருப்பது காயத்ரிக்குத் தெரிந்து இருக்குமோ..?' "அப்படித் தெரிந்திருந்தால் அவள் எவ்வளவு நேரமானாலும் இங்கே வரப்போவதில்லை..! இங்கே காத்துக் கிடப்பது வீண்!

' "என்ன செய்யலாம்..?' "

ராஜா அண்ணாமலைபுரத்திற்குப் போய் அந்தப் புண்ணியகோடியின் மர்டர் எப்படி நடந்தது என்பதை சப்- இன்ஸ்பெக்டர் கதிரேஷிடம் விசாரித்துக்கொண்டு மறுபடியும் இங்கே வந்து பார்க்கலாம்!

' சத்யநாராயணன் பைக்கை நோக்கிப் போனான்.

புண்ணியகோடியின் உடல் போஸ்ட்மார்ட்டம் புறப்பட்டுப் போயிருக்க இன்ஸ்பெக்டர் ஸ்டீபனும் சப்-இன்ஸ்பெக்டர் கதிரேஷும் பக்கத்துப் பங்களாக்களில் இருப்பவர்களை விசாரித்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு பெண்ணிடம் விசாரணையை முடித்துக்கொண்டு திரும்பிய கதிரேஷ், சத்யநாராயணனைப் பார்வையில் வாங்கியதும் விழிகளை விரித்தான். “டேய்... சத்தி..! என்ன இந்த இடத்துல..?”

“உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்...”

“என்ன விஷயம்..?” “வா... அந்த மரத்துக்குக் கீழே போயிடலாம்...” போனார்கள். “

“சொல்லுடா... எனிதிங்க்... இம்பார்ட்டன்ட்..?”

“எஸ்..! இன்ஸ்பெக்டர் ஸ்டீபன் எங்கே..?”

“எதிரே இருக்கிற பங்களாவுக்குள்ளே என்கொய்ரிக்காகப் போயிருக்கார்...”

“கதிரேஷ்..! புண்ணியகோடி எப்படி மர்டர்... கத்தியா... துப்பாக்கியா..?”

“துப்பாக்கி...”

“கொலையாளி யாராயிருக்கும்ங்கிறதைக் கன்ஃபர்ம் பண்ணிட்டீங்களா..?”

“அநேகமாய் ஒரு பெண். அவள் ஊதுவத்தி விக்கிற பெண்ணாக இருக்கலாம். காரணம், அந்தப் பெண் வீட்டுப் பின்பக்கம் வழியாகத் தப்பி ஓடும்போது ஒரு ஊதுவத்தி பாக்கெட் கீழே விழுந்திருக்கு. புத்தம் புதிய பாக்கெட்...”

“அந்தப் பெண் பங்களாவுக்குள்ளே போனதைப் பார்த்த "ஐ விட்னஸ்' யாராவது இருக்காங்களா?”

“இல்லை...”

“பின்னே எப்படி புண்ணியகோடியின் கொலைக்குக் காரணம் ஒரு பெண் என்கிற முடிவுக்கு வர முடிந்தது..?”

“வீட்டுப் பின்பக்கத் தோட்ட ஈர மண்ணில் ஒரு பெண்ணின் ஹைஹீல் செருப்புகளின் பதிவுகள் இருந்தன.

டாகை ஸ்மெல் பண்ண விட்டதில் அது பின்பக்க வாழியா ஓடித் தெருவுக்கு வந்து பக்கத்தில் இருக்கிற பஸ் ஸ்டாப்பில் போய்ப் படுத்துகிச்சு. கொலை நடந்த நேரத்தையும் அந்தப் பெண் பஸ் ஸ்டாப்புக்கு வந்த நேரத்தையும் கணக்கிட்டு பஸ் ஸ்டாப்பில் இருந்த அட்டவணையையும் ஒப்பிட்டுப் பார்த்ததில் அந்தப் பெண் அடையார் போகிற பஸ்ஸில் ஏறியிருக்கலாம்ங்கிறது இப்போதைய கணிப்பு. பஸ் நெம்பரை நோட் பண்ணியிருக்கோம். அந்த பஸ்ஸோட கண்டக்டரை விசாரணை பண்ணினால் ஏதாவது தகவல் கிடைக்கலாம்.”

“எத்தனையோ பயணிகள் ஏறி இறங்கற பஸ்ஸில் கண்டக்டர் எப்படி அந்தப் பெண்ணைக் கவனிச்சிருக்க முடியும்?”

“அந்தப் பெண் அழகானவளா இருக்கிறபட்சத்தில் கண்டக்டர் அவளை நோட் பண்ணியிருக்கலாம். கைகளில் ஊதுவத்திப் பைகளோடு ஏறியிருந்தாலும் அவள் கண்டக்டரால் கவனிக்கப்பட்டு இருக்கலாம்.”

"ஓகே... கதிரேஷ்..! புண்ணியகோடி கொலை செய்யப்பட்டதுக்கு என்ன காரணம்..?"

"இன்னும் தெரியலை... வீட்ல அவர் மட்டும் தனியா இருந்த நேரத்தில் சம்பவம் நடந்து இருக்கு... அவரோட மனைவியும் பொண்ணும் ஒரு கல்யாணத்துக்காக வெளியூர் போயிருக்காங்க. வீட்ல வேலைக்காரங்களும் இல்லை!"

"இந்த விஷயம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"புண்ணியகோடியோட ரூமைத் தரோவா 'செக்' பண்ணிப் பார்த்தபோது ஒரு கல்யாணப் பத்திரிகை கிடைச்சுது. கோயமுத்தூர்ல நாளைக்குக் கல்யாணம். பத்திரிகையிலேயே டெலிபோன் நெம்பர் இருந்தது. அந்த ஃபோன் நெம்பர்க்கு காண்டாக்ட் பண்ணி விபரம் சொல்லிட்டோம். புண்ணியகோடியின் மனைவி இந்திராணியும் பொண்ணு ஸ்வேதாவும் ஃபிளைட் பிடிச்சு வர்றதா தகவல் கொடுத்து இருக்காங்க... அவங்க வந்து ஸ்டேட்மெண்ட் கொடுத்த பின்னாடிதான் கொலைக்கான மோட்டிவ் என்னான்னு தெரியும்..." பேசிக்கொண்டே போன கதிரேஷ் சட்டென்று பேச்சை நிறுத்தி, சத்யநாராயணனை உற்றுப் பார்த்தான். "ஆமா..! இந்த கேஸ்ல உனக்கு என்ன இவ்வளவு இன்ட்ரஸ்ட்..? உனக்கு இன்னும் போஸ்டிங்கே ஆகலை. இதென்ன 'வார்ம்' -அப்பா..?"

"கதிரேஷ்..! நீ கொலையாளின்னு சந்தேகிக்கிற பெண்ணை எனக்குத் தெரியும்..."

கதிரேஷின் நெற்றியில் வியப்பின் வரிகள். "டேய்... சத்தி..! நீ என்ன சொல்றே..?"

"உண்மையைச் சொல்லிட்டிருக்கேன். அவ பேர் காயத்ரி. ஸ்கூல்ல அவ என்னோட க்ளாஸ்மேட். இன்னிக்குக் காலையில் மைலாப்பூரில் அவளை எதேச்சையாப் பார்த்துப் பேசினேன். ரெண்டு கையிலேயும் ஊதுவத்தி பாக்கெட் பைகள். ஸ்கூல் டேஸ்ல நல்லா படிக்கிற பெண். 'ஏன் இப்படி ஆயிட்டே'ன்னு

கேட்டேன். "எல்லாம் விதி' ன்னு சொல்லி விரக்தியா பேசினாள். கொஞ்ச நேரம் அவகிட்டே பேசிட்டுப் புறப்பட்டுப் போய்ட்டேன். ஒரு மணி நேரம் கழிச்சு அடையார் டெர்மினஸில் பார்த்தேன். வேர்த்து விறுவிறுத்துப் போய்ப் பதற்றமா தெரிஞ்சா. காரணம் கேட்டதுக்குத் தலைவலின்னு சொன்னாள். மாத்திரை வாங்கிக் கொடுத்தேன். பக்கத்துல இருக்கிற ரெஸ்டாரெண்டுக்குப் போய் ரெண்டு பேரும் கூல்டிரிங் சாப்பிட்டோம். அவளை வழியனுப்பிவிட்டுப் "பார்க்' பண்ணியிருந்த என்னுடைய பைக்குக்குப் பக்கத்தில் வந்தபோதுதான் உன்னைப் பார்த்தேன்..."

கதிரேஷ் பரபரத்தான். “அவ பேர் என்ன சொன்னே..?”

“காயத்ரி...”

“அட்ரஸ் தெரியுமா..?”

“தெரியும். ராயப்பேட்டை கோகுலம் காலனி. உடனே அவ வீட்டுக்குப் போனேன். வீடு பூட்டியிருந்தது. இவ்வளவு நேரம் வெயிட் பண்ணிப் பார்த்தேன். காயத்ரி வரலை...”

“அப்படீன்னா... அவ உன்னை ஸ்மெல் பண்ணிட்டான்னு அர்த்தம்...”

“எஸ்..! என்னோட அஸம்ஷனும் அதுதான்...”

“சரி... புறப்படு..!”

“எங்கே..?”

“பூட்டியிருக்கிற அவ வீட்டைத் திறந்து ஏதாவது தடயம் கிடைக்கிறதான்னு செக் பண்ணிப் பார்த்துடலாம்.”

“நான் வீட்டைச் செக் பண்ணிப் பார்த்துட்டேன்.”

“எப்படி..?”

“காயத்ரி வீட்டைச் சரியா பூட்டாமே போயிருந்தா. நான் உள்ளே போய் அலசிட்டுப் பூட்டை லாக் பண்ணிட்டேன்...”

“ஏதாவது தடயம் கிடைச்சுதா..?”

“கிடைச்சுது. காயத்ரியோட பேருக்கு வந்த ஒரு லெட்டரை அவ துர்க்கையோட போட்டோவுக்குப் பின்னாடி வெச்சிருந்தா. அதை எடுத்துப் பார்த்தேன். ஜவஹர்னு யாரோ லெட்டர் எழுதியிருந்தான். லெட்டரோட வாசகங்கள் மனசுக்குக் கொஞ்சம் உறுத்தலாய் இருந்தன.”

"அந்த லெட்டரைக் கொண்டு வந்திருக்கியா?"

"இல்லை... அந்தத் துர்க்கையோட போட்டோவுக்குப் பின்னாடியே வெச்சுட்டேன். பட் ஜவஹரோட ஃபோன் நெம்பர் அந்த லெட்டர்ல இருந்தது. அதை நோட் பண்ணிகிட்டேன்..."

"என்ன நெம்பர் அது..?"

"8544294"

"இந்த நெம்பர்க்கு ஃபோன் பண்ணிப் பார்த்தியா?"

"இல்லை... இனிமேத்தான் பண்ணணும்."

கதிரேஷ் தன் பாக்கெட்டில் இருந்த செல்ஃபோனை எடுத்துக்கொண்டு அந்த எண்ணைத் தட்டினான்.

மறுமுனையில் ரிங் போயிற்று. அரை நிமிஷ அவகாசத்துக்குப் பிறகு ரிஸீவர் எடுக்கப்பட்டது. ஒரு பெண்ணின் குரல் ஒலித்தது. "ஹலோ..."

கதிரேஷ் கேட்டான். "அங்கே ஜவஹர் இருக்காரா..?"

"ஜவஹர்..?"

"ம்..." "அப்படி யாரும் இங்கே இல்லையே..."

"அது 8544294 தானே..?"

"ஆமா..."

"அங்கே ஜவஹர் இருப்பாரே..?"

"ஸ்ரி... ராங்க் நெம்பர். இது "இயம்' பத்திரிகை ஆபீஸ். ஜவஹர் என்கிற பேர்ல யாரும் இங்கே இல்லை..!" ரிஸீவர் சற்றே கோபமாய் வைக்கப்பட்டுவிட கதிரேஷ் சத்யநாராயணனைப் பார்த்தான்.

"அந்த நெம்பர்ல ஜவஹர் இல்லையே..! லெட்டர்ல இருந்த டெலிபோன் நெம்பரைச் சரியா நோட் பண்ணினியா..?"

சத்யநாராயணன் நெற்றியைக் கீறிக் கொண்டான். "லேசா சந்தேகம் வருது..!"

"மறுபடியும் போய் அந்த லெட்டரைப் பார்த்துடலாமா?"

"ம்..."

கதிரேஷ் இன்ஸ்பெக்டர் ஸ்டீபனிடம் போய் விஷயத்தைச் சொல்லிவிட்டு சத்யநாராயணனின் பைக்கில் புறப்பட்டான். கடுமையான வெயிலில்,

கசகசப்பான போக்குவரத்து நெரிசலில், அரை மணி நேரப் பயணம். ராயப்பேட்டை கோகுலம் காலனி வந்தது. அந்த மத்தியான வேளையில் காலனி நிசப்தமாய் இருக்க - பைக்கை வாட்டர் டேங்க் பக்கத்தில் நிறுத்திவிட்டு இருவரும் காயத்ரியின் வீட்டை நோக்கிப் போனார்கள்.

திகைத்தார்கள்.

வீடு திறந்திருந்தது.




*தொடர்கதை - 7*

சத்யநாராயணனும் சப்இன்ஸ்பெக்டர் கதிரேஷும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

“கதிரேஷ்..! வீடு திறந்திருக்கு. காயத்ரி வந்துட்டா போலிருக்கு.”

“என்ன பண்ணலாம்? நேரிடையா போய் மடக்கிவிடலாமா?”

“வேண்டாம் கதிரேஷ்... மொதல்ல நான் போய் அவகிட்ட பேசிட்டே இருக்கேன். ஒரு அஞ்சு நிமிஷம் கழிச்சு நான் ஹேண்ட் சிக்னல் கொடுத்ததும் நீ உள்ளே வா... நீ யூனிஃபார்ம்ல இருக்கே. உடனே போனா அவ உஷாராயிடுவா...”

“உன்கிட்டே உண்மையைச் சொல்லுவான்னு நீ எதிர்பார்க்கிறியா..?”

“பேசற விதத்துல பேசினா உண்மை வெளியே வந்துடும்.”

“சரி... அந்த வேப்ப மரத்துக்குப் பின்னாடி நான் பைக்கோடு இருக்கேன். ஒரு அஞ்சு நிமிஷம் கழிச்சு சிக்னல் பண்ணு. நான் வர்றேன்...” சொல்லிக்கொண்டே கதிரேஷ் பைக்கைத் தள்ளியபடி அந்த வேப்ப மரத்துக்குப் பின்னால் போக, சத்யநாராயணன் காயத்ரியின் வீட்டை நோக்கிப் போனான்.

வீட்டை நெருங்க நெருங்க மனசுக்குள் ஒரு தயக்கம்.

'காயத்ரியிடம் பேச்சை எப்படி ஆரம்பிப்பது..?' 'நேரடியாகவே கேட்டால்தான் காயத்ரியின் முகத்தில் நிகழும் ரசாயன மாற்றங்களைப் படிக்க முடியும்.'

வாசற்படி ஏறினான். சாம்பார் வாசனை காற்றில் மணத்தது. மின்விசிறி வேகமாய் ஓடிக்கொண்டிருக்கும் சத்தம் கேட்டது. சத்யநாராயணன் மெல்ல நடந்துபோய் எட்டிப் பார்த்தான்.

சமையலறைக்குள் நடமாட்டம் தெரிந்தது. சுடிதார் அணிந்த ஒரு பெண் பார்வைக்குக் கிடைத்தாள். அதே விநாடி அவளும் திரும்பிப் பார்த்தாள்.

“யார் வேணும்..?”

“காயத்ரி..?”

“வெளியே போயிருக்கா. நீங்க யாரு..?”

“காயத்ரிக்கு வேண்டியவன்... ஃப்ரெண்ட்.”

“உள்ளே வாங்க.”

“பரவாயில்லை. நீங்க..?”

“நானும் காயத்ரியும்தான் இந்த வீட்டில் தங்கியிருக்கோம். நான் கிட்டத்தட்ட "பேயிங் கெஸ்ட்' மாதிரி...”

“உங்க பேரு..?”

“துர்க்கா. நான் இந்த வீட்டுக்கு வந்து ஒரு வாரம்தான் ஆச்சு. உள்ளே வந்து உட்காருங்க. காயத்ரி எப்பவுமே பனிரெண்டு மணிக்குள்ளே வந்து சமையலை முடிப்பா. இன்னிக்கு இன்னமும் வரலை. வீடு வீடா போய்ப் படியேறி எல்லாரையும் கன்வின்ஸ் பண்ணி ஊதுவத்தி பாக்கெட்டுகளை விக்கிறது சாதாரண விஷயம் இல்லையே..!”

சத்யநாராயணன் உள்ளே வந்து உட்கார்ந்தான். வீட்டிற்குள் பார்வையை ஓடவிட்டுக்கொண்டே கேட்டான்.

“உங்க பேர் என்ன சொன்னீங்க..?”

“துர்க்கா...”

“என்ன பண்றீங்க?”

“ஒரு கம்பெனியில் டெலிபோன் ஆபரேட்டர் வேலை. காலை ஆறு மணியிலிருந்து மத்யானம் ரெண்டு மணி வரைக்கும் எனக்கு ட்யூட்டி. என் கிட்டே ஒரு ட்யூப்ளிகேட் சாவி இருக்கிறதாலே வீடு பூட்டியிருக்கும்ங்கிற பயம் இல்லை... பை... த... பை காயத்ரியை என்ன விஷயமா பார்க்க வந்தீங்க?”

“அது... வந்து...”

“ரொம்பவும் பர்சனல் மேட்டராக இருந்தா வேண்டாம்.”

“அப்படியெல்லாம் எதுவும் இல்லை. காயத்ரியும் நானும் ஸ்கூல்மேட்ஸ். எஸ்.எஸ், எல்.சி. வரைக்கும் ஒண்ணா படிச்சோம். அதுக்கப்புறம் நான் காயத்ரியைப் பார்க்கலை. மெட்ராஸ் வந்துட்டேன். இத்தனை வருஷம் கழிச்சு இன்னிக்குக் காலையில் காயத்ரியை மயிலாப்பூர்ல பார்த்தபோது அதிர்ந்துட்டேன். ரெண்டு கையிலேயும் ஊதுவத்தி பாக்கெட் பைகளோடு காயத்ரியை ஒரு சேல்ஸ் கேர்ளா பார்த்தபோது என் மனசுக்குள்ளே பெரிய கனம். படிப்பில் ரொம்பவும் புத்திசாலியாய் இருந்த ஒரு பெண் ஊதுவத்திப் பாக்கெட்டுகளை விக்கிறதுக்காகத் தெருத் தெருவாக அலையறது ரொம்பவும் கொடுமை. அந்தக் கொடுமைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கத்தான் வந்தேன்...”

துர்க்கா புரியாத பார்வை ஒன்றைப் பார்க்க சத்யநாராயணன் தொடர்ந்தான்.

"காயத்ரிக்கு ஒரு நல்ல கம்பெனியில் க்ளார்க் வேலை பார்த்திருக்கேன். இப்போதைக்குச் சம்பளம் நாலாயிரம் ரூபாய். ரெண்டு வருஷம் போனதும் சம்பளத்தை உயர்த்துவாங்க..."

துர்க்கா மலர்ந்தாள்.

"சார்..! காயத்ரிக்கு நீங்க பண்ணியிருக்கிறது சாதாரண உதவி கிடையாது... மிகப் பெரிய உதவி. அவ வேலைக்காகக் கஷ்டப்பட்டு எந்த வேலையும் கிடைக்காமப் போய்தான் ஊதுவத்திப் பாக்கெட்டுகளைத் தூக்க வேண்டி வந்தது. நீங்க ஏற்பாடு பண்ணியிருக்கிற வேலை அவளுக்குக் கண்டிப்பா கிடைக்குமா சார்..?"

"நாளைக்கேகூட ஜாய்ன் பண்ணிக்கலாம்."

"கம்பெனியோட பேர் சார்..?"

"ஜெயின் க்ரூப்ஸ்..."

"நல்ல கம்பெனி சார்... காயத்ரிக்கு இன்னிக்குச் சந்தோஷமான நாள்..."

"காயத்ரி வர நேரமாகுமா..?"

"இந்த நேரத்துக்கெல்லாம் அவ வந்து சாப்பிட்டுப் படுத்துத் தூங்கிட்டுருப்பா. ஏன் லேட்டுன்னு தெரியலை. கொஞ்சம் தூரமான ஏரியாவுக்குப் போயிட்டாளோ என்னவோ?"

"காயத்ரிக்கு இந்த மெட்ராஸ்ல தெரிஞ்சவங்க யாராவது இருக்காங்களா?"

"எனக்குத் தெரிஞ்சு யாரும் இல்லை."

“ரிலேட்டிவ்ஸ்..?”

“இல்லை...” தலையாட்டிய துர்க்கா கேட்டாள். “சார்... நல்ல வெயில்ல வந்திருக்கீங்க... மோர் தரட்டுமா?”

“அதெல்லாம் வேண்டாங்க. கொஞ்சம் தண்ணி கொடுத்தா போதும்.”

துர்க்கா உள்ளே போனாள். அவள் உள்ளே போகிற அந்த விநாடிக்காகவே காத்திருந்த சத்யநாராயணன் சட்டென்று எழுந்து சுவர் ஷெல்ஃப்பில் இருந்த பூஜையறை துர்க்கையின் படத்துக்குப் பின்னால் இருந்த அந்தக் கடிதத்தை எடுத்து பாக்கெட்டில் போட்டுக் கொண்டு பழையபடி நாற்காலிக்கு வந்து சாய்ந்தான். அரை நிமிட நேரம் கழித்துத் தண்ணீர் நிரம்பிய டம்ளரோடு துர்க்கா வந்தாள். டம்ளரை ஸ்டூலின் மேல் வைத்தபடியே கேட்டாள்.

“சார்... உங்களைப் பத்தி எதுவுமே சொல்லலை. நீங்க எங்கே வேலை பார்க்கறீங்க..?”

“என் பேர் சத்யநாராயணன். இன்ஸ்பெக்டர் ட்ரெயினிங்கை முடிச்சிட்டு போஸ்டிங்குக்காக வெயிட் பண்ணிட்டிருக்கேன்.”

“ஓ.. காவல்துறை..! நீங்க சொன்னா நம்பமாட்டீங்க சார். உங்களைப் பார்த்த முதல் நிமிஷமே நீங்க போலீஸ் வேலைக்குப் போனா பொருத்தமாயிருக்கும்ன்னு நினைச்சேன்.”

“காரணம்..?”

“உங்க உடம்போட ஹைட்டும், வெயிட்டும்தான்...”

சத்யநாராயணன் சிரித்துக் கொண்டே டம்ளர் தண்ணீரை வயிற்றுக்குக் காண்பித்துவிட்டு எழுந்தான்.

“என்ன சார்? எந்திரிச்சுட்டீங்க... காயத்ரி எந்த நிமிஷமும் வந்துடுவா. கொஞ்ச நேரம் வெயிட் பணணலாமே...”

“உடனடியா பார்க்க வேண்டிய அவசர வேலை ஒண்ணு இருக்கு... ரெண்டு மணி நேரம் கழிச்சு மறுபடியும் வருவேன். காயத்ரி வந்தா விஷயத்தைச் சொல்லுங்க...”

“சொல்லாமே இருப்பேனா..?”

சத்யநாராயணன் துர்க்காவிடம் விடைபெற்றுக்கொண்டு வெளியே வந்தான். வேப்ப மரத்துக்குப் பின்னால் பைக்கோடு நின்றிருந்த கதிரேஷை நெருங்கினான். “என்ன சத்தி... காயத்ரி இருந்தாளா..?”

“மொதல்ல பைக்கைக் கிளப்பு. போற வழியில் எல்லாத்தையும் சொல்றேன்.”

பைக் கதிரேஷிடம் உதை வாங்கியது. மெயின் ரோட்டைத் தொடுவதற்குள் சத்யநாராயணன் எல்லா விஷயங்களையும் சொல்லி முடித்திருக்க கதிரேஷ் கேட்டான்.

“காயத்ரி வீட்டுக்கு வருவான்னு நீ நினைக்கிறாயா சத்தி..?”

“ஏன்..?”

“புண்ணியகோடியைக் கொலை செய்த உண்மை உனக்குத் தெரியும்னு அவள் நினைச்சிருக்கலாம்.”

“பார்க்கலாம். ரெண்டு நாளைக்குத் தலைமறைவாய் இருக்கலாம். அப்புறம் வெளியே வந்துதானே ஆகணும்...”

"அந்த லெட்டரை எடுத்து அதில் எழுதியிருக்கிற போன் நம்பர் சரியா இருக்கான்னு பாரு..."

"பைக்கை அப்படி ஓரமா நிறுத்து..." கதிரேஷ் நிறுத்தினான். சத்யநாராயணன் அந்த லெட்டரை எடுத்து வாய்விட்டுப் படித்தான்.

என் தங்கை காயத்ரிக்கு...

உன் ஜவஹர் எழுதிக்கொண்டது. நீ நலம் என்றால் நானும் இங்கு நலமே. நீ கோபமாய் எழுதிய கடிதம் கிடைத்து இதுவரை 69 தடவை படித்து விட்டேன். நீ எடுத்த முடிவு சரியில்லை. கொஞ்சம் நிதானம் காட்டலாம்... என்பதே என் எண்ணம்.

பெண்கள் சினம் காக்க வேண்டும். பொறுமையைக் கடைப்பிடித்தால் தண்ணீரையும் சல்லடையில் கொண்டு போகலாம். தண்ணீர் பனிக்கட்டியாக மாறும் வரை காத்திருக்க வேண்டும்... அவ்வளவுதான்.

நான் ஏதோ கதாகாலட்சேபம் செய்வதாக நினைக்க வேண்டாம். என் மனத்தில் பட்டதை எழுதியிருக்கிறேன்.

என்னை டெலிபோனில் எப்போது வேண்டுமானாலும் கூப்பிடலாம். போன் நம்பர் நாளையிலிருந்து மாறுகிறது. புதிய நம்பரை உன் டயரியில் குறித்துக் கொள்ளவும். 8544294.

இப்படிக்கு

உன் ஜவஹர்

கதிரேஷ் கடிதத்தை வாங்கிப் பார்த்துவிட்டுக் கேட்டான்.

“என் தங்கை காயத்ரிக்குன்னு எழுதியிருக்கான். உண்மையிலேயே தங்கையா..?”

“அப்படியிருக்க வாய்ப்பில்லை. ஏன்னா... காயத்ரிக்குக் கூடப் பிறந்தவங்களோ உறவினர்களோ கிடையாதுன்னு துர்க்கா சொல்லியிருக்கா...”

“காயத்ரிக்கும் ஜவஹர்க்கும் இடையே உள்ள உறவு எதுமாதிரியான உறவுன்னு துர்க்காகிட்டயே நீ கேட்டிருக்கலாமே சத்தி?”

“அதை ஜவஹர்கிட்டயே கேட்டுடலாமே... இந்த 8544294 டெலிபோன் நம்பர்க்கு மறுபடியும் போன் பண்ணிப் பார்ப்போம்.”

“அது "இமயம்' பத்திரிகை ஆபீஸ்தானே?”

“ஆமா...”

“பத்திரிகை ஆபீஸுக்கு நேரிடையா போயிட்டா என்ன?”

“ஓகே... அதிரடியா போய் விசாரணை பண்ணினால்தான் உண்மைகள் சிதறி விழும்.”

பைக் மறுபடியும் உதை வாங்கிப் புறப்பட்டது. போக்குவரத்து நெரிசலில் கார்பன் மானாக்ஸைடு புகையைச் சுவாசித்துப் பிடரியில் உறைக்கிற வெய்யிலில் இருபது நிமிஷ நேரப் பயணம்.

அண்ணாசாலையின் ஒரு குறுக்குச் சந்துக்குள் "இமயம்' பத்திரிகை அலுவலகம் இரண்டு ஒர்க் ஷாப்புகளுக்கு நடுவில் தெரிந்தது. பைக்கை நிறுத்திவிட்டு இருவரும் உள்ளே போனார்கள்.

பேப்பர் ரோல்கள் உருண்டு கிடக்கக் காற்றில் அச்சு மையின் வாசனை. கண்ணாடிச் சுவர்களுக்கு அப்பால் ஆப்செட் மெஷின்கள் பேப்பர் ரோலில்

எழுத்து விதைகளை விதைத்து இன்னொரு பக்கம் புத்தகங்களாக அறுவடை செய்து கொண்டிருந்தது.

கெற்ண்டரில் இருந்த ரிசப்ஷனிஸ்ட் பெண் காக்கி யூனிஃபார்மில் இருந்த கதிரேஷையும், சத்யநாராயணனையும் பார்வையில் வாங்கித் தன் பென்சில் புருவங்களை உயர்த்தினான்.

“எஸ்...”

“இங்கே ஜவஹர் யாரு?”

“ஜவஹர்..?”

“எஸ்...”

“அப்படி யாரும் இங்கே இல்லையே...”

“இந்தப் பத்திரிகைக்கு ஆசிரியர் யாரு?”

“மேடம் ஜெயலட்சுமி...”

“பத்திரிகை ஆசிரியர் ஒரு பெண்ணா?”

“ஆமா...”

“பார்க்கணும்.”

“ஒரு நிமிஷம்...”




ரிசப்ஷனிஸ்ட் பக்கத்தில் இருந்த இண்டர்காம் ரிஸீவரை எடுத்து மெல்லிய குரலில் பேசிவிட்டு அவர்களை ஏறிட்டாள்.

“மேடம் வரச் சொன்னாங்க. நேரா போய் இரண்டாவது ரூம்...”

போனார்கள். நாற்பது வயதை நெருங்கிக் கொண்டிருந்த ஜெயலட்சுமி இறுகிய முகத்தோடு அவர்களை வரவேற்று உட்கார வைத்து விட்டு, “எஸ்... வாட் கேன் ஐ டூ...” என்றாள்.

சத்யநாராயணன் தன் கையிலிருந்து கடிதத்தை அவளிடம் நீட்டினான்.

“இந்த லெட்டரை மொதல்ல படிங்க.”

ஜெயலட்சுமி வாங்கிப் படித்தாள். பின் நிமிர்ந்தாள்.

“சரி... உங்களுக்கு என்ன வேணும்?”

“லெட்டர்ல இருக்கிற போன் நம்பர் உங்களோடதுதானே..?”

“ஆமா...”

“இந்த ஜவஹர் யாரு..?”

“நான்தான்...” என்றாள் ஜெயலட்சுமி.

*தொடர்கதை - 8*

"இமயம்' பத்திரிகை ஆசிரியர் ஜெயலட்சுமி சொன்னதைக் கேட்டு சத்யநாராயணனும் கதிரேஷும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். முதலில் சுதாரிப்புக்கு வந்த சத்யநாராயணன் ஜெயலட்சுமியை ஏறிட்டான்.

“ஜவஹர் நீங்களா..?” “ஆமா... அது என்னோட புனைபெயர். ஆண் எழுத்தாளர்கள் பெண்களோட பெயரைப் புனைபெயரா வெச்சுக்கலாம். பெண் எழுத்தாளர்கள் வெச்சுக்கக் கூடாதா என்ன? காலேஜ் டேஸ்ல ஜவஹர்ங்கிற பேர்ல நிறைய கதை, கவிதை எழுதியிருக்கேன்.

நானே ஒரு பத்திரிகை ஆரம்பிச்ச பின்னாடி அந்தப் புனை பெயரில் நான் எழுதறதை விட்டுட்டேன். ஜவஹர் என்கிற புனை பெயரை நான் வெச்சுக்கிட்டதுக்கு வேற ஒரு சரியான காரணமும் இருக்கு... நான் நவம்பர் 14 -ம் தேதி பிறந்தவள்.”

படபடவென்று பேசி முடித்த பிறகு பேச்சை நிறுத்தி மெல்லிய குரலில் கேட்டாள். “என்ன விஷயமா என்னைப் பார்க்க வந்திருக்கீங்க..?”

“காயத்ரி உங்களுக்குத் தங்கையா?”

“கூடப் பிறந்த தங்கை கிடையாது. உடன்பிறவாத தங்கை. ஒரு காலத்தில் என்னோட கவிதைகளுக்கு காயத்ரி வாசகியா இருந்தா. நேர்ல சந்திச்சு மணிக்கணக்கா பேசுவாள். எந்தச் சொந்த பந்தமும் இல்லாத காயத்ரிக்கு நான் ஒரு உறவாக இருக்க விரும்பினதின் அடையாளம்தான் அந்தத் தங்கை என்கிற வார்த்தை..! பை த பை... நான் காயத்ரிக்கு எழுதின கடிதம் உங்க கைக்கு எப்படிக் கிடைச்சுது? இந்தக் கடிதம் மூலமாக ஏதாவது பிராப்ளமா..?”

“எஸ்...”

“என்ன ப்ராப்ளம்..?”

“காயத்ரி ஒரு கொலையைப் பண்ணிட்டு இப்போ தலைமறைவாயிருக்கா... அவ வீட்டைச் சோதனை போட்டபோது இந்த லெட்டர் கிடைச்சுது.

“ ஜெயலட்சுமியின் முகத்தில் கிரகண நிழல். உதடுகள் அதிர்ச்சியில் பிளந்தன. “என்ன சொன்னீங்க..! காயத்ரி கொலை பண்ணிட்டாளா..?”

“ஆமா.”

“யாரை?”

“ராஜா அண்ணாமலைபுரத்தில் புண்ணியகோடிங்கிறவரை...”

“நோ... நோ..! காயத்ரி ஒருத்தரைக் கொலை செய்யக் கூடிய அளவுக்கு மோசமான பெண் கிடையாது. உங்களுக்கு யாரோ தப்பான தகவல் கொடுத்திருக்காங்க...”

சத்யநாராயணன் குறுக்கிட்டான். “காயத்ரிதான் கொலையாளிங்கிறதுக்கு கான்க்ரீட் ஆதாரம் கிடைச்சிருக்கு. ஊதுவத்தி பாக்கெட்டுகளோடு அவள் ராஜா அண்ணாமலைபுரம் ஏரியாவுக்குப் போனதை நானே பார்த்தேன். அவ கூட பேசினேன். அடுத்த ஒரு மணி நேரத்துக்குள்ளே அவளை அடையார் பஸ் டெர்மினஸில் பார்த்தேன். பதட்டத்தில இருந்தா. காரணம் கேட்டப்ப தலைவலின்னு சொன்னா.

நான் அவளோட பேசிட்டிருந்த ஒவ்வொரு நிமிஷமும் அவள் இயல்பாய் இல்லை... குற்றம் உள்ள மனசு குறுகுறுக்கும்னு சொல்லுவாங்க. அந்த நிலைமையில்தான் காயத்ரி இருந்தாள்.”

“நீங்க சொல்றதை என்னால நம்ப முடியலை... அவ அந்தப் புண்ணியகோடியைக் கொலை பண்ணினதை நீங்க பார்த்தீங்களா?”

“பார்க்கலை... பட்... ஆதாரம் கிடைச்சிருக்கு.”

“என்ன ஆதாரம்..?”

“அவுஷ்ஸல் பண்றதுக்காகக் கொண்டுட்டுப் போன ஊதுவத்திப் பாக்கெட்டுகளில் ஒரு பாக்கெட் புண்ணியகோடியின் வீட்டுப் பின்பக்கம் கிடந்தது. பெண்கள் அணியக் கூடிய ஸ்லிப்பர்களின் காலடித் தடங்கள் ஈரமண்ணில் பதிவாகியிருக்கு.”

ஜெயலட்சுமி இப்போது மெற்னமாகி நெற்றிப் பொட்டைப் பிடித்துக் கொண்டாள். பின் ஒரு பெருமூச்சை வெளியேற்றிக் கொண்டே கேட்டாள். “யார் அந்தப் புண்ணியகோடி..?”

“அவர் ஒரு தொழிலதிபர்... அவரைப் பற்றி அக்கம் பக்கம் விசாரித்துப் பார்த்ததில் பெண்கள் விஷயத்தில் அவர் வீக்கான நபர்னு தெரிஞ்சுது... காயத்ரிக்கு வேண்டிய யாரோ ஒரு பொண்ணு புண்ணியகோடியால பாதிக்கப்பட்டிருக்கலாம். அதற்கான பழிவாங்கும் நடவடிக்கையாகவும் இந்தப் புண்ணியகோடியின் கொலை இருக்கலாமே..!”

“காயத்ரி இப்போது வீட்ல இல்லையா..?”

“இல்லை... நான் அவளை "ஸ்மெல்' பண்ணிட்டதைத் தெரிஞ்சுகிட்டுத் தலைமறைவாயிட்டா. வீட்ல அவள் இல்லை. அவ ஃப்ரெண்ட் துர்க்காதான் இருக்கா.” சத்யநாராயணன் சொல்லக் கதிரேஷ் குறுக்கிட்டான். “மேடம்... உங்ககிட்ட ஒரு கேள்வி கேட்கலாமா?”

“ப்ளீஸ்...”

“இது நீங்க காயத்ரிக்கு எழுதின லெட்டர். இந்த லெட்டர்ல சில வரிகள் நெருடலாயிருக்கு.”

“என்ன நெருடல்..?”

கதிரேஷ் அந்த லெட்டரைப் பார்வைக்குக் கொண்டுவந்து படித்தான். “நீ கோபமாய் எழுதிய கடிதம் கிடைத்தது. இதுவரை 69 தடவை படித்துவிட்டேன். நீ எடுத்த முடிவு எனக்குச் சரியாய்ப்படவில்லை. கொஞ்சம் நிதானம் காட்டலாம் என்பதே என் எண்ணம். பெண்கள் சினம் காக்கவேண்டும்.' - இந்த வரிகளை நீங்க எழுதியிருக்கீங்க... காயத்ரிக்கு யார் மேல் என்ன கோபம்..?”

“ஒரு பேங்க் மேனேஜர் மேல் காயத்ரிக்கு ஏகப்பட்ட கோபம். சொந்தமா ஒரு பிரிண்டிங் பிரஸ் போடறதுக்காக லோன் கேட்டு அந்த மானேஜர்கிட்ட போயிருக்கா. அந்த மானேஜர், தான் லோன் சாங்ஷன் பண்ணினால் லோன் தொகையில 25 சதவீதம் தனக்குக் கமிஷனா கொடுத்துடணும்னு சொல்லியிருக்கார்.

காயத்ரி அந்த மானேஜரை லஞ்ச-ஊழல் தடுப்புப் போலீசாரிடம் பிடிச்சுக் கொடுக்கிறதுக்காக ஏற்பாடு பண்ணிட்டிருக்கிறதாக எனக்குக் கடிதம் எழுதியிருந்தா. அந்த லெட்டருக்கு நான் போட்ட பதில்தான் இது..! இது ரொம்பவும் பழைய லெட்டர். காயத்ரி நான் எழுதின லெட்டர்க்குப் பிறகு வேற ஒரு பேங்குக்குப் போய் லோன் கேட்டு அந்த பேங்க் மானேஜரும் தேவையான லோன் தர்றதா சொல்லிட்டார்.”

“இந்த லெட்டரைப் படிச்சுப் பார்த்தா லோன் விவகாரம் மாதிரி தெரியலையே... வேற ஏதோ சீரியஸ் மேட்டர் மாதிரி தெரியுதே..?”

“உங்களுக்கு அப்படித் தோணினால் அதுக்கு நான் என்ன பண்ண முடியும்? வேணும்னா பேங்க் மானேஜரை நீங்க என்கொயர் பண்ணிக்கலாம்...”

"ஓகே... மேடம்..! அதைப் பின்னாடி பார்த்துக்கலாம். இப்ப எங்களுக்கு இருக்கிற சந்தேகம்... மத்தியானம் பனிரெண்டு மணிக்கே வீட்டுக்கு வந்திருக்க வேண்டிய காயத்ரி இன்னமும் வரலை... இதுக்கு என்ன காரணம் இருக்க முடியும்..?"

"காயத்ரி ஒரு சேல்ஸ் கேர்ல். ஒவ்வொரு ஏரியாவுக்கும் போய் வீடுவீடா படியேறி பலவிதமான மனிதர்கள்கிட்டே பேசி அவங்களைக் கன்வின்ஸ் பண்ணி ஊதுவத்தி பாக்கெட்டுகளை விக்க வேண்டிய கட்டாயம். சில நாட்களில் கொஞ்சம் தூரமான ஏரியாக்களுக்கும் காயத்ரி போய்விடுவது உண்டு."

"இன்னிக்கு அவ அப்படிப் போகலையே... காலையில பத்து மணிக்கு அவளை ராஜா அண்ணாமலைபுரத்தில் பார்த்தேன். பதினோரு மணிக்கு அடையார்ல பார்த்தேன்."

"அதுக்கப்பறம் அவ வேற ஏரியாவுக்குப் போயிருக்கக் கூடாதா என்ன..?"

சத்யநாராயணன் புன்னகைத்தான். "மேடம்..! நீங்க காயத்ரிக்கு ஆதரவா பேசிட்டிருக்கிறது எந்த வகையிலும் அவளுக்கு உபயோகமாகப் போறதில்லை. புண்ணியகோடியைக் கொலை பண்ணினது காயத்ரிதான்கிறது சூரியன் கிழக்கே உதிப்பது எவ்வளவு நிஜமோ அவ்வளவு நிஜம். ஏன்னா காயத்ரியோட பதட்டத்தைப் பார்த்தவன் நான். பெரிசா தப்புப் பண்ணினவங்களுக்குத்தான் அப்படி வேர்க்கும். உடம்பு படபடக்கும்."

ஜெயலட்சுமியின் நெற்றி இப்போது வியர்வையில் இருந்தது. "எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை... காயத்ரி கோபப் படுவாளே தவிர கொலை செய்யற அளவுக்குப் போகமாட்டா..."

“காயத்ரியே குற்றத்தை ஒத்துக்கும்போதுதான் நீங்களும் ஒத்துக்குவீங்க போலிருக்கு. சரி... இந்த அட்ரஸ்க் கொஞ்சம் பாருங்க மேடம்.” கதிரேஷ் கொடுத்த துண்டுச் சீட்டை வாங்கிப் பார்த்தாள் ஜெயலட்சுமி.

ஜான்ஸி, 6, செம்பண்ணா அவென்யூ, பெங்களூர்- 59.
அட்ரஸ்ப் படித்தவிட்டு கதிரேஷிடம் கேட்டாள். “யார் இந்த ஜான்ஸி?”

“நாங்க உங்ககிட்ட கேட்கவேண்டிய கேள்வி இது?”

“எனக்கு இந்த ஜான்ஸி யார்னு தெரியலை...”

சத்யநாராயணன் சொன்னான். “மேடம்... இன்னிக்கு மத்தியானம் காயத்ரிக்காக அவ வீட்ல வெயிட் பண்ணிட்டிருக்கும்போது காயத்ரிக்கு கூரியர்ல ஒரு பார்சல் வந்தது. பார்சலோட ஃப்ரம் அட்ரஸ் பகுதியில் இந்த ஜான்ஸி அட்ரஸ் இருந்தது.

பார்சலை என்கிட்ட டெலிவரி பண்ணும்படி அந்தக் கூரியர் ஆள்கிட்டே கேட்டேன். அவன் சம்மதிக்கலை. மத்தியானம் 3 மணிக்கு மேல் வர்றதா சொல்லிட்டுப் போயிட்டான். "உரிய நபரிடம் பார்சலைக் கொடுக்கவும்' -ன்னு பார்சல் மேல எழுதியிருந்தது.”

“ஸ்ரி... நீங்க சொல்ற ஜான்ஸியைப் பத்தி எனக்குத் தெரியலை...”

“ஓகே. மேடம்... நீங்க கொடுத்த ஒத்துழைப்புக்கு ரொம்ப நன்றி. காயத்ரி எங்க கைக்குக் கிடைச்சதும் நீங்க ஒரு தடவை போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் வரவேண்டியிருக்கும்...”

முகம் இருண்டு போயிருக்க தலையாட்டினாள் ஜெயலட்சுமி.

சத்யநாராயணனும் கதிரேஷும் வெளியே வந்தார்கள். பைக் உதைபட்டு இருவரையும் சுமந்தது.

“கதிரேஷ்... இப்ப நாம எங்கே போறோம்..?”

“கூரியர் சர்வீஸ்க்குப் போய் காயத்ரிக்கு வந்த அந்த பார்சல் என்னான்னு பார்க்கப் போறோம்... அதென்ன கூரியர் சர்வீஸ்?”

“எஃப் எஃப். கூரியர். ராயப்பேட்டை பிராஞ்ச்...” பைக் பறந்தது.

கதிரேஷ் கேட்டான். “எடிட்டர் ஜெயலட்சுமியோட ஸ்டேட்மெண்ட் பத்தி என்ன நினைக்கறே..?”

“நம்பற மாதிரி இல்லை... காயத்ரியைக் காப்பாத்தற முயற்சி நல்லாவே தெரியுது...”

“அந்த அம்மா நடத்தற "இயம்' பத்திரிகையைப் படிச்சிருக்கியா?”

“இல்லை...”

“படிச்சுப் பாரு... ஆண் வர்க்கத்துக்கு எதிரான பத்திரிகை அது. பத்திரிகையோட கேப்ஷன் வாசகமே "ஆண் ஆதிக்கத்தை அடியோடு வேரறுப்போம்!' என்பதுதான்.”

“அப்படியா..?”

“இன்னொரு விஷயம் சொன்னா உனக்கு ஆச்சர்யமாயிருக்கும்.”

“என்ன..?”

“அந்த ஜெயலட்சுமி ரெண்டு தடவை கல்யாணம் பண்ணி, ரெண்டு தடவை டைவோர்ஸ் பண்ணியிருக்காங்க..!”

“மங்கையர் திலகம்னு பட்டமே கொடுக்கலாம் போலிருக்கே... ஆமா... இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்..?”

“சன் டி.வி. வணக்கம் தமிழகத்தில் போன மாசம் இந்த அம்மா பேட்டி கொடுத்துரு இருந்தாங்க... கடைசி ஒரு பத்து நிமிஷம் பார்த்ததுல இவ்வளவு தகவலும் கிடைச்சுது...” பைக் சிக்னலில் நின்றது.

எதிர் எதிர் திசைகளில் பச்சை கிடைத்த வாகனங்கள் பாய்ந்து கொண்டிருக்க... சத்யநாராயணன் பார்வைக்கு அந்த ஹீரோ ஹோண்டா பைக் சிக்கியது. உயரமான ஒரு இளைஞன் அதை விரட்டிக் கொண்டிருக்க பின் சீட்டில் அவனுடைய இடுப்பை அணைத்தபடி காயத்ரி.

*தொடர்கதை - 9*

சத்யநாராயணன் கதிரேஷின் தோள்பட்டைகளைப் பிடித்து உலுக்கினான். “அதோ காயத்ரி போறா..!

“எங்கே..?”

“அந்த பைக்குக்குப் பின்னாடி உட்கார்ந்துட்டுப் போறா பாரு...”

கதிரேஷ் பார்த்தான். அதற்குள் பைக் சீறிப் போக்குவரத்தில் கலந்து ஒரு பஸ்ஸுக்கு முன்பாய்ப் போய்விட சத்யநாராயணன் பரபரத்தான்.

“கதிரேஷ்! அந்த பைக்கை சேஸ் பண்ணு...”

“அவ காயத்ரிதானா..?”

"காயத்ரியேதான்... சந்தேகமே வேண்டாம். நான்தான் நல்லாப் பார்த்தேனே... மொதல்ல அந்த பைக்கை சேஸ் பண்ணு..."

கதிரேஷ் சிவப்பு சிக்னலைப் பொருட்படுத்தாமல் அந்த பைக்கை விரட்டினான். அது இப்போது ஒரு லாரியை ஓவர்டேக் செய்து கொண்டிருந்தது. பைக் பின்னால் உட்கார்ந்திருந்த அந்தப் பெண்ணின் துப்பட்டா ஏதோ ஒரு கட்சிக்கொடி மாதிரிக் காற்றில் படபடத்துக் கொண்டிருந்தது.

"சத்தி... நீ நல்லாப் பார்த்தியா..?"

"பார்த்தேன். நூறு சதவீதம்... அவ காயத்ரிதான். எனக்குத் தெரியாதா என்ன..?"

"பைக்குல உட்கார்ந்துட்டுப் போற பொண்ணைப் பார்த்தா ஏதோ காலேஜ்ல படிக்கிற பொண்ணு மாதிரித் தெரியுது..."

"டிரெஸ் சேஞ்ச் பண்ணியிருக்கலாமே..!"

"எனக்கு டவுட்டாயிருக்கு சத்தி. அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் மாதிரித் தெரியுமாம்... காயத்ரியின் நினைவாகவே இருக்கிற உனக்கு பைக்ல போற பெண் காயத்ரி மாதிரி தெரிஞ்சு இருக்கலாம்..!"

"நீ அந்த பைக்கை மொதல்ல மடக்கு. அவ காயத்ரியா, இல்லை வேற யாராவதான்னு தெரிஞ்சுடும்."

கதிரேஷ் ஆக்ஸிலேட்டரை முறுக்கினான். டாப் கியரில் பைக் இறக்கைகளைக் கட்டிக் கொண்டது. தனக்கு முன்னால் போய்க் கொண்டிருந்த வாகனங்களை ஓவர்டேக் செய்து வேகமாய் முன்னேற நூறு மீட்டர் தூரத்தில் போய்க்கொண்டிருந்த அந்த பைக் இப்போது முழுமையாய்ப் பார்வைக்குக் கிடைத்தது. பெண்ணின் முகம் பக்கவாட்டில் தெரிந்தது.

“இப்ப பாரு சத்தி.”

“இன்னும் கொஞ்சம் பக்கத்துல போ...” கதிரேஷின் பைக் வேகம் பிடித்துச் சீறிக்கொண்டு இருக்கும்போதே அந்த பைக் சாலையின் இடது பக்க வளைவில் திரும்பியது. மறைந்தது.

“கதிரேஷ்..! பார்த்து... அவங்களைத் தப்ப விட்டுடாதே...”

“என்கிட்டே அது நடக்குமா..? அந்த பைக்கை மடக்க எனக்கு ரெண்டே நிமிஷம் போதும். பைக் நம்பர் பார்த்தியா?”

“பார்க்க முடியலை... நம்பர் ப்ளேட் மேலே சேறு படிஞ்ச மாதிரி இருந்தது.” "

"பர்ப்பஸப்வே அப்படிப் பண்ணியிருக்கலாம்...”

முன்னால் போய்க்கொண்டிருந்த பைக் இப்போது வேகத்தை அதிகப்படுத்தி ஒரு புல்லட்டாய் மாறியிருக்க இடைவெளி அதிகமாகத் தெரிந்தது.

“கதிரேஷ்..! நீ அவளைக் கோட்டை விடப் போறே..!”

“என்ன இப்படி பைக்கை ஓட்டறான்... ஏதோ ரேஸ்ல கலந்து கிட்ட மாதிரி...”

“நாம சேஸ் பண்றதை ஸ்மெல் பண்ணிட்டானோ..?”

“இருக்கலாம்... இல்லேன்னா இவ்வளவு வேகமா போகமாட்டானே...” கதிரேஷ் சொல்லிக் கொண்டிருக்கும்போதே முன்னால் போய்க்கொண்டிருந்த பைக் இடது பக்கச் சந்தில் நுழைந்தது.

“ஏதாவது ஒரு சந்துக்குள்ளே நுழைவான்னு நினைச்சேன். நுழைஞ்சுட்டான்.”

“அது என்ன சந்து சத்தி..?”

“சின்ன ரெட்டி சந்துன்னு நினைக்கிறேன். இனி அவளைப் பிடிக்கிறது கஷ்டம்னு நினைக்கிறேன்.”

“இனிமேல்தான் சுலபம். சந்துக்குள்ளே ஒரு சின்ன ட்ராஃபிக் ஜாம் ஏற்பட்டாலும் ஆள் மாட்டிக்குவான்.”

“எனக்கு நம்பிக்கையில்லை... ஆக்டோபஸ்ஸுக்கு எட்டு கைகள் இருக்கிற மாதிரி அந்தச் சின்ன ரெட்டி சந்துக்கு எட்டு கிளைச் சந்துகள். அவன் எதுல வேணும்னாலும் நுழைஞ்சு போய்க்கிட்டேயிருக்கலாம்...”

கதிரேஷின் பைக் சின்ன ரெட்டி சந்துக்குள் நுழைந்தது.

குறுகலான சந்து. பஜ்ஜி சுட்ட வாசனையும் சாக்கடையும் மாறி மாறி நாறியது.

“பார்வைக்குக் கிடைக்கலை. ஆள் எஸ்கேப்...”

“எனக்கு இன்னும் நம்பிக்கையிருக்கு சத்தி...” பைக் சந்துக்குள் வேகமாய்த் தடதடத்து எதிரில் வந்த ஆட்களை மிரள வைத்து ஒதுக்கியது.

“யோவ்... பார்த்துப் போங்கய்யா. போலீஸ் இப்படி வேகமா போனா எப்படி..?” தைரியமாய் ஒரு குரல் வந்து கதிரேஷின் காதுகளில் விழுந்தது. பைக் சின்ன ரெட்டி சந்தின் மையத்துக்கு வந்து எலக்ட்ரிகல் போஸ்ட்டுக்குக் கீழே நின்றது. நான்கு திசைகளிலும் கிளைச் சந்துகள் பிரிந்தன.

“எப்படிப் போயிருப்பான்னு தெரியலையே..?” வலது பக்கச் சந்திலிருந்து ஒரு இளம் பெண் இடுப்பில் கைக்குழந்தையோடு வெளிப்பட்டாள். சத்தி அவளிடம் கேட்டான்.

“ஏம்மா..! இந்த வழியா ஒரு பைக் போச்சா? இது மாதிரியான வண்டி...” அந்தப் பெண் வேகமாய்த் தலையாட்டினாள்.

“ஆமாங்க... வண்டி எம்மேலே மோதற மாதிரி வேகமாப் போச்சு...”

“பைக்குக்குப் பின்னாடி ஒரு பொண்ணு உட்கார்ந்திருந்தாளா..?”

“ஆமாங்க.”

கதிரேஷின் பைக் "விர்ர்ர்' ரென்று கிளம்பியது. பத்தடி அகலச் சந்து. இரண்டு பக்கமும் நெருக்கமான வீடுகள். சந்துக்குக் குறுக்கே ஓடிய மினி சாக்கடைகள் ஸ்பீட் பிரேக்கர்களாக மாறியிருக்க பைக் வேகம் குறைக்காமல் அவைகளைத் தாண்டியது. இரண்டு நிமிஷ சர்க்கஸ் பயணத்துக்குப் பிறகு ஒரு வீட்டுக்கு முன்பாய் நின்றிருந்த அந்த பைக் பார்வைக்குச் சிக்கியது.

“சத்தி..! காட் இட்...”

“நிறுத்திட்டு ஓடியிருக்கலாமே..?”

“பக்கத்திலேயே ஒரு டீக்கடை இருக்கு. விசாரிச்சா தெரிஞ்சுடும்.” கதிரேஷ் அந்த பைக்குக்குப் பின்னால் தன் பைக்கை நிறுத்தினான். இறங்கிக் கொண்டு டீக்கடை வாசலில் நின்று பேப்பர் பார்த்துக் கொண்டிருந்த நபரிடம் கேட்டான்.

“அந்த பைக் யாரோடது..?”

“எதிர்த்த வீட்டுக்காரரோடது சார்.”

“அவரோட பேர் என்ன?”

“பட்டாபி சார்...”

சத்யநாராயணனும் கதிரேஷும் எதிர்வீட்டை நோக்கிப் போய், சாத்தியிருந்த கதவைத் தட்டினார்கள். ஒரு நடுத்தர வயது நபர் கதவைத் திறந்து கொண்டு வெளிப்பட்டார். கதிரேஷின் போலீஸ் யூனிஃபார்மைப் பார்த்ததும் முகம் மாறினார். "ஸ...சார்..."

"வெளியே நிக்கிற பைக் உங்களோடதா?"

"ஆமா... சார்..."

"உங்க பேர் பட்டாபி..!"

"ஆமா... சார்..."

"வீட்ல வேற யார் யாரெல்லாம் இருக்காங்க?"

"இந்த வீட்ல நானும் என்னோட ஒய்ஃப்பும் மட்டுந்தான்."

அந்தப் பட்டாபி சொல்லிக்கொண்டிருக்கும்போதே கறுப்பாய், குண்டாய் ஒரு அம்மாள் உள்ளியிருந்து வந்தாள். "யாருங்க அது..?"

சத்யநாராயணனும் கதிரேஷும் பரஸ்பரம் பார்த்துத் தலையாட்டி உதட்டைப் பிதுக்கிக் கொண்டார்கள்.

பட்டாபி கேட்டார். "எதுக்காக சார் இந்த என்கொய்ரி..?"

"ஸாரி... உங்க பைக் மாதிரியே இருந்த ஒரு பைக்கை ஃபாலோ பண்ணிட்டு வந்தோம். எப்படியோ அவங்களை மிஸ் பண்ணிட்டோம். உங்க வீட்டு வாசல்ல அதே மாதிரியான பைக்கைப் பார்த்ததும் ஏமாந்துட்டோம்..."

"நம்பர் நோட் பண்ணலையா சார்..?"

"ட்ராஃபிக்ல நோட் பண்ண முடியலை. ஷ்ரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்..." சத்யநாராயணனும் கதிரேஷும் சோர்வைச் சுமந்து கொண்டு பைக்குக்கு வந்தார்கள். "எப்படியோ கோட்டை விட்டுட்டோம்..." கதிரேஷ் பெருமூச்சு விட்டுக்கொண்டு இருக்கும்போதே அவனுடைய சர்ட் பாக்கெட்டில் இடம் பிடித்திருந்த செல்போன் அவசர கதியில் கூப்பிட்டது.

"கதிரேஷ்! இப்ப எங்கே இருக்கீங்க?"

"சின்ன ரெட்டி சந்துல சார். ஒரு இன்வெஸ்டிகேஷனுக்காக வந்தேன். என்ன விஷயம் சார்?"

"காயத்ரியைத் தேடிக்கிட்டு உங்க ஃப்ரண்ட் சத்யநாராயணனோட போனீங்க... என்னாச்சு?"

"அவ வீட்ல இல்ல சார்... வெயிட் பண்ணிப் பார்த்துட்டு ஸ்டேஷனுக்குத் திரும்பிட்டிருக்கும்போது காயத்ரி ஒரு மோட்டார் பைக்கில் ஒரு இளைஞனோடு போயிட்டிருந்தாள். நாங்களும் பைக்ல சேஸ் பண்ணினோம். அந்த பைக் சின்ன ரெட்டி சந்துக்குள்ளே நுழைஞ்சுது. ஃபாலோ பண்ணினோம். பட் இந்தச் சந்துக்குள்ளே நாலைந்து கிளைச் சந்துகள் இருக்கிறதை உபயோகப்படுத்திக்கிட்டு அவங்க எப்படியோ தப்பிச்சுப் போயிட்டாங்க சார்... பைக் நம்பரையும் நோட் பண்ண முடியலை..."

"கதிரேஷ்..! நீங்களும் உங்க ஃப்ரெண்டும் உடனடியாய் அடையாரில் இருக்கிற சுவாதி அவென்யூவுக்குப் புறப்பட்டு வாங்க. ஏழாவது தெரு ரெண்டாவது பங்களா..."

"சார்... எனிதிங் இம்பார்ட்டன்ட்..?"

"எஸ்... நேர்ல வாங்க... அடையார் சுவாதி அவென்யூ. ஏழாவது தெரு. இரண்டாவதாய் இருந்த பங்களாவுக்கு முன்னால் போலீஸ் ஜீப் நின்றிருந்தது. பைக்கை ஓரமாய் நிறுத்திவிட்டுக் கதிரேஷும் சத்யநாராயணனும் திறந்து கிடந்த காம்பௌண்ட் கேட்டுக்குள் நுழைய இன்ஸ்பெக்டர் ஸ்டீபன் எதிர்பட்டார். சல்யூட் அடித்துத் தளர்ந்தான் கதிரேஷ்.

"சார்..."

"கதிரேஷ்! இது யாரோட பங்களான்னு உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியாது சார்..."

"சிட்டியில் இன்னிக்கு நம்பர் ஒன் வைர வியாபாரி. பேர் கன்யாலால்... பெரிய கோடீஸ்வரர். ஒரு டிரஸ்ட் நடத்தி அதன் மூலமா நிறைய ஏழைப் பெண்களுக்குக் கல்யாணம் பண்ணியிருக்கார். தர்ம காரியங்களுக்கு லட்சக்கணக்கில் பணம் கொடுத்திருக்கார். கோயில் கும்பாபிஷேகங்களை நடத்தி வெச்சிருக்கார். இவ்வளவு நல்லவரான கன்யாலால் இப்போ உயிரோடு இல்லை. மத்தியானம் மூணு மணி சுமாருக்குக் கொலை செய்யப்பட்டிருக்கார்."

"ஸ...சார்..."

"உள்ளே வாங்க..." போனார்கள். சுவர், தரை என்று எங்கே பார்த்தாலும் கிரானைட் பளபளத்தது. ராட்சஸத் திராட்சைக் குலைகள் போல் லஸ்தர் விளக்குகள் சீலிங்கிலிருந்து தொங்கின. ஃபாரன்ஸிக் அதிகாரிகள் மாடிப் படிகளில் லென்ஸ் வைத்துப் பார்த்துக் கால் தடங்களைச் சேகரித்துக் கொண்டிருக்க, மூன்று பேரும் லிஃப்டில் பயணித்து முதல் மாடிக்குப் போனார்கள். வராந்தாவில் முதல் அறை. கதவு திறந்து கிடக்க கன்யாலால் அறை பூராவும் விரித்திருந்த வெண்ணிற மெத்தையில் மல்லாந்து விழுந்திருந்தார். வயிறும் மார்பும் தோட்டாக்கள் வாங்கி ரத்தக் குளங்களாய் மாறியிருந்தன. சத்யநாராயணன் ஸ்டீபனை ஏறிட்டான்.

“சார்... இதுவும்..?”

“காயத்ரியின் கைங்கர்யம்தான்.” சொன்னவர் தன் பேண்ட் பாக்கெட்டிலிருந்து அந்தச் சிறிய பாலிதீன் கவரை எடுத்தார். உள்ளே ரத்தம் தோய்ந்த தோட்டாக்கள்.

“காலையில் கொலை செய்யப்பட்ட புண்ணிகோடியின் உடம்பிலிருந்து எடுக்கப்பட்ட தோட்டாக்களும், இப்போது கன்யாலாலின் உடம்பிலிருந்து எடுக்கப்பட்ட தோட்டாக்களும் ஒரே ஜாதி. காயத்ரி இதுவரைக்கும் நாலு தோட்டாக்களைச் செலவு பண்ணியிருக்கா. ரிவால்வர்ல மீதி இருக்கிற அந்த ரெண்டு தோட்டாக்களைச் செலவு பண்றதுக்கு முன்னாடி அவளைப் பிடிக்கணும்.”

"முடியுமா?'

- சத்யநாராயணன் பயந்தான்.




*தொடர்கதை - 10*

இன்ஸ்பெக்டர் ஸ்டீபன் ரத்தக் கறை படிந்த அந்த இரண்டு தோட்டாக்களையும் மறுபடியும் பாலீதீன் கவரில் போட்டுப் பத்திரப்படுத்திக் கொண்டே சத்யநாராயணனையும் கதிரேஷையும் ஏறிட்டார்.

“இந்த வகையான தோட்டாக்களை "ஜி. மேக்' ரிவால்வரில் மட்டுமே பயன்படுத்த முடியும்னு ஃபாரென்ஸிக் கன் மெட்டல் செக்ஷன் தீர்மானமா சொல்லியிருக்கு. பொதுவா ஜி. மேக் ரிவால்வர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கறதில்லை. காரணம், இதில் உபயோகப்படுத்தப்படுகிற தோட்டாக்கள் ஸ்பைரல் வகையைச் சேர்ந்தது. இந்த ஸ்பைரல் தோட்டா உடம்பில் பாயும்போது தோலில் ஒரு பட்டாணி சைஸுக்கு மட்டுமே துவாரம் இருக்கும். ஆனா தோட்டா உள்ளே போனதும் ஸ்குரூ ஆணி போலக் குடைந்து உள் உறுப்புகளைச் சிதைக்கும். இந்த ஜி. மேக் ரிவால்வர் இந்தியா பூராவிலும் தடை செய்யப்பட்டிருக்கு. ”

சத்யநாராயணன் குறுக்கிட்டான். “சார்... புண்ணியகோடி கொலை செய்யப்பட்டதுக்கும், கன்யாலால் கொலை செய்யப்பட்டதுக்கும் என்ன மோட்டிவ்..?”

“புண்ணியகோடியைப் பத்தி அவர் ப்ரெண்ட்ஸ் சர்க்கிளில் விசாரித்தபோது அவர் ஒரு வுமனைசர் என்கிற உண்மை தெரிஞ்சுது. வீடு வீடா பொருள்களை விற்க வருகிற சேல்ஸ் பெண்களை எப்படியும் மடக்கிடுவாராம். எல்லாப் பொருள்களையும் நானே வாங்கிக்கறேன்னு சொல்லி பெட்ரூமுக்குக் கூட்டிட்டுப் போயிடுவாராம். நிறைய குடும்பப் பெண்கள் புண்ணியகோடியால் விபசாரியாக மாறி இப்ப தொழில் பண்ணிக்கிட்டிருக்கிறதாகத் தகவல். புண்ணியகோடியின் மனைவியும் சரி... மகளும் சரி... அவரோட உடலைப் பார்த்துட்டு அழக்கூட இல்லை. காரணம் கேட்டபோது அவங்க சொன்ன பதில் வித்தியாசமா இருந்தது. ”

“அவங்க என்ன சொன்னாங்க சார்..?”

“இன்னும் கொஞ்ச நாள் போயிருந்தா நாங்களே இவரை மண்ணெண்ணெய் ஊத்தி எரிச்சிருப்போம்-ன்னாங்க. வீட்டு வேலைக்கு வந்த நாப்பத்தஞ்சு வயசு வேலைக்காரியைக்கூட புண்ணியகோடி விடலையாம்...”

“வாட் அபெறட் கன்யாலால் சார்... அவர் கொலை செய்யப்பட்டதற்கு என்ன மோட்டிவ்? புண்ணியகோடி மாதிரி அவரும் ஒரு வுமனைசரா..?”

“இல்லை... அக்கம்பக்கம் விசாரிச்சுப் பார்த்த அளவில் ஹி ஈஸ் எ ஜெம். ஒரு டிரஸ்ட் நடத்தி அதன் மூலமா ஏழை மக்களுக்கு நிறைய உதவி பண்ணினார். வருஷா வருஷம் நூத்தியோரு ஏழைப் பெண்களுக்குக் கல்யாணத்தை நடத்தி வைத்திருக்கிறார். அம்பத்தூருக்குப் பக்கத்தில் பத்து கிரவுண்ட் நிலத்தில் ஒரு கிருஷ்ணன் கோயிலை முழுக்க முழுக்க க்ரானைட் கற்களை வெச்சுக் கட்டிக்கிட்டு வர்றார்... இப்பிடி எல்லா பிளஸ் பாயிண்டுகளையும் வெச்சுக்கிட்டிருக்கிற இவரை இவ்வளவு கொடூரமா கொலை செய்யக் கூடிய அளவுக்கு ஏதாவது ஒரு மைனஸ் பாயிண்ட் இருக்கணும்.”

“சார்... புண்ணியகோடியைக் கொலை பண்ணின காயத்ரிதான் கன்யாலாலையும் கொலை செய்திருக்கணும்னு நினைக்கறீங்களா?”

“மே... பி... தோட்டாக்கள் அதுதான் உண்மைன்னு சொல்லுதே...”

“கன்யாலாலைக் கொலை பண்ணினது காயத்ரியா இல்லாமே வேறு யாராவதா ஏன் இருக்கக்கூடாது..? காயத்ரி உபயோகப்படுத்தின அதே ஜி. மேக். துப்பாக்கியை ஏன் உபயோகப்படுத்தியிருக்கக் கூடாது..?”

“உங்களுக்கு ஏன் இந்தச் சந்தேகம் சத்யநாராயணன்?”

“சார்... கன்யாலால் ஒரு வைர வியாபாரி. அவர் கிட்டே தர்மசிந்தனை இருந்தாலும் ஹி ஈஸ் எ பிசினஸ் மேன். ஒரு பிசினஸ் மேனுக்கு எதிரிகள் இருக்க வாய்ப்புகள் அதிகம்...”

“விசாரணையை அந்தக் கோணத்திலும் நகர்த்திப் பார்க்கத்தான் போகிறோம். கன்யாலாலுக்கு பிசினஸ் ரீதியாக மட்டுமில்லை, உறவு முறையிலும் எதிரிகள் இருக்கலாம். கன்யாலாலுக்கு மனைவி இல்லை. ஐந்து வருஷங்களுக்கு முன்னால் நுரையீரல் கோளாறு காரணமாக மரணம். ஒரே மகன். பெயர் சூரஜ் குமார். சிங்கப்பூரில் டைமண்ட் பிசினஸ். இன்னும் கல்யாணம் ஆகலை. அப்பாவைப் பார்க்க மாதத்துக்கு ஒரு தடவை சென்னை வந்து ரெண்டு நாள் தங்கிவிட்டுப் போவது உண்டு. கடைசியா சூரஜ் குமார் வந்தது போன மாதம் ஏழாம் தேதி.”

ஸ்டீபன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே சத்யநாராயணன் தலையைக் குனிந்தபடி மெல்ல கதிரேஷின் கையைப் பிடித்தான்.

“கதிரேஷ்...”

“என்ன சத்தி?”

“இப்ப நான் சொன்னதுமே தலையைத் தூக்கிப் பார்த்துடாதே... இதே ரோட்ல வலது கை பக்கமா ரெண்டாவது பங்களா. மொட்டை மாடியில் ஒரு ரூம். அந்த ரூமோட ஜன்னல் கதவு கடந்த பத்து நிமிஷ நேரத்துல கொஞ்சமா திறக்கப்படறதும், ஒரு பெண்ணோட முகம் எட்டிப் பார்த்துட்டு உடனே மறைஞ்சுடறதும் என் மனசுக்குக் கொஞ்சம் நெருடலாயிருக்கு.”

“வேடிக்கை பார்க்கிறதுக்காக இருக்கலாம் இல்லையா?”

“வேடிக்கை பார்க்கிறதா இருந்தா ஜன்னல் கதவை நல்லா ஓப்பன் பண்ணி வெச்சுக்கிட்டே பார்க்கலாமே... எதுக்காக இந்தத் திருட்டுத்தனம்னு தெரியலை...”

ஸ்டீபன் சொன்னார். “எதுக்காகச் சந்தேகம் மிஸ்டர் சத்யநாராயணன்..? நீங்களும் கதிரேஷும் அந்த வீட்டுக்குப் போய் பார்த்துட்டு வந்துடுங்களேன்... எந்த விஷயத்தையுமே நாம நெக்லெக்ட் பண்றது சரியில்லை. ஸ்மால் மிஸ்டேக்ஸ் ஆர் டேன்ஜரஸ்ன்னு சொல்லுவாங்க. போய்ப் பார்த்துடுங்க.”

சத்யநாராயணனும் கதிரேஷும் புறப்பட்டார்கள்.

“எட்டிப் பார்த்து ஒரு பெண்ணா?”

“ம்... சிவப்பு சுடிதார். காலேஜ் கேர்ளாயிருக்கலாம். பளிச்சுனு இருந்தா. மிரண்ட சைஸில் பார்வை.”

ஒரு நிமிஷ நடையில் அதே ரோட்டில் இரண்டாவதாக இருந்த பங்களாவுக்கு வந்தார்கள். பழைய மோஸ்தர் பங்களா. காம்பெளண்ட் கேட்டில் கைவைத்தார்கள். கேட் திறந்து கொள்ள உள்ளே போனார்கள். முன்பக்க அறையில் பக்கம் பக்கமாய் சோபாவில் உட்கார்ந்து ஏதோ பேசிக் கொண்டிருந்த அந்த நடுத்தர வயது தம்பதிகள் எழுந்து வந்தார்கள். வேஷ்டி உடுத்தி கை வைத்த பனியன் அணிந்திருந்த அந்த நபர் கதிரேஷின் காக்கி யூனிஃபார்மைப் பார்த்ததும் லேசாய் முகம் மாறினார்.

“எஸ்...”

“கன்யாலால் மர்டர் சம்பந்தமாய் ஒரு என்கொயரி...”

“கான்ஸ்டபிள் ஒருத்தர் வந்து அப்பவே விசாரிச்சுட்டுப் போயிட்டாரே..!”

“அது ஃபார்மல் என்கொயரி... இன்னும் கொஞ்சம் டீப்பா என்கொயர் பண்ணலாம்னு வந்தோம். நீங்க எங்கே ஒர்க் பண்றீங்க..?”

“ஸ்டேட் பேங்க்ல கேஷியரா இருக்கேன். ஐயாம் ராமாமிர்தம்.”

“பேங்க் எந்த பிராஞ்ச்?”

“தேனாம்பேட்டை.”

“இந்த வீட்ல எத்தனை பேர் இருக்கீங்க..?”

“இப்போதைக்கு நானும் என்னோட மனைவியும்தான். எம் பொண்ணு வெளியூர் போயிருக்கா.”

சத்யநாராயணனும் கதிரேஷும் ஒரு மைக்ரோ விநாடி நேரம் சட்டென்று பார்த்து விலகிக் கொண்டார்கள்.

“உங்களுக்கு ஒரே பொண்ணா?”

“ஆமா...”

“கன்யாலாலோட சுபாவம் எப்படி?”

“ரொம்ப நல்லவர் சார்... கடவுள் பக்தி அதிகம். யாரையும் அதிர்ந்து பேச மாட்டார். அவரைக் கொலை பண்ணினவன் ஒரு மிருமாத்தான் இருக்கணும்...”

“அவரைக் கொலை "பண்ணினவன்'னு சொல்றீங்களே... கொலை பண்ணினது ஒரு பெண்ணாய் இருக்கக் கூடாதா?”

அவர் திகைத்தார். “ஸ... சார்... நான் சும்மா ஒரு பேச்சுக்குத்தான் சொன்னேன்...”

"மிஸ்டர் ராமாமிர்தம்... இப்போ இந்த வீட்ல நீங்க ரெண்டு பேர் மட்டும்தான் இருக்கீங்க இல்லையா..?"

"ஆ. ஆமாம்."

"வேலைக்காரங்க..?'

"யாரும் கிடையாது. ஒரு வேலைக்காரி காலைல வந்துட்டு மத்தியானம் ஒரு மணிக்கெல்லாம் போயிடுவா..."

"அப்ப வீட்ல நீங்க ரெண்டு பேர் மட்டுந்தான்..?"

"ஆமா..."

"மொட்டை மாடியில் ஒரு ரூம் இருக்கே... அந்த ரூமில் இருக்கிற பொண்ணு யாரு..?"

ராமாமிர்தமும் அவருடைய மனைவியும் பரஸ்பரம் பார்த்து அவஸ்தையாய் எச்சில் விழுங்கிக்கொண்டார்கள்.

"அது... அது... வந்து..."

"பொறுப்பான வேலையில இருக்கிறீங்க... பொய் சொல்லலாமா? அது உங்க பொண்ணுதானே?"

"ஆமா... சார்..."

"எதுக்காக உங்க பொண்ணு வீட்ல இல்லேன்னு பொய் சொன்னீங்க..?"

“அது... வந்து... என்கொய்ரிங்கிற பேர்ல வயசுப் பொண்ணு கிட்ட போலீஸ் வந்து பேசறது எங்களுக்குப் பிடிக்கலை சார்.”

“உண்மையான காரணம் இது இருக்க முடியாதுன்னு எம் மனசுக்குப் படுது...” சொன்ன சத்யநாராயணன் கதிரேஷிடம் திரும்பினான். கேட்டான். “நீ என்ன நினைக்கிறே கதிரேஷ்..?”

“எனக்கும் அதே எண்ணம்தான்.”

“என்ன பண்ணலாம்?”

“பொண்ணை ஸ்டேஷனுக்குக் கொண்டு போயிடலாம்.”

ராமாமிர்தமும் அவர் மனைவியும் பதறினார்கள். “சார்... அப்படியெல்லாம் பண்ணிடாதீங்க... எம் பொண்ணு வீட்ல இல்லைன்னு சொன்னதற்குக் காரணம் இருக்கு சார்.”

“அதைத்தான் சொல்லுங்க.”

ராமாமிர்தம் சில விநாடிகள் தயங்கிவிட்டு மெல்லிய குரலில் சொன்னார். '"சார்... கன்யாலாலைச் சுட்டுக் கொலை பண்ணினது ஒரு பெண். அந்தக் காட்சியை மொட்டை மாடி ரூமிலிருந்து எம் பொண்ணு பார்த்திருக்கா. பயந்து போய் பிரமை பிடிச்ச மாதிரி உட்கார்ந்துட்டா. போலீஸ்ல்லாம் வந்ததும் நெர்வஸ் ஆயிட்டா. அதனாலதான் அவளைக் கீழே வராதேன்னு மேலே இருக்கிற மொட்டை மாடி ரூமிலேயே இருக்க வெச்சுட்டோம்.”

“உங்க பொண்ணு பேர் என்ன?”

“சைதன்யா...”

“காலேஜுக்குப் போகுதா?”

“கம்ப்யூட்டர் சயின்ஸ். செகண்ட் இயர்.”

“கூப்பிடுங்க பொண்ணை...”

ராமாமிர்தத்தின் மனைவி மேலே போய் பெண்ணைக் கூட்டி வந்தாள். சைதன்யா அழகாக இருந்தாள். பெரிய கண்களில் இப்போது குஜராத் கலவரம். வியர்த்த முகத்தைத் தோளில் போட்டிருந்த துப்பட்டாவால் ஒற்றிக் கொண்டாள்.

சத்யாநாராயணன் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான். “சைதன்யா... வாம்மா இப்படி...”

மிரண்ட விழிகளோடு வந்தாள்.

“கன்யாலாலைச் சுட்டுக் கொன்ன அந்தப் பொண்ணைப் பாத்தியா..?”

“ஆ. ஆமா...”

“சம்பவம் எப்படி நடந்ததுன்னு சொல்ல முடியுமா?”

சைதன்யா புதிதாய் வியர்த்த நெற்றியைத் துப்பட்டாவால் ஒற்றிக் கொண்டு தொடர்ந்தாள். “சார்... மொட்டைமாடி ரூம்ல உட்கார்ந்து நான் படிச்சுட்டிருந்தேன். காத்து பலமா அடிச்சதால ஜன்னலைச் சாத்த வந்தேன். அப்ப வென்டிலேட்டர் வழியா கன்யாலால் பங்களாவின் ஹால் தெரிஞ்சுது. கன்யாலால் யாருக்கோ பயந்த மாதிரி ஓடிக்கிட்டிருந்தார். பின்னாடியே ஒரு பெண் கையில் துப்பாக்கியோடு துரத்தினாள். நான் பயந்துபோய் ஜன்னலை மூடிட்டேன். கீழே வந்து அப்பா, அம்மா கிட்டே விஷயத்தைச் சொன்னேன். அவங்க என்னைக் கீழேயே வரவேண்டாம். மேலேயே இருன்னு சொல்லிட்டாங்க. எல்லாத்துக்கும் காரணம் பயம்தான் சார்...”

“அந்தப் பொண்ணை நீ நல்லா பார்த்தியா?”

“பார்த்தேன் சார். வயசு இருபத்தஞ்சுக்குள்ளே இருக்கலாம். ஒரு சாதாரணச் சேலை கட்டி ஒரு குடும்பப் பொண்ணு மாதிரி இருந்தா.”

“என்ன கலர் ஸப்ரி..?”

"'பிங்க்...”

சத்யநாரயணன் கதிரேஷை ஏறிட்டான். “சந்தேகமே வேண்டாம்... காயத்ரிதான்.”

சைதன்யாவிடம் அடுத்த கேள்விக்காகத் திரும்பிய விநாடி - கதிரேஷின் செல்போன் முணுமுணுத்தது. ஓரமாய் நகர்ந்து போய் செல்போனைக் காதுக்கு ஒட்ட வைத்தான். “எஸ்...”

“சார்... நான் க்ரைம் ப்ராஞ்ச் சீனிவாஸ்...”

“சொல்லுங்க சீனிவாஸ்.”

“கோகுலம் காலனியில் இருக்கிற காயத்ரியின் வீட்டை ரகசியமா வாட்ச் பண்ணும்படி எனக்கு இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்திருந்தீங்க...”

“எஸ்... சொல்லுங்க!”

“இப்ப அந்தக் காலனியிலிருந்துதான் பேசிட்டிருக்கேன். காயத்ரி ஒரு ரெண்டு நிமிஷத்துக்கு முன்னாடிதான் வீட்டுக்கு வந்தா... யாரோ பைக்ல கொண்டு வந்து ட்ராப் பண்ணிட்டுப் போனாங்க...”

“பைக் நம்பரை நோட் பண்ணீங்களா..?”

“பண்ணிட்டேன் சார்.”

“இப்போ காயத்ரி எங்கே?”

“வீட்டுக்குள்ளே...”

“இப்ப வந்துடறோம்.”




*தொடர்கதை - 11*

செல்ஃபோனின் மறுமுனையில் க்ரைம் பிராஞ்ச் சீனிவாஸ் சற்றே பதற்றம் காட்டினார். “சார்... நீங்க லேட் பண்ணாமே வந்தா பரவாயில்லை... காயத்ரி மறுபடியும் வீட்டை விட்டு வெளியே போயிடுவாளோன்னு கொஞ்சம் உதறலாயிருக்கு... நான் வேணும்னா வீட்டுக்குள்ளே போய் மடக்கி வைக்கட்டுமா?”

“வேண்டாம்” என்ற கதிரேஷ் பேச்சைத் தொடர்ந்தான்.

“சீனிவாஸ்... காயத்ரியைத் திடீர்னு போய்த்தான் மடக்கணும்... அதிலும் சத்யநாராயணன் கூட இருக்கும்போது மடக்கினால்தான் எந்த ஒரு பொய்யையும் சொல்லித் தப்ப முடியாது.”

“சார்... நீங்க இங்கே வர்றதுக்கு முன்னே அந்த காயத்ரி வீட்டை விட்டு வெளியே போக முயற்சி பண்ணினால்..?”

“அப்படி அவ முயற்சி பண்ணினால் மடக்கி வீட்டுக்குள்ளேயே இருக்கும்படியா பண்ணிடுங்க... எந்தக் காரணத்தை முன்னிட்டும் அவளை வெளியே போக அலவ் பண்ணாதீங்க...”

“எஸ் சார்...”

“காயத்ரி ஒரு இளைஞனோடு பைக்கில் வந்து இறங்கினாள்னு சொன்னீங்க... அந்த இளைஞன் எப்படி இருந்தான்னு நோட் பண்ணிட்டீங்களா?”

“பண்ணிட்டேன் சார்... வயது முப்பதுக்குள். நல்ல உயரம்... தாடையில் பிரெஞ்ச் தாடி...”

“அவன் வீட்டுக்குள்ளே போனானா..?”

“இல்லை... காயத்ரியை வாசலிலேலே விட்டுட்டு உடனே போய்ட்டான்.”

“பைக் நெம்பரை..?”

“நோட் பண்ணிட்டேன். பாண்டிச்சேரி ரெஜிஸ்ட்ரேஷன். டபுள் சேவன் டபுள் நைன்.”

“அது போதும்... நானும் சத்யநாராயணனும் இப்ப வந்துடறோம்.”

கதிரேஷ் செல்ஃபோனை அணைத்துக் கொண்டே “சத்தி...” என்றான்.

“என்ன..?”

“கிளி கூண்டுக்குத் திரும்பியிருக்கு. மறுபடியும் அது பறந்து போறதுக்குள்ளே நாம ஸ்பாட்ல இருக்கணும்.”

இன்ஸ்பெக்டர் ஸ்டீபனிடம் சொல்லிக் கொண்டு கிளம்பினார்கள். கதிரேஷ் பைக்கைக் கையாண்டு கொண்டே பின்னால் உட்கார்ந்திருந்த சத்யநாராயணனிடம் கேட்டான்.

“சத்தி... காயத்ரியை எப்படி டீல் பண்ணப் போறே... புண்ணியகோடியையும் கன்யாலாலையும் கொலை பண்ணினது நீதானேன்னு எடுத்த எடுப்பிலேயே கேட்க முடியாது. பேச்சை எப்படி ஆரம்பிக்கலாம்னு மனசுக்குள்ளே எதாவது "ஒர்க்அவுட்' பண்ணி வெச்சிருக்கியா..?”

“ஆமா...”

“சொல்லு... எப்படி?”

“காயத்ரியை இப்போதைக்குப் பாத்துப் பேசறது நான் மட்டுமே... நீயும் க்ரைம் பிராஞ்ச் சீனிவாஸனும் காலனிக்குள்ளே கண் மறைவா இருங்க... நான் காயத்ரி கிட்டே பேசிட்டு வெளியே வந்து கை ஜாடை காட்டினதும் நீங்க ரெண்டு பேரும் வீட்டுக்கு வாங்க.”

“காயத்ரி தான் பண்ணின கொலைகளை ஒத்துக்குவான்னு நினைக்கிறியா..?”

“அவ கிட்டயிருந்து எப்படி உண்மையை வரவழைக்கிறதுன்னு எனக்குத் தெரியும். புண்ணியகோடியைக் காயத்ரி கொலை பண்ணும்போது அந்தக் கொலையை நேர்ல பார்த்ததுக்கான "ஐ விட்னஸ்' யாரும் கிடையாது. ஆனா கன்யாலாலைக் காயத்ரி கொலை பண்ணும்போது அந்தக் கொலையை நேர்ல பார்த்ததுக்கான "ஐ விட்னஸ்' க சைதன்யா இருக்கா. இந்த அஸ்திரம் நம்ம கிட்ட இருக்கும்போது காயத்ரி தப்பிக்க முடியாது...”

“சத்தி... ஒரு விஷயத்தை நீ யோசிச்சுப் பார்த்தியா..?”

“என்ன?”

“பைக்ல போன காயத்ரியையும் அந்த இளைஞனையும் நாம சின்ன ரெட்டி சந்து வரைக்கும் ஃபாலோ பண்ணிட்டுப் போனோம் இல்லையா..?”

“ஆமா..!”

“அப்படி நாம ஃபாலோ பண்ணிட்டுப் போனதைக் காயத்ரியும் இளைஞனும் நோட் பண்ணலைன்னு நினைக்கிறேன். நோட் பண்ணியிருந்தால் காயத்ரி தைரியமா வீட்டுக்குத் திரும்பியிருக்க மாட்டா.”

“கதிரேஷ்... காயத்ரி தன் கையில் ஏதோ ஒரு மாஸ்டர் பிளானை வெச்சுக்கிட்டு அதன்படி செயல்பட்டுக்கிட்டிருக்கா. அவள் மட்டும் ஃப்ளோவா இயங்கலை.

அந்த பைக் இளைஞன் அவளுக்குப் பார்ட்னராக இருக்கலாம். காயத்ரியை இப்ப மீட் பண்ணி அதிரடியா நான் ஆரம்பிக்கப் போகிற விசாரணையில் அவ எல்லா உண்மைகளையும் சொல்லி ஸ்டேட்மெண்ட் கொடுக்கப் போறா... இந்த ரெண்டு கொலைகளையும் பண்ணினதுக்கு ஒரு ப்ளாஷ்பேக்கையும் சொல்லப் போறா..."

"காயத்ரி தான் பண்ணின கொலைக் குற்றங்களை ஒத்துக்குவான்னு எனக்குத் தோணலை..."

"ஒத்துக்கலைன்னா காரணங்களைக் காட்டி, தடயங்களைக் காட்டி காயத்ரியைக் கார்னர் பண்ணிட வேண்டியதுதான்."

பைக் கோகுலம் காலனிக்குள் நுழைந்தது. லேசாய் இருட்டுப் பரவிக் கொண்டிருந்த - மாலை நேர கோகுலம் காலனி நிசப்தமாய் இருந்தது.

பைக் வாட்டர் டேங்குக்குப் பின்பக்கமாய்ப் போய் சட்டென்று ஊமையாயிற்று. மறைந்திருந்த சீனிவாஸ் வெளிப்பட்டார்.

கதிரேஷ் கேட்டான். "காயத்ரி வீட்டை விட்டு வெளியே போகலையே..?"

"இல்ல சார்."

"ஆர் யு ஷ்யூர்..?"

"ஷ்யூர் சார்... நடந்த அரை மணி நேரமா வீட்டு மேல வச்ச கண்ணை எடுக்கலை. காயத்ரியும் வீட்டுக்குள்ளே இருக்கிற இன்னொரு பொண்ணும் வெளியே வரவேயில்லை. சாத்தின கதவு சாத்தின மாதிரியே இருக்கு..."

"வீட்டுக்குப் பின்பக்க வழி ஏதாவது இருந்துடப் போவுது..."

“அதையும் பாத்துட்டேன் சார்... பின்பக்கம் சாக்கடை ஒண்ணு ஓடுது... வழி எதுவும் கிடையாது. வீட்டை விட்டு வெளியே வரணும்னா முன் பக்கமாத்தான் வந்தாகணும்...”

“சரி. சத்தி... நீ கிளம்பு... காயத்ரியைப் போய்ப் பாத்துப் பேசிட்டு எங்களுக்குச் சைகை கொடு... வர்றோம்...”

சத்யநாராயணன் வீட்டை நோக்கி நடந்தான். இதயத்தின் துடிப்பு இப்போது உச்சத்துக்குப் போயிருந்தது.

"காயத்ரியிடம் எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது..? ஒரு வேளை காயத்ரி இந்தக் கொலைகளுக்குக் காரண கர்த்தாவாக இல்லாமல்கூட இருக்கலாம்..! காயத்ரியை சைதன்யா பார்த்திருக்கிறாளே... அவள் சொன்ன அடையாளங்கள் காயத்ரிக்கு அப்படியே ஒத்துப் போகிறதே..!

' சே... காயத்ரியை இன்றைக்குக் காலையில் நான் ஏன் பார்த்தேன்..? பார்க்காமல் போயிருந்தால் இப்படியொரு அவஸ்தைக்குள் சிக்கியிருக்க மாட்டேன். காயத்ரியை ஒரு கொலைகாரியாய்ப் பிடித்துக் கொடுக்கவா இத்தனை வருஷம் கழித்துப் பார்த்தேன்?'

வலிக்கிற மனசோடு காயத்ரியின் வீட்டுப் படி ஏறினான் சத்யநாரயணன்.

கதவு சாத்தியிருந்தது. மெல்லத் தட்டினான்.

“டொக்... டொக்...”

பத்து விநாடிகளுக்கப் பிறகு பக்கவாட்டில் இருந்த ஒரு சிறிய ஜன்னல் சதுரமாய்த் திறந்தது. துர்க்காவின் முகம் ஃபிரேம் போட்ட மாதிரி பளிச்சென்று தெரிந்தது. மலர்ந்தது.

"ஓ.. நீங்களா சார்... வாங்க சார்... காயத்ரி அரை மணி நேரத்துக்கு முந்திதான் வந்தா..!" சொல்லிக் கொண்டே வேக வேகமாய் வந்து தாழ்ப்பாளை விலக்கிக் கதவைத் திறந்துவிட்டாள்.

சத்யநாராயணன் உள்ளே நுழைந்தான். துர்க்கா படபடவென்று தொடர்ந்து பேசினாள்.

"இன்னிக்கு காயத்ரிக்கு ஊதுவத்தி வியாபாரம் ரொம்ப டல்லு சார். தூரமா நாலைஞ்சு ஏரியாவுக்குப் போயிட்டாளாம்..."

"அப்படியா..?"

"உட்காருங்க சார்... அவ குளிச்சுட்டிருக்கா. இப்ப வந்துடுவா."

சத்யநாராயணன் உட்கார்ந்தான்.

"நான் வந்துட்டுப் போனதைப் பத்தி சொன்னீங்களா துர்க்கா?"

"சொல்லாமே இருப்பேனா... நீங்க அவளுக்காக வேலை பார்த்து வெச்சிருக்கிற விஷயத்தைச் சொன்னேன். ரொம்பவும் சந்தோஷப்பட்டா..."

"துர்க்கா... ஒரு விஷயம் உங்ககிட்டே கேட்கலாமா?"

"என்ன... கேளுங்க."

"காயத்ரி பைக்லதானே வந்தாங்க..?"

"ஆமா..."

"அது யாரோட பைக்..?"




“மோகன்குமாரோட பைக்... இந்த கோகுலம் காலனியில் பக்கத்துத் தெருவில் இருக்கார். காயத்ரி பஸ்ஸுக்காக மிண்ட் கிட்டே இருக்கிற பஸ் ஸ்டாப்ல வெயிட் பண்ணிக்கிட்டு இருந்தாளாம். மோகன்குமார் அந்த வழியா பைக்ல வந்தவர் காயத்ரியைப் பார்த்துட்டு லிப்ட் கொடுத்திருக்கார். ஆமா... அவங்க ரெண்டு பேரையும் நீங்க எந்த இடத்துல பார்த்தீங்க..?”

துர்க்கா கேட்டுக் கொண்டிருக்கும்போதே உள்ளே ஒரு அறைக்கதவு திறக்கப்படும் சத்தமும் அதைத் தொடர்ந்து, “அது யார் துர்க்கா?” என்கிற பெண் குரலும் கேட்டது துர்க்கா உள்ளே எட்டிப் பார்த்துக் குரல் கொடுத்தாள்.

“வா காயத்ரி... மிஸ்டர் சத்யநாராயணன் வந்திருக்கார்...”

நடைச் சத்தம் கேட்டது. சத்யநாராயணன் அறைக் கதவையே பார்த்துக் கொண்டிருக்க... குளித்த ஈரத்தலைக்கு டவலைச் சுற்றியபடியே அந்த இளம் பெண் வெளிப்பட்டாள்.

முற்றிலும் புதிய முகம்.

சத்யநாராயணன் அதிர்ந்து போய்த் தன்னிச்சையாய் நாற்காலியை விட்டு எழுந்தான். துர்க்காவைக் குழப்பமாய்ப் பார்த்தான்.

“நான் காயத்ரியைப் பார்க்க வந்தேன்...”

“இவதான் காயத்ரி...”

“ஊதுவத்தி விக்கிற காயத்ரி..?”

“நான்தான்...” என்றாள் காயத்ரி.

சத்யநாராயணனுக்கு முன்பாய் வந்து நின்றாள். அவள் உடம்புக்கு உபயோத்த சோப்பு வாசனை சத்யநாரயணன் முகத்தில் மோதியது. குரல் திணறியது.

“நீ... நீ... நீங்கதான் காயத்ரியா..?”

“ஆமா... இதுல உங்களுக்கு என்ன குழப்பம்?”

“ஒ.. ஒ.. ஒண்ணுமில்லை... நான் வ... வர்றேன்..!”

சத்யநாராயணன் சொல்லிக் கொண்டே வேகமாய் நகர முயல... அந்த காயத்ரி அதட்டலாய்க் கூப்பிட்டாள்.

“ஹலோ மிஸ்டர்... ஒரு நிமிஷம் நிக்கறீங்களா..?”

சத்யநாராயணன் நின்றான்.

“என்ன... ரெண்டு பொண்ணுங்க தனியா இருக்காங்க... ஜாலியா கொஞ்ச நேரம் பேசிட்டு ஜொள்ளு விட்டுட்டுப் போலாம்னு வந்தீங்களா..? எனக்கு நீங்க வேலை பாத்து வெச்சிருக்கீங்களாமே..? துர்க்கா சொன்னதுமே நான் உஷாராயிட்டேன். பாக்கிறதுக்கு டீஸண்டா இருக்கீங்க... எதுக்காக இந்தப் பொய்யும் புரட்டும்? நான் நாலு தெரு சுத்தி ஊதுவத்தி விக்கிற பெண்தான். மானத்தை விக்கிற பொண்ணு கிடையாது...”

அந்த காயத்ரி உஷ்ணமான வார்த்தைகளை உபயோகித்துப் பட்டாசுச் சரமாய் வெடித்துக் கொண்டிருக்க... காலையில் பார்த்த காயத்ரி எழுபது எம்.எம். அளவில் வியாபித்துக் கெக்கெலித்துச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

*தொடர்கதை - 12*

சத்தியநாராயணன் திகைத்துத் திணறிக் கொண்டிருக்க, காயத்ரி கோப உஷ்ணம் தணியாமல் பொரிந்தாள். “நான் வீதி வீதியாப் போய் ஒவ்வொரு வீட்டுப்படியா ஏறி ஊதுவத்தி விக்கிறவதான். ஆனா மானத்தை விக்கிறவ கிடையாது.”

“ஸ்ரி...”

“என்ன ஸப்ரி... உரசிப் பாத்துட்டு இவ நெருப்புன்னு தெரிஞ்சதுமே ஸப்ரி கேட்டுட்டு நழுவிடலாம்னு பார்த்தியா? நான் இந்த விஷயத்தைப் போலீசுக்குக் கொண்டுபோய்....” ஆவேசமாகப் பேச முயன்ற காயத்ரியைச் சட்டென்று கையை உயர்த்தி அமர்த்தினான்.

“இதோ பாருங்க காயத்ரி... உண்மை நிலை தெரியாம நீங்க பாட்டுக்குத் தாறுமாறா பேசிட்டுப் போறது கொஞ்சம் கூட நல்லாயில்லை. நீங்க போலீசுக்குப் போகப் பிரியப்பட்டா போலீஸ் இதே நிமிஷம் கூப்பிடவும் நான் தயார்.” சொன்ன சத்தியநாராயணன் வீட்டுக்கு வெளியே வந்து எட்டிப் பார்த்து வாட்டர் டேங்குக்குப் பின்புறம் மறைவாய் நின்றிருந்த கதிரேஷுக்கும் சீனிவாஸனுக்கும் சைகை காட்டி வரும்படிச் சொன்னான். அவர்கள் வாட்டர் டேங்க் மறைவிலிருந்து வேகமாய் வெளிப்பட்டு வேகவேகமாய் வந்தார்கள். காயத்ரி இப்போது திகைத்தாள்.

சத்தியநாராயணனைக் குழப்பமாய்ப் பார்க்க அவன் புன்னகையோடு சொன்னான். “இனிமேல் நீங்க 'ஸ்ரி' சொல்ல வேண்டியிருக்கும்.”

கதிரேஷும் சீனிவாஸனும் வீட்டுப் படியேறி உள்ளே வந்தார்கள். கதிரேஷ் கேட்டான். “என்ன சத்தி... பார்ட்டி குற்றத்தை ஒத்துக்காமத் தகராறு பண்ணுதா?”

"கதிரேஷ்... நான் காலையில் பார்த்த காயத்ரி இவங்க கிடையாது. அந்த காயத்ரி வேற... இந்தக் காயத்ரி வேற..."

"நீ என்ன சொல்றே சத்தி..?"

"கதிரேஷ்... பள்ளி நாட்களில் என்னோடு படிச்ச காயத்ரி இவங்க கிடையாது. அவ இந்தக் காயத்ரியோட வீட்டு அட்ரஸ்க் கொடுத்து என்னை ஏமாத்தியிருக்கா..."

"அப்படின்னா அந்தக் காயத்ரி யார்னு இவங்களுக்குத் தெரிஞ்சிருக்கணுமே..."

"அதைப் பத்தி விசாரிக்கிறதுக்குள்ளே இவங்களுக்குக் கோபம் வந்துடுச்சு... நான் ஏதோ தப்பான எண்ணத்தோட வந்துட்டதா நினைச்சுக்கிட்டு இங்கே ஒரே ரகளை..." கதிரேஷ் காயத்ரியிடம் திரும்பினான்.

"உங்களுக்குக் காயத்ரிங்கிற பேர்ல எந்தப் பொண்ணையாவது தெரியுமா?"

காயத்ரி திகைப்பு மாறாமல் கேட்டாள். "எதுக்காக இதையெல்லாம் கேக்கறீங்க..?'

"சத்தி... நீ இன்னும் விஷயத்தைச் சொல்லலியா?"

"எங்கே சொல்லவிட்டாங்க... என்னைத் திட்டித் தீர்க்கவே அவங்களுக்கு நேரம் போதலை... நீயே சொல்லிடு." கதிரேஷ் காயத்ரியிடம் திரும்பினான். மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தான்.

"மிஸ் காயத்ரி..! உங்க பேரையும் உங்க வீட்டு அட்ரஸ்யும் எல்லாத்துக்கும் மேலா நீங்க பண்ற ஊதுவத்தித் தொழிலையும் உபயோகப்படுத்தி ஒரு பெண் இன்னிக்கு சிட்டியில் ரெண்டு கொலைகளைப் பண்ணியிருக்கா... கொலை

செய்யப்பட்டவர்களில் ஒருத்தரோட பேர் புண்ணியகோடி. இன்னொருவரோட பேர் கன்யாலால்..."

காயத்ரியின் முகம் அப்போது வெளிறிப் போயிருந்தது. "என்னோட பேரை உபயோகப்படுத்தி ரெண்டு கொலைகளா?"

"எஸ்..." சத்தியநாராயணன் குறுக்கிட்டான். "அந்தக் காயத்ரி என்னோட ஸ்கூல்மேட்... பல வருஷங்களுக்குப் பிறகு ஏதேச்சையா அவளை மயிலாப்பூர் தெப்பக் குளத்துக்குப் பக்கத்துல பார்த்தேன். ரெண்டு கையிலேயும் ஊதுவத்திப் பாக்கெட் பைகள். எனக்குப் பாக்கவே ரொம்ப கஷ்டமாயிடுச்சு. ஸ்கூல்டேஸ்ல நல்லா படிக்கிற பொண்ணு. அவளுக்கு இப்படியொரு கஷ்டமான தொழிலான்னு பரிதாபப்பட்டேன். வேற வேலை பார்த்துத் தர்றதாச் சொல்லி அட்ரஸ் கேட்டேன். அவ கொடுத்த அட்ரஸ் உங்க வீட்டு அட்ரஸ்."

"நீங்க சொல்றதைப் பார்த்தா அவளுக்கு என்னைத் தெரிஞ்சிருக்கு..."

"கண்டிப்பா."

"அவ பேர் உண்மையிலேயே காயத்ரிதானா?"

"காயத்ரிதான்... அதுல சந்தேகமே கிடையாது."

"அவ போட்டோ ஏதாவது இருக்கா..?"

"இல்லை."

"அடையாளம் சொல்லுங்க..."

சத்தியநாராயணன் காலையில் பார்த்த காயத்ரியின் அடையாளங்களைச் சொல்ல, இந்தக் காயத்ரி நெற்றியைக் கீறிக் கண்களை மூடி யோசித்து பல விநாடிகளுக்குப்




பின் கண்களைத் திறந்தாள். “நீங்க சொன்ன அடையாளத்துல எந்தப் பொண்ணும் என்னோட நினைப்புக்கு வரலை...”

“கொஞ்சம் நிதானமா யோசனை பண்ணிப் பாருங்க. உங்களை அவளுக்குக் கிரிஸ்டல் கிளயராத் தெரிஞ்சிருக்கு. நீங்க பண்ற ஊதுவத்தித் தொழிலைத்தான் அவளும் பண்ணிட்டிருக்கா...” காயத்ரி மறுபடியும் யோசிக்க ஆரம்பித்த விநாடி வாசலில் ரத்தப் பொட்டு வைத்த மாதிரி ஒரு மாருதி வேன் கெட்டியான சிவப்பு நிறத்தில் வந்து நின்றது. கதிரேஷும் சத்தியநாராயணனும் எட்டிப் பார்த்தார்கள்.

வேனிலிருந்து "இமயம்' பத்திரிகையின் ஆசிரியை ஜெயலட்சுமி இறங்கி வந்து கொண்டிருந்தாள். முகத்தில் கோபம் கொப்பளித்துக் கண்களில் தெரிந்தது. சத்தியநாராயணனையும் கதிரேஷையும் முறைப்பாய்ப் பார்த்துக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தாள்.

“என்ன! காயத்ரி வீட்டுக்கு நேரடியாகவே வந்து டார்ச்சர் கொடுக்க ஆரம்பிச்சுட்டீங்களா?”

“நோ மேடம்... இது நீங்க நினைக்கிற மாதிரி டார்ச்சர் கிடையாது. ஒரு என்கொயரிதான். இன்னும் சொல்லப் போனா நாங்க தேடிட்டு வந்த காயத்ரியே இவங்க கிடையாது. இந்தக் காயத்ரியோட பேரையும் அட்ரஸ்ஸையும் உபயோகப்படுத்தி இன்னொரு காயத்ரி ரெண்டு கொலைகளைப் பண்ணிட்டுத் தலைமறைவாயிட்டா. அந்தக் காயத்ரி கைக்குக் கிடைக்கணும்னா இந்தக் காயத்ரி எங்களுக்கு முழு ஒத்துழைப்புத் தரணும்.”

ஜெயலட்சுமி காயத்ரியை ஏறிட்டாள். “காயத்ரி... கடந்த சில மாதங்கள்ல எந்தப் பெண்ணுக்காவது உன்னோட வீட்டு அட்ரஸ்ஸைக் கொடுத்தியா?”

“இல்லையே..!”

"உன்னோட கஸ்டமர்ஸ்ல யார்க்காவது காயத்ரின்னு பேர் இருக்கா..?"

காயத்ரி யோசித்தாள். "எனக்குத் தெரிஞ்சு அப்படி யாரும் இல்லையே..!"

கதிரேஷ் இடைமறித்தான். "அவசரப்படாமே நிதானமா யோசனை பண்ணுங்க... வேணும்னா ரெண்டு நாள் டயம் எடுத்துக்குங்க."

"நீங்க சொல்றது சரி சார்... எனக்கு யோசனை பண்ண நிறைய அவகாசம் வேணும்..."

"டேக் யுவர் ஓன் டயம்... அந்தக் காயத்ரியைப் பற்றி உங்களுக்கு ஏதாவது ஞாபகம் வந்து தகவல் கொடுக்க விரும்பினா என்னோட செல் நம்பருக்குக் காண்டாக்ட் பண்ணுங்க..." கதிரேஷ் தன் செல் நம்பரை ஒரு துண்டுத்தாளில் குறித்துக் கொடுத்துவிட்டு சத்தியநாராயணன், சீனிவாஸுடு வீட்டினின்றும் வெளிப்பட்டான்.

அவர்கள் கிளம்பிப் போனதும் ஜெயலட்சுமி ஒரு பெருமூச்சை வெளிப்படுத்தியபடி காயத்ரியிடம் திரும்பினாள். "இனி இந்தப் போலீஸ்காரங்க அடிக்கடி வீட்டுக்கு வந்து என்கொயரிங்கிற பேர்ல உயிரை எடுத்துருவாங்க."
"உண்மையிலேயே இது ஒரு விவகாரமான மேட்டர்தான். இந்தப் பரந்த மெட்ராஸ்ல அந்தக் காயத்ரி எந்தப் புள்ளியில் இருக்கிறாளோ... போலீஸ் அவளை எப்படி நெருங்குவாங்கன்னு தெரியலை. என்னோட பேரையும் அட்ரஸ்ஸயும் உபயோகப் படுத்தியிருக்கானா நிச்சயமா அவ எனக்குத் தெரிஞ்சவளாகத்தான் இருக்கணும்..."

ஜெயலட்சுமி காயத்ரியின் தோளைத் தொட்டாள்.

"இன்னிக்கு உனக்கு ஒரு நல்ல சேதியைச் சொல்றதுக்காக வீட்டுக்கு வந்தேன். வீட்டுக்குள்ளே போலீசைப் பார்த்ததும் அந்த சந்தோஷம் காணாமே போயிடுச்சு..."

காயத்ரியின் முகத்தில் மலர்ச்சி ஒட்டிக் கொண்டது. "எனக்கு நல்ல செய்தி சொல்ல வந்தீங்களா?"

"எஸ்..."

"என்ன..?"

"இனி நீ இந்த ஊதுவத்திப் பாக்கெட்டுகளைத் தூக்கிக்கிட்டு வீதிவீதியா அலைய வேண்டாம். மும்பையில் இருக்கிற ஒரு ரெப்யூடட் காஸ்ட்யூம்ஸ் கம்பெனியில் உனக்கு வேலை. இப்போதைக்கு மாசச் சம்பளம் பதினாலாயிரம் ரூபாய். அடுத்த வாரம் இன்டர்வியூ கார்டு வரும். அது வெறும் கண்துடைப்பு இன்டர்வியூதான். நீ வேலையில் ஜாய்ன் பண்ணிக்கலாம்..."

"நிஜமாவா..?"

"கம்பெனியோட பேரைக் கேட்டா உனக்கு மூச்சுத் திணறலே வந்துடும். ஜெம் காஸ்ட்யூம்ஸ்..."

"ரி... ய.. லி..?"

"உலகத்தில் இருக்கிற 500 பெரிய பணக்காரங்களில் ஏழு பேர் இந்தியர்கள். அந்த ஏழு பேரில் ஒருவர்தான் இந்த ஜெம் காஸ்ட்யூம்ஸ் கம்பெனியின் சேர்மன் முகர்ஜி. இந்த முகர்ஜிக்குப் பி.ஏவாக இருப்பவர் ஒரு தமிழர். பேரு சுப்பிரமணியன். அவர் மூலமாத்தான் உனக்கு வேலை ஏற்பாடு பண்ணியிருக்கேன்..."

"இந்தச் சந்தோஷத்தை முழுமையா அனுபவிக்க முடியலையே. அந்தக் காயத்ரி விவகாரம் தொண்டைக்குள் மாட்டின முள் மாதிரி நிரடிக்கிட்டு இருக்கு..."

“அதைப் பத்தியெல்லாம் கவலைப்பட்டுக்கிட்டு இருக்காதே... உனக்கு உன்னோட வாழ்க்கை முக்கியம். யாரோ ஒரு பொண்ணு உன்னோட பேரைப் பயன்படுத்தியிருக்கா... அவ்வளவுதான். அவ பண்ணின கொலைகளுக்கும் உனக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. தைரியமா இரு... போலீஸ் விசாரணை என்கிற பேரில் உனக்கு ஏதாவது தொல்லை குடுத்தா எனக்கு ஒரு ஃபோன் பண்ணு.”

காயத்ரி கண்களில் நிறைந்துவிட்ட நீரோடு தலையாட்டினாள். “எனக்கு கூடப் பொறந்த ஒரு சகோதரி இருந்தால்கூட இந்த அளவுக்கு உதவி பண்ணியிருக்கமாட்டாங்க...”

ஜெயலட்சுமி காயத்ரியின் தோளில் கையை வைத்தாள். “இதோ பார்... ஒரு பெண் சந்தோஷப்பட்டாக்கூட அவ கண்ணிலிருந்து தண்ணி வரக்கூடாதுன்னு நினைக்கிறவ நான்.”

காயத்ரி கண்ணீரைத் துடைத்துக் கொண்டு புன்னகைத்தாள். ஜெயலட்சுமி புறப்பட்டாள். “நான் கிளம்பட்டுமா?”

“காப்பி..?”

“நாளைக்கு ஸ்வீட் பக்கெட்டோட என்னோட ஆபீசுக்கு வா... ரெண்டு பேரும் சாப்பிடலாம்.” ஜெயலட்சுமி மாருதி வேனுக்கு வந்து டிரைவிங் சீட்டை ஆக்கிரமித்தாள்.

காயத்ரிக்குக் கையசைத்துவிட்டு வேனை நகர்த்தினாள். காலனியை விட்டு வெளியே வந்து ரோட்டில் வேகம் பிடித்தாள். நகரச் சந்தடிகளில் இருபது நிமிஷம் தத்தளித்த கார் நகர எல்லையைத் தாண்டி நிசப்தமான பகுதியில் விரைந்து கொண்டிருந்தபோது பின்னால் கழுத்தில் எதுவோ குறுகுறுத்தது. ஜெயலட்சுமி திடுக்கிட்டுப் போய்த் திரும்பினாள். வேனின் பின்சீட்டுக்குக் கீழே

இருந்து அந்தப் பெண் எழுந்தாள். கையில் துப்பாக்கி. உதட்டில் ரெடிமேட் புன்னகையொன்றை ஒட்டவைத்துக் கொண்டு சொன்னாள். “நான் காயத்ரி..!”

*தொடர்கதை - 13*

மாருதி வேனின் ஸ்டியரிங்கைப் பிடித்திருந்த ஜெயலட்சுமியின் உடல் ஒரு நடுக்கத்துக்கு உட்பட்டது. முகம் ஒரு இன்ஸ்டண்ட் வியர்வைக்குள் குளியல் எடுத்துக் கொண்டிருக்க தொண்டைக் குழி, எச்சிலை அவஸ்தையாய் விழுங்கியது.

காயத்ரி தன் கையில் வைத்திருந்த பிஸ்டலை ஜெயலட்சுமியின் சதைப்பிடிப்பான பிடரியில் வைத்துக் தேய்த்தாள்.

"இதோ பார்.... ஜெயலட்சுமி..! நான் சொல்றபடி நீ கேட்டா உன்னோட உயிர் உனக்குச் சொந்தம். இல்லேன்னா எனக்குச் சொந்தம். என்ன சொல்றே..?"

"நீ என்ன சொன்னாலும் நான் கேக்கறேன்... என்னை ஒண்ணும் பண்ணிடாதே..."

"தப்பு பண்ணாதவங்களை இந்தப் பிஸ்டல் ஒண்ணும் பண்ணாது. நீ எதாவது தப்பு பண்ணியிருக்கியா?"

"இ.. இல்ல..."

"சரி... அதோ கொஞ்ச தூரத்தில ரோட்டோரமா ஒரு புளிய மரம் தெரியுதே... அதுக்குக் கீழே கொண்டு போய் வேனை நிறுத்திக்க..."

"எ.. எதுக்கு..?"

"எதிர்க்கேள்விக்கு அனுமதி கிடையாது. சொன்னதைச் செய். புளிய மரத்துக்குக் கீழே கொண்டு போய் வேனை நிறுத்து."

ஜெயலட்சுமி வேனின் வேகத்தைக் குறைத்து அந்தப் பெரிய புளிய மரத்துக்குக் கீழே கொண்டு போய் வேனை நிறுத்தினாள்.

ஹைவேஸ் ரோடு நிசப்தமாய்த் தெரிந்தது. ஏதோ ஒரு லாரி பார முனகலோடு தொலைவில் வரும் சத்தம் கேட்டது. அது கடந்து போகும் வரை மெற்னம் காத்த காயத்ரி ஜெயலட்சுமியைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

“எனக்குச் சில உண்மைகள் வேணும் ஜெயலட்சுமி... அதை நீ சொல்லிட்டியானா கிளம்பிப் போயிட்டே இருக்கலாம்.”

“என்ன உண்மைகள்..?”

“இதுவரைக்கும் நீ ஏன் கல்யாணம் பண்ணிக்கலை..?”

“அது... அது... வந்து...”

“சொல்லு...”

“பிடிக்கலை.”

“அதாவது கல்யாணம் பண்ணிக்கப் பிடிக்கலை..?”

“ஆமா...”

“சரி... இந்தப் போட்டோவில் இருக்கிற நபர் யார்ன்னு சொல்ல முடியுமா?”

காயத்ரி ஒரு போட்டோவை எடுத்து ஜெயலட்சுமியின் கையில் திணித்தாள். ஜெயலட்சுமி அதை வாங்கிப் பார்த்துவிட்டுத் "தெரியவில்லை' என்பது போல் தலையாட்டினாள்.

"என்ன தெரியலையா..?"

"தெரியலை..."

"இவர் பேரு விநோத்... அஞ்சு வருஷத்துக்கு முந்தி மும்பையில் சினிமாப்பட விநியோகஸ்தரா இருந்தார். அந்தத் தொழிலில் நஷ்டம் வரவே இப்போ தொழிலை மாத்திக்கிட்டார். போட்டோவைக் கொஞ்சம் நல்லாப் பாரு ஜெயலட்சுமி... யார்னு தெரியும்."

"எனக்குத் தெரியலை..."

"சரி... இந்தப் போட்டோவைப் பாரு..."

கையில் மறைவாய் வைத்திருந்த இன்னொரு போட்டோவை ஜெயலட்சுமியின் முகத்துக்கு நேராகப் பிடித்தாள்.

போட்டோவில் விநோத்தும் ஜெயலட்சுமியும் ஒரு புல்வெளியின் பின்னணியில் நெருக்கமாய் உட்கார்ந்து கொண்டு பாப்கார்ன் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். விநோத்தின் இடது கை ஜெயலட்சுமியின் இடுப்பை வளைத்துப் பிடித்திருந்தது.

காயத்ரி சிரித்தாள்.

"இந்தப் போட்டோவைப் பார்த்த பிறகாவது விநோத் யார்னு தெரிஞ்சிருக்குமே..."

ஜெயலட்சுமியின் முகத்தில் வியர்வையின் சதவீதம் அதிகமாயிற்று. காயத்ரி அந்தப் போட்டோவால் விசிறிக் கொண்டே சொன்னாள்.

"அந்த போட்டோ 5 வருஷத்துக்கு முன்னால் மும்பை கமலாதேவி பார்க்கில் எடுத்தது. அதாவது நீங்க ரெண்டுபேரும் கணவன் - மனைவியா

வாழ்ந்திட்டிருந்தபோது... இந்த அரிய போட்டோ என்னோட கைக்கு எப்படிக் கிடைச்சுதுன்னு நீ கேக்கலாம். பட் அந்த ப்ளாஷ் பேக்கையெல்லாம் சொல்லிட்டிருக்க இப்ப நேரம் இல்லை. விநோத் உன்னோட கணவர்னு இப்பவாவது ஒத்துக்கிறயா?"

"ம்..." ஜெயலட்சுமி தலைகுனிந்தாள்.

காயத்ரி தொடர்ந்தாள்.

"மும்பையில் திருமதி வாழ்க்கை. இங்கே செல்வி வாழ்க்கை. எதுக்காக இந்த இரட்டை வேஷம்..?"

"இது இரட்டை வேஷம் இல்லை. அவருக்கும் எனக்கும் இரண்டு வருஷத்துக்கு முன்னாடியே டைவோர்ஸ் ஆயிடுச்சு... அவரை என்னோட கணவர்னு சொல்லிக்க நான் விரும்பலை... அதுதான் தெரியாதுன்னு சொன்னேன்."

"டைவோர்ஸுக்கு என்ன காரணம்?"

"எல்லா விஷயத்திலேயும் நாங்க இரண்டு பேரும் எதிர்த் துருவங்களா இருந்தோம். சண்டை போடாத நாள் கிடையாது..."

"எப்ப டைவர்ஸ் கிடைச்சுது?"

"நாலு வருஷத்துக்கு முந்தி..."

"கடந்த ரெண்டு வருஷ காலமா நீயும் விநோத்தும் நெருக்கமா இருக்கீங்க போலிருக்கு... பிஸினஸ் விஷயமா விநோத் அடிக்கடி மும்பையிலிருந்து சென்னைக்கு வந்து உன்னைப் பார்த்துட்டுப் போறான் போலிருக்கு?"

"இ.. இ.. இல்லையே... உ... ன.. க்... கு இதைச் சொன்னது யாரு?"

“யாரும் சொல்லலை. நானே பார்த்தேன்.”

“பார்த்தியா... எங்கே?”

“உன்னோட இமயம் பத்திரிகை ஆபீஸில்...”

“நோ... பொய்யி...”

“பொய்யா... கடைசியா விநோத் மும்பையிலிருந்து சென்னைக்கு வந்து உன்னை எப்பப் பார்த்தான்னு சொல்லட்டுமா..? போன மாசம் பதினேழாம் தேதி சனிக்கிழமை ராத்திரி பதினோரு மணிக்குமேல் விநோத் உன்னோட பத்திரிகை ஆபீசுக்கு வந்தான். விடிகிற வரைக்கும் பத்திரிகை ஆபீஸில் இருந்தான். அஞ்சரை மணி பிளைட்ல புறப்பட்டுப் போய்ட்டான்... சரியா?”

ஜெயலட்சுமியின் முகம் இப்போது நிறமிழந்து வெளிறிப் போயிருந்தது. காயத்ரி தொடர்ந்தாள்.

“நீயும் உன் மாஜி புருஷனும் பண்ற பிஸினெஸ் போலீசுக்குப் பிடிக்காத பிஸினெஸ். "பெண்களின் உரிமைகளுக்காகப் போராடுகிற ஒரே பத்திரிகை இமயம்' - என்கிற விளம்பர வாசகங்களோடு அவதாரம் எடுத்திருக்கிற பத்திரிகை உண்மையிலேயே அப்படி இல்லை. இமயம் பத்திரிகையோட முக்கிய வேலையே எந்த ஆதரவும் இல்லாத அழகான ஏழைப் பெண்களைக் கண்டுபிடித்து அவங்களுக்கு நல்ல வேலை வாங்கித் தர்றதா ஆசை காட்டி மும்பைக்கு அனுப்பி வைக்க வேண்டியது உன்னோட வேலை. அந்தப் பெண்கள் மும்பைக்குப் போனதும் அவர்களை ரிசீவ் பண்ணி பாலியல் நரகத்துக்குக் கொண்டு போய்ப் பாழ் பண்ண வேண்டியது உன் மாஜி புருஷனோட வேலை...”

ஜெயலட்சுமி அதிர்ச்சியில் பொடிப்பொடியாய் உதிர்ந்து கொண்டிருக்க காயத்ரி தன் கையில் இருந்த துப்பாக்கியால் ஜெயலட்சுமியின் மோவாயை நிமிர்த்தினாள்.

“இமயம் பத்திரிகைக்கு வாசகிகளாய் இருக்கிற பெண்கள்ல அழகான பெண்கள் யார்னு கண்டுபிடிக்கிறதுக்காக ஒவ்வொரு மாசமும் நீ நடத்துற இமயம் வாசகப் பேரவையைப் பத்தியும் எனக்குத் தெரியும். அழகான பெண்கள் உன்னோட பார்வைக்குக் கிடைச்சுட்டா நீ அவங்களுக்கு அக்காவாயிடுவே. புத்திமதி சொல்ற மாதிரி அடிக்கடி லெட்டர்ஸ் எழுதுவே... கொஞ்ச காலத்துக்கு அந்தப் பாச நாடகம் நடக்கும். அப்புறம் மும்பையில் ஒரு நல்ல கம்பெனியில் வேலை கிடைச்சிருக்கிறதாகச் சொல்லி விநோத்கிட்டயிருந்து லெட்டர் வரும். லெட்டரை நம்பி அந்தப் பெண் மும்பைக்குப் போனா ரயில்வே ஸ்டேஷன்ல விநோத் ரிஸீவ் பண்ணி அவனோட இடத்துக்குக் கூட்டிக்கிட்டுப் போய்...”

காயத்ரியின் கையில் இருந்த துப்பாக்கி இப்போது ஜெயலட்சுமியின் நெற்றிப் பொட்டுக்கு உயர்ந்தது. கண்களைச் சுற்றி வட்டம் போட்டது. கன்னத்தில் மெதுவாய் இறங்கிக் கழுத்துக் குழியில் பதிந்தது.

ஜெயலட்சுமி ஈனஸ்வரத்தில் முனகினாள். “எ.. என்னை ஒண்ணும்... ப.. பண்ணிடாதே.”

“இந்நேரம் வரைக்கும் நான் சொன்னதெல்லாம் உண்மைதானே..?”

“உ... உண்மைதான்.” தொண்டைக்குள் குரல் தத்தளித்தது.

“ஒரு பொண்ணா இருந்துக்கிட்டு இப்படியெல்லாம் பண்ண உனக்கு உடம்பும் மனசும் கூசலையா?”

“என் புருஷனோட பேச்சைக் கேட்டுக்கிட்டு... ஷார்ட் கட்டில பணம் சம்பாதிக்க நினைச்சேன். தப்புத்தான்... நான் பண்ணினது தப்புத்தான்...”

“அந்தத் தப்புக்குத் தண்டனை வேணுமா, வேண்டாமா?”

“வே... வேணும்... ஆனா இந்த நிமிஷத்திலிருந்து நான் திருந்திட்டேன். இனிமே தப்பு பண்ணமாட்டேன்...”

“இனிமே தப்பு பண்ணமாட்டே சரி... பண்ணின தப்புக்கு என்ன சொல்றே..? இதுவரைக்கும் எத்தனைப் பெண்களை மும்பைக்கு அனுப்பி இருப்பே..?”

“ஏழெட்டுப் பேர் இருக்கும்...”

“அவங்க எல்லோரும் அநாதைகள்...”

“ஆமா...”

“பேர் விவரமெல்லாம் தெரியுமா?”

“தெரியும்...”

காயத்ரியின் கையில் இருந்த துப்பாக்கி ஜெயலட்சுமியின் கழுத்துக்குழியில் கடினமாய் இடறியது.

“இதோ பார் ஜெயலட்சுமி..! பெண்களுக்கு இழைக்கப்படுகிற அநியாயங்களுக்கும் அநீதிகளுக்கும் எதிரா இந்தத் துப்பாக்கியைத் தூக்கியிருக்கேன்... காலையிலிருந்து ரெண்டுபேரை வேட்டையாடிட்டு இப்போ மூணாவதா உனக்குப் பக்கத்துல உட்கார்ந்திருக்கேன். உன்னைக் கொல்ல எனக்கு இஷ்டம் இல்லை. அதே நேரத்துல உனக்குத் தண்டனையும் கிடைக்கணும்... ம்ஹும்.. போலீஸ்ல நீ சரணடையணும்... என்ன சொல்ற..?”

ஜெயலட்சுமி அவசரக் குரலில் சொன்னாள். “போலீஸ்ல சரணடைஞ்சுடறேன். என்னை ஒண்ணும் பண்ணிடாதே...”




"அதுதான் உத்தமம்... உனக்கு செல்போன் இருக்குதானே..?"

"ஆமா..."

"எடு."

ஜெயலட்சுமி தனது வேனிடி பேக்கைப் பிரித்து உள்ளே இருந்த செல்போனை எடுத்தாள். காயத்ரி கேட்டாள்.

"போலீஸ் கமிஷனரோட பர்சனல் போன் நம்பர் தெரியுமா?

"தெ... தெரியாது.."

"நான் சொல்றேன். போலீஸ் கமிஷர் லைன்ல வந்ததும் உன்னை நீ அறிமுகப்படுத்திக்கிட்டு, நீயும் உன்னோட மாஜி கணவனும் பண்ணின எல்லாக் குற்றங்களையும் வரிசைக்கிரமமா சொல்லி போலீஸ்ல சரணடைய விரும்பறதாச் சொல்லணும். ஆனா என்னைப் பத்தி எதுவும் சொல்லக் கூடாது. மனசாட்சி உறுத்தியதால போலீஸ்ல சரணடைய விரும்பறேன்னு சொல்லணும்..."

"சரி..."

"இப்ப சரின்னு சொல்லிட்டு போன்ல பேசும்போது ஏதாவது மாத்திச் சொன்னா... அதுக்கப்புறம் நான் பேசமாட்டேன். இந்தத் துப்பாக்கிதான் பேசும்."

"இல்ல... நீ சொல்லிக் கொடுத்த மாதிரியே நான் பேசிடறேன்."

"நெம்பர் சொல்றேன்... டயல் பண்ணு..." காயத்ரி நெம்பர் சொல்ல ஜெயலட்சுமி தன் செல்போனில் எண்ணைத் தட்டினாள். மறுமுனையில் ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டு கமிஷனர் ஜோதிலிங்கத்தின் குரல் கேட்டது.

“எஸ். ஜோதிலிங்கம் ஹியர்...”

“சார்... நான் ஜெயலட்சுமி. இமயம் பத்திரிகையின் ஆசிரியர்.”

“ஓ.. நீங்களா போன வாரம்கூட ஏதோ ஒரு ஃபங்ஷன்ல பார்த்தோம். என்ன விஷயம் சொல்லுங்க...”

ஜெயலட்சுமி அவஸ்தையாய் எச்சில் விழுங்கிவிட்டுத் தயக்கமான குரலில் சொன்னாள்.

“சார்... நான் போலீஸ்ல சரணடைய விரும்பறேன்...”

இந்த வாக்கியத்தைச் சொல்லி முடித்த விநாடி - மாருதி வேனை ஒட்டியபடி அந்த டாட்டா சுமோ வந்து நின்றது. டிரைவிங் சீட்டில் இருந்த ஒரு நபர் வழுக்கைத் தலையோடு எட்டிப் பார்த்து, “ஹாய் ஜெயலட்சுமி..!” என்றார்.




தொகுப்பு 2 : இந் நிலையில், முதல் கொலையின் ஈரம் காய்வதற்கு முன்பே வியாபாரி கன்யா லால் கொலை செய்யப்படுகிறார். அடுத்து பத்திரிகை ஆசிரியர் ஜெயலட்சுமியும் கொல்லப்படுகிறார். அடுத்தடுத்து மூன்று கொலைகளைச் செய்ததும் ஒரு பெண்தான் என்பது தெரியவர காயத்ரியின் பின்னணியைத் தேடி புறப்படுகின்றனர் சத்தியும் கதிரேஷும். குற்றவாளி யார் என்பதை தனக்கே உரிய சஸ்பென்சுடன் எடுத்துச்செல்லும் ராஜேஷ்குமார் கடைசி அத்தியாயங்களில் முடிச்சை அவிழ்க்கிறார். இனி நாவல் பேசும். இனி நாவல் பேசும்....

---

*தொடர்கதை - 14*

"ஹாய் ஜெயலட்சுமி...' என்று அழைத்துக் கொண்டே டாடா சுமோவிலிருந்து எட்டிப் பார்த்த அந்த வழுக்கைத் தலை நபர் கீழே இறங்க, காயத்ரி தன் கையில் இருந்த துப்பாக்கியை ஜெயலட்சுமியின் இடுப்புச்சதைக் குழைவில் வைத்து அழுத்தினாள். கேட்டாள். “யார் அந்த ஆள்..?''

செல்போனை அணைத்த ஜெயலட்சுமி எச்சில் விழுங்கிவிட்டுச் சொன்னாள். “அ.. அவர்... ஒரு மாஜி எம்.எல்.ஏ..''

“பேரு?''

“பஞ்சவர்ணம்.''

“மாசத்துக்கு ஒரு கட்சி மாறிட்டிருப்பாரே அந்த ஆளா..?''

“ஆமா...''

“இவனும் உன்னோட பிசினஸ்ல பார்ட்னரா?''

“இல்லை...''

“இதோ பார். அந்த ஆள் உன்கிட்டே பேசறதுக்காக வந்துட்டிருக்கான்.

நீ என்ன சொல்லுவியோ... ஏது சொல்லுவியோ எனக்குத் தெரியாது. அந்த ஆள் இந்த இடத்தை விட்டு ரெண்டு நிமிஷத்துல கிளம்பிப் போயிடணும். இல்லேன்னா உனக்கொரு தோட்டாவையும் அவனுக்கொரு தோட்டாவையும் நான் கொடுக்க வேண்டியிருக்கும்.''

“வே... வேண்டாம்...''

“வேண்டாம்னா சீக்கிரமா பேசி அனுப்பிடு... சரியா ரெண்டு நிமிஷம்... 121-வது விநாடி துப்பாக்கி வாயைத் திறக்கும்.'' காயத்ரி சொல்லிக் கொண்டிருக்கும்போதே பஞ்சவர்ணம் மாருதி வேனுக்குப் பக்கத்தில் வந்தார்.

“என்ன ஜெயலட்சுமி... இந்த நேரத்துல இருட்டுல கார்ல உக்காந்து என்ன பண்ணிட்டிருக்கே..?''

“வா... வாங்க பஞ்சவர்ணம்..! இந்த ஏரியாவில் ஒரு சைட் விலைக்கு வருதுன்னு சொன்னாங்க. அதான் விசாரிச்சுட்டுப் போலாம்னு வந்தேன்...'' பஞ்சவர்ணம் உள்ளே எட்டிப் பார்த்தார். அவர் விட்ட மூச்சுக் காற்றில் ஃபாரின் விஸ்கி நாறியது. காயத்ரியைப் பார்த்துவிட்டுச் சின்னதாய் நெற்றி சுருங்கினார்.

“ஜெயலட்சுமி... யார் இந்தப் பாப்பா?''

“ந... ந... நம்ம பத்திரிகை ஆஃபீஸில் வேலை பார்க்கிற பொண்ணுதான்.''

“அப்படியா..?'' அசிங்கமாய்ப் பல்வரிசையைக் காட்டினார். “நான் பாத்ததே இல்லையே...''

“பு... புது அப்பாய்ன்ட்மெண்ட்...''

“எந்த செக்ஷன்?''

“எடிட்டோரியல்.''

“பாப்பா பேர் என்ன..?''

காயத்ரியே குறுக்கிட்டுச் சொன்னாள். “சிம்மவாஹினி.''

பஞ்சவர்ணம் கண்களில் லேசாய் மிரண்டார். “என்னது... சிம்மவாஹினியா..? பேரே வித்தியாசமா இருக்கு... புனைபெயரா..?''

“இல்ல... அப்பா அம்மா வெச்ச பேரே இதுதான். துர்க்கா பூஜையன்னைக்குப் பிறந்ததால வெச்ச பேரு.''

“அப்படியா..?'' என்றவர் ஜெயலட்சுமியிடம் தாழ்ந்த ஸ்தாயியில், “ஒரு நிமிஷம் கீழே இறங்கி வர்றியா ஜெயலட்சுமி... உன்கிட்ட கொஞ்சம் பேசணும்'' என்றார்.

“எதுவாயிருந்தாலும் நாளைக்குக் காலையில் பேசிக்கலாம் பஞ்சவர்ணம். நாங்க அவசரமா கிளம்பணும்.''

“என்ன ஜெயலட்சுமி... இவ்வளவு டென்ஷனா இருக்கே... சைட் பார்க்க வந்த இடத்துல எதாவது பிரச்சினையா?''

“அ.. அ.. அதெல்லாம் ஒண்ணுமில்லை. ஆபீஸ்ல நிறைய வேலை பெண்டிங் இருக்கு... இஷ்யூ லேட்டாயிடுமோன்னு மனசுக்குள்ளே ஒரு பயம். அதான் டென்ஷன். நீங்க கிளம்புங்க பஞ்சவர்ணம்.''

“நாளைக்குக் காலையில் பத்து மணிக்கு ஆபீஸுக்கு வர்றேன்... கொஞ்சம் உக்கார்ந்து பேச வேண்டியிருக்கு.''

“பேசலாம்... வாங்க...''

பஞ்சவர்ணம் தன் பாழடைந்த பல் வரிசையை மறுபடியும் காயத்ரிக்குக் காட்டினார். “வரட்டுமா பாப்பா...''

“ம்...'' காயத்ரி தலையாட்ட, பஞ்சவர்ணம் தன் டாட்டா சுமோவுக்குப் போனார். அடுத்த சில விநாடிகளில் அது புகை தள்ளிப் புறப்பட்டது. காயத்ரி துப்பாக்கியால் ஜெயலட்சுமியின் இடுப்பை நிரடினாள். “ம்... போலீஸ் கமிஷனர் ஜோதிலிங்கத்துக்கு போன் பண்ணு... விட்ட இடத்திலிருந்து பேசு...''

ஜெயலட்சுமி செல்போனில் Ă டயல் பட்டனைத் தட்ட மறுமுனையில் ரிங் போயிற்று.

கமிஷனர் ஜோதிலிங்கம் குரல் கொடுத்தார். “ஹலோ...''

“ஸர்... நான்... இமயம் பத்திரிகையின் ஆசிரியர் ஜெயலட்சுமி...''

“சொல்லுங்க மேடம்... போலீஸில் நான் சரணடைய விரும்பறேன்னு சொல்லிட்டிருந்தீங்க... அதுக்குள்ளே லைன் கட்டாயிடுச்சு... என்ன விஷயம்... எதுக்காகச் சரணடைய விரும்பறதாச் சொன்னீங்க..?''

“அது வந்து... ஐ ஃபீல் கில்டி... தெரிஞ்சோ தெரியாமலோ சில தப்புகளைப் பண்ணிட்டேன்.''

காயத்ரி துப்பாக்கியால் ஜெயலட்சுமியின் இடுப்பைப் பலமாய்க் குத்திவிட்டு மெல்லிய குரலில் சொன்னாள்... “பண்ணின தப்பையெல்லாம் சொல்லு...''

ஜெயலட்சுமி வியர்த்து வழிந்து கொண்டே போலீஸ் கமிஷனரிடம் பேச ஆரம்பித்தாள்.

“ஷ்ர்... நான் சில பெண்க˜க்கு மும்பையில வேலை வாங்கித் தர்றதா சொல்லி விபசாரத் தரகர்கள்கிட்ட மாட்டிவிட்டுட்டேன்...''

காயத்ரி குறுக்கிட்டுக் கிசுகிசுத்துச் சொன்னாள். “உன் எக்ஸ் புருஷனைப் பற்றிச் சொல்லு...''

ஜெயலட்சுமி தொடர்ந்தாள். “இந்த விவகாரத்தில் என் கணவர் விநோத்துக்குப் பெரிய பங்கு உண்டு. அவர் இப்போ மும்பையில் இருக்கார். எனக்குக் கடந்த ஒரு வார காலமா ஏகப்பட்ட மனஉளைச்சல். பெரிய தப்பு பண்ணிட்டதா அடிமனசுல உறுத்தல். அதுதான் உங்க கிட்ட உண்மைகளையெல்லாம் சொல்லி போலீஸ்ல சரணடைஞ்சு சட்டம் தர்ற தண்டனையை ஏத்துக்க முடிவு பண்ணிட்டேன்.''

காயத்ரி மறுபடியும் குறுக்கிட்டு ஹஸ்கி வாய்ஸில் சொன்னாள்.

“உன் புருஷன் விநோத்தோட மும்பை அட்ரஸ்ஸயும் செல்போன் நம்பரையும் கமிஷனர் கிட்டே சொல்லு...''

ஜெயலட்சுமி சொன்னாள். “ஷ்ர்... என் கணவரோட மும்பை அட்ரஸ்ஸச் சொல்றேன். நோட் பண்ணிக்குங்க.''

காயத்ரி அவள் சொல்லி முடிக்கும்வரை காத்திருந்தாள். பின் ஜெயலட்சுமியிடம் இருந்த செல்போனை வாங்கித் தன் காதில் பொருத்திக் கொண்டாள். கமிஷனர் ஜோதி லிங்கத்தின் குரல் கேட்டது.

“குற்றத்தை நீங்களே ஒத்துக்கிட்டுப் போலீஸ்ல சரணடைய விரும்பறது உண்மையிலேயே நல்ல பாலிஸி. குற்றம் செய்துவிட்டு போலீசில் பிடிபடாமல் இருக்கும் எல்லோரும் உங்க மாதிரியே முடிவுக்கு வந்துட்டா போலீஸ் டிபார்ட்மெண்டுக்குப் பாதி தலைவலி குறையும். நீங்க நேரா பக்கத்துல இருக்கிற போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் சரணடைஞ்சுடுங்க.''

கமிஷனர் பேசிக் கொண்டிருக்கும்போதே செல்போனை அணைத்தாள் காயத்ரி. அதை நன்றாகத் துடைத்து ஜெயலட்சுமியிடம் கொடுத்தாள். “போலீஸ் கமிஷனர்கிட்டே எல்லாத்தையும் சொல்லி முப ஒத்துழைப்பையும் கொடுத்த உனக்கு என்னோட நன்றி. ஆனா நீ போலீஸ்ல சரணடையறது எனக்குப் பிடிக்கலே...'' ஜெயலட்சுமி அவளைத் "திக்' கென்று பார்த்தாள்.

“நீ... நீ... என்ன சொ... சொல்றே..?''

“சொன்னது புரியலையா? நீ பண்ணின குற்றங்க˜்காக அனாவசியமா போலீசுக்குப் போய் சரணடைய வேண்டாம்னு சொல்றேன்.''

“நீதானே சரணடையச் சொன்னே...''

“சொன்னேன்... இப்போ அது தேவையான்னு மனசுக்குப் படுது.

நீ போய் போலீஸ்ல சரணடைஞ்சா போலீஸ் என்ன பண்ணுவாங்க... எப்.ஐ ஆர். ஃபைல் பண்ணுவாங்க. உன்னை அரெஸ்ட் பண்ணி லாக்கப்புல வெப்பாங்க. அப்புறம் நாளைக்கு மாஜிஸ்டிரேட்டுக்கு முன்பாகக் கொண்டு போய் ஆஜர் படுத்துவாங்க. அவர் உன்னைப் பதினைந்து நாள் காவலில் வைக்கச் சொல்வார். போலீஸ் விசாரணை முடிஞ்சதும் நீ ஒரு நல்ல லாயரை வெச்சு ஜாமீனுக்கு அப்ளை பண்ணி எப்படியாவது வெளியே வந்துடுவே.

கேஸ் எப்படியும் பத்து வருஷம் நடக்கும். என்னைப் பொறுத்தவரைக்கும் சட்டம் ஒரு கைக்குழந்தை மாதிரி. கன்னத்தை லேசாத் தட்டி ஒரு மிட்டாய் கொடுத்தா போதும்... யார் கிட்ட வேணும்னாலும் கைகளை நீட்டிக்கிட்டு வந்துடும். அந்தக் காரியத்தை நீயும் பண்ணாமே இருக்கமாட்டே... கோர்ட்லே பத்து வருஷம் கேஸ் நடந்து கடைசியில சட்டம் ஏமாந்துபோய் உனக்கு விடுதலை கொடுத்தாலும் ஆச்சரியப்படறதுக்கில்லை.

ஸோ.. நீ பண்ணின குற்றத்தை என் கிட்டேயும் ஒத்துக்கிட்டே... போலீஸ் கமிஷனர் கிட்டேயும் ஒத்துக்கிட்டே. இவ்வளவு திறந்த மனசோடு நீ கொடுத்த வாக்குமூலத்தையே ஆதாரமா வெச்சு உனக்குத் தண்டனை கொடுத்தா என்ன?''

ஜெயலட்சுமி காயத்ரியைக் கலவரப் பார்வை பார்க்க அவள் தொடர்ந்தாள்.

“போலீஸ் கமிஷனர் ஜோதிலிங்கம் சட்டப்படி நடவடிக்கை எடுத்து உன்னோட எக்ஸ் கணவனை வேணும்னா கோர்ட்டுக்குக் கொண்டுபோய் நிறுத்தித் தண்டனை வாங்கிக் கொடுக்கட்டும். நான் உன்னை இங்கேயே தண்டிக்கிறதா தீர்மானம் பண்ணிட்டேன்...'' துப்பாக்கியை வயிற்றில் அழுத்தினாள்.

“எ.. என்னை... மன்னிச்சுடு... இனிமே நான் தப்பு பண்ணமாட்டேன்...''

“பண்ணின தப்புக்குப் பரிகாரம் மன்னிப்புக் கிடையாது. தண்டனைதான். இது இந்த சிம்மவாஹினியோட கொள்கை. உன்னை மன்னிச்சுட்டேன்னு சொல்றதுக்கு நான் ஒண்ணும் சாரதாமணி தேவியோ, அன்னை தெரஸப்வோ கிடையாது. ஒரு சாதாரணமான மனுஷி. அநியாயங்களைப் பார்த்தா காணப் பொறுக்காத ஒரு பெண்.''

ஜெயலட்சுமி கண்ணீரோடு கைகளைக் கூப்பினாள். “உ.. உ.. உன்னை என் பொண்ணாட்டம் நினைச்சுக் கேட்டுக்கறேன். என்னை ஒண்ணும் பண்ணிடாதே...''

“நீ மும்பைக்கு அனுப்பி வெச்சியே அந்த ஏழெட்டுப் பெண்களை என்னிக்காவது ஒரு நாளாவது நினைச்சுப் பார்த்திருப்பியா... ஒருத்தனுக்கு வாழ்க்கைப்பட்டு அழகாக் குடும்பம் நடத்த வேண்டிய பெண்களை விபசாரச் சாக்கடையில் நெளியற புழுக்களா மாத்தின உன்னை நான் எப்படி மன்னிக்க முடியும்..?

உன்னை மாதிரியான பெண்களுக்கு இந்த முடிவுதான் சரி...'' ட்ரிகரை அத்தினாள் காயத்ரி... சைலன்ஸர் பொருத்தப்பட்ட துப்பாக்கி முதல் தோட்டாவை உமிழ -

ஜெயலட்சுமியின் உடல் அதிர்ந்தது. இரண்டாவது தோட்டாவுக்குச் சரிந்தது. காயத்ரி மாருதி வேனிலிருந்து கீழே இறங்கினாள்.

"ஸ்ரீ ஜெயலட்சுமி... இப்படி ஹைவேஸ் ரோட்டில் இரண்டு தோட்டாக்களை வாங்கிச் சாக வேண்டும் என்பது உன் விதி. பெட்டர் லக் நெக்ஸ்ட் ஜென்மம்.'' காயத்ரி இருட்டில் நடந்தாள். நிமிஷ நேரம் நடந்திருப்பாள். காயத்ரியின் தோளில் கனமாய் ஒரு கை விழுந்தது.

*தொடர்கதை - 15*

தோளில் கை விழுந்தாலும் காயத்ரி அதிர்ச்சியைக் காட்டிக் கொள்ளாமல் திரும்பினாள். அந்த இளைஞன் இருட்டில் தெரிந்தான். புன்னகையோடு கேட்டான்.

"என்ன... சுத்தம் பண்ணியாச்சா?''

"ம்...''

"போட்ட ஷெட்யூலுக்குப் பத்து நிமிஷம் லேட். நான் கொஞ்சம் பயந்துட்டேன். அந்த மாஜி எம்.எல்.ஏ பஞ்சவர்ணம் குறுக்கே வந்துட்டான். ஜெயலட்சுமிக்கு அந்த அரசியல் அசிங்கம் தோஸ்தாம்.''

"அவன் உன்னைப் பார்த்திருப்பானே?''

"வேற வழி..? நல்லாவே பார்த்தான்.''

"ஜெயலட்சுமி உன்னைக் காட்டிக் கொடுக்க முயற்சி பண்ணலையா?''

"அவளோட இடுப்பை என்னோட துப்பாக்கி பிறாண்டிக்கிட்டே இருக்கும்போது அவளால வாயைத் திறக்க முடியுமா என்ன?''

“பஞ்சவர்ணம் உன்னை யார்னு கேட்டானா?' '

“கேட்டான். சிம்மவாஹினின்னு ஒரு பேரைச் சொல்லி "இமயம்' பத்திரிகை ஆபீஸில் புது அபாய்ன்ட்மென்ட்டுன்னு சமாளிச்சுட்டேன்...' '

“யார் கண்ணிலும் படாம இந்தச் சமுதாயக் குப்பைகளைச் சுத்தம் பண்ண நினைச்சோம். நினைச்சபடி நடக்கலை... புண்ணியகோடியைச் சுத்தம் பண்ணிய விஷயத்தில் உன் பள்ளி இளமைக்கால சிநேகிதன் சத்யநாராயணன் ஒரு முக்கிய ஐ விட்னஸ். அதே மாதிரி கன்யாலாலைச் சுத்தம் பண்ணிய விஷயத்தில் எதிர்வீட்டுக் கல்லூரி மாணவி சைதன்யா ஐ விட்னஸ். இப்போ ஜெயலட்சுமியைக் களை எடுத்த விஷயத்தில் இந்த மாஜி எம்.எல்.ஏ பஞ்சவர்ணம் ஐ விட்னஸ். நீ நல்லா எக்ஸ்போஸ் ஆயிட்டே காயத்ரி... அதை நினைக்கும்போதுதான் மனசுக்குக் கொஞ்சம் கவலையாயிருக்கு...' '

காயத்ரி சிரித்தாள். “போலீஸ் என் மேலே பட்ட காற்றைக் கூட சுவாசிக்க முடியாது. ஆமா... பைக் எங்கே?' '

“அதோ... அந்தப் புளியமரத்துக்குப் பின்னாடி...புறப்படலாமா..?' '

' 'எனக்கு நல்ல பசி... காலையில் இருந்து உருப்படியா எதையும் வயித்துக்குக் காட்டலை...' '

“மொதல்ல இந்த ஏரியாவைவிட்டுக் கிளம்பிடலாம். அப்புறமா ஒரு நல்ல ஹோட்டலைத் தேடலாம்.' '

இருவரும் நடந்து அந்தப் புளியமரத்துக்குப் பின்னால் வந்தார்கள். பைக் இருட்டில் நின்றிருந்தது. "ப்பபட்டக்' என்று ஸ்டாண்டைக் கழற்றி ஒரு "பளிச்' உதையில் உறுமவைத்துத் தாவி உட்கார்ந்தான் அந்த இளைஞன். காயத்ரி பின்னால் ஏறி உட்கார்ந்ததும் "ஹூம்ம்ம்' என்ற பெரிய சத்தத்தோடு ஹைவே ரோட்டில் பைக்கை

விரட்டிக் கொண்டு போனான். போக்குவரத்து அற்ற நெடுஞ்சாலையில் இரண்டு கிலோ மீட்டர் தூரம் போனதும் பறக்கும் குதிரையாய் மாறிற்று. “காயத்ரி...'' இளைஞன் தலையைப் பின்னால் சாய்த்துக் கூப்பிட்டான்.

“ம்...''

“இப்ப உனக்குச் சந்தோஷம்தானே..?''

“ரொம்ப... ரொம்ப... ரொம்ப...'' தன்னுடைய மென்மையான கன்னத்தை முன்னால் கொண்டு போய் சரியாய் ஷேவ் செய்யாத அந்த இளைஞனின் கன்னத்தில் வைத்துத் தேய்த்தாள்.

“ஆஹா... சொர்க்கத்துக்குப் போற மாதிரி இருக்கு.''

“நிஜமாகவே சொர்க்கத்துக்குப் போயிடுவோம் போலிருக்கு. எதிர்ல லாரி... வெறி பிடிச்ச மாதிரி வர்றான்...'' பைக் ஒதுங்கியது. லாரி ரோட்டை அரைத்துக்கொண்டு போயிற்று.

போலீஸ் கமிஷனர் அலுவலகம். ஏ.ஸி. கசியும் "கான்பரன்ஸ் செல்' எனப்படும் அறையில் உயர் போலீஸ் அதிகாரிகள் டை அடித்த மீசைகளோடும் யூனிஃபார்முக்குள் அடம் பிடித்த தொப்பைகளோடும் போலீஸ் கமிஷனர் ஜோதிலிங்கம் முன்பாக அரை வட்டமாய் உட்கார்ந்திருந்தார்கள்.

ஜோதிலிங்கம் தனக்கு முன்னால் முளைத்திருந்த சிறிய மைக்கில் கோபமாகப் பேசிக்கொண்டிருந்தார். “ஒரே நாளில் மூணு கொலைகள். ஏதோ சினிமா தியேட்டரில் மூணு காட்சிகள் நடக்கிற தினுசில் கொலைகள் நடத்தப்பட்டிருக்கு. கொலைகளைச் செய்தது ஒரு பெண். அதுவும் கிளியரா எக்ஸ்போஸாயிருக்கு. பேர் காயத்ரி. கொலையாளியான அந்தப் பெண்ணை மூணு பேர் பாத்து ஐடென்டிஃபை பண்ணியிருக்காங்க. இன்ஸ்பெக்டர் கதிரேஷும் அவரோட ப்ரெண்ட்

சத்யநாராயணனும் அந்தக் காயத்ரியை ஒரு சிநேகிதனோடு பைக்கில் பார்த்திருக்காங்க.

அவங்களைப் பிடிக்கிறதுக்காக சேஸ் பண்ணியிருக்காங்க. அவங்க கிடைக்கல்ல... இப்படிக் கைக்கு எட்டுகிற தூரத்தில் இருந்துக்கிட்டே காயத்ரி கொலைகளைப் பண்ணியிருக்கா. அது மட்டும் இல்லை... கொலைப் பழிகளை ராயப்பேட்டை கோகுலம் காலனியில் இருக்கிற காயத்ரி மேல் போட்டுட்டுத் தப்பிக்கவும் பார்த்திருக்கா...''

ஒரு அதிகாரி குறுக்கிட்டுக் கேட்டார். “ஸார்... கொலையாளி காயத்ரி கோகுலம் காலனியில் இருக்கிற காயத்ரியைப் பத்தி எல்லா விவரங்களையும் தெரிஞ்சு வெச்சிருக்கிறதைப் பார்க்கும்போது ரெண்டு பேருக்கும் இடையே ஒரு மறைமுகத் தொடர்பு இருக்கலாம்னு என் மனசுக்குப் படுது ஸார்... கோகுலம் காலனியில் இருக்கிற காயத்ரியை ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்து விசாரிச்சுப் பார்த்தா என்ன ஸார்..?''

கடைசி வரிசையில் உட்கார்ந்திருந்த சத்யநாராயணன் எழுந்தான். “ஸரி சார்... கோகுலம் காலனியில் இருக்கிற காயத்ரி ஹார்ம்லெஸ். அவபேர் காயத்ரியாய் இருக்கவே கொலையாளி காயத்ரி அவளைபயரை உபயோகப்படுத்தியிருக்கா. மற்றபடி நடந்த கொலைகளுக்கும் கோகுலம் காலனியில் இருக்கிற காயத்ரிக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. இந்த கேஸ் விஷயத்தில் எனக்கு நீங்க ஸ்பெஷல் பர்மிஷன் கொடுத்தா இன்னும் ஒரு வாரத்தில அந்தக் காயத்ரியைக் கண்டுபிடிச்சு உங்க முன்னாடி கொண்டுவந்து நிறுத்திடுவேன் ஸார்.''

“அந்தக் காயத்ரியும் நீங்களும் ஸ்கூல் டேஸில் ஒண்ணா படிச்சதா சொன்னீங்க... அது எந்த ஸ்கூல்ல..?''

“ரத்னசபாபதி ஹையர் செகண்டரி ஸ்கூல்ல.''

“எந்த ஊரு?''

"கோயமுத்தூர்.''

"கோயமுத்தூர்ல காயத்ரியோட வீட்டு அட்ரஸ் தெரியுமா?''

"தெரியும்... மரக்கடை நவாப் ஹக்கீம் ரோட்ல ரெட்டை பைப் மைதானம்னு ஒண்ணு இருக்கு. அந்தப் பைப்புக்குப் பக்கத்துலதான் காயத்ரியோட வீடு. காயத்ரியோட அப்பா ஒரு சினிமாத் தியேட்டரில் வேலைக்கு இருந்தார். அம்மா ரோட்டோரத்தில் ஒரு இட்லிக் கடை வெச்சு நடத்திக்கிட்டிருந்தாங்க. சுப்புலட்சுமி இட்லிக் கடைன்னா அந்த ஏரியாவில் ஃபேமஸ்...''

"காயத்ரிக்கு அக்கா, தங்கச்சி, அண்ணன், தம்பின்னு ஏதாவது உறவு சொல்லிக்கிற மாதிரி உண்டா?''

"யாரும் இல்லை. காயத்ரி மட்டும்தான்.''

"காயத்ரியோட அப்பா, அம்மா இப்போ உயிரோட இருக்காங்களா..?''

"அவளோட அப்பாவும் அம்மாவும் இறந்துபோயிட்டதா காயத்ரி சொன்னா...''

"கோயமுத்தூர்ல இருந்து மெட்ராஸுக்கு ஏன் வந்தாளாம்?''

''சரியா பதில் சொல்லலை ஸார். எந்தக் கேள்வியைக் கேட்டாலும் வெக்ஸப்வே பேசினா. "ப்ளஸ் டூவில் நீ நல்ல மார்க் எடுத்தியே... ஏதாவது கம்ப்யூட்டர் கோர்ஸ் படிச்சு நல்ல வேலைக்குப் போயிருக்கலாமே' ன்னு நான் கேட்டதுக்கு, "விதி சிரிக்கிறப்போ நாம் அழவேண்டியிருக்கே' ன்னு சொன்னா ஸார்.''

"நீங்க சொல்றதைப் பார்த்தா காயத்ரியோட வாழ்க்கையில் சில கசப்பான சம்பவங்கள் நடந்து அதன் காரணமா அவள் "டர்ன்' ஆகியிருக்கலாம். கொலை செய்யப்பட்ட புண்ணியகோடி, கன்யாலால், ஜெயலட்சுமி இந்த மூணு பேருமே பல

இளம் பெண்களோட வாழ்க்கையைப் பாழ் பண்ணியிருக்காங்க. அப்படிப் பாதிக்கப்பட்ட பெண்களில் காயத்ரியும் ஒருத்தியாக இருக்கலாம்...''

"ஸர்... காயத்ரியோட வாழ்க்கைப் பின்னணியில் ஏதோ ஒரு மர்மம் இருக்கப்போய்தான் அவள் கையில் துப்பாக்கி எடுத்திருக்கா... அவளுக்குப் பக்கத்துணையா ஒரு இளைஞனும் இருக்கான்.''

"ஓகே. மிஸ்டர் சத்யநாராயணன். இந்தக் காயத்ரி விவகாரத்தை உங்க கிட்ட ஒப்படைக்கிறேன். நீங்களும் சப்-இன்ஸ்பெக்டர் கதிரேஷும் இன்னிக்கே கோயமுத்தூர் புறப்படுங்க. காயத்ரி அப்பாவும் அம்மாவும் இப்போ உயிரோடு இல்லைன்னாலும் அவளோட ரிலேடிவ்ஸ் கண்டிப்பா இருப்பாங்க. அவங்க கிட்டே காயத்ரியைப் பத்தி விசாரிக்கலாமே...''

"எஸ் ஸர்... வி ஸ்டார்ட் டுடே இட்செல்ஃப்.''

கோவை, அந்த வைகறை வேளையில் கோவைப்பழ நிறத்தில் விடிந்து கொண்டிருக்க, நீலகிரி எக்ஸ்பிரஸ் ரயில்வே ஸ்டேஷனின் முதல் பிளாட்பாரத்தில் பெரிய இரைச்சலோடு வந்து நின்றது. எஸ்.7 கம்பார்ட்மெண்டிலிருந்து கதிரேஷும் சத்யநாராயணனும் இறங்கினார்கள். கைகளில் அதிகம் கனக்காத சூட்கேஸ்கள். கும்பலில் கலந்து "எக்ஸிட்' கேட்டை நோக்கி நடந்தார்கள். முகத்தில் ஐஸ் காற்று மோதிக் கன்னங்களுக்கு ஒத்தடம் கொடுத்தது.

"இந்த கிளைமேட்டுக்காகவே கோயமுத்தூர்ல செட்டில் ஆயிடணும்னு தோணுது கதிரேஷ்...''

"காஸ்ட் ஆஃப் லிவ்விங் பயங்கரம். மெட்ராஸ்ல ஒரு ரூபாய்க்கு விக்கிற வாழைப்பழம் இங்கே மூணு ரூபாய்..! இந்தியாவிலேயே பேரம் பேசாம மார்க்கெட்டிங் பண்றது கோவை வாசிகள் மட்டும்தான். சொன்ன விலைக்குத் தலையாட்டி பணத்தைக் கொடுத்துடுவாங்க. அங்கே பாரு... ஆறு ரூபாய்க்

காப்பியை அட்டை டம்ளரில் வாங்கிக் குடிக்க்கிறதுக்கு ஒரு கியூ வரிசையே ஃபார்ம் ஆயிக்கிட்டிருக்கு...''

சத்யநாராயணன் சிரித்தான். "இந்த அருமையான ஐஸ் காத்து கிளைமேட்டுக்காகவும், கல்கண்டைக் கரைச்ச மாதிரி இனிக்கிற சிறுவாணித் தண்ணீருக்காகவும் காஸ்ட் ஆஃப் லிவிங்கைப் பொறுத்துக்கலாம்.''

டிக்கெட் கலெக்டரிடம் டிக்கெட்டுகளை நீட்டி விட்டு வெளியே வந்தார்கள். கோவையின் கிழக்குத் திசை இப்போது காரட் நிறம் வாங்கியிருந்தது. காத்திருந்த ஆட்டோ டிரைவர்கள் இரண்டு பேரையும் மொய்த்துக் கொள்ள, ஒரு ஆட்டோ டிரைவரிடம் பேரம் பேசினான் சத்யநாராயணன்.

"நவாப் ஹக்கீம் ரோடு போகணும்...''

"போகலாம் சார்.''

"எவ்வளவு..?''

"ட்வென்டி ஃபைவ் சார்.''

"ட்வென்டி...''

"காலங்கார்த்தால முதல் போணி. ஏறி உட்காருங்க சார்...'' உட்கார்ந்தார்கள். ஆட்டோ கிளம்பியது.

கூட்ஸ் ஷெட் ரோட்டில் நூல் பிடித்த மாதிரிப் பயணம். வெரைட்டி ஹால் ரோட்டில் ரெண்டு நிமிஷப் பயணம். நவாப் ஹக்கீம் ரோடு வந்தது. இரட்டைப் பைப் மைதானத்தில் இறங்கிக் கொண்டார்கள். ஆட்டோவை வெயிட்டிங்கில் போட்ட சத்யநாராயணன், கதிரேஷை ஆட்டோவிலேயே இருக்கச் சொல்லிவிட்டு மெல்ல நடந்தான். வீடுகள் புதிதாக முளைத்திருந்தாலும் மைதானம் மாறவே இல்லை. அதே

இரட்டைப் பைப். பெண்கள் குழாயடிச் சண்டையில்லாமல் குடங்களில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தார்கள். பால் பூத்தில் கியூ தெரிந்தது. பைப்புக்குப் பக்கத்தில் காயத்ரியின் ஓடு சரிந்த வீடு இப்போது நிமிர்த்தப்பட்டிருந்தது.

வீட்டுக்கு முன்பாய்ப் போய் நின்றான் சத்யநாராயணன். கதவு சாத்தப்பட்டிருக்க மெல்லத் தட்டினான். "டொக்... டொக்...'

சரியாய் ஒரு நிமிஷ நேரத்திற்குப் பிறகு... கதவு திறந்தது. லுங்கி பனியனில் ஒரு இளைஞன்.

“இட்லிக் கடை சுப்புலட்சுமி வீடு..?''

“இதுதான். அந்த அம்மாவைப் பாக்க வந்தீங்களா? பின்னாடிப் பக்கம் இருக்கிற வீட்டில் குடியிருக்காங்க. போய்ப் பாருங்க. அதோ... அந்த அம்மாவோட வீட்டுக்காரரே வந்துட்டிருக்கார்.'' இளைஞன் சொல்ல... சத்யநாராயணன் திரும்பிப் பார்த்தான். காயத்ரியின் அப்பா வேலுச்சாமி தளர்ந்த நடையோடு, கையில் பால் பாக்கெட்டோடு வந்து கொண்டிருந்தார்.

*தொடர்கதை - 16*

சத்யநாராயணன், கையில் பால் பாக்கெட்டோடு மெல்ல நடந்துவரும் காயத்ரியின் அப்பா வேலுச்சாமியை நோக்கிப் போனான். பலவருடங்களுக்கு முன்பு பார்த்தது. இப்போது வெகுவாய்த் தளர்ந்து போயிருந்தார். முன் மண்டையில் ரோமம் கொட்டி நிறைய வயோதிகம் காட்டினார்.

அவருக்கு எதிரே போய் நின்று, “அய்யா! வணக்கம்!'' என்று கை கூப்பினான் சத்யநாராயணன்.

வேலுச்சாமி தன் ஒளிமங்கிப்போன கண்களில் திகைத்தார். வாய் குழறியது.

“வ.. வணக்கம்... யார்... தம்பி... நீங்க?''

“என்னை உங்களுக்குத் தெரியலையா? என் பெயர் சத்யநாராயணன். உங்க பொண்ணு காயத்ரியும் நானும் ரத்னசபாபதி ஹையர் செக்கண்டரி ஸ்கூல்ல, ஸ்கூல் ஃபைனல் வரைக்கும் ஒண்ணாப் படிச்சோம்.''

வேலுச்சாமியின் முகத்தில் அதுவரைக்கும் ஒட்டிக் கொண்டிருந்த லேசான மலர்ச்சி காணாமல் போயிருந்தது.

“காயத்ரியோட படிச்ச தம்பியா நீங்க?''

“ஆமாங்கய்யா.''

வேலுச்சாமி சில விநாடிகள் மௌனமாய் இருந்துவிட்டுக் கேட்டார். “இப்ப உங்களுக்கு என்ன வேணும் தம்பி..?''

“உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்.''

“என்ன பேசணும்?''

“அது... அது... அது வந்து காயத்ரியைப் பத்தி...''

அவர் முகம் இப்போது, போன நிமிஷம் பார்த்த முகமாய்த் தெரியவில்லை. குரலை இறக்கிச் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டுக் கேட்டார்.

“காயத்ரியைப் பத்தி என்ன பேசணும்?''

“தெருவுல நின்னுக்கிட்டு எதையும் பேசவேண்டாம். வீட்டுக்குப் போய்ப் பேசலாங்களா?''

“வா... வாங்க.... தம்பி.''

வேலுச்சாமி முன்னால் நடக்க சத்யநாராயணன் பின் தொடர்ந்தான். நான்கடி அகலச் சந்துக்குள் நுழைந்தார்கள். சந்து அவ்வளவு சுத்தமாக இல்லை. காற்றில் சாக்கடை வாசம்.

“தம்பி... உங்க பேர் என்ன சொன்னீங்க..?''

“சத்யநாராயணன்.''

“ஸ்கூல்ல படிக்கும்போது காயத்ரியைப் பாக்க இந்த வீட்டுக்கு வந்திருக்கீங்களா?''

“ரெண்டு தடவை வந்திருக்கேன்.''

“எதுக்காக வந்தீங்க?''

“நோட்ஸ் வாங்கிட்டுப் போக வந்ததாக ஞாபகம்.''

படியேறி வீட்டுக்குள் போனார் வேலுச்சாமி. சத்யநாராயணன் பின் தொடர்ந்தான்.

“குனிஞ்சு வாங்க தம்பி... இல்லேன்னா கதவு நிலைப்படி நெற்றியைப் பதம் பார்த்துடும்.''

இரண்டு அறைகளைக் கொண்ட வீடு அது. பக்கத்து அறைக் கட்டிலில் போர்வைக்குள் ஒரு உருவம் ஒருக்களித்துப் படுத்திருந்தது. இருமியது.

ஸ்டீல் நாற்காலியை விரித்துப் போட்டார்.

“உட்காருங்க தம்பி...''

சத்யநாராயணன் உட்கார்ந்து கொண்டே பக்கத்து அறையைப் பார்க்க, வேலுச்சாமி சொன்னார்.

“அது என்னோட மனைவி. உடம்புக்கு முடியாமே படுத்துகிட்டு இருக்கா.''

“உடம்புக்கு என்ன?''

“சுகர், பி.பி., ஆஸ்துமா எல்லாமே இருக்கு. ஏதோ மாத்திரை பலத்தால இருந்துகிட்டு இருக்கா. எப்படியோ நாளு ஓடிகிட்டு இருக்கு... நீங்க வந்த விஷயத்தைச் சொல்லுங்க தம்பி.''

பேச்சை எப்படி ஆரம்பிப்பது என்ற குழப்பத்தோடு பிடரியைத் தேய்த்துத் தலையை உயர்த்திய சத்யநாராயணன் திடுக்கிட்டுப் போனான். பக்கவாட்டுச் சுவரில் காயத்ரியின் போட்டோ தெரிய - போட்டாவுக்குப் போட்டிருந்த பூமாலை வாடியிருந்தது. நாற்காலியைவிட்டு அதிர்ச்சியாய் எழுந்தான் சத்யநாராயணன்.

“அய்யா! இது காயத்ரியோட போட்டோதானே?''

“ஆமா!''

“போட்டோவுக்கு மாலை போட்டிருக்கீங்க?''

“செத்துப் போனவளோட போட்டோவுக்கு மாலை போடறது ஒண்ணும் தப்பு கிடையாதே..?''

“காயத்ரி செத்துட்டாளா... யார் சொன்னது? அவதான் மெட்ராஸ்ல உயிரோடு இருக்காளே..?''

வேலுச்சாமியின் கண்கள் வியப்பில் விரிந்தன.

“எ.. எ.. என்ன தம்பி சொல்றீங்க... காயத்ரி உயிரோடு இருக்காளா..?''

“ஆமா!''

“நீங்க பார்த்தீங்களா?''

“பார்த்தேன்... பேசினேன்... ரெஸ்டாரண்ட்ல ஒண்ணா உட்கார்ந்து கூல்ட்ரிங்க் சாப்பிட்டோம்...''

“தம்பி! நீங்க நிஜமாத்தான் சொல்றீங்களா?''

“இதுல பொய் சொல்ல என்ன இருக்கு..! நான் இப்போ பேசிகிட்டு இருக்கிற ஒவ்வொரு வார்த்தையும் நிஜம்.''

வேலுச்சாமி தன் மனைவி சுப்புலட்சுமி படுத்திருந்த அறைக்குள் ஓடிக் கட்டிலில் படுத்திருந்த மனைவியின் தோளைப் பற்றி, பதற்றமாய் உசுப்பினார்.

“சுப்பு... சுப்பு...''

“ம்...'' அந்த அம்மாள் மெல்லப் புரண்டாள்.

“எந்திரி... சொல்றேன்! உனக்கு ஒரு சந்தோஷமான விஷயம். நம்ம பொண்ணு காயத்ரி உயிரோடுதான் இருக்காளாம்.''

சுப்புலட்சுமி போர்வையை விலக்கிக் கொண்டு ஒரு நேர்க்கோடு மாதிரி எழுந்து உட்கார்ந்தாள். நடுக்கமான குரலில் சந்தோஷம் தெரிந்தது.

“என்னது! காயத்ரி உயிரோடு இருக்காளா..?''

“ம்... இந்தத் தம்பி அவளை மெட்ராஸ்ல பார்த்திருக்கு!''

சுப்புலட்சுமியின் பார்வை இப்போது மெல்ல உயர்ந்து சத்யநாராயணன் மேல் நிலைத்தது.

“தம்பி! என் பொண்ணை நிஜமா பார்த்தீங்களா?''

“ம்... பார்த்தேன்மா! அவளை மெட்ராஸ்ல பார்த்ததினாலதான் இப்போ உங்ககிட்டே பேசறதுக்காக வந்திருக்கேன்.''

சுப்புலட்சுமி வேலுச்சாமியைக் கொஞ்சம் கோபமாய்ப் பார்த்தாள்.

“என்னங்க! நான் அன்னிக்கே என்ன சொன்னேன். ரயில்ல அடிபட்டுத் தண்டவாளத்துல செத்துக் கிடந்த பொண்ணு நம்ம காயத்ரி கிடையாதுன்னு தலைத்தலையா அடிச்சுகிட்டேன். என் பேச்சை போலீஸும் கேட்கலை... நீங்களும் கேட்கலை. செத்தது காயத்ரிதான்னு போலீஸ் சொல்லி ஏதோ பேப்பர்ல கையெழுத்து வாங்கிட்டுப் போய்ட்டாங்க! இப்ப என்னாச்சு பார்த்தீங்களா..?''

“செத்த பொண்ணு நம்ம காயத்ரி மாதிரி இருந்ததாலதான் நானும் தலையை ஆட்ட வேண்டியதாயிருச்சு.''

“பொறப்படுங்க... மெட்ராஸுக்குப் போய் நம்ம பொண்ணைப் பார்த்துட்டு வரலாம்.''

சுப்புலட்சுமி நோயின் தளர்ச்சியையும் மீறிப் படபடத்தாள். சத்யநாராயணன் சுப்புலட்சுமியைக் கையமர்த்தினான்.

“கொஞ்சம் பொறுங்கம்மா! மெட்ராஸுக்குப் போய் நாம காயத்ரியைப் பார்க்கிறதுக்கு முந்தி உங்ககிட்டே கொஞ்சம் பேச வேண்டியிருக்கு...''

“என்ன பேசணும்?''

“காயத்ரி இறந்து போனதா நினைச்சுகிட்டு அவபடத்துக்கு மாலையைப் போட்டு வெச்சிருக்கீங்க. இது எத்தனை மாதத்துக்கு முந்தி நடந்த சம்பவம்?''

வேலுச்சாமி குறுக்கிட்டுச் சொன்னார்.

“கிட்டத்தட்ட ஒரு வருடமாச்சு தம்பி! காயத்ரி ஒரு பையனைக் காதலிச்சா. அவன் பேரு நெல்சன். நாங்க அந்தக் காதலை ஒத்துக்கமாட்டோம்ன்னு நினைச்சு ரெண்டு பேரும் ஊரைவிட்டு ஓடிப் போய்ட்டாங்க. நான் போலீஸ்ல கம்ப்ளைண்ட் பண்ணினேன். அடுத்த வாரமே போலீஸ் என் வீட்டுக்கு வந்தாங்க. திருப்பூருக்குப் பக்கத்துல ரயில்வே டிராக்கில் ஒரு பெண்ணோட உடல், சிதைந்த நிலையில் கிடப்பதாகவும் அது காயத்ரிதானான்னு வந்து அடையாளம் காட்டும்படியாகவும் சொன்னாங்க. போனோம். முகம் சிதைந்து போனாலும் உடம்பைப் பார்க்கும்போது அது காயத்ரி மாதிரியே இருந்ததினால்தான், அது காயத்ரிதான்னு ஒத்துக்கிட்டேன். ஆனால் என்னோட மனைவி சுப்புலட்சுமி ஒத்துக்கலை. அது வேற யாரோ... காயத்ரி கிடையாதுன்னு அழுது அரற்றிகிட்டேயிருந்தா. போலீஸ் சுப்புலட்சுமியின் ஸ்டேட்மெண்ட்டைப் பொருட்படுத்தாமே அது காயத்ரிதான்னு முடிவு பண்ணி ஃபைலை க்ளோஸ் பண்ணிட்டுப் போயிட்டாங்க. அதே நேரத்துல காயத்ரியோட மரணத்துக்கு நெல்சன் காரணமாயிருக்கலாம் என்கிற கோணத்தில் போலீஸ் அவனையும் தேடிகிட்டு இருந்தாங்க...''

“நெல்சன் கிடைக்கவே இல்லையா?''

“இல்லை...''

“நெல்சன் இதே ஊரா?''

“ஆமா!''

“அட்ரஸ்..?''

“நெல்சனுக்கு ஃபேமிலி கிடையாது. பக்கத்து வீதியில் ஒரு லாட்ஜ் இருக்கு. அந்த லாட்ஜ்லதான் ரூம் எடுத்துத் தங்கியிருந்தான். ஏதோ ஒரு மருந்துக் கம்பெனியில் ரெப்ரசன்டேடிவ் வேலை. லாட்ஜுக்கு எதிரில் ரேஷன் கடை இருந்ததால அங்கே அடிக்கடிப் போன காயத்ரி, அவன் பார்வையில் பட பாழாப்போன காதல். இந்தக் காதல் விவகாரம் அவ்ஊரைவிட்டு ஓடும் வரை எங்களுக்குத் தெரியாது. காயத்ரி எழுதி வெச்சுட்டுப் போன லெட்டரைப் பார்த்த பின்னாடிதான் எங்களுக்கே தெரிஞ்சுது. அதுக்கப்புறம் நெல்சனைப் பத்தி விசாரிச்சபோது, "ஆள் சரியில்லை' என்கிற தகவல் கிடைக்கவே போலீஸில் கம்ப்ளைண்ட் கொடுத்தோம். போலீஸ், ரயில்வே டிராக்கில் இறந்து கிடந்த ஒரு பெண்ணைக் காட்டிக் கேஸ் அவசரஅவசரா க்ளோஸ் பண்ணி ஃபைலைப் பரணுக்குக் கொண்டு போய்ட்டாங்க.''

“நெல்சன் இன்னும் போலீஸ் கைக்குக் கிடைக்கலையா?''

“கிடைக்கலை! அதைப்பத்திப் போலீஸ் ஸ்டேஷனில் விசாரிக்கப்போனபோது இன்ஸ்பெக்டர் சரியா எந்தப் பதிலும் சொல்லலை.''

சத்யநாராயணன் சில விநாடிகள் மௌனமாய் இருந்துவிட்டு வேலுச்சாமியை ஏறிட்டான்.

“அய்யா..! காயத்ரியைப் பத்தி நீங்க சொல்றதுக்கும், காயத்ரி உங்களைப் பற்றி என்கிட்டே சொன்னதுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு...''

“என்ன வித்தியாசம்?''

“காயத்ரியை ரெண்டு நாளைக்கு முன்பு மெட்ராஸ் மயிலாப்பூர் டேங்க் ரோட்ல ஏதேச்சையா சந்திச்சேன். உங்களைப்பத்திக் கேட்டப்ப, நீங்க ரெண்டு பேருமே உயிரோடு இல்லைன்னு சொன்னா...''

வேலுச்சாமியும் சுப்புலட்சுமியும் திடுக்கிட்டுப்போய் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

“காயத்ரி அப்படியா சொன்னா..?''

“ஆமா! உங்க மேல அவளுக்கு ஏதாவது கோபமா?''

“இல்லையே!'' தோள்களைக் குலுக்கிய வேலுச்சாமி சத்யநாராயணனின் கைகளைப் பிடித்துக் கொண்டார்.

“தம்பி! போனதெல்லாம் போகட்டும். நடந்தது எல்லாம் கெட்ட கனவுன்னு நினைச்சு நாங்களும் மறந்துடறோம். இப்போ காயத்ரி உயிரோடு இருக்கிறது, நினைச்சே பார்க்க முடியாத ஒரு சந்தோஷமான விஷயம். நாங்க எங்க பொண்ணை உடனடியாப் பார்க்கணும் போலிருக்கு! மெட்ராஸுக்கு எப்பப் புறப்படலாம் தம்பி..!''

சத்யநாராயணன் ஒரு வெறுமையான புன்னகையோடு வேலுச்சாமியை ஏறிட்டான்.

“உங்க பொண்ணு காயத்ரியைப் பத்தின இன்னொரு உண்மையைச் சொன்னா உங்க சந்தோஷமெல்லாம் காணாமே போயிடும்.''

அவர்கள் முகம் மாறினார்கள்.

“என்ன சொல்றீங்க தம்பி..?''

சத்யநாராயணன் பேச்சை எப்படி ஆரம்பிப்பது என்று யோசித்த விநாடி - அவனுடைய பாக்கெட்டில் இடம் பிடித்திருந்த செல்போன் முணுமுணுப்பாய்க் கூப்பிட்டது. எடுத்து காதுக்குக் கொடுத்தான்.

“ஹலோ!''




மறுமுனையில் கதிரேஷின் குரல்.

“சத்தி! வீட்டுக்குள்ளே என்ன நடக்குது?''

“காயத்ரியோட அப்பா, அம்மாகிட்டே பேசிட்டிருக்கேன்...''

“அப்பா, அம்மா உயிரோடு இல்லைன்னு காயத்ரி சொன்னதா நீ சொன்னியே?''

“காயத்ரி பொய் சொல்லியிருக்கா! நீ வீட்டுக்குள்ளே வா! எல்லாத்தையும் விவரமாச் சொல்றேன்.''

“சத்தி! நீ வீட்டுக்குள்ளேயே இரு... இங்கே வெளியே எனக்கு வேலை இருக்கும் போலிருக்கு...''

“கதிரேஷ்... நீ என்ன சொல்றே?''

“இந்தத் தெருமுனையில் போன நிமிஷம் ஒரு கார் வந்து நின்னது. வெள்ளை அம்பாசிடர் கார். அந்தக் காரோட கண்ணாடிக் கதவை லேசா இறக்கி விட்டுகிட்டு ஒரு பெண் இந்தப் பக்கமாவே பார்த்துகிட்டு இருக்கா, அவளோட முகம் சரியாத் தெரியலை. சேலையோட கலர் மட்டும் தெரியுது. ஒருவேளை அது காயத்ரியாய் இருக்கலாமோன்னு மனசுக்குப் படுது...''

பதற்றமடைந்தான் சத்யநாராயணன்.




*தொடர்கதை - 17*

சத்யநாராயணன் உள்ளுக்குள் பதற்றமடைந்தாலும் வெளியே காட்டிக் கொள்ளாமல் கதிரேஷிடம் செல்போனில் பேசினான். “தெருமுனையில் நிக்கிற கார் வெள்ளை அம்பாசிடரா?' '

“ஆமா...' '

“காருக்குள்ளே எத்தனை பேர் இருக்காங்க?' '

“ஒரே ஒரு பொண்ணு மட்டுந்தான்..!' '

“உன்னையும் என்னையும் கண்காணிக்கிறதுக்காக ரயில்வே ஸ்டேஷனிலிருந்தே வந்திருக்கலாம்ன்னு நினைக்கிறேன்.' '

“மே பி...' '

“இப்ப... என்ன பண்ணலாம் கதிரேஷ்..!' '

“நான் போய் கார்ல இருக்கிற அந்தப் பெண்ணை மடக்கறேன்...' '

' "நானும் வரட்டுமா..?' '

“வேண்டாம்... சத்தி.... நீயும் நானும் சேர்ந்த மாதிரி காரை நோக்கி நடந்தா... கார்ல இருக்கிற பொண்ணு உஷாராயிடுவா... கார் கிளம்பிப் போய்ட்டா அதை உடனடியா நாம் ஃபாலோ பண்ண முடியாது... நான் போய் மடக்கின பிறகு உனக்குத் தகவல் தர்றேன். நீ வா..!' '

“சரி... பி காஷியஸ்... உன்னோட போன் காலுக்காக நான் வெயிட் பண்ணிட்டிருக்கேன்...''

“காயத்ரி செய்த மூணு கொலைகளைப் பத்தி அவ பேரண்ட்ஸ்கிட்டே சொல்லிட்டியா..?''

“இனிமேத்தான் சொல்லணும்...''

“ஓகே..! நான் இப்போ அந்த வெள்ளை அம்பாசிடர் காரை நோக்கி நடக்க ஆரம்பிச்சுட்டேன்.'' கதிரேஷின் செல்போன் மறுமுனையில் மௌனமாயிற்று. கதிரேஷ் செல்போனை பேண்ட் பாக்கெட்டுக்குள் திணித்துக் கொண்டு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு தெருமுனையில் நின்றிருந்த அம்பாசிடர் காரைப் பார்த்தபடி நடை போட்டான்.

லேசாய்த் திறந்திருந்த கண்ணாடிக் கதவு இடைவெளியில் அந்தப் பெண்ணின் முகம் ஒரு விநாடி தெரிந்தது. மறு விநாடி மறைந்தது. ட்ரைவிங் சீட்டில் யாரும் இல்லை. கதிரேஷ் காருக்கு முக்கியத்துவம் கொடுக்காத பார்வையோடு மெல்ல நடந்து போய் ஒரு பெட்டிக் கடைக்கு முன்பாய் நின்று நாளிதழ் போஸ்ட்டர்களைப் படித்தான். பின் பெட்டிக்கடைக்காரனிடம் வேண்டுமென்றே பேச்சுக் கொடுத்தான்.

“பத்திரிகையெல்லாம் விக்குதா..?''

“நல்லாவே விக்குது ஸார்... என்னதான் டி.வி.யில் நியூஸ் சொன்னாலும் ஜனங்களுக்குப் பேப்பர்ல நியூஸ்ப் படிச்சாத்தான் திருப்தி...''

"'தினமணி இருக்கா..?''

“இருக்கு சார்...''

“குடு..!''

பேப்பரை வாங்கிக் கொண்டு பணத்தைக் கொடுத்த கதிரேஷ், கடைக்காரனிடம் மெல்லிய குரலில் கேட்டான்.

"ரோட்டுக்கு அந்தப் பக்கம் ஒரு வெள்ளைக் கார் நிக்குதே... அது யாரோடதுன்னு தெரியுமா?''

"தெரியாது சார்...''

"எவ்வளவு நேரமா அந்தக் கார் நிக்குது..?''

"நான் காரையே இப்பத்தான் கவனிக்கிறேன் சார்...''

"சரி... நீ... உன்னோட வியாபாரத்தைக் கவனி...'' என்று சொன்ன கதிரேஷ் தன் கையிலிருந்த சிகரெட்டைக் கீழே போட்டு பூட்ஸ் காலால் தேய்த்துவிட்டு ரோட்டை வேகவேகமாய்க் கடந்து காரை நோக்கிப் போனான்.

பத்தே விநாடிகளில் காரை நெருங்கிக் கதவைப் பிடித்து இழுக்க... பின் சீட்டில் அந்தப் பெண் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள். முப்பது வயது இருக்கலாம். மாநிறம். மெலிதான நீலநிறச் சேலைக்குள் புகுந்திருந்தாள். காதுகளில் வாக்மேன் இடம்பிடித்திருந்தது. கதிரேஷைப் பார்வையில் வாங்கிய அவள் சற்றும் மிரளாமல் வாக்மேனைக் கழற்றிக் கொண்டே, "எஸ்'' என்றாள்.

கதிரேஷ் கேட்டான். "கார் உங்களோடதா..?''

"ஆமா...''

"காரை இங்கே நிறுத்திவிட்டு யாருக்காக வெயிட் பண்ணிட்டிருக்கீங்க..?''

அவள் கோபப்படாமல் லேசாய்ப் புன்னகைத்தாள். “நான் யாருக்காக வேண்டுமானாலும் வெயிட் பண்ணிகிட்டு இருப்பேன். இதையெல்லாம் கேட்கிறதுக்கு நீங்க யாரு..?''

'"போலீஸ்..!''

“ஓ.! காவல்துறை..! ஐ டி. இருக்கா?''

கதிரேஷ் தன் ஷர்ட் பாக்கெட்டிலிருந்த அடையாள அட்டையை எடுத்து அவளுடைய முகத்துக்கு நேரே பிடித்தான். அவள் படித்தாள் வாய்விட்டு. “கதிரேஷ், சப் - இன்ஸ்பெக்டர் ஆஃப் போலீஸ், லா அண்ட் ஆர்டர்.'' கதிரேஷ் அடையாள அட்டையை மறுபடியும் பாக்கெட்டுக்குக் கொடுத்தபடி கேட்டான்.

“இப்ப சொல்லுங்க! காரை இங்கே நிறுத்திகிட்டு யாருக்காக வெயிட் பண்ணிட்டிருக்கீங்க..?''

அவள் ஒரு விநாடி கண்களை மூடித் திறந்துவிட்டுச் சொன்னாள். “காயத்ரிக்காக..!''

கதிரேஷின் விழிகள் ஸ்டில் போட்ட மாதிரி நிலைத்தன. “கா... காயத்ரி..?''

“எஸ்.''

“காயத்ரியை உங்களுக்குத் தெரியுமா?''

“மூணு கொலைகளை ஒரே நாளில் பண்ணின கொலைகாரின்னு எனக்குத் தெரியும்... மற்றபடி நான் அவளைப் பார்த்தது இல்லை...''

“அவளைப் பார்த்தது இல்லைன்னு சொல்றீங்க... அவஒரு கொலைகாரின்னு உங்களுக்கு எப்படித் தெரியும்..? எதுக்காக கார்ல உட்கார்ந்து அவளுக்காக வெயிட்

பண்றீங்க? அந்த காயத்ரி இந்த இடத்துக்கு வருவான்னு உங்களுக்கு யார் சொன்னது. . ?' '

“வெரி சாரி மிஸ்டர் கதிரேஷ். . ! உங்க கேள்விக்கெல்லாம் எனக்குப் பதில் சொல்லத் தெரியாது. என்னோட டிபார்ட்மெண்ட்ல இருக்கிற ஹை அஃபிஷியல் அரைமணி நேரத்துக்கு முன்னாடி போட்ட உத்தரவுப்படி உங்களையும் உங்க நண்பர் சத்யநாராயணனையும் கண்காணிக்க வந்திருக்கேன்.' '

“நீங்க. . ?' '

“க்யூ பிராஞ்ச். போலீஸ் டிபார்ட்மெண்ட். . !' ' சொன்னவள் தன்னுடைய அடையாள அட்டையை எடுத்துக் காட்ட, கதிரேஷ் அவசர அவசரமாய் அட்டென்ஷனுக்கு வந்தான். “ ஸ. . ஸ்ரி. . . மேடம்! நீங்க க்யூ பிராஞ்ச்சுன்னு தெரியாமே தேவையில்லாத வார்த்தைகளை உங்ககிட்ட உபயோகப்படுத்திட்டேன். எக்ஸ்ட்ரீம்லி ஸ்ரி. . .' '

“இதுல சாரி கேட்க ஒண்ணுமேயில்லை. . ! காயத்ரியைப் பத்தி விசாரிக்கிறதுக்காக மெட்ராஸிலிருந்து கோயம்புத்தூருக்கு நீங்களும் மிஸ்டர் சத்யநாராயணனும் வரப்போறதா எங்களுக்குத் தகவல் கிடைச்சதுமே எங்க டிபார்ட்மெண்ட் கொஞ்சம் அலர்ட்டுக்கு வந்தது. மெட்ராஸிலிருந்து வர்ற உங்க ரெண்டு பேரையும் காயத்ரியோ, அவளோட பாய் ஃப்ரண்ட்டோ ஃபாலோ பண்ணி கோயம்புத்தூருக்கு வரலாம்ன்னு கெஸ் பண்ணினோம். அந்த கெஸ் ஒர்க் இப்போ தப்பாயிடுச்சு. . . ரயில்வே ஸ்டேஷனிலிருந்து இந்த நிமிஷம் வரைக்கும் உங்க ரெண்டு பேரையும் கண்காணித்ததில் யாருமே உங்களை ஃபாலோ பண்ணலை. . .' '

“மேடம். . ! நம்ம போலீஸ் டிபார்ட்மெண்ட் இப்படி ஒரு ஏற்பாட்டைப் பண்ணியிருக்கும்ன்னு நான் கொஞ்சம்கூட நினைச்சுப் பார்க்கலை.' '

“கோயம்புத்தூர்ல நீங்க இருக்கிற வரை உங்களை யாராவது ஃபாலோ பண்றாங்களான்னு கண்காணிக்க வேண்டியது என்னோட வேலை. என்னைப் பத்தி

உங்ககிட்ட இன்னும் அறிமுகப்படுத்திக்கவேயில்லை. என்னோட பேர் வள்ளியம்மை. பேர் பட்டிக்காட்டுத்தனமா இருக்கேன்னு பார்க்கறீங்களா..? சொந்த ஊர் சிவகங்கைக்குப் பக்கத்தில் இருக்கிற காளையார்கோயில்.

தாத்தா வைரவன் செட்டியார். ஒரு சுதந்திரப் போராட்ட வீரர். அதனால மாடர்னா ஒரு பேர் வைக்காமே சுதந்திரத்துக்காகப் போராடிய தில்லையாடி வள்ளியம்மையின் ஞாபகார்த்தமா எனக்கு வள்ளியம்மைன்னு பேர் வெச்சுட்டார்.

அப்படி பேர் வெச்சதனாலேயோ என்னவோ ரத்தத்துல தைரியம் கொஞ்சம் அதிகமாகி போலீஸ் வேலையில் ஜாயின் பண்ணிட்டேன். காக்கி யூனிஃபார்மைப் போட்டுக்கும் போதும் சரி... தப்புப் பண்ணினவங்களை கோர்ட்ல நிறுத்தித் தண்டனை வாங்கிக் கொடுக்கும் போதும் சரி... மனசுக்கு ரொம்பவும் சந்தோஷமாயிருக்கு..!

ஆனா காயத்ரி விவகாரத்தைப் பார்க்கும் போது எனக்கு அவபேர்ல ஏனோ கோபம் வரலை. சரியான காரணம் இல்லாமே ஒரு பெண் மூணு பேரைத் துப்பாக்கிக் குண்டுகளால துளைச்சு எடுப்பாளா? ஏதோ வலுவான காரணம் இருக்கு...''

"அதுக்காகச் சட்டத்தை அவளே கையில் எடுத்துகிட்டுத் தண்டனை தர்றது நியாயமில்லையே மேடம்..?''

"பார்க்கலாம்... அந்த காயத்ரி போலீஸ் பிடியில் மாட்டின பிறகுதான் எல்லா உண்மைகளும் வெளியே வரும்.''

கதிரேஷின் செல்போன் கூப்பிட்டது. எடுத்தான். மறுமுனையில் சத்யநாராயணன். படபடப்பாய்க் கேட்டான். "கார் மோகினியை மடக்கிட்டியா?''

"மடக்கப் போய் சல்யூட் வைக்க வேண்டியதாயிடுச்சு''.

"என்னடா சொல்றே..?''

"நீ உடனே புறப்பட்டு வா... காயத்ரியோட பேரண்ட்ஸ்கிட்டே என்கொயரி முடிஞ்சதா..?''

'"முடிந்தது..! காயத்ரி மூணு கொலைகள் பண்ணிட்டுத் தலைமறைவாயிருக்கிற விஷயத்தைச் சொன்னதும் ரெண்டு பேரும் இடிஞ்சு போயிட்டாங்க. அந்த அம்மாவுக்கு மயக்கமே வந்துடுச்சு...''

"அந்த வீட்ல காயத்ரியோட போட்டோ இருக்கா?''

"இருக்கு... ஆனா ரொம்பவும் பழைய போட்டோ. ஏழெட்டு வருஷங்களுக்கு முன்னாடி எடுத்த போட்டோ. போட்டோவில் இருக்கிற காயத்ரிக்கும் இப்போ இருக்கிற காயத்ரிக்கும் நிறைய வித்தியாசம்.''

"பரவாயில்லை... அந்தப் பழைய போட்டோவைக் கொண்டு வா...''

"சரி...'' கதிரேஷ் செல்போனை அணைத்துப் பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்ட ஐந்தாவது நிமிஷம் சத்யநாராயணன் காருக்கு வந்தான்.

காருக்குள் இருந்தது க்யூ பிராஞ்ச் வள்ளியம்மை என்று தெரிந்ததும் சில விநாடிகள் ஆச்சர்யப்பட்டுவிட்டு இயல்பாய்ப் பேச ஆரம்பித்தான். "மேடம்..! இப்படி ஒரு போலீஸ் ஏற்பாட்டை நாங்க எதிர்பார்க்கலை...''

"காயத்ரியோட போட்டோவைக் கொண்டு வந்தீங்களா!''

"இதோ..!'' எடுத்துக் கொடுத்தான்.

கதிரேஷும் வள்ளியம்மையும் போட்டோவைப் பார்த்தார்கள். பாவாடை தாவணியில் ஈர்க்கும் உடம்போடு "உம்' என்ற முகத்தோடு போட்டோவுக்கு போஸ் கொடுத்திருந்தாள் காயத்ரி.

“வேற போட்டோ இல்லையா?''

“பள்ளிக்கூடத்துல எடுத்த க்ரூப் போட்டோ ஒண்ணு கிடைச்சுது...'' சத்யநாராயணன் சொல்லிக் கொண்டே சர்ட் பாக்கெட்டில் இருந்த அந்தப் பழைய போட்டோவை எடுத்துக் கொடுத்தான்.

வள்ளியம்மை வாங்கிப் பார்த்தாள். நாற்பது மாணவிகளுக்கு நடுவில் காயத்ரி தெரிந்தாள்.

“சத்யநாராயணன்..!''

“எஸ் மேடம்..!''

“ஸ்கூல் டேஸ்ல காயத்ரிக்கு வெரி க்ளோஸ் ஃப்ரண்ட் யாரு..?''

“பானுமதின்னு ஒரு பொண்ணு. அப்புறம்... லதா.''

“அந்தப் பெண்களோட வீடு தெரியுமா..?''

“தெரியாது மேடம்..! அந்தப் பெண்களுக்கெல்லாம் கல்யாணமாகி வேற ஏதாவது ஊர்களில் செட்டில் ஆயிருக்கலாம்.''

“இருந்தாலும் விசாரிச்சுப் பார்க்கிறது என்கொய்ரிக்கு உதவும்... பள்ளிக்கூட ரிக்கார்ட்ஸில் அட்ரஸ் கிடைக்கலாம். முயற்சி பண்ணிப் பார்த்துட்டுக் காலையில் பத்து மணி சுமாருக்கு க்யூ பிராஞ்சுக்கு வாங்களேன். ஹை அஃபிஷியல்ஸ்கிட்டே உட்கார்ந்து பேசிடலாம்...''

“எஸ்... மேடம்...''

"நான் கிளம்பட்டுமா..! இது ஆஃப் த ரிக்கார்ட்ஸ் ட்யூட்டி. ரெகுலர் ட்யூட்டி எட்டு மணிக்கு. சரியா எட்டு மணிக்கு ஸ்பாட்ல இல்லைன்னா மெமோ கொடுத்துடுவாங்க. க்யூ பிராஞ்ச் ஆபீஸ் எங்கேயிருக்குன்னு தெரியுங்களா கதிரேஷ்?' '

"தெரியும் மேடம்..! ரெட்ஃபீல்ட்ஸ்தானே?' '

' "கரெக்ட்..! சரியா பத்து மணிக்கெல்லாம் வந்துடுங்க...' '

இருவரும் தலையாட்ட அம்பாசிடர் கார் புறப்பட்டது. வேகத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரித்து மெயின் ரோட்டுக்கு வந்து பைபாஸ் ரோட்டில் திரும்பியது.

வள்ளியம்மை இடது கையை நீட்டிக் காரின் டேஷ் போர்டைத் திறந்து அந்த செல்போனை எடுத்தாள். ஆட்காட்டி விரலால் டயல் எண்களைத் தட்டிவிட்டுக் காதுக்குக் கொடுத்தாள். மறுமுனையில் ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டது. ஒரு பெண் குரல்.

"ஹலோ..!' '

"காயத்ரி..! நான் வள்ளியம்மை!' '

*தொடர்கதை - 18*

வள்ளியம்மை செல்போனில் ஹஸ்கி வாய்சில் பேசினாள். "எப்படி இருக்கே காயத்ரி?' '

"களைகளைச் சுத்தம் பண்ணின சந்தோஷத்தோடு இருக்கேன்.' '

“போலீசைப் பத்தி நீ கவலைப்படலையா?''

“எதுக்குக் கவலைப்படணும்?'' மறுமுனையில் சிரித்த காயத்ரி கேட்டாள்.

“சத்யநாராயணனும் கதிரேஷும் இப்ப என்ன பண்ணிக்கிட்டிருக்காங்க?''

“சத்யநாராயணன் உன் வீட்டுக்குப் போய் உன்னோட பேரண்ட்ஸைப் பார்த்துப் பேசியிருக்கான். நீ உயிரோட இருக்கேன்னு தெரிஞ்சு சந்தோஷப்பட்ட உன்னோட அப்பாவும் அம்மாவும் நீ போலீசால தேடப்படற ஒரு குற்றவாளின்னு தெரிஞ்சதும் அப்செட். அவங்க இப்ப சந்தோஷமா இல்லை.''

“சரி... சத்தி, கதிரேஷோட அடுத்த மூவ் என்ன?''

“உன்கூட படிச்ச பள்ளித் தோழிகள் யார்... அவங்க தற்சமயம் எங்கே இருக்காங்கன்னு கண்டுபிடிக்கிறதுக்காக நீ படிச்ச ரத்னசபாபதி பள்ளிக்கூடத்துக்குப் போய் என்கொயர் பண்ணப் போறதாகச் சொல்லிட்டுக் கிளம்பியிருக்காங்க.''

“அன்னிக்கு சத்யநாராயணன் கண்ணுல நான் பட்டிருக்கக் கூடாது. அவன் கண்ணுல படப் போயிதான் இவ்வளவு பிரச்னைகள்.''

“கவலைப்படாதே காயத்ரி. போலீசாலே உன்னை நெருங்க முடியாது. அப்படி நெருங்கற மாதிரியான சூழ்நிலை உருவானால் நான் உடனே உனக்குத் தகவல் கொடுத்துடுவேன். நான் போலீஸ் யூனிஃபார்மை மாட்டிக்கிட்டு அரசாங்கத்துக்காக வேலை பார்த்தாலும் உன்னோட விஷயத்துல மட்டும் அரசாங்கத்துக்கு எதிர்மறையா இருக்கேன்... நீதியையும் நேர்மையையும் உயிர் பிழைக்க வைக்கிறததுக்காகச் சில சமயம் பிளாக் மார்க்கெட்ல வேலை பார்க்க வேண்டியிருக்கு...''

“போலீஸ் என்னைப் பிடிக்கிறதுக்காகக் கொஞ்சம் சுறுசுறுப்பா செயல்பட்டுக்கிட்டிருக்கிறதால என்னோட களையெடுப்பு வேலைக்கு ஒரு சின்ன இடைவெளி கொடுக்கலாம்னு நினைக்கிறேன்... நீங்க என்ன நினைக்கறீங்க?''

“எனக்கும் அதுதான் சரின்னு படுது. வெளியே எங்கேயும் ரெண்டு மாசத்துக்கு வராதே. போலீஸ் தேடல் ஓயட்டும்.''

“என்னோட ஃபோட்டோவைப் பத்திரிகைகளில் போட்டுட்டா கொஞ்சம் பிரச்னையாயிடுமே...''

“எந்தப் பிரச்னையும் இல்லை. உன்னோட பழைய ஃபோட்டோ இப்ப என் கையிலதான் இருக்கு. போட்டால் இதைத்தான் பேப்பர்ல போடணும். இப்போ இருக்கிற உன்னோட முகத்துக்கும் இந்தப் பழைய ஃபோட்டோவில் இருக்கிற முகத்துக்கும் ஏகப்பட்ட வித்தியாசம். ஃபோட்டோவைப் பார்த்துட்டு அது நீதான்னு யாராலேயும் சொல்ல முடியாது. தைரியமா இரு.''

“சத்யநாராயணனும் கதிரேஷும் கோயமுத்தூர்ல எத்தனை நாள் கேம்ப்..?''

“தெரியலை. ரத்னசபாபதி ஸ்கூலுக்குப் போய் உன்னோட தோழிகள் பத்தின விவரங்களை என்கொயர் பண்ணிட்டுப் பத்து மணி சுமாருக்கு ரெட்ஃபீல்ட்ஸில் இருக்கிற என்னோட ஆஃபீஸுக்கு வர்றதா சொல்லிட்டுப் போயிருக்காங்க. பை த பை... காயத்ரி, உன்னோட ஸ்கூல் டேஸில் உனக்கு நெருங்கின தோழிகள் யார்?''

“ரெண்டு பேர். ஒருத்தி பேர் பானு. இன்னொருத்தி பேர் லதா.''

“அவங்க இப்போ எங்கே இருக்காங்கன்னு தெரியுமா?''

“தெரியாது...''

“ஸ்கூல்விட்டு வந்த பின்னாடி அவங்களை நீ பார்க்கவேயில்லையா?''

“இல்லை...''

“வேற எந்த ஃபிரெண்டையாவது..?''

“யாரையுமே பார்க்கலை. நான் ஸ்கூல் விட்டு வந்த பின்னாடி பார்த்த முதல் நபர் அந்த சத்யநாராயணன்தான்.''

“ஓகே. ஆல் ஈஸ் வெல்... நீ எதைப்பத்தியும் கவலைப்படாமே சந்தோஷமா இரு. நான் இங்கே இருக்கிற நிலைமையைப் பார்த்துக்கிட்டு மத்தியானத்துக்கு மேல் உனக்கு ஃபோன் பண்றேன். ரெண்டு மணிக்கு மேல் ஃபோன் "ஆன்' ல இருக்கட்டும். உனக்குப் பக்கத்துல வேற யாராவது இருந்தா ராங்க் நம்பர்னு சொல்லி லைனை உடனே கட் பண்ணிடு.

'' மறு முனையில் “சரி...'' என்றாள் காயத்ரி.

சத்யநாராயணனும் கதிரேஷும் கோவையின் ஆர்.எஸ். புர மையத்தில் இருந்த ரத்னசபாபதி ஹையர் செகண்டரி ஸ்கூலுக்குப் போய்ச் சேர்ந்தபோது காலை ஒன்பதரை மணி. பிரேயர் முடிந்து மாணவ மாணவிகள் வகுப்புகளுக்குப் போய்க் கொண்டிருக்க இருவரும் ஹெட்மிஸ்ட்ரஸ் அறையை நோக்கி நடந்தார்கள். பழைய கட்டடம்.

சுவர்கள் சுண்ணாம்பைச் சந்தித்து இரண்டு மாமாங்கம் ஆகியிருக்கும் போல் தோன்றியது. சில வகுப்பறையின் ஜன்னல்களுக்குக் கதவுகளே இல்லாமல் துருவேறிய கம்பிகள் மட்டுமே தெரிந்தன. ஹெட்மிஸ்ட்ரஸ் அறைக்கு முன்பாக நின்றிருந்த ப்யூன் இரண்டு பேரையும் தயக்கமாய்த் தடுத்தார்.

“யாரை ஸ்ர் பார்க்கணும்?''

“ஹெட்மிஸ்ட்ரஸ்...''

"நீங்க?''

"போலீஸ்.''

ப்யூன் லேசாய் மிரண்டு உள்ளே போய் ஹெட்மிஸ்ட்ரஸுக்குத் தகவல் கொடுத்துவிட்டுத் திரும்பி வந்தார். இப்போது குரலிலும் நடத்தையிலும் பவ்யம்.

"அம்மா வரச் சொன்னாங்க. உள்ளே போங்க ஸார்.'' இருவரும் உள்ளே போனார்கள்.

"குட்மார்னிங் மேடம்...''

ஹெட்மிஸ்ட்ரஸ் புஷ்பரத்தினம் ரிடையராகும் பக்குவத்தில் இருந்தார். அவருக்குப் பின் சுவரில் மகாத்மாவும் நேருஜியும் மங்கிப் போன ஃபோட்டோவில் நாட்டின் இப்போதைய நிலை தெரியாமல் தலைகளைச் சாய்த்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"குட்மார்னிங். வாங்க... உட்காருங்க.''

நாற்காலிகளைக் காட்டிய புஷ்பரத்தினம், அவர்கள் உட்கார்ந்து ஆசுவாசப்படுத்திக் கொண்டதும் கேட்டார். "எஸ்... போலீஸ் டிபார்ட்மெண்ட்டிலிருந்து வந்திருக்கீங்க. என்ன விஷயம்..?''

சத்யநாராயணன் கேட்டான். "மேடம்... என்னை உங்களுக்குத் தெரியுதா?''

"தெரியலையே...''

“நான் உங்களோட ஓல்ட் ஸ்டூடண்ட். பேரு சத்யநாராயணன். ஸ்கூல் ஃபைனல் வரைக்கும் இந்த ஸ்கூல்லதான் படிச்சேன். டென்த் "பி' செக்ஷன். நீங்க எனக்கு இங்கிலிஷ் கிராமர் எடுத்திருக்கீங்க.''

“ஈஸிட்... ஏழெட்டு வருஷம் ஆயிட்டதால என்னால ரெகக்னைஸ் பண்ண முடியலை. ஸாரி...'' சொன்ன புஷ்பரத்தினம் கதிரேஷைப் பார்த்தார். “நீங்களும் இதே ஸ்கூல் ஸ்டூடண்டா..?''

“இல்லை மேடம். நான் ப்ராப்பர் மெட்ராஸ். மெட்ராஸ் காலேஜில் நானும் சத்யநாராயணனும் ஒண்ணாப் படிச்சோம்.''

“ஓகே. போலீஸ் டிபார்ட்மெண்ட் பீப்பிளான நீங்க இப்ப எதுக்காக வந்திருக்கீங்க? லெட் மீ நோ த ரீஸன்?''

“பை ஆல்மீன்ஸ் மேடம்...'' சொன்ன சத்யநாராயணன் தன் இரண்டு கைகளையும் மேஜையின் மேல் ஊன்றிக் கொண்டான்.

“மேடம்! இதே ஸ்கூல்ல என்னோட படிச்ச காயத்ரி என்கிற பெண்ணைப் பத்தின சில தகவல்கள் வேணும்.''

“ஃபார் வாட் பர்ப்பஸ்..?''

சத்யநாராயணன் குரலைத் தாழ்த்திக் கொண்டு ஒரு இரண்டு நிமிஷ நேரத்துக்குக் காயத்ரியைப் பற்றிச் சொல்லி முடிக்க ஹெட்மிஸ்ட்ரஸ் நெற்றியில் இப்போது வியர்வை.

அணிந்திருந்த மூக்குக் கண்ணாடி கைக்கு வந்திருந்தது. “அந்தப் பெண் ஒரே நாளில் மூணு பேரைக் கொலை பண்ணியிருக்காளா..?''

“எஸ் மேடம்!''

“ஆர் யூ ஷ்யூர்?''

“நோ டவுட் மேடம்... கொலை செய்யும்போது காயத்ரியை நேரில் பார்த்த சாட்சிகள் இருக்காங்க.''

“எதுக்காக அந்தக் கொலைகள்?''

“சரியான மோட்டிவ் என்னான்னு தெரியலை மேடம். மேலோட்டமா விசாரணை செய்து பார்த்ததில் கொலை செய்யப்பட்ட மூணு பேருமே பெண்களுக்கு எதிரான சில வேண்டாத காரியங்களைப் பண்ணியிருக்காங்க.''

“மூணு கொலைகளும் நடந்தது மெட்ராசில்தானே?''

“ஆமா மேடம்... காயத்ரி திட்டம் போட்டு இந்தக் கொலைகளைப் பண்ணிட்டுத் தலைமறைவாயிட்டா. மெட்ராஸ் சிட்டி ஒரு வாஸ்ட் ஏரியா. போலீஸின் சர்ச் ஸ்குவாட் எவ்வளவு முயற்சி செய்தும் அவஇருக்கிற இடத்தை ட்ரேஸ் பண்ண முடியலை.''

ஹெட்மிஸ்ட்ரஸ் புஷ்பரத்தினம் தன் கையிலிருந்த கண்ணாடியை மறுபடியும் முகத்துக்குக் கொடுத்துக் கொண்டே நிமிர்ந்து உட்கார்ந்தார். “நெற்... வாட் கேன் ஐ டூ ஃபார் யூ?''

“மேடம்..! காயத்ரி இந்த ஸ்கூல்ல படிச்சவ. அவளுடைய க்ளாஸ் ஃப்ரெண்ட்ஸ் லதா, பானுன்னு ரெண்டு பேர். அவங்க அட்ரஸ் எங்களுக்கு வேணும். லதாவோ, பானுவோ காயத்ரியைச் சமீபகாலங்களில் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் பார்த்திருக்கலாம். அட்ரஸ்களையும் ஃபோன் நம்பர்களையும் ஒருத்தருக்கொருத்தர் பரிமாறிக் கொண்டிருந்திருக்கலாம்.''

சத்யநாராணன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே புஷ்பரத்தினம் குறுக்கிட்டார். “காயத்ரியோட ப்ரெண்ட்ஸ் பேர் என்னன்னு சொன்னீங்க?''

“லதா, பானு...''

“நீங்க சொன்ன அந்த ரெண்டு பேருமே போன வாரம் என்னைப் பார்க்க வந்தாங்க.''

“எ.. எதுக்கு மேடம்?''

“லதாவுக்கு அடுத்த மாசம் கல்யாணம். கல்யாணத்துக்கு நான் கண்டிப்பா வரணும்னு சொல்லிப் பத்திரிகை கொடுத்துட்டுப் போனாங்க. இதோ அந்தப் பத்திரிகை...'' புஷ்பரத்தினம் சொல்லிக் கொண்டே பேப்பர் வெயிட்டுக்குக் கீழே இருந்த அந்தத் திருமண அழைப்பிதழை எடுத்து சத்யநாராயணனிடம் நீட்டினாள்.

“இந்தப் பத்திரிகையிலேயே லதாவோட வீட்டு அட்ரஸ் இருக்கு. நீங்க அந்தப் பெண்ணோட வீட்டுக்கே போய் விசாரிக்கலாம். பானுவோட அட்ரஸ லதாகிட்டே கேட்டுத் தெரிஞ்சுக்கலாம்.''

“தேங்க்யூ மேடம்... லதா, பானுவோட அட்ரஸ்களைத் தெரிஞ்சுக்க ரொம்பவும் கஷ்டப்பட வேண்டியிருக்குமோன்னு நினைச்சோம். லதாவோட கல்யாணப் பத்திரிகையை எடுத்துக் கொடுத்து அந்த வேலையைச் சுலபமாக்கிட்டீங்க...'' சத்யநாராயணனும் கதிரேஷும் எழுந்தார்கள்.

புஷ்பரத்தினம் தன் ஆட்காட்டி விரலை உயர்த்தி, “ஒரு சின்ன ரிக்வெஸ்ட்'' என்றார்.

“என்ன மேடம்?''

“காயத்ரியைப் பற்றிய செய்திகளைப் பத்திரிகைகளுக்குக் கொடுக்கும்போது இந்தப் பள்ளிக்கூடத்துப் பெயரை உபயோகிக்க வேண்டாம். இந்தப் பள்ளி ஒழுக்கத்துக்கும் கண்ணியத்துக்கும் பெயர் பெற்ற பள்ளி. அந்தப் பெயருக்கு எந்தக் களங்கமும் வந்துவிடக் கூடாது.''

“வராது மேடம்... நாங்க இப்போ மேற்கொண்டிருப்பது ஒரு ரகசிய விசாரணை. இந்த விசாரணையில் நாங்கள் திரட்டும் தகவல்கள் எங்கள் மேஜையின் எல்லைக்குள்ளேயே இருக்கும். லதா, பானுவின் பெயர்கள்கூட வெளியே வராது.''

“இந்த வார்த்தைகளை நீங்க கீப்-அப் பண்ணினால் போதும்...''

லதாவின் வீடு மருதமலை போகும் ரோட்டில் - "மஹாராஜா அவென்யூ' வில் - மரங்கள் அடர்ந்த ஒரு தெருவில் ஒரு குட்டி பங்களா தோற்றத்தோடு உட்கார்ந்திருந்தது. கல்யாணத்தை ஒட்டி வீடு புது பெயிண்டிலும் புது டிஸ்டெம்பரிலும் குளித்துக் காற்றில் அந்த நெடியைப் பரப்பி வைத்திருந்தது.

வீட்டில் லதாவும் ஒரு வேலைக்காரக் கிழவியும் மட்டுமே இருந்தார்கள். சத்யநாராயணனைப் பார்த்ததும் லதா தன் முகத்தில் ஒரு சின்னக் குழப்பம் காட்டிப் பின் மலர்ந்தாள். “நீங்க சத்திதானே..?''

“தேங்க் காட்... எங்கே என்னைத் தெரியாதுன்னு சொல்லிடுவீங்களோன்னு பயந்துட்டிருந்தேன்...''

“உங்க முகம் அவ்வளவா மாறலை...'' லதா இருவரையும் உள்ளே கூட்டிப் போய் உட்கார வைத்தாள்.

“ஒரு விஷயமா ஸ்கூலுக்குப் போயிருந்தேன். ஹெட்மிஸ்ட்ரஸ் உங்களுக்குக் கல்யாணம் நடக்கப்போறதா சொல்லிப் பத்திரிகையைக் காட்டினாங்க..! எனக்குச் சந்தோஷமா இருந்தது. அட்வான்ஸ் கன்கிராட்ஸ் சொல்லிட்டுப் போலாம்னு வந்தேன்...''

“தேங்யூ சத்தி...''

“உங்க அப்பா, அம்மா..?''

“கல்யாண அழைப்புக்காக வெளியூர் போயிருக்காங்க. ராத்திரிக்குள்ளே வந்துடுவாங்க. பை த பை... நல்ல வெயில்ல வந்திருக்கீங்க. என்ன சாப்பிடறீங்க. கூல்டிரிங்ஸ்... ஆர்... மோர்..?''

“அதெல்லாம் எதுவும் வேண்டாம் லதா... நம்ம பள்ளிக்கூட ப்ளாஷ்பேக்கைப் பத்திப் பேசினாலே கூல்டிரிங் சாப்பிட்ட மாதிரி இருக்குமே... சமீபத்துல நம்மகூட படிச்ச காயத்ரியைப் பார்த்தீங்களா..?''

“பார்த்தேனே...'' சத்யநாராயணன் உஷாரானான்.

“எங்க பார்த்தீங்க..?''

“பெங்களூர்ல...''

“என்னது... பெங்களூர்லயா..?''

“ஆமா..!''

“எப்போ..?''

“போன மாசம். பெங்களூர்ல ஒரு சாப்ட்வேர் கம்பெனியில் எனக்கு இன்டர்வியூ. காலையில் இன்டர்வியூ முடிஞ்சதும் மத்தியானம் ப்ரீயா இருந்ததால ஒரு சினிமாவுக்குப் போனேன். தியேட்டர்ல காயத்ரியைப் பார்த்தேன். பக்கத்துல ஹஸ்பெண்ட். இடுப்பில் ஒரு குழந்தை.'' சத்யநாராயணனும் கதிரேஷும் திகைப்போடு பார்த்துக் கொண்டார்கள்.

*தொடர்கதை - 19*

அதிர்ச்சியிலிருந்து முதலில் மீண்ட சத்யநாராயணன், குரலில் திகைப்பு ஒட்டிக் கொள்ள லதாவிடம் கேட்டான்.

“நீங்க பார்த்தது காயத்ரியைத்தானா?''

“ஆமா...''

“போய்ப் பேசினீங்களா லதா?''

“என் கஸின் சிஸ்டரோட நான் அந்தச் சமயத்துல டிக்கெட் கெற்ண்டர் கிட்டே க்யூவில் நின்னுட்டிருந்தேன். காயத்ரி நூறு அடி தள்ளியிருந்த "ஸ்நாக்ஸ்' ஸ்டாலுக்குப் பக்கத்தில் கையில் குழந்தையோடும் ஹஸ்பெண்டோடும் நின்னுட்டிருந்தா... நான் கையை ஆட்டினேன். அவகவனிக்கலை. அதுக்குள்ளே கெற்ண்டர்ல டிக்கெட் கொடுக்க ஆரம்பிச்சுட்டாங்க. நான் டிக்கெட் வாங்கிட்டு வேகவேகமா "ஸ்நாக்ஸ்' ஸ்டால் பக்கமா போனேன். காயத்ரி அங்கே இல்லை. ஸ்நாக்ஸ் கடைக்காரர்கிட்டே, "கையில் குழந்தையோடு ஒரு பெண்ணும் அவளுடைய கணவரும் இங்கே நின்னுட்டிருந்தாங்களே, அவங்க எங்கே' ன்னு கேட்டேன். குழந்தை அழுததுன்னு அந்தப் பக்கமா எடுத்துட்டுப் போனதா ஸ்டால்காரன் கை காட்டினான். போய்ப் பார்த்தேன். அங்கேயும் காயத்ரி இல்லை. மனசுக்கு ரொம்பவும் கஷ்டமாயிருந்தது. ரொம்ப நாள் கழிச்சு காயத்ரியைப் பார்த்தும் ஒரு வார்த்தைகூடப் பேசாமே மிஸ் பண்ணிட்டோமேன்னு படம் பார்த்து முடியறவரைக்கும் ஃபீல் பண்ணிட்டிருந்தேன்...''

“நீங்க எதுக்காக பெங்களூர் போனீங்க லதா..?''

“அதுதான் சொன்னேனே... ஒரு அரசு வேலைக்கான இன்டர்வியூ அட்டெண்ட் பண்றதுக்காகப் போயிருந்தேன். அது சரி சத்தி... காயத்ரியைப் பற்றி இப்ப எதுக்காக இவ்வளவு விசாரணை?''

சத்யநாராயணன் புன்னகைத்தான்.

“ஒரு குற்றவாளியைப் பற்றி போலீஸ் விசாரிக்காம இருக்க முடியாதே..?''

லதாவின் முகம் நெருப்பு பட்ட பாலிதீன் பேப்பராய்ச் சுருண்டது. “காயத்ரி குற்றவாளியா?''

“ம்... அக்மார்க் குற்றவாளி.''

“என்ன தப்பு பண்ணினா?''

“கொலை. ஒரே நாளில் மெட்ராஸில் மூணு கொலை!''

“யாரை எதுக்காகக் கொலை பண்ணினா?''

“மோட்டிவேஷன் சரியாத் தெரியலை...''

“காயத்ரி அப்படிப்பட்ட பொண்ணு கிடையாது சத்தி. ஸ்கூல் டேஸில் அவஒரு பயந்தாங்கொள்ளி. கையில காயம்பட்டு யாருக்காவது ரத்தம் வந்தா அதைப் பார்த்து மயக்கம் போடற டைப். அவளாவது கொலைகளைப் பண்றதாவது... நான் நம்ப மாட்டேன்.''

“நோ லதா... காயத்ரிதான் கொலைகளைப் பண்ணினாங்கிறதுக்கு ஐ விட்னஸ் இருக்கு.''

“ஸ்ரீ சத்தி... உங்க விசாரணைக் கோணத்தில் ஏதோ ஒரு பெரிய தப்பு இருக்கு. காயத்ரியை அவள் கணவனோடும் குழந்தையோடும் பெங்களூர்ல பார்த்தேன். ரெண்டு பேரும் சந்தோஷமா சிரிச்சுப் பேசிக்கிட்டிருந்தாங்க...''

“காயத்ரியோட இருந்த ஆள் அவளோட கணவன்தான்னு உங்களுக்கு எப்படித் தெரியும் லதா?''

“என்ன இப்படிக் கேட்கறீங்க. அவ்வளவு நெருக்கமா வேற யார் இருப்பாங்க?''

“எனக்கு நம்பிக்கை இல்லை லதா. ஒரு வேளை நீங்க பாத்ததது காயத்ரியாக இல்லாமேகூட இருக்கலாம்...''

“சேச்சே... அது காயத்ரிதான். காயத்ரியை எனக்குத் தெரியாதா என்ன?''

“பெங்களூர் சினிமா தியேட்டரில் காயத்ரியை நீங்க பார்த்தபோது உங்ககூட யாரோ இருந்ததா சொன்னீங்களே... யாரது?''

“என்னோட கஸின் சிஸ்டர்.''

“அவங்க பெங்களூர்லதான் இருங்காங்க, இல்லையா?''

“ஆமா... பேர் ராகவி. ராகவியோட ஹஸ்பெண்ட் "மெகோ' வில் வேலை பார்த்துட்டிருக்கார்.''

“ராகவி காயத்ரியைப் பார்த்தாங்களா..?''

“ம்... பார்த்தா. நானும் ராகவியும்தான் தியேட்டர் பூராவும் சுத்தி காயத்ரியைத் தேடினோம்.''

“லதா... காயத்ரியோட ஹஸ்பெண்ட்னு நீங்க சொன்ன ஆள் எப்படியிருந்தார்னு சொல்ல முடியுமா?' '

“ஆள் நல்ல ஹேண்ட்ஸம். அந்தக் காலத்துக் கமல் மாதிரி சாயல்.'' லதா சொல்ல, மெட்ராஸில் பைக்கின் பின்புறம் காயத்ரியை உட்கார்த்தி வைத்துக் கொண்டு பைக்கை வேகமாய் ஓட்டின அந்த இளைஞனை நினைவுக்குக் கொண்டு வந்தான் சத்யநாராயணன். முகம் சரியாய்ப் பிடிபடவில்லை.

“ஓகே. மிஸ். லதா. காயத்ரி பெங்களூரில் இருக்கிறதாக நீங்க சொன்ன தகவல் இந்தக் கேஸுக்கு ரொம்பவும் உபயோகமா இருக்கும். பெங்களூர் போலீஸ் மூலமா இனி காயத்ரியை நெருங்கிடுவோம். இது என் வி.சி. இதுல செல் நெம்பர் இருக்கு. காயத்ரி பற்றி ஏதாவது தகவல் கிடைச்சா என்னைக் காண்டாக்ட் பண்ணுங்க.''

கார்டை வாங்கிக் கொண்டாள் லதா. “சத்தி... எனக்கென்னமோ காயத்ரியை ஒரு கொலைக் குற்றவாளியாய் நினைக்கத் தோணலை. நீங்களும் போலீசும் இந்த விஷயத்துல கொஞ்சம் நிதானமா செயல்படறது நல்லது.''

“போலீசோட அணுகுமுறைகள் நிதானமாகத்தான் இருக்கும். பட் ஸ்ட்ராங்க்...'' லதாவிடம் விடைபெற்றுக் கொண்டு சத்யநாராயணனும் கதிரேஷும் வெளியே வந்தார்கள்.

“கதிரேஷ்... காயத்ரியோட கேஸ் இப்போ ஒரே குழப்பமா இருக்கு. காயத்ரியைப் பத்தி அவளோட பேரண்ட்ஸ் கிட்டே விசாரணை பண்ணினா அவங்க ஒரு மாதிரி சொல்றாங்க. லதா கிட்டே விசாரணை பண்ணினா அவ வேற மாதிரி சொல்றா. எது உண்மை?' '

“பெங்களூர் போய்ப் பார்க்கலாமா?' '

“போய் என்ன பண்ண முடியும்? பெங்களூர் என்ன கிராமமா... நாலு தெருவுக்குள்ளே காயத்ரி கிடைக்கிறதுக்கு?' '

“வேற என்ன பண்றது?' '

“க்யூ பிராஞ்ச் வள்ளியம்மை கிட்டே யோசனை கேட்கலாம் வா...' '

மதியம் பனிரெண்டு மணி. ரெட்ஃபீல்ட்ஸின் கோடியில் இருந்த "க்யூ' பிராஞ்ச் அலுவலகத்தில் நுழைந்தார்கள் சத்யநாராயணனும் கதிரேஷும். அலுவலகம் நிசப்தமாய் இருந்தது. இளம் அதிகாரி ஒருவர் கையில் ஃபைலோடு எதிர்ப்பட்டார்.

“யெஸ்.' '

கதிரேஷ் தன்னையும் சத்யநாராயணனையும் அறிமுகப்படுத்திக் கொண்டதும் அவர் முகம் லேசாய் மலர்ந்தது. “ஓ.. அந்த காயத்ரியைத் தேடி வந்தது நீங்கதானா? டி.எஸ்.பி. உங்களுக்காகத்தான் மேல்மாடி முதல் ரூமில் வெயிட் பண்ணிட்டிருக்கார்.' '

“மிஸ். வள்ளியம்மை இல்லையா?' '

“அவங்களை நீங்க மீட் பண்ண முடியாது...' '

“வந்து பார்க்கச் சொன்னாங்களே...' '

“எப்ப சொன்னாங்க..?' '

“காலை ஏழு மணி சுமாருக்கு.' '

“இன்னிக்குக் காலையில் பத்து மணிக்கு வந்த ஃபேக்ஸ் செய்திப்படி வள்ளியம்மை சஸ்பெண்ட் பண்ணப்பட்டிருக்காங்க...' '

“சஸ்பெண்டா..! என்ன காரணம்?''

“குற்றவாளிகள் சிலரோடு வள்ளியம்மை தொடர்பு வெச்சிருக்கிறதாக மேலிடத்துக்குத் தகவல் போயிருக்கு. ஒரு வாரமாவே சஸ்பென்ஷன் ஆர்டரை எதிர்பார்த்துட்டிருந்தோம். இன்னிக்கு ஃபேக்ஸ்ல வந்தது. ஆர்டரைப் பார்த்ததும் வள்ளியம்மை உடனே புறப்பட்டுப் போயிட்டாங்க. நீங்க இனிமே எது பேசறதாயிருந்தாலும் டி.எஸ்.பி. கிட்டே பேசிக்குங்க. ஹி வில் கெய்ட் யூ.''

“தேங்க்யூ...''

சத்யநாராயணனும் கதிரேஷும் அந்த இளைஞனுக்கு நன்றி சொல்லிவிட்டு அலுவலகத்தின் முதல் மாடிக்குப் போனார்கள். ஒரு ஃபைலைப் புரட்டிப் பச்சை இங்க் பேனாவால் கையெழுத்துப் போட்டுக் கொண்டிருந்த டி.எஸ்.பி. பஞ்சாட்சரத்துக்கு முன்னால் போய் நின்று சல்யூட் வைத்துத் தளர்ந்தார்கள்.

“ப்ளீஸ் பி சீட்டட்...'' பஞ்சாட்சரம் கை காட்ட நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள். ஃபைலைத் தள்ளி வைத்துவிட்டுக் கேட்டார்.

“அந்த லதா கிட்டே என்கொயர் பண்ணீங்களா?''

“பண்ணினோம் ஸார்.''

“எனி யூஸ்ஃபுல் க்ளூ..?''

“எஸ் ஸார். காயத்ரியைப் பெங்களூரில் பார்த்ததாய் லதாவின் ஸ்டேட்மெண்ட். அவளுக்குக் கணவனும் குழந்தையும் இருப்பதாகச் சொல்கிறாள்.''

“இது என்ன பேத்தல்...'' இரண்டு முழங்கைகளையும் மேஜையின் மேல் ஊன்றிக்கொண்டு இடது கை விரல்களால் தாடையைத் தேய்த்த பஞ்சாட்சரத்துக்கு

லதா சொன்னதையெல்லாம் சொல்லி முடித்தான் சத்யநாராயணன். அவருடைய நெற்றியும் வழுக்கையும் வியர்வைக்கு உட்பட்டிருந்தது.

“லதா சொல்றதை நம்பக் கொஞ்சம் கஷ்டமாயிருக்கு.''

“லதா பொய் சொல்ல வேண்டிய அவசியம் இல்லையே ஸார்...''

“மெட்ராஸ்ல நீங்க பார்த்த காயத்ரி தனக்கு இன்னும் கல்யாணமாகலைன்னு சொல்லியிருக்கா. காயத்ரியோட பேரண்ட்ஸ் ஸ்டேட்மெண்ட்படிப் பார்த்தா அவ சாலமன் என்கிற இளைஞனோடு ஊரைவிட்டே ஓடிப்போயிருக்கா. இப்போ லதாவோட ஸ்டேட்மெண்ட்படி பார்த்தா காயத்ரிக்குக் கல்யாணமாகி ஒரு குழந்தையும் இருக்கு... இந்த மூணு ஸ்டேட்மெண்டில் எது உண்மை..?''

பஞ்சாட்சரம் கேட்டுக் கொண்டிருக்கும்போதே சத்யநாராயணனின் ஷர்ட பாக்கெட்டில் இருந்த செல்போன் முனகிக் கூப்பிட்டது.

“எக்ஸ்கியூஸ் மீ ஸார்...'' டி.எஸ்.பி.யிடம் சொல்லிட்டு செல்போனை எடுத்துக் காதுக்குக் கொடுத்தான் சத்யநாராயணன்.

“ஹலோ.'' மறுமுனையில் லதாவின் குரல் கேட்டது. “நான் லதா. பேசறது யார் சத்திதானே..?''

“ஆமா...'' “சத்தி... உங்க பக்கத்துல இப்ப யாராவது இருக்காங்களா..?''
“ஆமா...'' “அப்படீன்னா நான் சொல்றதை மட்டும் கேளுங்க. பதிலுக்கு எதுவும் பேச வேண்டாம். "சரி... இல்லை... ஆமா...' என்கிற மாதிரி வார்த்தைகளை மட்டும் உபயோகப்படுத்துங்க.''

“சரி...''

லதா பேச்சைத் தொடர்ந்தாள். “சத்தி... நீங்களும் உங்க போலீஸ் ஃப்ரெண்டும் வந்துட்டுப் போனதும் நான் பெங்களூரில் இருக்கிற என்னோட கஸின் சிஸ்டர் ராகவிக்கு போன் பண்ணிப் பேசினேன். அப்படி நான் ஃபோன் பண்ணிப் பேசினதுக்குக் காரணம் அன்னிக்கு சினிமா தியேட்டரில் நான் காயத்ரியைப் பார்த்தும் பேச முடியாமே போனதைப் பத்தி நினைச்சு ஃபீல் பண்ணிட்டிருந்த என்னை ராகவி சமாதானப்படுத்தும்போது, "காயத்ரியைப் பெங்களூர்ல நான் என்னிக்காவது ஒரு நாள் பார்ப்பேன். அப்போ அவகிட்டே அட்ரஸ்ஸும் ஃபோன் நம்பரையும் வாங்கி வைக்கறேன்'னு சொல்லியிருந்தா... ஒரு வேளை காயத்ரியை ராகவி மறுபடியும் பார்த்திருப்பாளோன்னு நினைச்சு ஃபோன் பண்ணினேன்.''

“சரி...''

“ரெண்டு நாளைக்கு முன்னாடி காயத்ரியை ராகவி பார்த்தாளாம். ஃபோன்ல ஆர்வம் காட்டாதீங்க... இயல்பா இருங்க. எல்லா விஷயத்தையும் நானே சொல்றேன்...''

“சரி...''

“பெங்களூர் டபிள் ரோட்டில் சில்ட்ரன் ஸ்பெஷலிஸ்ட் டாக்டர் ஒருத்தர் இருக்கார். பேர் பசவப்பா. அந்த டாக்டர் கிட்டே தன்னோட குழந்தையைக் காட்டறதுக்காக ராகவி போயிருக்கா. டாக்டர்கிட்டே ஒரே கூட்டம். ராகவி தன் குழந்தையோடு டாக்டரைப் பார்க்க வெயிட் பண்ணிட்டிருக்கும்போது காயத்ரி டாக்டரைப் பார்த்துட்டு தன் குழந்தையோடு வெளியே வந்துட்டிருந்தாளாம். உடனே ராகவி எழுந்து போய் அவளை வழி மறிச்சுப் பேச்சுக் கொடுத்திருக்கா...''

“சரி...''

“நீங்க காயத்ரிதானேன்னு ராகவி கேட்டதுக்கு, "நான் காயத்ரி கிடையாது. என் பெயர் வருணா'ன்னு சொல்லியிருக்கா... அவளுடைய ஹஸ்பெண்ட் பேரு ஹம்ஸவர்த்தன். பெங்களூர் க்ரைம் பிராஞ்சில் விஜிலன்ஸ் ஆஃபீஸராம்...''

லதா பேசப் பேச செல்ஃபோனைக் கையில் வைத்திருந்த சத்யநாராணனுக்குத் தலை சுற்றியது.




*தொடர்கதை - 20*

சத்யநாராயணன் கையில் செல்ஃபோனோடு திகைத்துப் போயிருக்க, லதா தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தாள்.

“சத்தி... சினிமா தியேட்டரில் நான் பார்த்தது காயத்ரியைத்தான். பட் கிளினிக்ல ராகவி கேட்டப்போ காயத்ரி தன் பேரை வருணான்னு சொல்லியிருக்கா. ஹஸ்பெண்ட் ஹம்ஸவர்த்தன் க்ரைம் ப்ராஞ்ச்ல ஒரு விஜிலன்ஸ் ஆபீஸர். எனக்கு எல்லாமே குழப்பமா இருக்கு..!''

“எனக்கும்தான்...''

“சத்தி... நீங்க எனக்காக ஒரு உதவி பண்ண முடியுமா?''

“சொல்லுங்க.''

“போலீஸ்கிட்ட நான் சொன்னதையெல்லாம் நீங்க சொல்லக்கூடாது. உங்க மனசுக்குள்ளேயே எல்லா விஷயங்களும் இருக்கட்டும். ரெண்டு நாள் கழிச்சு நீங்க மட்டும் தனியா பெங்களூர் போங்க. என்னோட கஸின் சிஸ்டர் ராகவியை மீட் பண்ணுங்க. அந்த வருணாவைப் பார்க்க அவ ஹெல்ப் பண்ணுவா.''

“.......''

“என்ன பேச்சையே காணோம்?''

“சரி...''

“ராகவியோட அட்ரஸ்ச் சொல்றேன். மனசுக்குள்ளயே நோட் பண்ணிக்குங்க.''

“சொல்லுங்க...''

“ராகவி, நம்பர் தர்ட்டி டூ, வில்சன் கார்டன், பார்க் அவென்யு ரோடு, பெங்களூர். ஃபோன் நம்பர் 4212175. மறுபடியும் ஒரு தடவை அட்ரஸ்ஸயும் ஃபோன் நம்பரையும் சொல்றேன். நோட் பண்ணிக்குங்க...''

லதா சொல்ல சத்யநாராயணன் மனசுக்குள்ளேயே அதைக் குறித்துக் கொண்டான். லதா தொடர்ந்து பேசினாள்.

“சத்தி... நான் இப்போ சொன்ன எந்தத் தகவலும் போலீசுக்குத் தெரிய வேண்டாம். நீங்க மட்டும் பெங்களூர்க்குப் போங்க. ராகவிக்கு வருணா வீட்டு அட்ரஸ் தெரியும். நீங்களே நேரடியாக வருணாகிட்டே பேசினா உண்மைகள் வெளியே வரலாம்...''

“சரி...''

சத்யநாராயணன் செல்ஃபோனை அணைத்து ஷர்ட் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான். எதிரே உட்கார்ந்திருந்த டி.எஸ்.பி. பஞ்சாட்சரம் சத்யநாராயணனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

“ஃபோன்ல யாரு..?''

“லதா.''

“எனி மேசேஜ்..?''

“ஸ்ர்... லதா போலீசுக்குத் தெரியக் கூடாதுன்னு சொல்லி சில விவரங்களை என்கிட்டே சொல்லியிருக்கா. ஆனா... டிபார்ட்மெண்டுக்குத் தெரியாமே நான் எதையுமே செய்ய விரும்பலை. லதா சொன்ன விஷயம் இதுதான். லதாவோடு கஸின் சிஸ்டர் ராகவி காயத்ரியை நாலைஞ்சு நாட்களுக்கு முன்னாடி ஒரு கிளினிக்ல வெச்சுப் பார்த்திருக்கா. நீங்க லதாவோட ஃப்ரெண்ட் காயத்ரிதானேன்னு

கேட்டதுக்கு, அவ என் பேரு காயத்ரி கிடையாது, வருணான்னு சொல்லியிருக்கா...''

பஞ்சாட்சரமும் கதிரேஷும் நிமிர்ந்து உட்கார்ந்தார்கள்.

"வருணா..?''

"எஸ்...''

"அப்படீன்னா அது வேற யாரோ?''

"மே பி... பட்... ஒருவேளை காயத்ரி பொய் சொல்லியிருக்கலாம்னு லதா சந்தேகப்படறா. என்னை மட்டும் பெங்களூருக்குப் போய் அந்த வருணாவைப் பார்த்துப் பேசச் சொல்றா. இந்த மறைமுக விசாரணையில் உண்மைகள் வெளிவரலாங்கிறது லதாவோட எண்ணம்.''

"டிபார்ட்மெண்ட் சார்பில் எந்த விசாரணையும் வேண்டாங்கிற லதாவோட கோரிக்கையில் நியாயம் இல்லையே..?''

"ஸர்... லதாவோட கோரிக்கை நியாயமானதுன்னு என் மனசுக்குப் படுது. காரணம், காயத்ரின்னு நாம நினைச்சுக்கிட்டிருக்கிற வருணாவுக்குக் கல்யாணமாகி ஒரு குழந்தை இருக்கு. கணவரோட பெயர் ஹம்சவர்த்தனன். பெங்களூர் க்ரைம் ப்ராஞ்சில் அவர் ஒரு விஜிலென்ஸ் ஆஃபீசர். ஸோ இந்த விஷயத்தில் நம்முடைய விசாரணை ஸ்ஃட்டாக இருக்க வேண்டியது அவசியம்.''

டி.எஸ்.பி. பஞ்சாட்சரம் தன் தாடையை ஆட்காட்டி விரலால் தேய்த்துக் கொண்டே சத்யநாராயணனைப் பார்த்தார்.

"பேர் என்ன சொன்னீங்க... ஹம்சவர்த்தனா?''

"ஆமாம் ஸார்...''

"பெங்களூர் க்ரைம் பிராஞ்ச்ல விஜிலென்ஸ் ஆஃபீஸர்?

"ஆமா...''

"பெங்களூர் க்ரைம் ப்ராஞ்ச்ல என்னோட ட்ரெய்னிங் கலீக் ஒருத்தர் இருக்கார். அவர் பேர் சென்னப்பா. அவர்கிட்டே வேணும்னா டெலிஃபோன்ல என்கொயரி பண்ணிப் பார்க்கலாமா?''

"யூ ஆர் கரெக்ட் ஸார்... பெங்களூர் க்ரைம் ப்ராஞ்ச்ல உண்மையிலே ஹம்சவர்த்தன்னு ஒருத்தர் இருக்காரா இல்லையான்னு தெரிஞ்சுக்கிட்டா நம்ம விசாரணைக்கு அது உதவியாக இருக்கும்.''

கதிரேஷ் சொல்ல டி.எஸ்.பி. மேஜை மேலிருந்த டெலிஃபோனைத் தொட்டார். ரிஸீவரை எடுத்துக் கொண்டு டயலில் சில எண்களை ஒற்றி எடுத்தார். மறுமுனையில் ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டது. "ஹலோ...''

"பெங்களூர் க்ரைம் ப்ராஞ்ச்..?''

"எஸ்...''

"மிஸ்டர் சென்னப்பா... ஸ்பெஷல் ஸ்க்வாட் ஆஃபீசர்..?''

"மே ஐ நோ ஹூ ஈஸ் காலிங்?''

"பஞ்சாட்சரம். கோயமுத்தூர் க்யூ ப்ராஞ்ச்.''

"ஒன் மினிட் ஸார்...''

பஞ்சாட்சரம் காதுக்கு ரிஸீவரை ஒட்ட வைத்துக் கொண்டு காத்திருக்க அடுத்த அரை நிமிடத்தில் பெங்களூரிலிருந்து அந்த சென்னப்பா நல்ல தமிழில் பேசினார்.

“வணக்கம் பஞ்சாட்சரம்... எப்படி இருக்கீங்க?''

“ஃபைன்... நீங்க..?''

“வெரி ஃபைன். நெக்ஸ்ட் மன்த் ப்ரமோஷன்ல ஹூப்ளி போறேன்.''

“கன்கிராட்ஸ்...''

“தேங்க்யூ... உங்க ப்ரமோஷன் என்னாச்சு?''

“ஆன் த வே... எனி மொமண்ட் வரலாம்.''

“நாளைக்கே வரும்...''

“உங்க ஜோசியம் பலிக்கட்டும்.''

“பை த பை... என்ன திடீர்னு ஃபோன்? பொண்ணுக்குக் கல்யாணம் கூடி வந்திருக்கா?''

“நோ நோ... திஸ் ஈஸ் ப்யூர்லி அஃபிஷியல். ஒரு இன்ஃபர்மேஷன் வேணும்?''

“ப்ளீஸ்...''

“உங்க க்ரைம் ப்ராஞ்சில் மிஸ்டர் ஹம்ஸவர்த்தன்னு யாராவது வேலை பார்க்கிறாங்களா? டெஸிக்னேஷன் விஜிலன்ஸ் ஆஃபீசர்.''

“பேர் என்ன சொன்னீங்க?''

“ஹம்சவர்த்தன்.''

“விஜிலன்ஸ் ஆஃபீசர்..?''

“எஸ்.''

“அப்படி யாரும் இல்லையே...''

“ஆர் யூ ஷ்யூர்..?''

“வெரி ஷ்யூர்.''

“கன்ஃபர்ம் பண்ணிச் சொல்ல முடியுமா?''

“திஸ் ஈஸ் கன்ஃப்ர்ம்ட் மெஸேஜ். ஐயாம் வெரி ஷ்யூர் அபவுட் இட்.''

“தேங்க்யூ.''

“என்ன கேஸ்..?''

“மர்டர்... ஒரு பெண் தப்பான தகவல்களைக் கொடுத்து கண்ணாமூச்சி ஆட்டம் விளையாடிக்கிட்டிருக்கா. அநேகமா தமிழ்நாடு போலீஸ் உங்க உதவியைத் தேடி வரலாம்...''

“வரட்டும். ஐ வில் கோஆபரேட் வித் தெம்.''

“தேங்க்யூ சென்னப்பா...''

பஞ்சாட்சரம் ரிஸீவரை வைத்துவிட்டு சத்யநாராயணனை ஏறிட்டார்.

“அவருணா இல்லை. காயத்ரிதான். பெங்களூர் க்ரைம் ப்ராஞ்சில் ஹம்ஸவர்த்தன்னு யாரும் கிடையாதுன்னு. சென்னப்பா கன்ஃபர்மா சொல்லிட்டார். ராகவிகிட்டே காயத்ரி பொய் சொல்லியிருக்கா...''

“ம்ஹும்.. அவருணா கிடையாது.''

“கண்டிப்பா கிடையாது.''

“இப்ப என்ன பண்றது ஸார்?''

பஞ்சாட்சரம் பத்து விநாடி யோசிப்புக்குப் பின் தலையை உயர்த்தினார். “மிஸ்டர் சத்யநாராயணன்... நீங்களும் கதிரேஷும் உடனடியா பெங்களூர் புறப்பட்டுப் போய் ராகவியைப் பார்த்து அந்தப் பெண்ணின் உதவியோடு காயத்ரியை மடங்குங்க.''

“எஸ் ஸார்...''

“விஷயம் இப்போதைக்கு பெங்களூர் போலீஸ் டிபார்ட்மெண்டுக்குத் தெரியக் கூடாது. நீங்க ரெண்டு பேரும் பெங்களூர் புறப்பட்டுப் போறது என்னைத் தவிர வேற எந்தப் போலீஸ் ஆஃபீசருக்கும் தெரிய வேண்டாம்.''

“எஸ் ஸார்...''

“சாயந்தரம் அஞ்சு மணிக்கு பெங்களூருக்கு ஒரு ஃப்ளைட் இருக்கு. அதுல புறப்பட்டா ஆறு மணிக்கெல்லாம் ராகவி வீட்ல இருக்கலாம். நான் ஃப்ளைட் டிக்கெட்டுக்கு ஏற்பாடு பண்றேன். நீங்க போயி கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுங்க.''

சத்யநாராயணனும் கதிரேஷும் எழுந்தார்கள்.

பெங்களூர். சரியாய் ஆறு மணிக்கெல்லாம் வில்சன் கார்டனில் இருந்த ராகவியின் வீட்டுக்கு முன்பாய் நின்று அழைப்பு மணிக்கு வேலை கொடுத்தார்கள் சத்யநாராயணனும் கதிரேஷும். கதவு உடனே திறந்தது. ஒரு அழகான பெண் சுடிதாரில் தெரிந்தாள். டி.வி.யில் கன்னடப் படம் ஓடிக் கொண்டிருந்தது.

“மிஸஸ் ராகவி..?''

“நான்தான்.''

“ஐயாம் சத்யநாராயணன். ஹி ஈஸ் மை ஃப்ரெண்ட் கதிரேஷ்.''

“ஓ.. நீங்களா..? லதா ஃபோன் பண்ணி நீங்க வருவீங்கன்னு சொல்லியிருந்தா. ப்ளீஸ் கம். உள்ளே வாங்க...''

இருவரும் வீட்டுக்குள் நுழைந்தார்கள். கொசுவலைக்குள் குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது. டி.வி.யை அணைத்தாள் ராகவி.

“ஏதாவது சாப்பிடறீங்களா..?''

“தேங்க்ஸ்... அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். ஃப்ளைட்ல வரும்போதே சாப்பிட்டோம். உங்க கணவர் வீட்ல இல்லையா...?''

“அவருக்கு பேங்ல மார்க்கெட்டிங் ஆஃபீசர் வேலை. எட்டு மணிக்குத்தான் வருவார்.''

“நீங்க காயத்ரிகிட்டே பேசினதா லதா சொன்னாங்க. சினிமா தியேட்டரில் பார்த்த அதே காயத்ரிதானே?''

“அதே காயத்ரிதான். பட்... "நான் காயத்ரி கிடையாது... என் பேர் வருணா'ன்னு சொல்லிட்டாங்க.''

“உங்க கிட்ட பேசும்போது அந்தப் பெண் டென்ஷனா இருந்தாளா?''

“கொஞ்சம்கூட டென்ஷனே இல்லை. ரொம்பவும் இயல்பாகத்தான் பேசிட்டிருந்தா.''

“அவ அட்ரஸ்ஸை எப்படிக் கண்டு பிடிச்சீங்க?''

“அந்தப் பொண்ணு தன்னோட குழந்தையை டாக்டர் பசவப்பா கிட்டே காட்டறதுக்காக வந்தா. அந்தக் க்ளினிக்ல ஒவ்வொரு பேஷண்டுக்கும் மெடிக்கல் ரிப்போர்ட் மாதிரி ஒரு அட்டையைக் கொடுத்துடுவாங்க. அந்த அட்டையின் முதல் பக்கத்தில் ஸ்கெட்ச் பேனாவால அட்ரஸ் எழுதப்பட்டிருக்கும். அந்தப் பொண்ணு பேசிட்டிருக்கும்போதே நான் அவ கையில் இருந்த அட்டையைப் பார்த்துட்டேன். அட்ரஸ்ஸை மனப்பாடமே பண்ணிக்கிட்டேன்.''

“அட்ரஸ் என்னான்னு சொல்ல முடியுமா?''

“அந்தக் குழந்தையோட பேரு நர்ஷிகா. பேருக்குக் கீழே எழுதப்பட்டிருந்த அட்ரஸ் இது. நம்பர் 699, டிஃபென்ஸ் காலனி, பென்னர்கட்டா ரோடு, பெங்களூர்.''

சத்யநாராயணன் முகவரியைப் பேப்பரில் குறித்துக் கொண்டான்.

“டிஃபென்ஸ் காலனி இங்கிருந்து எவ்வளவு தூரம்?''

“டாக்ஸியில் போனால் நாற்பத்தஞ்சு நிமிஷமாகும்.''

“தேங்க்யூ... மிஸஸ் ராகவி! ஷீ ஈஸ் நாட் வருணா. அவ காயத்ரிதான். இன்னும் ஒரு மணி நேரத்துக்குள்ளே அந்த உண்மை வெளியே வந்துடும்...''
இருவரும் புறப்பட எழுந்தார்கள்.




*தொடர்கதை - 21*

சத்யநாராயணனும் கதிரேஷும் ஒரு டாக்ஸி பிடித்து பென்னர்கட்டா ரோடு போய்ச் சேர்ந்தபோது பெங்களூர் இருட்டுக்குள் விழுந்து நியான் பூக்களைப் பூக்க வைத்துக் கொண்டிருந்தது.

டிஃபென்ஸ் காலனியின் உள்ளே டாக்ஸி நுழைந்து ஐந்தாவது கிராஸ் கட்டில் இருந்த 699 எண்ணிட்ட குட்டி பங்களாவுக்கு முன்பாய்ப் போய் நின்றது.

சத்யநாராயணன் காம்பெற்ண்ட் கேட் முகப்பில் எழுதியிருந்ததைப் படித்தான்.

"தர்ஷிகா.'

“குழந்தையோட பேரையே வீட்டுக்கு வெச்சிருக்காங்க கதிரேஷ்..!''

“டாக்ஸியை அனுப்பிடலாமா... வெயிட்டிங்ல போட்டுடலாமா?''

“வெயிட்டிங்ல இருக்கட்டும்.''

இருவரும் டாக்ஸியை விட்டு இறங்கிக் காம்பெற்ண்ட் கேட்டைத் தாண்டிக்கொண்டு உள்ளே போனார்கள். அழகான வீடு. தொட்டிகளில் க்ரோட்டன்ஸ் இலைகள் ஈஸ்ட்மென் நிறங்களைக் காட்டின. சிட் அவுட் சீட்டின் மீது உட்கார்ந்திருந்த ஒரு பெண் இவர்களைப் பார்த்ததும் எழுந்து வந்தாள். ஒரு வேலைக்காரப் பெண்ணுக்குரிய தோற்றம். கன்னடத்தில் கேட்டாள்.

“யாவர நீரு..?''

“நாங்க மெட்ராஸிலிருந்து வர்றோம். இது காயத்ரியோட வீடுதானே?''

அந்தப் பெண்ணின் முகத்தில் திகைப்பு பரவியது.

“காயத்ரியா... அப்படி யாரும் இங்கே கிடையாதே...''

“ஸ்ரி... காயத்ரின்னு பேரைத் தப்பாச் சொல்லிட்டேன். இது வருணாவோட வீடுதானே?''

“ம்... வருணாவோட வீடுதான்..!''

“அவங்களைப் பார்க்கணுமே...''

“நீங்க..?''

“வருணாவுக்கு வேண்டியவங்க...''

“வருணாம்மா பக்கத்துல இருக்கிற ரேணுகாம்பாள் கோயிலுக்குப் போயிருக்காங்க.''

“வருணாவோட கணவர் ஹம்ஸவர்த்தன் வீட்ல இருக்காரா..?''

“இல்லை... அவர் ட்யூட்டிக்குப் போயிருக்கார்?''

“ட்யூட்டி முடிஞ்சு அவர் எத்தனை மணிக்கு வருவார்?''

“எப்படியும் பத்து மணியாயிடும்.''

“ரேணுகாம்பாள் கோயில் ரொம்ப தூரமோ?''

“இல்ல... பக்கத்துலதான். இன்னும் கொஞ்ச நேரத்துல வந்துருவாங்க. நீங்க உள்ளே வந்து உட்காருங்க.''

வேலைக்காரப் பெண் சிட் அவுட்டில் போடப்பட்டிருந்த நாற்காலிகளைக் காட்ட, சத்யநாராயணனும் கதிரேஷும் உள்ளே போய் உட்கார்ந்தார்கள். சிட் அவுட் நேர்த்தியாய் கண்களை உறுத்தாத டிஸ்டெம்பர் பூச்சோடு இருந்தது. மீன் தொட்டிகளில் தங்க நிற மீன்கள் "பளிச் பளிச்' சென்று நீந்தின. சுவரில் "காட் ஈஸ் ஹியர் வித் ஃபுல் ஆஃப் பிளஸ்ஸிங்ஸ்' என்ற வாசகம் தெரிந்தது. வேலைக்காரப் பெண் தயக்கமாய் எதிரில் வந்து நின்றாள்.

“ஏதாவது சாப்பிடறீங்களா... காப்பி... டீ?''

“ஒண்ணும் வேண்டாம். கொஞ்சம் தண்ணி மாத்திரம் கொடும்மா.''

அவள் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போக வீட்டின் உள்ளே ஹால் சின்னதாய்த் தெரிந்தது.

“சத்தி...'' “ம்...''

“ஹாலோட இடது பக்கச் சுவர்ல போட்டோவைப் பாரு...''

சத்யநாராயணன் எட்டிப் பார்த்தான். போலீஸ் யூனிஃபார்மில் ஒரு இளைஞனின் போட்டோ தெரிந்தது.

“போட்டோவில் இருக்கிறது காயத்ரியோட புருஷனா?''

“அப்படித்தான் தெரியுது.''

“டி.எஸ்.பி. பஞ்சாட்சரம் கோயமுத்தூரிலிருந்து பெங்களூர் க்ரைம் ப்ராஞ்சுக்கு ஃபோன் பண்ணி ஹம்சவர்த்தனைப் பற்றி விசாரிச்சபோது அப்படி ஒருத்தர் டிபார்ட்மெண்டிலயே கிடையாதுன்னுதானே பதில் வந்தது..?''

“ஆமா...''

“இப்போ போலீஸ் யூனிஃபார்ம்ல ஒரு இளைஞனோட ஃபோட்டோ வீட்டுக்குள்ளே இருக்கே. . ?' '

“ஒரு வேளை அந்த ஃபோட்டோவில இருக்கிறவர் காயத்ரியோட கணவனாக இல்லாமே வேறு யாராவதாகவும் இருக்கலாம். ' '

வேலைக்காரிகிட்டே கேட்டுப் பார்க்கலாமா?' '

“அவளுக்கு எந்தச் சந்தேகமும் வராத மாதிரி கேள்வி கேக்கணும். ' '

வேலைக்காரி ஒரு சின்ன டிரேயில் இரண்டு டம்ளர் தண்ணீரோடு வந்தாள். ட்ரையை டீப்பாயில் வைத்துவிட்டுத் திரும்பும்போது சத்யநாராயணன் கேட்டான்.

“ஃபோட்டாவில போலீஸ் யூனிஃபார்மோடு இருக்கிறது வருணாவோட கணவர்தானே. . ?' '

“ஆமாங்க. . . ' '

“அவர் போலீலில் எந்த டிபார்ட்மெண்டில் இருக்கிறார்?' '

“அதெல்லாம் எனக்குத் தெரியாதுங்க. . . அய்யா ஒரு போலீஸ் அதிகாரின்னு தெரியும். . . அவ்வளவுதான். ' '

அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஹாலில் டெலிபோன் ஒலித்தது. உள்ளே ஓடினாள். நிமிஷ நேரம் கழித்து மறுபடியும் சிட் அவுட்டுக்கு வந்தாள். சத்யநாராயணனை ஏறிட்டாள்.

“ஃபோன் பண்ணினது அய்யாதான். ஃபோன்ல உங்களைப் பத்திச் சொன்னேன். . . . உங்களைப் பேசச் சொன்னார். . . வந்து பேசறீங்களா?' '

சத்யநாராயணன் கதிரேஷைப் பார்த்துவிட்டுத் தயக்கமாய் எழுந்தான். வேலைக்காரியைப் பின் தொடர்ந்து உள்ளே போனான். ரிஸீவர் டீப்பாயில் மல்லாந்தபடி காத்திருந்தது. எடுத்துக் காதில் பொருத்தினான்.

“ஹலோ...''

“எஸ்... நான் வருணாவோட ஹஸ்பெண்ட் ஹம்ஸவர்த்தன் பேசறேன். நீங்க வருணாவைப் பார்க்க வந்திருக்கிறதா வேலைக்காரி சொன்னா. நீங்க யார்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

“சர்ட்டன்லி... நான் வருணாவுக்குக் கொஞ்சம் தூரத்து ரிலேஷன். பேர் பிரகாஷ். பெங்களூருக்கு ஒரு வேலையா வந்தேன். அப்படியே பார்த்துட்டுப் போகலாம்னு...''

“தூரத்து ரிலேஷன்னா... எப்படி?''

“எனக்குச் சொல்லத் தெரியலை...''

“வருணாவுக்கு உங்களைத் தெரியுமா?''

“தெரியும்னு நினைக்கிறேன். அடையாளம் சொல்லிப் புரிய வைக்கணும்.''

“வருணா கோயிலுக்குப் போயிருப்பா... வந்ததும் பார்த்துட்டுப் போங்க. நான் வீட்டுக்கு வரலேட்டாயிடும்...''

“நீங்க போலீஸ்ல எந்த டிபார்ட்மெண்ட்?''

“க்ரைம் பிராஞ்ச். விஜிலன்ஸ்.''

“உங்ககூட டெலிஃபோன்ல பேசினது பெரிய சந்தோஷம். வருணாவைப் பார்த்துட்டு நான் கிளம்பறேன்.''

சத்யநாராயணன் ரிஸீவரை வைத்துவிட்டு மறுபடியும் சிட் அவுட்டுக்கு வந்தான். பேப்பர் பார்த்துக் கொண்டிருந்த கதிரேஷ் கேட்டான், வெளியே நின்றிருந்த வேலைக்காரிக்குக் கேட்காத குரலில். “என்னசொன்னே..?''

“வருணாவுக்குத் தூரத்து ரிலேஷன்னு...''

“நம்பிட்டானா?''

“நம்பிட்டான்.''

“போலீஸ்ல எந்த டிபார்ட்மெண்ட்னு கேட்டியா?''

“ம்... க்ரைம் பிராஞ்ச். விஜிலன்ஸ்.''

“எது தப்பு, எது சரின்னே தெரியலையே..?''

“காயத்ரி வந்துட்டா எல்லாமே க்ளியராயிடும். கோயில் எங்கேன்னு கேட்டுக்கிட்டு அங்கேயே போயிடலாமா?''

“வேண்டாம்... வந்துடுவா... வெயிட் பண்ணுவோம்.''

இருவரும் பேப்பரைப் புரட்டிச் செய்திகளை மேய்ந்தபடி பதினைந்து நிமிஷத்தைக் கரைத்துக் கொண்டிருந்த போது... வாசலில் ஆட்டோ படபடத்தது.

வேலைக்காரி வாசலை எட்டிப் பார்த்துவிட்டுக் குரல் கொடுத்தாள்.

“அம்மா வந்துட்டாங்க.''

சத்யநாராயணன் எழுந்து ஜன்னல் வழியாக வாசலைப் பார்த்தான்.

ஆட்டோவிலிருந்து காயத்ரி இறங்கிக் கொண்டிருந்தாள். ஆரஞ்சு வண்ணப் பட்டுப் புடவை. தலை கொள்ளாத அளவுக்கு மல்லிகைப் பூ. கையில் பிரசாதக் கூடை. ஆட்டோவுக்குப் பணம் கொடுத்து அனுப்பிவிட்டு உள்ளே வந்தாள். குழந்தை முன்னால் ஓடினாள்.

“ஏய்... தர்ஷி... ஓடாதே... விழுந்துடுவே...''

வேலைக்காரி காயத்ரியை எதிர்கொண்டாள். “அம்மா... உங்களைப் பார்க்கிறதுக்காக ரெண்டு பேர் வந்து காத்துக்கிட்டிருக்காங்க.''

“யாரு..?''

“எனக்குத் தெரியல்லேம்மா.''

“யார்ன்னு தெரியாமலே உள்ளே உட்கார்த்தி வெச்சுடறதா?'' வேலைக்காரியை மெல்லிய குரலில் கடிந்தபடி உள்ளே போனாள். ஸ்லிப்பரை உதறிவிட்டு சிட் அவுட்டுக்குள் நுழைந்தாள். சத்யநாராயணன் காயத்ரியையே ஆர்வமாய்ப் பார்க்க அவள் முகத்தில் எந்த ஒரு சலனமும் இல்லை. நிதானமான குரலில் கேட்டாள்.

“யார் நீங்க..?''

“காயத்ரி... என்னைத் தெரியுதா?''

அவள் நெற்றி சுருங்கி, தன்னுடைய பெரிய கண்கள் நிறைய ஆச்சரியப்பட்டாள்.

“காயத்ரியா... யார் காயத்ரி..?''

“நீ... நீ... காயத்ரிதானே?''

“ஸ்ரி... ஐ ஆம் வருணா..! நீங்க தப்பான அட்ரஸக்கு வந்துட்டதா நினைக்கிறேன்.''

“நோ... நோ... அயாம் இன் த ரைட் ப்ளேஸ். நீ உன்னை வருணான்னு சொல்லிக்கலாம். பட் நீ வருணா கிடையாது. காயத்ரி..! நீயும் நானும் ஸ்கூல் ஃபைனல் வரைக்கும் ஒண்ணாப் படிச்சோம். ரெண்டு நாளைக்கு முன்னாடி மெட்ராஸ்ல நீ ஊதுவத்திப் பாக்கெட்டுகளைத் தூக்கிக்கிட்டு...''

“நான்சென்ஸ்... ஸ்டாப் இட் ஐ ஸ்ஸ.! யாரோ ஒரு காயத்ரிகிட்டே போய்ப் பேச வேண்டியதைத் தேவையில்லாமே என் கிட்டே பேசிக்கிட்டிருக்கீங்க... இது யாரோட வீடுன்னு உங்களுக்குத் தெரியுமா..?''

சத்யநாராயணன் புன்னகைத்தான்.

“காயத்ரி... நீ யாரை வேணும்னாலும் ஏமாத்தலாம். பட் என்னை ஏமாத்த முடியாது. என்னோட கண்களை நேருக்கு நேராப் பார்த்துச் சொல்லு.''

காயத்ரி தன் இடக்கையின் ஆட்காட்டி விரலைச் சட்டென்று உயர்த்தினாள்.

“இதோ பாருங்க... நீங்க ரெண்டு பேரும் பாக்கிறதுக்கு டீஸண்டா இருக்கிற ஒரே காரணத்துக்காகத்தான் மரியாதை கொடுத்துப் பேசிட்டிருந்தேன். என்னோட கணவர் மட்டும் இப்போ இங்கே இருந்திருந்தா... நடக்கிற சம்பவங்களே வேற விதமா இருக்கும். நான் "கெட் லாஸ்ட்'ன்னு சொல்றதுக்குள்ளே நீங்களாவே வெளியே போயிடுங்க...''

“நீ உண்மையைச் சொல்லு. நாங்க வெளியே போயிடறோம். அதுவரைக்கும் இந்த இடத்தை விட்டு நகரப் போறதில்லை.''

சத்யநாராயணன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே வாசலில் பைக் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான்.

வாசலில் பைக்கை நிறுத்திவிட்டு காக்கி யூனிஃபார்மில் ஹம்ஸவர்த்தன் வந்துகொண்டிருந்தான்.

*தொடர்கதை - 22*

ஹம்சவர்த்தன் சற்றே வேக நடை போட்டு வீட்டுக்குள் நுழைந்தான். கிட்டத்தட்ட ஆறடி உயரம். ஒட்ட வெட்டின கிராப். மினி தேவார மீசை. இறுகிப்போன சதுர முகம். கண்ணில் கொஞ்சம் கோபம்.

“என்ன வருணா..! இங்கே என்ன பிரச்னை..? எதுக்காகச் சண்டை? சத்தம் வீதிக்குக் கேட்குது.''

பீறிட்ட கோபத்தோடு அவள் கணவனிடம் திரும்பினாள்.

“என்னங்க... என்னோட பேர் என்ன?''

“வருணா...''

“இவங்க என்னைக் காயத்ரின்னு சொல்றாங்க. நான் ஏதோ குற்றம் பண்ணிட்ட மாதிரி போலீஸ் தோரணையில் விசாரணை பண்றாங்க... கொஞ்சம் என்னான்னு கேளுங்க.''

ஹம்சவர்த்தனின் பார்வை இப்போது ஒரு தீப்பொறியைப் போல் சத்யநாராயணன், கதிரேஷ் மேல் பாய்ந்தது.

“யார்ரா நீங்க..?''

கதிரேஷ் கையமர்த்தினான்.

“மரியாதை... மரியாதை..! உங்க மனைவியோட பேச்சைக் கேட்டு ரொம்பவும் எமோஷனலான வார்த்தைகளைக் கொட்டிட்டா பின்னாடி ஸ்ரி சொல்ல வேண்டியதாகிவிடும்.''

“வீட்ல தனியா இருக்கிற பொண்ணுகிட்ட வந்து தகராறு பண்ற உங்களுக்கு என்ன மரியாதை வேண்டிக்கிடக்கு..?''

“மிஸ்டர் ஹம்சவர்த்தன்..! நீங்க நினைக்கிற மாதிரி நாங்க ரெற்டீழ்ஸ்.. தாதாக்களோ கிடையாது. உங்க மனைவிகிட்டே ஒரு என்கொயரி பண்றதுக்காக வந்திருக்கோம்.''

“என்கொயரியா..?''

“எஸ்...''

“ரிகார்டிங் வித்..?''

“மர்டர்ஸ்...''

“மர்டர்ஸப்.?''

“எஸ்... நீங்க பேப்பர்ல பார்த்திருக்கலாம். மெட்ராஸில் ஒரே நாளில் மூணு மர்டர்ஸ்... அந்தக் கொலைகளைப் பண்ணினது காயத்ரிங்கிற பொண்ணு. அந்த காயத்ரி வேறு யாரும் கிடையாது. உங்க மனைவிதான்...''

“ஷீ ஈஸ் வருணா... காயத்ரி கிடையாது.''

“மிஸ்டர் ஹம்ஸவர்த்தன்... நான் மெட்ராஸில் ஒரு சப் இன்ஸ்பெக்டர். ஐயாம் கதிரேஷ். ஸீ மை ஐடன்டிஃபிகேஷன் கார்ட்...'' சொல்லிக் கொண்டே கதிரேஷ் தன் சர்ட் பாக்கெட்டுக்குள் கையை நுழைத்துத் தன் உத்யோக அட்டையை எடுத்துக் காட்டினான். ஹம்ஸவர்த்தன் அந்த உத்யோக அட்டையைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே சத்யநாராயணனைக் காட்டியபடி சொன்னான்.

“இவர் சத்யநாராயணன். காயத்ரியை ஸ்கூல் டேஸில் இருந்தே இவருக்குத் தெரியும்.''

“இருக்கட்டும்... பட் நீங்க தேடிட்டு வந்தது என்னோட மனைவி வருணாவாய் இருக்க முடியாது. ஷீ ஈஸ் வருணா. நாட் காயத்ரி. ஒரே மாதிரியான உருவ ஒற்றுமை உங்களைக் குழப்பியிருக்கு.''

சத்யநாராயணன் இப்போது தன்னுடைய பார்வையைக் கூர் தீட்டிக் கொண்டு காயத்ரியைப் பார்த்தான்.

பத்து விநாடி உன்னிப்பான பார்வை. கதிரேஷ் அவனுடைய தோளைத் தொட்டான். அறையின் மூலையை நோக்கிக் கூட்டிப் போனான்.

“என்ன சத்தி... இது காயத்ரிதானா..?''

“நோ டவுட்... காயத்ரிதான்.''

“ஹம்சவர்த்தன் வருணான்னு சொல்றாரே..?''

“அவள் வருணாதான்ங்கிறதைப் ப்ரூஃப் பண்ணச் சொல்வோம்...''

“எப்படி..?''

“வா... பேசுவோம்.''

உலோகமாய் இறுகிப் போயிருந்த முகத்தோடு நின்றிருந்த ஹம்ஸவர்த்தனுக்கு இரண்டு பக்கமும் வந்து நின்றார்கள் சத்யநாராயணனும் கதிரேஷும்.

“மிஸ்டர் ஹம்ஸவர்த்தனன்... இவங்க காயத்ரி கிடையாது, வருணான்னு சொல்றீங்க இல்லையா?

“ஆமா...''

“ஓகே... உங்களுக்கும் வருணாவுக்கும் எப்போ கல்யாணம் நடந்தது..?''

“மூணு வருஷத்துக்கு முந்தி.''

“கல்யாணம் எங்கே நடந்தது?''

“இங்கே பசவன்குடியில் இருக்கிற சாரதாம்பாள் கோயில்ல...''

“கல்யாண இன்விடேஷன் இருக்கா..?''

“இன்விடேஷன் எதுவும் பிரிண்ட் பண்ணலை. அது திடீர்னு முடிவு எடுத்து ஒரே நாளில் பண்ணிக்கிட்ட கல்யாணம்.''

“உங்க கூட யாரும் வரலையா..?''

“வரலை... லவ்வர்ஸப் இருந்த நாங்க கல்யாணம் பண்ணிக்க முடிவெடுத்தோம். பண்ணிக்கிட்டோம்.''

“வருணாவுக்கு அப்பா... அம்மா..?''

“யாரும் கிடையாது. சின்ன வயசிலேயே அப்பா அம்மாவை இழந்துட்ட வருணாவை வளர்த்தது அவளுடைய சித்தப்பாதான். அவரும் இப்போ உயிரோடு இல்லை.''

“வருணாவோட சொந்த ஊர் எது?''

“ஜோலார்பேட்டைக்குப் பக்கத்துல ஒரு கிராமம். கிராமத்தோட பேரு பூமணி.''

“அப்பா, அம்மாவோட பேரு..?''

“அப்பா பேரு கோவிந்தராஜ். அம்மா பேரு ருக்மணி.''

“அவங்க இறக்கும்போது வருணாவுக்கு எத்தனை வயசு?''

“எட்டு வயசு...''

“வருணாவோட அப்பாவும் அம்மாவும் எப்படி இறந்தாங்க?''

அதுவரைக்கும் மெளனமாக இருந்த வருணா இப்போது கோபமாய்க் குறுக்கிட்டாள்.

“அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக். அப்பா இறந்த அதிர்ச்சியைத் தாங்கிக்க முடியாத அம்மா பிறகு ஒரு மாசத்துக்குள்ளேயே படுத்த படுக்கையாகி இறந்து போய்ட்டாங்க. நான் சொன்னதுல உங்களுக்குச் சந்தேகம் இருந்தா பூமணி கிராமத்துக்குப் போங்க. அந்தக் கிராமத்துல மீறிப்போனா நூத்தி அம்பது குடித்தனம்தான் இருக்கும். நீங்க யார்கிட்ட வேணும்னாலும் விசாரணை பண்ணிக்கலாம்...''

“அதுக்கப்புறம் உங்களை உங்க சித்தப்பா வளர்த்தார்..?''

“ஆமா...''

“அவருக்கு எங்கே வீடு..?''

“அதே பூமணி கிராமத்துலதான். சித்தப்பா பேர் பூபதி.''

“நீங்க எந்த ஸ்கூல்ல படிச்சீங்க..?''

“பூமணி கிராமத்து ஸ்கூல்ல எட்டாவது வரைக்கும் படிச்சேன். அப்புறம் படிக்கப் பிரியப்படாததுனால ஸ்கூலுக்குப் போகலை. சித்தப்பாவும் பெங்களூருக்கு என்னைக் கூட்டிகிட்டு வந்துட்டார்.''

“பெங்களூர்ல சித்தப்பா எங்கே இருந்தார்..?''

“கங்காவதி காலனி...''

“அது எங்கே இருக்கு..?''

“அரிசிக்கரை ரோட்டில்...''

“சித்தப்பா எப்போ இறந்தார்?''

“எங்க கல்யாணத்துக்கு முன்னாடியே இறந்துட்டார்.''

சத்யநாராயணன் திகைப்பாய் அவளையே பார்த்தான்.

“நீங்க சொல்றதையெல்லாம் கேட்கும்போது எனக்குப் பிரமிப்பாயிருக்கு...''

“நான் பொய் சொல்றதா நீங்க நினைக்கிறீங்களா? நீங்க அப்படி நினைச்சா உடனடியா கிராஸ் செக் பண்ணிக்கலாம். என் கிட்டே எந்த ஒளிவு மறைவும் கிடையாது. என்னுடைய கணவரும் ஒரு போலீஸ் அதிகாரிதான். அவரும் பொய்




சொல்ல வேண்டிய அவசியம் இல்லை... நானும் பொய் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. என்னை மாதிரியே காயத்ரிங்கிற ஒரு பொண்ணு இருக்காங்கிறதை நினைக்கும்போது பயமாவும் இருக்கு... அதே நேரத்துல த்ரில்லாவும் இருக்கு. சினிமாவுலதான் ட்யூயல் ரோல் வரும். அப்படியெல்லாம் நடக்குமான்னு யோசிப்பேன். இன்னிக்கு எனக்கே அந்த அனுபவம் கிடைச்சிருக்கு. நீங்க சொல்ற அந்த காயத்ரியோட போட்டோ உங்க கிட்டே இருக்கா..?''

“இல்லை...''

“நீங்களும் அந்தப் பொண்ணும் ஒண்ணாப் படிச்சவங்களா?''

“ஆமா...''

“அப்படீன்னா காயத்ரியோட அப்பா அம்மா யார்னு உங்களுக்குத் தெரிஞ்சிருக்குமே...''

“ம்... போய்ப் பார்த்தேன்.''

“அவங்க என்ன சொன்னாங்க?''

“அவங்க சொல்ற கதை வேற விதமா இருக்கு. காயத்ரி, நெல்சன் என்கிற ஒரு இளைஞனைக் காதலிச்சதாகவும் அவனைக் கல்யாணம் பண்ணிக்கிறதுக்காக ஊரை விட்டு ஓடிப் போனதாகவும் சொன்னாங்க. இத்தனை நாள் வரைக்கும் காயத்ரி உயிரோடு இல்லைன்னு நினைச்சு அவ போட்டோவுக்கு மாலை போட்டு வெச்சிருந்தாங்க. நான் போய் காயத்ரி உயிரோடு இருக்கிறதாகச் சொன்னதும் அவங்க சந்தோஷப்பட்டு காயத்ரியை உடனடியாய்ப் பார்க்கணும்னு துடிச்சாங்க...''

ஹம்சவர்த்தன் தன் மனைவியிடம் ஒரு சின்ன சிரிப்போடு திரும்பினான்.

“வருணா! உன்னை மாதிரியே யாரோ ஒரு பொண்ணு இருக்கப் போய்தான் இவங்க டிபார்ட்மெண்ட்ல இருந்து வந்திருக்காங்க. சினிமாவில் வர்ற மாதிரி உன்னோட அம்மாவுக்கு இரட்டைக் குழந்தைள் பிறந்து அதுல ஒரு குழந்தை வேற எங்கேயாவது வளர்ந்து...''

அவள் தீர்க்கமாய்த் தலையாட்டினாள். “அப்படி ஒரு அபத்தமெல்லாம் நடக்க வாய்ப்பேயில்லை. எனக்குத் தெரிஞ்சு என்னோட அம்மாவுக்கு நான் ஒரே பொண்ணுதான்...''

ஹம்ஸவர்த்தன் சத்யநாராயணனையும் கதிரேஷையும் ஏறிட்டான். “ஒரே உருவத்துல ரெண்டு பேர் இருக்கிறது சாத்தியமான ஒண்ணு. என்னோட மனைவி வருணா நீங்க தேடிட்டு வந்த காயத்ரி மாதிரியே இருக்கிறது அவளுடைய குற்றம் கிடையாது. மூணு கொலைகள் நடந்த மெட்ராஸிலேயே உங்க என்கொயரியை நடத்தியிருந்தா... இந்நேரம் காயத்ரி உங்களுக்குக் கிடைச்சிருப்பா.''

“மிஸ்டர் ஹம்சவர்த்தன்... நாங்க உடனடியா கோயமுத்தூரிலிருந்து பெங்களூர் புறப்பட்டு வர்றதுக்குக் காரணங்கள் ரெண்டு. ஒரு காரணம் காயத்ரி இந்த அட்ரஸில் இருக்கிறதாக தகவல். ரெண்டாவது காரணம் நீங்க பெங்களூர் க்ரைம் ப்ராஞ்சில் விஜிலன்ஸ் ஆஃபீசராக வேலை பாக்கறீங்களான்னு உங்க மேலதிகாரியை விசாரிச்சுப் பார்த்தபோது ஹம்ஸவர்த்தன் என்கிற பெயரில் அப்படி யாரும் கிடையாதுன்னு சொன்னார்.''

“உடனே உங்களுக்குச் சந்தேகம் அதிகமாயிருக்கும்... பொய்த் தகவல் கொடுத்தவங்க நிச்சயமா நல்லவங்களாக இருக்கமாட்டங்கனு நினைச்சுப் புறப்பட்டு வந்துட்டீங்க... இல்லையா?''

“ஆமா...''

“போலீஸ் ரிக்கார்ட்ஸ்படி என்னோட பேர் தாசப்பராஜு... அப்பா, அம்மா வெச்ச இந்தப் பேர் எனக்குப் பிடிக்காத காரணத்தால நியூமராலஜி பார்த்து

ஹம்ஸவர்த்தன்னு பேரை வெச்சுக்கிட்டேன். பேரை மாத்தி அஞ்சு வருஷமாச்சு. முறைப்படி அதை கெஜட்ல பதிவு பண்ணலை. ஃப்ரெண்ட்ஸ் வட்டாரத்தில் மட்டும்தான் நான் ஹம்ஸவர்த்தன். டிபார்ட்மெண்ட்ல என்னோட பேர் இன்னமும் தாசப்பராஜுதான்...''

சத்யநாராயணன் கேட்டான்.

“நீங்க வருணாவை எந்தக் கோயில்ல வெச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டதாச் சொன்னீங்க..?''

“பசவன்குடியில் இருக்கிற சாரதாம்பாள் கோயில்ல...''

“மூணு வருஷத்துக்கு முந்தி..?''

“ஆமா...''

“கல்யாணத்தை நடத்தி வெச்சது யாரு?''

“கோயில்ல இருந்த குருக்கள்தான்...''

“அவரோட பேரு..?''

“ஞாபகம் இல்லை...''

“அந்தக் கோயில்ல இன்னும் அவர் குருக்களாக இருக்காரா..?''

“இருக்கார். போன மாசம்கூட அந்தக் கோயிலுக்குப் போயிருந்தபோது அவரைப் பார்த்தேன்.''

“உங்களை அவர் அடையாளம் தெரிஞ்சுக்கிட்டாரா?''

“கூட்டத்துல அவர் என்னைப் பார்க்கலை. நான் சாமி தரிசனம் பண்ணிட்டு உடனே வந்துட்டேன்.''

“மிஸ்டர் ஹம்சவர்த்தன்... கொஞ்சம் சிரமம் பார்க்காம நீங்களும் உங்க மனைவியும் எங்ககூடப் புறப்பட்டு வரமுடியுமா?''

“எங்கே..?''

“பசவன்குடியில் இருக்கிற அந்த சாரதாம்பாள் கோயிலுக்கு...''

“எதுக்கு..?''

“உங்களுக்கு அங்கே கல்யாணம் நடந்ததா, இல்லையான்னு தெரிஞ்சுக்கத்தான்...''

ஹம்சவர்த்தனின் முகத்தில் கோப ரத்தம் பாய்ந்தது.

*தொடர்கதை - 23*

கோப ரத்தம் தத்தளிக்கும் முகத்தோடு ஹம்ஸவர்த்தன் சத்யநாராயணனையும் கதிரேஷையும் புலிப்பார்வை பார்த்தான். “நான் சொன்னதுல உங்களுக்கு நம்பிக்கை கிடையாதா? என்னைப் பார்த்தா பொய் சொல்கிற கிரிமினல் மாதிரியா தெரியுது..?''

சத்யநாராயணன் புன்னகைத்தான். “தயவு பண்ணி கோபப்படாதீங்க. எந்த ஒரு கேஸுக்குமே முழுமையான விசாரணை தேவைப்படும். யார் சொல்றது பொய்... யார் சொல்றது உண்மைன்னு அந்த விசாரணை முடிவுக்கு வரும்போதுதான் தெரியும். உங்க மனைவி வருணாவைப் பார்த்தா காயத்ரியைப் பார்க்க வேண்டியது இல்லை. அவ்வளவு உருவ ஒற்றுமை. இவங்க காயத்ரி இல்லை, வருணாதான்னு

நிரூபிக்க வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கு. அந்தக் கடமையைச் செய்யாம எங்கமேல கோபப்படறது சரியில்லை. பசவன்குடியில இருக்கிற ரேணுகாதேவி கோயிலில் மூணு வருஷங்களுக்கு முந்தி கல்யாணம் நடந்ததாச் சொன்னீங்க... அது உண்மையா பொய்யான்னு தெரிய அந்தக் கோயிலுக்கு நாம போய்த்தான் ஆகணும்.''

ஹம்சவர்த்தன் ஏதோ கோபமாகப் பேச முயல அவன் மனைவி குறுக்கிட்டாள். "என்னங்க..! அவங்க டிபார்ட்மெண்டிலிருந்து என்கொயரிக்காக வந்திருக்காங்க... நீங்க கோஆப்பரேட் பண்றதுதான் முறை. அந்த ரேணுகாதேவி கோயிலுக்கு அவங்களைக் கூட்டிட்டுப் போங்க. நான் காயத்ரி கிடையாது... வருணாதான் என்கிற உண்மை அப்பத்தானே அவங்களுக்குத் தெரியும்.''

ஹம்ஸவர்த்தன் இப்போது கோபம் தணிந்து இரண்டு பேரையும் பார்த்தான். '"ஒரு பத்து நிமிஷம் வெயிட் பண்ணுங்க. நான் டிரஸ் சேஞ்ச் பண்ணிட்டு வந்துடறேன்...''

"தேங்க்யூ...''

பசவன்குடியில் இருந்த அந்த ரேணுகாதேவிப் கோயிலுக்கு மூன்று பேரும் போய்ச் சேர்ந்தபோது எட்டு மணி. கோயிலில் கும்பல் இருந்தாலும் சத்தம் ஒரு துளி இல்லை. மணியோசை மட்டும் அவ்வப்போது கேட்டு அடங்கியது. கோயிலின் சுவர்ப் பரப்பும், தரைப் பரப்பும் மார்பிள் பதிக்கப்பட்டு ப்ளோரஸண்ட் விளக்குகளில் பளபளத்தன.

ஹம்ஸவர்த்தன், சத்யநாராயணன், கதிரேஷ் மூன்று பேரும் மிதியடிகளை உரிய இடத்தில் கழற்றிவிட்டுக் கோயிலின் பிராகாரத்துக்குள் நுழைந்தார்கள். அர்ச்சனை செய்த பூக்களைப் பெண்களுக்குப் பிரசாதமாக வழங்கிக் கொண்டிருந்த ஒரு பெரியவரைக் கை காட்டினான் ஹம்ஸவர்த்தன். '"அந்தக் குருக்கள்தான் எனக்கும் வருணாவுக்கும் கல்யாணம் பண்ணி வெச்சவர்...''

சத்யநாராயணனும் கதிரேஷும் அந்தப் பெரியவரைப் பார்த்தார்கள். அறுபது வயது இருக்கலாம். "பளீர்' வெள்ளையில் வேஷ்டியும் துண்டுமாய், சந்தனம் அப்பிய நெற்றியில் ஒரு பெரிய குங்குமப் பொட்டோடு காட்சி கொடுத்தார். மூன்று பேரும் அவரை நோக்கி நடந்தார்கள்.

“அந்தக் குருக்கள் கிட்டே யார் பேசறது?' ' கதிரேஷ் கேட்க ஹம்சவர்த்தன் தலையசைத்தான். “நானே பேசறேன்...' '

“அவருக்குத் தமிழ் தெரியுமா?' '

“தெரியும்.' '

பெண்களுக்குப் பூப் பிரசாதங்களைக் கொடுத்துவிட்டு கர்ப்பக்கிரகத்தை நோக்கித் திரும்பிய அவருக்கு முன்பாய் மூன்று பேரும் போய் நின்றார்கள். “நமஸ்காரம் குருக்களே...' '

குருக்கள் நிமிர்ந்து மூன்று பேரையும் கவனமில்லாத பார்வை பார்த்தார். “நமஸ்காரம்' ' என்றார். ஹம்சவர்த்தன் குரலைக் கொஞ்சம் தாழ்த்தினான். “உங்க கிட்டே கொஞ்சம் பேசணும்.' '

“மெட்ராஸப்.. சொல்லுங்கோ. என்ன விஷயம்?' '

“என்னை உங்களுக்குத் தெரியுதா?' '

“தெரியலையே..!'

' "இதுக்கு முன்னாடி எங்கேயாவது பார்த்த மாதிரிகூடவா ஞாபகமில்லை?' '

' ' ஞாபகம் இல்லையே...' '

“மூணு வருஷத்துக்கு முந்தி இதே கோயில்ல நீங்க எனக்குக் கல்யாணம் பண்ணி வெச்சீங்க. என் பேர் ஹம்சவர்த்தன்...''

''மூணு வருஷத்துக்கு முந்தியா..?''

“ஆமா...''

குருக்கள் புன்னகைத்தார். “அதுக்கப்புறம் எத்தனையோ ஜோடிகளுக்குக் கல்யாணம் பண்ணிட்டேன். உங்க முகம் எனக்கு ஞாபகம் இல்லையே...''

ஹம்சவர்த்தன் முகம் லேசாக வாடியது. “என்ன குருக்களே... இப்படிச் சொல்லிட்டீங்க. நீங்க என்னை ஞாபகம் வெச்சிருப்பீங்கன்னு நினைச்சேன்...''

குருக்கள் கையில் இருந்த பிரசாதத் தட்டைப் பக்கத்தில் இருந்த உண்டியலின் மேல் வைத்துவிட்டு ஹம்சவர்த்தனை ஏறிட்டார். “ஏன்... ஏதாவது பிரச்னையா?''

“ஆமா... இவங்க மெட்ராஸ் போலீஸ். எனக்கு இந்தக் கோவில்ல மூணு வருஷத்துக்கு முந்தி கல்யாணம் நடந்ததை இவங்க நம்பலை. நான் பொய் சொல்றதா நினைக்கிறாங்க...''

குருக்கள் கேட்டார். “இந்தக் கோயில்ல கல்யாணம் நடந்தது உண்மைதானே..?''

“உண்மைதான்...''

“உங்க முகத்தை நான் எப்படி மறந்தேன்னு எனக்கே தெரியலை. சரி... உங்க கல்யாணத் தேதி ஞாபகம் இருக்கா?''

“இருக்கு.''

"சொல்லுங்க.''

"27-3-99.''

"இந்தக் கோயிலில் கல்யாணக் கட்டளையா 101 ரூபாய் வசூல் பண்ணுவாங்க. நீங்க பணம் கொடுத்தீங்களா?''

"பணம் கொடுத்த மாதிரி ஞாபகம் இல்லையே...''

"நல்லா யோசனை பண்ணிப் பாருங்க...''

ஹம்சவர்த்தன் யோசனை செய்து பார்த்துவிட்டுத் தலையாட்டினான். "எனக்குச் சரியா ஞாபகம் இல்லை. அன்னிக்கு விடிகாலை அஞ்சரை மணிக்கு நானும் வருணாவும் ஒரு ஆட்டோ புடிச்சு இந்தக் கோவிலுக்கு வந்தோம். அப்போ கோயில் நடை சாத்தியிருந்தது. நாங்க வாசல்படியில் உட்கார்ந்து வெயிட் பண்ணிட்டிருக்கும்போது நீங்க வந்தீங்க... என்ன விஷயம்னு எங்ககிட்டே கேட்டீங்க. நாங்க கல்யாணம் பண்ணிக்கப் போகிற விபரத்தைச் சொன்னோம்...''

குருக்கள் தன் அகலமான நெற்றியைக் குழப்பமாய்த் தேய்த்தார். "நீங்க சொல்றது எதுவுமே என்னோட ஞாபகத்துக்கு வரலை... எதுக்கும் கோயில் ஆபீஸ்ல இருக்கிற மேரேஜ் ரிஜிஸ்டரைப் புரட்டிப் பார்த்தா ஏதாவது விபரம் கிடைக்கலாம். அதோ... அதுதான் கோயிலோட எக்ஸிகியூட்டிவ் ஆபீஸ். அங்கே போய் வெயிட் பண்ணுங்க... வந்துடறேன்.''

குருக்கள் சொல்லிவிட்டுக் கர்ப்பக் கிரகத்தை நோக்கிப் போய்விட மூன்று பேரும் கோயிலின் பக்கவாட்டில் இருந்த எக்ஸிகியூட்டிவ் அறையை நோக்கிப் போனார்கள்.

கதிரேஷ் ஹம்சவர்த்தனிடம் கேட்டான். "கல்யாணக் கட்டளையா நூத்தியோரு ரூபாய் கட்டணுங்கிறது கோயிலின் விதிமுறைகள்ல ஒண்ணு. பணம் கட்டாமே இங்கே கல்யாணம் எப்படி நடந்திருக்கும்..?''

“ஒரு வேளை கோயில் நிர்வாகம் என் கிட்டே பணம் வாங்க மறந்திருக்கலாம்...''

“இது கல்யாண விஷயம். கோயில் நிர்வாகம் அவ்வளவு அலட்சியமா இருந்திருக்க மாட்டாங்க. ஏன்னா இந்தக் கோயில்ல கல்யாணம் நடந்ததுக்கு அந்தக் கல்யாணக் கட்டளை ரசீது ஒண்ணுதான் எவிடென்ஸ்.'

“அப்படீன்னா... எனக்கும் வருணாவுக்கும் இந்தக் கோயில்ல கல்யாணம் நடந்தது என்கிற விஷயத்தை நீங்க நம்பலை..?''

“நம்பற மாதிரி எதுவும் இல்லையே? கோயில் குருக்கள் உங்களைப் பார்த்ததா ஞாபகம் இல்லைன்னு சொல்றார். கல்யாணக் கட்டளைக்கு நூத்தியோரு ரூபாய் பணம் கொடுத்து ரசீதும் நீங்க வாங்கலையே...''

ஹம்சவர்த்தன் இரண்டு பேரையும் கோபமாகப் பார்த்துவிட்டுப் பெருமூச்சு விட்டான். “எனக்கும் வருணாவுக்கும் இந்தக் கோயிலில்தான் கல்யாணம் நடந்ததுங்கிறதுக்கான ஒரே சாட்சி அம்பாள் ரேணுகாதேவிதான். அந்தத் தெய்வத்ததுக்கு உண்மை தெரிஞ்சா போதும்.''

“மிஸ்டர் ஹம்சவர்த்தன்... நீங்க எங்க மேல வருத்தப்படறதுல எந்தப் பிரயோஜனமும் இல்லை. இது முழுக்க முழுக்க மூணு கொலைகளைப் பத்தின டிபார்ட்மெண்டல் என்கொயரி. உங்க மேல எங்களுக்கு எந்தவிதமான தனிப்பட்ட பகையோ, பழிவாங்கும் உணர்வோ கிடையாது. உங்களுக்கும் வருணாவுக்கும் மூணு வருஷத்துக்கு முந்தி இந்தக் கோவில்லதான் கல்யாணம் நடந்ததுங்கிற உண்மையை நிரூபிக்க வேண்டியது உங்க கடமை. இந்தக் கடமையிலிருந்து நீங்க தவறுகிற பட்சத்தில் உங்க மனைவிக்கு எதிரான எங்களுடைய விசாரணை நடவடிக்கைகள் இன்னமும் தீவிரமாகும். உங்க மனைவியைக் கைது பண்ணி சென்னைக்குக் கொண்டு போக வேண்டிய நிலைமை ஏற்படலாம்... நீங்களும் போலீஸ் டிபார்ட்மெண்டில் ஒரு பொறுப்பான பதவியில் இருக்கீங்க...

டிபார்ட்மெண்ட் நடவடிக்கைகள் எப்படிப்பட்ட விதத்தில் இருக்கும்னு உங்களுக்கே தெரியும்.''

கதிரேஷ் சொல்லிக் கொண்டிருக்கும்போதே கோயில் குருக்கள் அலுவலகத்துக்குள் நுழைந்தார். “உள்ளே வந்து உட்காருங்க...''

மூன்று பேரும் அவரைத் தொடர்ந்து உள்ளே போய் சுவரோரமாய்ப் போடப்பட்டிருந்த பெஞ்சில் உட்கார்ந்தார்கள். குருக்கள் கேட்டார். “உங்க கல்யாணம் நடந்தது எந்தத் தேதின்னு சொன்னீங்க..?''

“இருபத்தேழு மார்ச், தொண்ணூத்தி ஒன்பது...''

குருக்கள் மேஜையின் இழுப்பறையைத் திறந்து எண்ணெய்ப் பிசுக்கு அழுக்கோடு கூடிய அந்தப் பழைய லெட்ஜரை எடுத்தார். அதை மடியில் வசதியாகக் கிடத்திக் கொண்டு பக்கங்களைப் புரட்டினார். மார்ச் 27-ம் தேதியிட்ட பக்கத்துக்கு வந்தார்.

“பேர் என்ன..?''

“ஹம்ஸவர்த்தன்.''

“பொண்ணோட பேர் என்ன?''

“வருணா.''

“இருக்கே..!'' குருக்கள் நிமிர்ந்தார். ''அந்தத் தேதியில் கல்யாணம் நடந்திருக்கே... இதோ... நூத்தியோரு ரூபாய் கொடுத்து வாங்கின கல்யாணக் கட்டளை ரசீதும் இருக்கே...''

லெட்ஜரைக் கதிரேஷிடம் கொடுத்தார். 27-3-99 தேதியிட்ட அந்தப் பக்கத்தில், "மணமக்கள் ஹம்ஸவர்த்தன் - வருணா' என்று ஸ்கெட்ச் பேனாவால் கொட்டை

கொட்டையாய் எழுதப்பட்டுத் தெரிந்தது. அதே பக்கத்தில் இளஞ்சிவப்பு வண்ணத்தில் நூத்தியோரு ரூபாய்க்கான கல்யாணக் கட்டளை ரசீது "ஸ்டேப்ளர் பின்' னால் இணைக்கப்பட்டிருந்தது. ரசீதுக்குப் பின்னால் வருணா கையெழுத்துப் போட்டிருந்தாள். ஹம்ஸவர்த்தன் முகம் பெற்பர் பூசிக் கொண்ட மாதிரி சந்தோஷத்தில் பளபளத்தது.

“எனக்கும் வருணாவுக்கும் இந்தக் கோயில்லதான் கல்யாணம் நடந்ததுங்கிறதை இப்பவாவது ஒத்துக்கறீங்களா? வேணும்னா இந்தக் கல்யாணக் கட்டளை ரசீதை ஜெராக்ஸ் எடுத்துக்கிட்டுப் போய் உங்க டிபார்ட்மெண்ட்ல காட்டுங்க... குருக்களே... அந்த ரசீதைக் குடுங்க...'' குருக்கள் அந்த ரசீதை லெட்ஜரிலிருந்து பிரித்து எடுத்துக் கதிரேஷிடம் நீட்டினார். “கோயில் வாசலிலேயே ஜெராக்ஸ் இருக்கு.''

வாங்கிக் கொண்டு கதிரேஷும் சத்யநாராயணனும் எழுந்தார்கள். முகங்கள் மாறியிருந்தன. “என்ன சத்தி... இப்படி ஆயிடுச்சு..! இவகாயத்ரி கிடையாது போலிருக்கே... நாம தப்பான திசையில் பயணம் பண்ணிக்கிட்டிருக்கோம்னு நினைக்கிறேன்.''

“இல்லே கதிரேஷ்... நாம பயணிக்கிற திசை சரியான திசைதான்.''

“நீ என்ன சொல்றே சத்தி..?''

“இவ வருணா கிடையாது. காயத்ரிதான்...''

“எப்படி ப்ரூப் பண்ணப் போறோம்?''

“இப்படி...'' தன் இடது கைக் கட்டை விரலை உயர்த்திக் காட்டினான் சத்யநாராயணன்.




*தொடர்கதை - 24*

கோப ரத்தம் தத்தளிக்கும் முகத்தோடு ஹம்ஸவர்த்தன் சத்யநாராயணனையும் கதிரேஷையும் புலிப்பார்வை பார்த்தான். “நான் சொன்னதுல உங்களுக்கு நம்பிக்கை கிடையாதா? என்னைப் பார்த்தா பொய் சொல்கிற கிரிமினல் மாதிரியா தெரியுது. . ?' '

சத்யநாராயணன் புன்னகைத்தான். “தயவு பண்ணி கோபப்படாதீங்க. எந்த ஒரு கேஸஂக்குமே முழுமையான விசாரணை தேவைப்படும். யார் சொல்றது பொய். . . யார் சொல்றது உண்மைன்னு அந்த விசாரணை முடிவுக்கு வரும்போதுதான் தெரியும். உங்க மனைவி வருணாவைப் பார்த்தா காயத்ரியைப் பார்க்க வேண்டியது இல்லை. அவ்வளவு உருவ ஒற்றுமை. இவங்க காயத்ரி இல்லை, வருணாதான்னு நிரூபிக்க வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கு. அந்தக் கடமையைச் செய்யாம எங்கமேல கோபப்படறது சரியில்லை. பசவன்குடியில இருக்கிற ரேணுகாதேவி கோயிலில் மூணு வருஷங்களுக்கு முந்தி கல்யாணம் நடந்ததாச் சொன்னீங்க. . . அது உண்மையா பொய்யான்னு தெரிய அந்தக் கோயிலுக்கு நாம போய்த்தான் ஆகணும். ' '

ஹம்சவர்த்தன் ஏதோ கோபமாகப் பேச முயல அவன் மனைவி குறுக்கிட்டாள். “என்னங்க. . ! அவங்க டிபார்ட்மெண்டிலிருந்து என்கொயரிக்காக வந்திருக்காங்க. . . நீங்க கோஆப்பரேட் பண்றதுதான் முறை. அந்த ரேணுகாதேவி கோயிலுக்கு அவங்களைக் கூட்டிட்டுப் போங்க. நான் காயத்ரி கிடையாது. . . வருணாதான் என்கிற உண்மை அப்பத்தானே அவங்களுக்குத் தெரியும். ' '

ஹம்ஸவர்த்தன் இப்போது கோபம் தணிந்து இரண்டு பேரையும் பார்த்தான். ' "ஒரு பத்து நிமிஷம் வெயிட் பண்ணுங்க. நான் டிரஸ் சேஞ்ச் பண்ணிட்டு வந்துடறேன். . . ' '

“தேங்க்யூ. . . ' '

பசவன்குடியில் இருந்த அந்த ரேணுகாதேவிப் கோயிலுக்கு மூன்று பேரும் போய்ச் சேர்ந்தபோது எட்டு மணி. கோயிலில் கும்பல் இருந்தாலும் சத்தம் ஒரு துளி இல்லை. மணியோசை மட்டும் அவ்வப்போது கேட்டு அடங்கியது. கோயிலின் சுவர்ப் பரப்பும், தரைப் பரப்பும் மார்பிள் பதிக்கப்பட்டு ப்ளோரஸண்ட் விளக்குகளில் பளபளத்தன.

ஹம்ஸவர்த்தன், சத்யநாராயணன், கதிரேஷ் மூன்று பேரும் மிதியடிகளை உரிய இடத்தில் கழற்றிவிட்டுக் கோயிலின் பிராகாரத்துக்குள் நுழைந்தார்கள். அர்ச்சனை செய்த பூக்களைப் பெண்களுக்குப் பிரசாதமாக வழங்கிக் கொண்டிருந்த ஒரு பெரியவரைக் கை காட்டினான் ஹம்ஸவர்த்தன். ' "அந்தக் குருக்கள்தான் எனக்கும் வருணாவுக்கும் கல்யாணம் பண்ணி வெச்சவர்...''

சத்யநாராயணனும் கதிரேஷும் அந்தப் பெரியவரைப் பார்த்தார்கள். அறுபது வயது இருக்கலாம். "பளீர்' வெள்ளையில் வேஷ்டியும் துண்டுமாய், சந்தனம் அப்பிய நெற்றியில் ஒரு பெரிய குங்குமப் பொட்டோடு காட்சி கொடுத்தார். மூன்று பேரும் அவரை நோக்கி நடந்தார்கள்.

“அந்தக் குருக்கள் கிட்டே யார் பேசறது?'' கதிரேஷ் கேட்க ஹம்சவர்த்தன் தலையசைத்தான். “நானே பேசறேன்...''

“அவருக்குத் தமிழ் தெரியுமா?''

“தெரியும்.''

பெண்களுக்குப் பூப் பிரசாதங்களைக் கொடுத்துவிட்டு கர்ப்பக்கிரகத்தை நோக்கித் திரும்பிய அவருக்கு முன்பாய் மூன்று பேரும் போய் நின்றார்கள். “நமஸ்காரம் குருக்களே...''

குருக்கள் நிமிர்ந்து மூன்று பேரையும் கவனமில்லாத பார்வை பார்த்தார். “நமஸ்காரம்'' என்றார். ஹம்சவர்த்தன் குரலைக் கொஞ்சம் தாழ்த்தினான். “உங்க கிட்டே கொஞ்சம் பேசணும்.''

“மெட்ராஸப்.. சொல்லுங்கோ. என்ன விஷயம்?''

“என்னை உங்களுக்குத் தெரியுதா?''

“தெரியலையே..!'

' "இதுக்கு முன்னாடி எங்கேயாவது பார்த்த மாதிரிகூடவா ஞாபகமில்லை?''

''ஞாபகம் இல்லையே...''

“மூணு வருஷத்துக்கு முந்தி இதே கோயில்ல நீங்க எனக்குக் கல்யாணம் பண்ணி வெச்சீங்க. என் பேர் ஹம்சவர்த்தன்...''

''மூணு வருஷத்துக்கு முந்தியா..?''

“ஆமா...''

குருக்கள் புன்னகைத்தார். “அதுக்கப்புறம் எத்தனையோ ஜோடிகளுக்குக் கல்யாணம் பண்ணிட்டேன். உங்க முகம் எனக்கு ஞாபகம் இல்லையே...''

ஹம்சவர்த்தன் முகம் லேசாக வாடியது. “என்ன குருக்களே... இப்படிச் சொல்லிட்டீங்க. நீங்க என்னை ஞாபகம் வெச்சிருப்பீங்கன்னு நினைச்சேன்...''

குருக்கள் கையில் இருந்த பிரசாதத் தட்டைப் பக்கத்தில் இருந்த உண்டியலின் மேல் வைத்துவிட்டு ஹம்சவர்த்தனை ஏறிட்டார். “ஏன்... ஏதாவது பிரச்னையா?''

“ஆமா... இவங்க மெட்ராஸ் போலீஸ். எனக்கு இந்தக் கோவில்ல மூணு வருஷத்துக்கு முந்தி கல்யாணம் நந்ததை இவங்க நம்பலை. நான் பொய் சொல்றதா நினைக்கிறாங்க...''

குருக்கள் கேட்டார். “இந்தக் கோயில்ல கல்யாணம் நடந்தது உண்மைதானே..?''

“உண்மைதான்...''

“உங்க முகத்தை நான் எப்படி மறந்தேன்னு எனக்கே தெரியலை. சரி... உங்க கல்யாணத் தேதி ஞாபகம் இருக்கா?''

“இருக்கு.''

“சொல்லுங்க.''

“27-3-99.''

“இந்தக் கோயிலில் கல்யாணக் கட்டளையா 101 ரூபாய் வசூல் பண்ணுவாங்க. நீங்க பணம் கொடுத்தீங்களா?''

“பணம் கொடுத்த மாதிரி ஞாபகம் இல்லையே...''

“நல்லா யோசனை பண்ணிப் பாருங்க...''

ஹம்சவர்த்தன் யோசனை செய்து பார்த்துவிட்டுத் தலையாட்டினான். “எனக்குச் சரியா ஞாபகம் இல்லை. அன்னிக்கு விடிகாலை அஞ்சரை மணிக்கு நானும் வருணாவும் ஒரு ஆட்டோ புடிச்சு இந்தக் கோவிலுக்கு வந்தோம். அப்போ கோயில் நடை சாத்தியிருந்தது. நாங்க வாசல்படியில் உட்கார்ந்து வெயிட்




பண்ணிட்டிருக்கும்போது நீங்க வந்தீங்க... ன்ன விஷயம்னு எங்ககிட்டே கேட்டீங்க. நாங்க கல்யாணம் பண்ணிக்கப் போகிற விபரத்தைச் சொன்னோம்...''

குருக்கள் தன் அகலமான நெற்றியைக் குழப்பமாய்த் தேய்த்தார். "நீங்க சொல்றது எதுவுமே என்னோட ஞாபகத்துக்கு வரலை... எதுக்கும் கோயில் ஆபீஸ்ல இருக்கிற மேரேஜ் ரிஜிஸ்டரைப் புரட்டிப் பார்த்தா ஏதாவது விபரம் கிடைக்கலாம். அதோ... அதுதான் கோயிலோட எக்ஸிகியூட்டிவ் ஆபீஸ். அங்கே போய் வெயிட் பண்ணுங்க... வந்துடறேன்.''

குருக்கள் சொல்லிவிட்டுக் கர்ப்பக் கிரகத்தை நோக்கிப் போய்விட மூன்று பேரும் கோயிலின் பக்கவாட்டில் இருந்த எக்ஸிகியூட்டிவ் அறையை நோக்கிப் போனார்கள்.

கதிரேஷ் ஹம்சவர்த்தனிடம் கேட்டான். "கல்யாணக் கட்டளையா நூத்தியோரு ரூபாய் கட்டணுங்கிறது கோயிலின் விதிமுறைகள்ல ஒண்ணு. பணம் கட்டாமே இங்கே கல்யாணம் எப்படி நடந்திருக்கும்..?''

"ஒரு வேளை கோயில் நிர்வாகம் என் கிட்டே பணம் வாங்க மறந்திருக்கலாம்...''

"இது கல்யாண விஷயம். கோயில் நிர்வாகம் அவ்வளவு அலட்சியமா இருந்திருக்க மாட்டாங்க. ஏன்னா இந்தக் கோயில்ல கல்யாணம் நடந்ததுக்கு அந்தக் கல்யாணக் கட்டளை ரசீது ஒண்ணுதான் எவிடென்ஸ்.'

"அப்படீன்னா... எனக்கும் வருணாவுக்கும் இந்தக் கோயில்ல கல்யாணம் நடந்தது என்கிற விஷயத்தை நீங்க நம்பலை..?''

"நம்பற மாதிரி எதுவும் இல்லையே? கோயில் குருக்கள் உங்களைப் பார்த்ததா ஞாபகம் இல்லைன்னு சொல்றார். கல்யாணக் கட்டளைக்கு நூத்தியோரு ரூபாய் பணம் கொடுத்து ரசீதும் நீங்க வாங்கலையே...''

ஹம்சவர்த்தன் இரண்டு பேரையும் கோபமாகப் பார்த்துவிட்டுப் பெருமூச்சு விட்டான். “எனக்கும் வருணாவுக்கும் இந்தக் கோயிலில்தான் கல்யாணம் நடந்ததுங்கிறதுக்கான ஒரே சாட்சி அம்பாள் ரேணுகாதேவிதான். அந்தத் தெய்வத்ததுக்கு உண்மை தெரிஞ்சா போதும்.''

“மிஸ்டர் ஹம்சவர்த்தன்... நீங்க எங்க மேல வருத்தப்படறதுல எந்தப் பிரயோஜனமும் இல்லை. இது முழுக்க முழுக்க மூணு கொலைகளைப் பத்தின டிபார்ட்மெண்டல் என்கொயரி. உங்க மேல எங்களுக்கு எந்தவிதமான தனிப்பட்ட பகையோ, பழிவாங்கும் உணர்வோ கிடையாது. உங்களுக்கும் வருணாவுக்கும் மூணு வருஷத்துக்கு முந்தி இந்தக் கோவில்லதான் கல்யாணம் நடந்ததுங்கிற உண்மையை நீரூபிக்க வேண்டியது உங்க கடமை. இந்தக் கடமையிலிருந்து நீங்க தவறுகிற பட்சத்தில் உங்க மனைவிக்கு எதிரான எங்களுடைய விசாரணை நடவடிக்கைகள் இன்னமும் தீவிரமாகும். உங்க மனைவியைக் கைது பண்ணி சென்னைக்குக் கொண்டு போக வேண்டிய நிலைமை ஏற்படலாம்... நீங்களும் போலீஸ் டிபார்ட்மெண்டில் ஒரு பொறுப்பான பதவியில் இருக்கீங்க... டிபார்ட்மெண்ட் நடவடிக்கைகள் எப்படிப்பட்ட விதத்தில் இருக்கும்னு உங்களுக்கே தெரியும்.''

கதிரேஷ் சொல்லிக் கொண்டிருக்கும்போதே கோயில் குருக்கள் அலுவலகத்துக்குள் நுழைந்தார். “உள்ளே வந்து உட்காருங்க...''

மூன்று பேரும் அவரைத் தொடர்ந்து உள்ளே போய் சுவரோரமாய்ப் போடப்பட்டிருந்த பெஞ்சில் உட்கார்ந்தார்கள். குருக்கள் கேட்டார். “உங்க கல்யாணம் நடந்தது எந்தத் தேதின்னு சொன்னீங்க..?''

“இருபத்தேழு மார்ச், தொண்ணூத்தி ஒன்பது...''

குருக்கள் மேஜையின் இழுப்பறையைத் திறந்து எண்ணெய்ப் பிசுக்கு அழுக்கோடு கூடிய அந்தப் பழைய லெட்ஜரை எடுத்தார். அதை மடியில் வசதியாகக் கிடத்திக் கொண்டு பக்கங்களைப் புரட்டினார். மார்ச் 27-ம் தேதியிட்ட பக்கத்துக்கு வந்தார்.

“பேர் என்ன..?''

“ஹம்ஸவர்த்தன்.''

“பொண்ணோட பேர் என்ன?''

“வருணா.''

“இருக்கே..!'' குருக்கள் நிமிர்ந்தார். ''அந்தத் தேதியில் கல்யாணம் நடந்திருக்கே... இதோ... நூத்தியோரு ரூபாய் கொடுத்து வாங்கின கல்யாணக் கட்டளை ரசீதும் இருக்கே...''

லெட்ஜரைக் கதிரேஷிடம் கொடுத்தார். 27-3-99 தேதியிட்ட அந்தப் பக்கத்தில், "மணமக்கள் ஹ்ஸவர்த்தன் - வருணா' என்று ஸ்கெட்ச் பேனாவால் கொட்டை கொட்டையாய் எழுதப்பட்டுத் தெரிந்தது. அதே பக்கத்தில் இளஞ்சிவப்பு வண்ணத்தில் நூத்தியோரு ரூபாய்க்கான கல்யாணக் கட்டளை ரசீது "ஸ்டேப்ளர் பின்'னால் இணைக்கப்பட்டிருந்தது. ரசீதுக்குப் பின்னால் வருணா கையெழுத்துப் போட்டிருந்தாள். ஹம்ஸவர்த்தன் முகம் பெற்டர் பூசிக் கொண்ட மாதிரி சந்தோஷத்தில் பளபளத்தது.

“எனக்கும் வருணாவுக்கும் இந்தக் கோயில்லதான் கல்யாணம் நடந்ததுங்கிறதை இப்பவாவது ஒத்துக்கறீங்களா? வேணும்னா இந்தக் கல்யாணக் கட்டளை ரசீதை ஜெராக்ஸ் எடுத்துக்கிட்டுப் போய் உங்க டிபார்ட்மெண்ட்ல காட்டுங்க... குருக்களே... அந்த ரசீதைக் குடுங்க...'' குருக்கள் அந்த ரசீதை லெட்ஜரிலிருந்து பிரித்து எடுத்துக் கதிரேஷிடம் நீட்டினார். “கோயில் வாசலிலேயே ஜெராக்ஸ் இருக்கு.''

வாங்கிக் கொண்டு கதிரேஷும் சத்யநாராயணனும் எழுந்தார்கள். முகங்கள் மாறியிருந்தன. “என்ன சத்தி... இப்படி ஆயிடுச்சு..! இவகாயத்ரி கிடையாது

போலிருக்கே... நாம தப்பான திசையில் பயணம் பண்ணிக்கிட்டிருக்கோம்னு நினைக்கிறேன்.''

"இல்லே கதிரேஷ்... நாம பயணிக்கிற திசை சரியான திசைதான்.''

"நீ என்ன சொல்றே சத்தி..?''

"இவருணா கிடையாது. காயத்ரிதான்...''

"எப்படி ப்ரூப் பண்ணப் போறோம்?''

"இப்படி...'' தன் இடது கைக் கட்டை விரலை உயர்த்திக் காட்டினான் சத்யநாராயணன்.

*தொடர்கதை - 25*

கதவுக்கு வெளியே நின்றிருந்த வருணாவையும் ஹம்ஸவர்த்தனையும் பார்வையில் வாங்கிய சத்யநாராயணன், கதிரேஷ், ஃபாரன்சிக் சீஃப் ஆஃபீசர் குருநாதன் மூன்று பேரும் ஸ்லோ மோஷனில் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

ஹம்ஸவர்த்தன் புன்னகைத்தான். "என்னையும் வருணாவையும் நீங்க எதிர்பார்த்திருக்கமாட்டீங்க... யாரோ ஒரு காயத்ரி செஞ்ச மூணு கொலைகளுக்கு என்னோட மனைவி வருணாவைக் காரணம் காட்டி ஃபிங்கர் பிரிண்டஸ் வரைக்கும் விவகாரத்தைக் கொண்டு வந்துட்டீங்க. உண்மையான குற்றவாளியை விட்டுட்டு உடனே கைக்கு யார் கிடைக்கிறாங்களோ அவங்களைக் குற்றவாளியாக்க நினைக்கிறது போலீஸ் டிபார்ட்மெண்டோட வேலை. நான் அதே டிபார்ட்மெண்டில் இருக்கிறதுனால எனக்கு எல்லாம் தெரியும். மூணு கொலைகள் நடந்த இடத்திலிருந்து ஃபிங்கர் பிரிண்ட்ஸ் கலெக்ட் பண்ணியிருக்கீங்க. அதை இன்னிக்கு

பெங்களூர் ஃபாரன்சிக்கில் வெச்சு என் மனைவி வருணாவோட ஃபிங்கர் பிரிண்ட்ஸை கம்பேர் பண்ணப் போறீங்க... இல்லயா?''

“ஆமா...''

“ஒரு சின்ன ரிக்வெஸ்ட்.''

“என்ன?''

“ஃபாரன்சிக் பற்றியும் ஃபிங்கர் பிரிண்ட்ஸ் பத்தியும் எனக்கும் கொஞ்சம் தெரியும். நீங்க என்னோட மனைவி வருணாவின் கைரேகைப் பதிவுகளைக் கம்பேர் பண்ணும்போது நானும் உங்க கூட இருப்பேன். கை ரேகைகள் ஒத்துப்போனால் நீங்க உடனடியா வருணாவைக் கைது பண்ணி மெட்ராஸுக்குக் கொண்டு போயிடலாம். கை ரேகைகள் ஒத்துப் போகாத பட்சத்தில்...''

கோபமாய்ப் பேச முயன்ற ஹம்ஸவர்த்தனைக் கையமர்த்தினான் சத்யநாராயணன். “நாங்க உங்க கிட்டேயும் உங்க மனைவி வருணா கிட்டேயும் மன்னிப்புக் கேட்டுக்கிட்டு மெட்ராஸுக்குக் கிளம்பிடுவோம். அதுக்கப்புறம் போலீஸ் டார்ச்சர் இருக்காது. மேற்கொண்டு எந்த விசாரணையும் இருக்காது...''

“நம்பலாமா?''

“தாராளமா நம்பலாம்.''

கர்நாடகா ஃபாரன்சிக் கேந்திரா ஒரு பிரிட்டிஷ் காலத்திய செங்காவிக் கட்டிடத்தில் இடம் பிடித்திருந்தது. நீளமான கடப்பைக்கல் வராந்தாவில் இரண்டு புறமும் அறைகள். கண்ணாடித் தடுப்புகளுக்கு நடுவில் குனிந்த தலை நிமிராமல் நிறைய பேர் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள். வீசிய காற்றில் லேசாய் அமில நெடி. "ஃபிங்கர் பிரிண்ட்ஸ் பிரிஸர்வேஷன்' என்று முகப்பில் எழுதப்பட்ட அறைக் கதவைத் திறந்து கொண்டு ஃபாரன்சிக் சீஃப் குருநாதன் முதல் நபராய் உள்ளே

நுழைய அவரைத் தொடர்ந்து சத்யநாராயணன், கதிரேஷ், ஹம்ஸவர்த்தன், வருணா நான்கு பேரும் தொடர்ந்து உள்ளே வந்தார்கள்.

ஃபைல் ஒன்றைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்த ஃபாரன்சிக் சீஃப் ஆபீஸர் கங்கப்பா நிமிர்ந்து பார்த்துப் புன்னகைத்தார். கன்னடம், தமிழ் கலந்து பேசினார். "உங்களுக்காகத்தான் காத்திட்டிருக்கேன். இந்த ஃபிங்கர் பிரிண்ட்ஸ் கம்பேரிஸன் வேலை முடிந்ததும் நான் வேற ஒரு மர்டர் விஷயமா தார்வார் வரைக்கும் போக வேண்டியிருக்கு... ப்ளீஸ் டேக் யுவர் சீட்ஸ்...'' கங்கப்பா நாற்காலிகளைக் காட்டினார்.

குருநாதன் ஒரு நாற்காலியை ஆக்கிரமித்துக் கொண்டே சொன்னார். "இவர் மிஸ்டர் கதிரேஷ். இவர் மிஸ்டர் சத்யநாராயணன். ரெண்டு பேருமே மெட்ராஸிலிருந்து வந்திருக்காங்க. ஷீ ஈஸ் வருணா. இவர் வருணாவோட ஹஸ்பெண்ட் மிஸ்டர் ஹம்ஸவர்த்தன். மிஸஸ் வருணாவோட கை ரேகைப் பதிவுகளைத்தான் இப்போது ஒப்பிட்டுப் பார்க்கப் போறோம்...''

கங்கப்பா தன் பெரிய மீசைக்குக் கீழே சிரித்தார். "சம்பந்தப்பட்ட எல்லோரையுமே கூட்டிக்கிட்டு வந்திருக்கீங்க. இட் ஈஸ் வெரி நைஸ். ரெண்டு ரேகைப் பிரிண்டுகளையும் கொடுங்க. லேபுக்கு அனுப்பி வெச்சா பத்து நிமிஷத்துக்குள்ளே ரிசல்ட் வந்துடும்.''

குருநாதன் தன் கையில் வைத்திருந்த இரண்டு ஃபைல்களையும் கங்கப்பாவிடம் நீட்ட அவர் வாங்கிப் பார்த்துவிட்டுத் தனக்கு முன்னால் இருந்த இண்டர்காமில் ஒரு பட்டனைத் தட்டிவிட்டுக் கன்னடத்தில் பேசினார். "கிருஷ்ணாராவ்... ஒரு நிமிஷம் என்னோட ரூம் வரைக்கும் வந்துட்டுப் போங்க...''

அந்த நிமிஷம் முடிவடைவதற்குள் முடி முழுவதும் கொட்டிப் போன தலையோடு அந்த வருஷம் ரிட்டயர்மெண்ட் வாங்கப் போகும் தினுசில் இருந்த ஒரு நபர் உள்ளே வந்தார்.

கங்கப்பா வரவேற்றார். “வாங்க ராவ்... ஒரு கம்பேரிசன் ஒர்க். துல்லியமாப் பாத்துச் சொல்லணும். ஏன்னா இதுல ஒரு பெண்ணோட வாழ்க்கை அடங்கியிருக்கு. கொலைகள் நடந்த இடங்களில் கண்டு எடுக்கப்பட்ட கை ரேகைப் பதிவுகளோடு இங்கே இருக்கிற வருணாவின் கைரேகைப் பதிவுகள் ஒத்துப் போகுதா... இல்லையான்னு கன்ஃபர்மா சொல்ல வேண்டியது உங்க பொறுப்பு. உங்களுக்கு இந்த ஃபீல்டில் முப்பது வருஷ எக்ஸ்பீரியன்ஸ். இது வரைக்கும் எந்த ஒரு ஃபிங்கர் பிரிண்ட்ஸ் கம்பேரிசனும் தப்பாப் போனதில்லை. ம்ம்.. இந்தப் பொறுப்பை உங்க கிட்ட ஒப்படைக்கிறேன். பதினஞ்சு நிமிஷத்துக்குள்ளே எனக்கு ரிசல்ட் வேணும். வில் யூ..?''

“எஸ் ஸார்.''

கிருஷ்ணாராவ் அந்த இரண்டு ஃபைல்களையும் வாங்கிக் கொண்டு அறையிலிருந்து வெளியேறினார்.

சென்னை. போலீஸ் கமிஷனர் அலுவலகம். போலீஸ் கமிஷனர் ராகவ மூர்த்திக்கு முன்பாய் கதிரேஷ், சத்யநாராயண், ஃபாரன்சிக் சீஃப் ஆஃபீசர் குருநாதன் நின்றிருந்தார்கள். கமிஷனர் முகத்தில் கோபமும் திகைப்பும் மாறி மாறி கேம்ப் போட்டன. “ரெண்டு கை ரேகைகளும் ஒத்துப் போகலை. இதுதான் ரிப்போர்ட் இல்லையா?'' கமிஷனர் கேட்ட கேள்விக்குக் குருநாதனின் தலை "ஆமாம்' போட்டது.

“அந்த ரிப்போர்ட்டை நீங்க கிராஸ் செக் பண்ணிப் பார்த்தீங்களா?''

“பார்த்தேன் சார்... பெங்களூர்ல ஒரு தடவையும் மெட்ராஸ் வந்து சேர்ந்ததும் நம் லேபில் ஒரு தடவையும் க்ராஸ் செக் பண்ணிப் பார்த்தேன் சார். கொலைகள் நடந்த இடத்தில் கண்டு எடுக்கப்பட்ட காயத்ரியின் கைரேகைப் பதிவுகளோடு வருணாவின் கைரேகைப் பதிவுகள் ஒத்துப் போகலை...''

“கொஞ்சம்கூட ஒத்துப் போகலையா..?''

“ஒரு பர்சன்ட் கூட ஒத்துப் போகலை ஸார்...''

கமிஷனரின் பார்வை இப்போது சத்யநாராயணன் மீது நிலைத்தது. “மிஸ்டர் சத்யநாராயணன்... இப்போ உங்க ஸ்டேட்மெண்ட் என்ன? வருணா வேற, காயத்ரி வேற என்கிற ரிப்போர்ட்டை அக்ரி பண்றீங்களா... இல்லை அது வருணா கிடையாது... காயத்ரிதான்னு நிரூபிக்க வேற ஏதாவது ஸ்டெப்ஸ் எடுக்கப் போறீங்களா..?''

சத்யநாராயணன் தோள்களைக் குலுக்கியபடி பெருமூச்சு விட்டான். “ஐ அக்ரி வித் ஃபாரன்சிக் ரிப்போர்ட் ஸார். கை ரேகைப் பதிவுகள் என்னிக்குமே தப்பு பண்ணாது. எல்லாத்துக்கும் மேலா காயத்ரியோட அப்பாவும் அம்மாவும் வருணாவை நேர்ல பார்த்துட்டு இந்தப் பொண்ணு எங்க பொண்ணு காயத்ரி மாதிரியே இருக்காளே தவிர இவகாயத்ரி கிடையாது... எங்க காயத்ரி சாலமன் என்கிற இளைஞனோட ஊரை விட்டு ஓடிப்போனது உண்மை. அவனால ஏமாற்றப்பட்ட அவள் மனமுடைந்து ரயிலுக்கு முன்னால் பாய்ந்து உயிரை விட்டது உண்மை. வருணா, காயத்ரி மாதிரி இருக்கிறாங்கிற ஒரே காரணத்துக்காக அவளைக் குற்றவாளியாக்க நினைக்கிறது தப்பு...''

“மிஸ்டர் சத்யநாராயணன். இந்தக் காயத்ரி விவகாரத்தில் இருக்கிற மிகப் பெரிய குழப்பம் எது தெரியுமா? நீங்க உங்க ஸ்கூல்மேட் காயத்ரியை மயிலாபூர் தெப்பக் குளம் பக்கத்தில் பார்த்துப் பேசியிருக்கீங்க. அவளும் உங்களை அடையாளம் தெரிஞ்சுட்டுப் பேசியிருக்கா. அதுக்கப்புறம் அடையார் டெர்மினஸ் பஸ் ஸ்டாப்பில் மறுபடியும் காயத்ரியைப் பார்த்திருக்கீங்க... ரெண்டு பேரும் ஒரு ரெஸ்டாரண்டுக்குப் போய் கூல்டிரிங்ஸ் குடிச்சிருக்கீங்க... இல்லையா?''

“ஆமா சார்...''

“அப்படீன்னா... நீங்க பார்த்தது... பேசினது... எல்லாமே காயத்ரிதான்...''

“ஆமா... ஸர்...''

“காயத்ரியோட அப்பாவும் அம்மாவும் காயத்ரி தற்கொலை பண்ணிக்கிட்டு இறந்து போயிட்டதா சொல்லிட்டிருக்கிறது தப்புதானே..?''

“தப்புதான் சார்... காயத்ரி உயிரோட இருக்கான்னு நான் சொன்னதை அவளோட அம்மாவும் அப்பாவும் நம்பலை.''

“பட்... காயத்ரி உயிரோடு இருக்காங்கிறது உண்மை. அவுண்ணியகோடியையும், கன்யாலாலையும், ஜெயலட்சுமியையும் கொலை பண்ணினது உண்மை. காயத்ரி மாதிரியே இருக்கிற வருணாவுக்கும் இந்த மூணு கொலைகளுக்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை என்பது ஃபாரன்ஸிக் ரிப்போர்ட்டால் கிடைத்திருக்கிற உண்மை. இந்த மூன்று உண்மைகளையும் வைத்துக்கொண்டு நாம் அடுத்தபடியாய் எடுக்கப் போகிற நடவடிக்கை என்ன தெரியுமா..?''

“சொல்லுங்க... ஸர்...''

“காயத்ரியைக் கண்டுபிடிக்கத் தீவிரமான முயற்சிகளை எடுக்கணும். அவஇந்த மெட்ராஸுக்குள்ளேதான் எங்கேயாவது பதுங்கியிருக்கணும்... "இன்டலிஜென்ஸ் விங்' கில் இருக்கும் ஷேடோ ஸ்க்வாடை சிட்டிக்குள்ளே ரகசியமா களம் இறக்கினா காயத்ரியை ஸ்மெல் பண்ண முடியும். அந்த ஷேடோ விங்கில நீங்க மூணு பேரும் ஜாயின் பண்ணிக்கணும்னு நான் விரும்பறேன்.''

“எஸ் ஸர்...'' என்றார்கள் மூன்று பேரும்.

வாரம் ஒன்று கரைந்து போயிருக்க... அன்றைய வெள்ளிக்கிழமை காலைப் பொழுது பெங்களூரில் பூ மாதிரி மலர்ந்து கொண்டிருந்தது. ஹம்ஸவர்த்தன் காலை பேப்பரைக் காபி குடித்தபடி மேய்ந்து கொண்டிருக்க வாசலில் காலிங் பெல்

கூப்பிட்டது. “வருணா... யார்னு பாரு...'' ஹம்ஸவர்த்தன் குரல் கொடுக்க சமையல் அறையில் வேலையாய் இருந்த வருணா வியர்வை முகமாய் வெளிப்பட்டுக் கதவை நோக்கிப் போனாள். கதவின் தாழ்ப்பாளை விலக்கினாள். வெளியே - சத்யநாராயணன்.

உதட்டில் பெரியதாய்ப் புன்னகை. “குட் மார்னிங்...'' என்றான். வருணா பதிலுக்கு குட்மார்னிங் சொல்லாமல் தலையைச் சாய்த்தபடி கேட்டாள். “என்ன வேணும் உங்களுக்கு..?''

“கொஞ்சம் பேசணும்.''

“இனியும் என்ன பேசணும். நான்தான் காயத்ரி இல்லேன்னு முடிவாயிடுச்சே...''

“அது போலீஸுக்கு... என்னைப் பொறுத்தவரைக்கும் நீ காயத்ரிதான்...''

அவள் திரும்பிப் பார்த்துக் கணவனை நோக்கிக் குரல் கொடுத்தாள். “என்னங்க... இந்த ஆளை என்னான்னு வந்து கேளுங்க... மறுபடியும் டார்ச்சர் பண்ண வந்திருக்கார்.''

ஹம்ஸவர்த்தன் கையிலிருந்த பேப்பரைக் கோபமாய் வீசிவிட்டு எழுந்து வந்தான். சத்யநாராயணனை நெருங்கி அவனுடைய முகத்தில் உஷ்ணமாய் மூச்சுவிட்டான். “என்ன கலாட்டா பண்ண வந்திருக்கியா?''

“சில உண்மைகளோடு வந்திருக்கேன்.''

“உன்னோட ஓட்டை ஒடிசல் உண்மைகள் எதுவும் எனக்கு வேண்டியது இல்லை. யூ... கெட்லாஸ்ட்.'' சத்யநாராயணனின் கழுத்துப் பாகத்துச் சர்ட்டை எட்டிப் பிடித்துக் கசக்கினான் ஹம்ஸவர்த்தன்.

*தொடர்கதை - 26*

தன் சட்டையைப் பிடித்து உலுக்கிய ஹம்ஸவர்த்தனை ஒரு புன்னகையோடு பார்த்தான் சத்யநாராயணன். “மிஸ்டர் ஹம்ஸவர்த்தன்... நீங்க க்ரைம் ப்ராஞ்சில் வேலை பார்க்கிற ஒரு பொறுப்பான போலீஸ் அதிகாரி. கூடிய சீக்கிரமே டிபார்ட்மெண்டில் ஒரு சப்-இன்ஸ்பெக்டராக வேலை பார்க்கப் போகிற என்னை இவ்வளவு இன்டீசன்டா நடத்தறது கொஞ்சமும் சரியில்லை...''

ஹம்ஸவர்த்தன் கொஞ்சமும் கோபம் தணியாமல் கத்தினான். “என்னோட அமைதியான குடும்பத்தில கலாட்டா பண்ண வந்திருக்கிற உனக்கு நான் மரியாதை கொடுக்கணும்னு என்ன அவசியம்?''

“நான் கலாட்டா பண்ண வரலை ஹம்ஸவர்த்தன். எனக்குக் கிடைச்ச உண்மைகள் சரியான்னு வெரிஃபை பண்ண வந்திருக்கேன்...''

“நீ எதையும் வெரிஃபை பண்ணிப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. எல்லா வெரிஃபிகேஷனும் போன வாரமே முடிஞ்சுது. என்னோட மனைவி வருணா நீ சொல்ற காயத்ரி கிடையாதுன்னு ஃபாரன்சிக் சீஃப் ஆபீஸர் கங்கப்பா சொல்லிட்டார். மேலதிகாரியே ஒரு தீர்மானத் தீர்ப்பு கொடுத்த பின்னாடி உனக்கு எதுக்குக் கொசுறு வேலை?''

“அவருக்கு உண்மை தெரியாததால அப்படிச் சொல்லிட்டார். உண்மை தெரிஞ்ச என்னால் அதை ஏத்துக்க முடியாதே..?'' அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் மௌனமாய் இருந்த வருணா தன் கணவனை ஏறிட்டாள். “என்னங்க... இந்த ஆள் ஏதோ உண்மை உண்மைன்னு சொல்றார். அது என்னான்னு கேளுங்க...''

“எதுக்குக் கேட்கணும்?''

“அவர் என்ன சொல்றார்னு கேட்டுத்தான் பார்க்கலாமே...''

ஹம்ஸவர்த்தன், சத்யநாராயணனை விட்டு விலகி வியர்த்த முகத்தைத் துடைத்துக் கொண்டு அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்தபடியே கேட்டான். “என்ன உண்மை... சொல்லு?''

“நானும் இப்படிப் பக்கத்துல நாற்காலியில் உட்கார்ந்துக்கலாமா?''

“ம்...'' சத்யநாராயணன் பக்கத்து நாற்காலிக்குத் தன்னைக் கொடுத்தபடி தன் பேண்ட் பாக்கெட்டில் கையை நுழைத்து அந்தப் பாலிதீன் உறையை எடுத்தான். அந்த உறையைப் பிரித்து உள்ளே இருந்த மெல்லிதான இளஞ்சிவப்பு நிறத்தில் இருந்த க்ளவுசை உருவி ஹம்ஸவர்த்தனின் முகத்துக்கு நேரே காட்டினான்.

“இது என்னான்னு தெரியுதா ஹம்ஸவர்த்தன்?''

ஹம்ஸவர்த்தன், வருணா இரண்டு பேரின் முகங்களும் லேசாக மாறியது. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். சத்யநாராயணன் புன்னகைத்தான். “ம்... சொல்லுங்க ஹம்ஸவர்த்தன். இது என்ன?''

“வந்து... வந்து... ஏதோ க்ளவுஸ் மாதிரி தெரியுது.''

“யூ ஆர் கரெக்ட். இது க்ளவுஸ்தான்... பட் நீங்க நினைக்கிற மாதிரி இது சாதாரண க்ளவுஸ் கிடையாது. இது மனிதத் தோலாலால் செய்யப்பட்ட பாம் மெம்ப்ரேன் (டஅகஙஉஙஆத்அசஉ

மிக மெல்லிசான பாம் மெம்ப்ரேன் க்ளவுசைக் கைவிரல்களில் மாட்டிக்கிட்டா அது கிளவுஸ் மாதிரியே தெரியாது. தோலோடு ஒன்றிப் போய் இயற்கையான கைவிரல்கள் மாதிரியே தெரியும். இந்த க்ளவுசில் செயற்கையான கைரேகைப் பதிவுகள் பதிந்திருக்கும். கொலையாளி இதை கையில் மாட்டிக்கிட்டு ஒருத்தரைக்




கொலை பண்ணும்போது இதில் இருக்கிற செயற்கைக் கைரேகைப் பதிவுகள்தான் கொலை நடந்த ஸ்பாட்டில கிடைக்கும்.

கொலையாளியின் உண்மையான கைரேகைப் பதிவுகளோடு இந்தப் பாம் மெம்ப்ரேன் க்ளவுசில் உள்ள செயற்கைக் கைரேகைப் பதிவுகள் ஒத்துப் போகாது. உங்க மனைவி வருணாவின் கைரேகைப் பதிவுகளும் ஒத்துப் போகாததற்கு அதுதான் காரணம்...''

"நோ... இதெல்லாம் என்னான்னே எங்களுக்குத் தெரியாது. எதை எதையோ... கொண்டு வந்து காட்டி...'' வயிறு எக்கிக் கத்திய ஹம்ஸவர்த்தனைக் கையமர்த்தினான் சத்யநாராயணன். "இப்படிச் சத்தம் போடறதால உண்மைகள் போய் ஓடி ஒளிந்து கொள்ளாது ஹம்ஸவர்த்தன். உங்க மனைவியோட பெயர் வருணா கிடையாது... காயத்ரிதான்.

கைகளுக்கு "பாம் மெம்ப்ரேன்' க்ளவுசை மாட்டிக்கிட்டு புண்ணியகோடி, கன்யாலால், ஜெயலட்சுமி இந்த மூணு பேரையும் மெட்ராஸுக்கு வந்து கொலை பண்ணிட்டு ஒண்ணும் தெரியாத மாதிரி பெங்களூர் வந்திருக்காங்க. உண்டா... இல்லையா?''

ஹம்ஸவர்த்தன் சில விநாடிகள் வரை இறுக்கமான முகத்தோடு சத்யநாராயணனையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு மெல்லிய குரலில் கேட்டான். "என்னோட மனைவி பாம் மெம்ப்ரேன் க்ளவுசை மாட்டிக்கிட்டுக் கொலைகள் பண்ணியிருக்கலாம்னு சொல்றியே... அதுக்கு என்ன அத்தாட்சி?'' சத்யநாராயணன் புன்னகைத்தான்.

"இப்படி ஒரு கேள்வி கேட்பீங்கன்னு எனக்கு நல்லாவே தெரியும்... அதுக்காகத்தான் ஒருத்தரைக் கையோடு கூட்டிக்கிட்டு வந்திருக்கேன்.'' சொன்னவன் வாசல் பக்கம் பார்த்துக் கையசைக்க அடுத்த விநாடி அந்த நபர் உள்ளே வந்தார்.

அவரைப் பார்த்ததும் ஹம்ஸவர்த்தனும் வருணாவும் திகைத்தார்கள். சத்யநாராயணன் தொடர்ந்தான்.

“இவரை உங்களுக்குத் தெரியும். பேர் மிஸ்டர் கிருஷ்ணாராவ். போனவாரம் பெங்களூர் ஃபாரன்சிக்கில் வருணாவின் ஃபிங்கர் பிரிண்ட்ஸைக் கம்பேர் செய்தவர்.''

கிருஷ்ணாராவ் சலனமில்லாமல் உள்ளே வந்து ஹம்ஸவர்த்தன் பக்கத்தில் காலியாக இருந்த நாற்காலியில் உட்கார்ந்தார். “ஹஸசவர்த்தன்... நீங்க உண்மையை ஒத்துக்கிறது பெட்டர். உங்க மனைவியின் கைரேகைப் பதிவுகளோடு கொலைகள் நடந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்ட கைரேகைப் பதிவுகளை நான் ஒப்பிட்டுப் பார்த்தபோது என்னோட மனசுக்குள்ள ஒரு நெருடல். பொதுவாகக் கொலை நடந்த இடத்தில் கண்டெடுக்கப்படும் கைரேகைப் பதிவுகளில் கொஞ்சம் ஈரப்பதம் இருக்கும். காரணம்... கொலையாளியின் கையில் இருக்கும் வியர்வைதான். அந்த வியர்வையோட ஈரப்பதம் இல்லாமக் கைரேகைப் பதிவுகள் இருக்காது. பாம் மெம்ப்ரேன் க்ளவுஸ்களை உபயோகப்படுத்திக் கொலைகள் செய்திருந்தால் மட்டும் அப்படிப்பட்ட கைரேகைப் பதிவுகள் கிடைக்கும்.''

ஹம்ஸவர்த்தன் தோள்களைக் குலுக்கிக் கொண்டான். “ஓகே. மிஸ்டர் கிருஷ்ணாராவ்... நீங்கள் சொல்லுகிற மாதிரியே பாம் மெம்ப்ரேன் க்ளவுஸ்மாட்டிக் கொண்டு அந்த மூன்று கொலைகளும் நடைபெற்றிருக்கலாம். ஆனால் கொலைகளை என் மனைவி வருணாதான் செய்தாள் என்பதை எந்த ஆதாரத்தின் அடிப்படையில் சொல்கிறீர்கள்?' '

சத்யநாராயணன் சிரித்தான். “இது நியாயமான கேள்வி. இந்த நியாயமான கேள்விக்கு நானும் நியாயமா பதில் சொல்றதுதான் நியாயம்' ' என்ற சத்யநாராயணன் மறுபடியும் வாசல் பக்கம் பார்த்துக் கையசைக்க அடுத்த சில விநாடிகளில் அந்த இளைஞன் தயங்கித் தயங்கி உள்ளே வந்தான். ஆறடி உயரத்தில் உடம்பில் திடகாத்திரம் காட்டினான். சமீபத்தில் மொட்டை அடித்த தலை. அந்த இளைஞனைப் பார்த்ததும் ஹம்ஸவர்த்தனின் முகம் ரத்தத்தைத் தொலைத்தது.




சத்யநாராயணன் தொடர்ந்தான். “இவர் மிஸ்டர் சூசைராஜ். உங்க க்ளோஸ் ஃப்ரெண்ட். ராயப்பேட்டையில் ஒரு ட்யூட்டி பெய்ட் ஷாப் நடத்திக்கிட்டு வர்றார். அந்த ஷாப்பில் கிடைக்காத வெளிநாட்டு சாமான்களே கிடையாது. பாம் மெம்ப்ரேன் க்ளவுஸ்கள் உங்களுக்குக் கிடைச்ச இடமே சூசைராஜோட ஷாப்பில்தான்.''

ஹம்ஸவர்த்தனின் முகம் வியர்வையில் நீச்சலடிக்க கிருஷ்ணாராவ் அவனை ஏறிட்டார். “இதோ பாருங்க ஹம்ஸவர்த்தன்... இந்த விவகாரத்தை நாங்க போலீஸ் பார்வைக்குக் கொண்டு போகலை. கதிரேஷுக்குக் கூட இந்த விஷயம் தெரியாது. முழுக்க முழுக்க நானும் சத்யநாராயணனும் மட்டும் டீல் பண்ணிக்கிட்டிருக்கோம்.

பாம் மெம்ப்ரேன் க்ளவுஸ் ஒரு இறக்குமதிப் பொருள். அது ஒரு ட்யூட்டி பெய்ட் ஷாப்பில்தான் வாங்கப்பட்டிருக்கும்னு சத்யநாராயணன் கிட்டே நான் சொன்னேன். உடனே உங்க க்ளோஸ் ப்ரெண்ட்ஸ் சர்க்கிளில் யாராவது ட்யூட்டி பெய்ட் ஷாப் வெச்சிருக்காங்களான்னு கடந்த ஒரு வார காலமா சர்ச் பண்ணினோம்.

உங்க நண்பர் சூசைராஜ் கிடைச்சார். நாங்க அவரைத் தனியா மீட் பண்ணி போலீஸ் டிபார்ட்மெண்ட்னு சொன்னதுமே பயந்துட்டார். பாம் மெம்ப்ரேன் க்ளவுஸ்களை 250 ரூபாய்க்கு உங்களுக்கு விற்றதாக ஒத்துக்கிட்டார்.

கொஞ்ச நேரத்துக்கு முந்தி நான் பாம் மெம்ப்ரேன் க்ளவுஸ்களைப் பத்திச் சொன்ன போது அதெல்லாம் என்னான்னே எங்களுக்குத் தெரியாது... எதை எதையோ கொண்டு வந்து காட்டாதீங்கன்னு சொன்னீங்க... அதை உங்களுக்கு விற்ற சூசைராஜ் உங்களுக்கு முன்னாடி நின்னுக்கிட்டிருக்கார். இதுக்கு என்ன சொல்றீங்க? '' ஹம்ஸவர்த்தன் முகம் இறுகிப் போய் நின்றிருக்க சத்யநாராயணன் நிதான நடைபோட்டு வருணாவை நெருங்கினான்.

''எல்லா உண்மைகளும் வெளியே வந்துட்ட பிறகு இனியும் என்ன மௌனம்? நீ காயத்ரிதானே..?''

அவளுடைய தலை மெல்ல அசைந்தது. “ஆமா... நான் காயத்ரிதான்!''

“எதுக்காக இந்தப் பொய்?''

“நானும் என் கணவரும் இந்தச் சமுதாய வயலில் விளைஞ்சிருந்த சில களைகளை அப்புறப்படுத்தத் திட்டம் போட்டோம். அந்தத் திட்டத்தோட முதல் படிதான் இது. புண்ணியகோடி எத்தனையோ பெண்களைப் பாழ் பண்ணியிருக்கார். நியாயம் கேட்டுப் போன பெண்களைத் தற்கொலை பண்ண வச்சிருக்கார். அதேபோல் கன்யாலாலும் ஜெயலட்சுமியும் பார்ட்னர்ஷிப் போட்டுக்கிட்டுப் பெண்களை வியாபாரப் பொருளாக்கி பம்பாய்க்கு அனுப்பி ஒரு பெரிய விபசாரத் தொழிற்சாலை நடத்திக்கிட்டிருந்தாங்க.

என்னோட கணவர் போலீஸ் டிபார்ட்மெண்ட்ல இருந்ததால இதெல்லாம் எனக்குத் தெரியவந்தது. ஒருநாள் என்னோட கணவர் என்கிட்ட, "சட்டம் கண்டுக்காம இருக்கிற இவங்களை நாம தண்டிச்சா என்ன'ன்னு கேட்டார்.

அவர் இதை விளையாட்டுக்குச் சொல்றார்னு மொதல்ல நினைச்சேன். ஆனா அடிக்கடி இதைப் பத்தியே பேசினார். புண்ணியகோடி, கன்யாலால், ஜெயலட்சுமி இந்த மூணு பேருக்கும் எத்தனையோ விரோதிகள் இருக்காங்க.

மூணு பேரும் நம்மால் கொல்லப்பட்டால் சந்தேகம் முழுக்க அந்த விரோதிகள் மீதுதான் பாயும். வி வில் எஸ்கேப்-ன்னு சொன்னார். பலநாள் யோசனை பண்ணித் திட்டம் போட்டோம். ஒவ்வொரு நாளும் ஒவ்வொருத்தரையா கொலை பண்றதைக் காட்டிலும் ஒரே நாளில் மூணு பேரையும் தீர்த்துக்கட்டிட்டு பெங்களூருக்கு வந்துட்டா எந்தப் பிரச்சினையும் வராதுன்னு என் கணவர் சொன்னார்.

திட்டப்படி நான் ஊதுவத்தி விக்கிற பெண்ணா மாறினேன். ஊதுவத்தி பாக்கெட்டுக்கு நடுவில் ஒரு ரிவால்வரை மறைச்சு வச்சிக்கிட்டு புண்ணியகோடியைப் பார்க்கக் கிளம்பினேன். அந்தச் சமயத்திலதான் நீங்க என்னைப் பார்த்து காயத்ரியான்னு கேட்டீங்க. வேற வழியில்லாம ஆமாம்னு சொல்லிட்டேன்.

அட்ரஸ் கேட்டீங்க. எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியலை. சட்னு கோகுலம் காலனியில ஊதுவத்தி, சோப் மாதிரியான பொருள்களை விக்கிற காயத்ரிங்கிற ஒரு பெண்ணோட ஞாபகம் வந்தது. அவவீட்டு அட்ரஸைச் சொல்லித் தப்பிச்சிட்டேன். என்னால அவளுக்குப் பிரச்சினைகள் வந்தபோது ஒரு வேளை அவள் இந்தக் கொலைகள்ல மாட்டிக்குவாளோன்னு நினைச்சேன்.

ஆனா நீங்களும் இன்ஸ்பெக்டர் கதிரேஷும் என்னையே குறிவெச்சுத் துரத்தினீங்க''

நசத்யநாராயணன் இடை மறித்துக் கேட்டான். "உன்னோட பேரை வருணான்னு எப்போ மாத்திக்கிட்டே..?''

"மூணு வருஷத்துக்கு முந்தியே...''

"எதுக்காக மாத்திக்கிட்டே..?''

"ஹம்ஸவர்த்தனும் நானும் ஒருத்தரை ஒருத்தர் காதலிச்சோம். வீட்டுக்குத் தெரியாத காதல் இது. அம்மாவும் அப்பாவும் காதல் திருமணத்துக்குக் கண்டிப்பா ஒத்துக்கமாட்டாங்கன்னு நினைச்சு நான் பெங்களூர் போய் வருணான்னு பேரை மாத்திக்கிட்டுக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்.''

"உன்னோட அம்மாவும் அப்பாவும் வேற மாதிரி சொன்னாங்களே...''

"என்ன சொன்னாங்க?''

“நீ நெல்சன்னு யாரையோ காதலிச்சதாகவும், அவனோடு போன வருஷம் ஓடிப் போயிட்டதாகவும் சொன்னாங்க.''

“என்னைப் பத்தி போலீஸ் டிபார்ட்மெண்டிலிருந்து யாராவது விசாரிக்க வந்தா அப்பா சரியான பதிலைச் சொல்லாமே கற்பனையா எதையாவது சொல்லிக் குழப்பிவிட்டுடுவார். காரணம் நானும் என் கணவரும் போட்ட இந்தக் களையெடுப்புத் திட்டம் அவருக்குத் தெரியும். போலீஸ்ல எனக்கு எந்த ஆபத்தும் வந்துடக் கூடாதுங்கிறதுக்காக என் போட்டோவுக்கு மாலை போட்டு நான் இறந்துட்டதா பலபேரை நம்ப வெச்சிருக்கார்...''

சத்யநாராயணன் சத்தம் வராமல் தன் கைகளைத் தட்டிவிட்டு மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தான். “காயத்ரி... நீயும் உன்னோட கணவரும் சேர்ந்து சமுதாயக் களைகளைச் சுத்தம் பண்ண நினைச்சது சரிதான். ஆனா சட்டத்தைக் கையில் எடுத்துக்கிட்டதுதான் தப்பு. ஒரு தப்பைச் சரி செய்ய நீங்களும் தப்பான வழியிலே போயிருக்கீங்க. இது சட்டப்படி தண்டைக்குரியது.

ஆனா நானும் கிருஷ்ணாராவும் உங்க ரெண்டு பேரையும் போலீஸில் காட்டிக் கொடுக்க விரும்பலை. காரணம் நீங்க கிரிமினல்களோ, தீவிரவாதிகளோ, அரசியல்வாதிகளோ இல்லை. அன்னியோன்யமான தம்பதிகள். பெண்களை வியாபாரப் பொருளாக்கிய மூணு பேருக்கும் ஆறு தோட்டாக்களைக் கொடுத்து இந்த அழுக்குச் சமுதாயத்தைக் கொஞ்சம் சுத்தம் செஞ்சிருக்கீங்க.

இதுவும் ஒரு சோஷியல் ஒர்க்தான் என்கிற நினைப்போடு நானும் கிருஷ்ணாராவும் இந்த வழக்கிலிருந்து விலகிக்கிறோம். இதில் சம்பந்தப்பட்ட யாரையும் நாங்க போலீஸில் காட்டிக் கொடுக்க விரும்பலை. போலீசில் சரணடையறதும் அடையாததும் உங்க விருப்பம். நாங்க வர்றோம். இனிமே தோட்டாக்களுக்கு வேலை கொடுக்காதீங்க.''

சத்யநாராயணனும் கிருஷ்ணாராவும் ஹம்ஸவர்த்தனின் கைகளைப் பற்றிக் குலுக்கிவிட்டு வீட்டை விட்டு வெளியே வந்தார்கள். பரபரப்பாய் இருந்த பெங்களூர்த் தெருவில் பொது மக்களோடு கலந்து நடக்க ஆரம்பித்தார்கள்.

“கிருஷ்ணாராவ் ஸர்...''

“என்னசத்தி?''

“ரொம்ப நாளைக்குப் பிறகு நல்லாப் பசிக்குது. ஒரு நல்ல ஹோட்டலுக்குப் போய் டிபன் சாப்பிடலாமா?''

“போகலாமே...''

“இந்த ஏரியாவில் எது நல்ல ஹோட்டல்?''

“பக்கத்து வீதியில் ஒரு ஹை கிளாஸ் வெஜிடேரியன் ஹோட்டல் இருக்கு...''

“பேரு?''

“காயத்ரி பவன்.'' ......

-----------(முற்றும்)------------